*Islam Towards Uniting Mankind...*

# AL INSHIRAH
## 2013

**Muslim Majlis**

**University Of Peradeniya**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*With Best Wishes From...*

*'Blossoming Culture and Friendship'*





*The Cultural Section*

# EMBASSY OF THE ISLAMIC REPUBLIC OF IRAN



**Sri Lanka & the Islamic Republic of Iran**

## Iranian Cultural Section - Activities

- LIBRARY
- PUBLICATIONS
- UNITY WEEK
- QUTS DAY
- FILM FESTIVAL
- FILM SHOW
- VISITS
- IRAN CORNER
- SEMINARS
- MEETINGS
- PERSIAN CLASS
- QURAN CLASS








**NO:06, SIR EARNEST DE SILVA MAWATHA,**
**COLOMBO-07, SRI LANKA**

TEL:0112575680, 0112575681
FAX:2575681,2575682
Email: culturalsectionir@yahoo.com
Web: www.colombo.icro.ir



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அல் இன்ஷிராஹ்

## 2013

-இதழாசிரியர்-

*M.J. Mohamed Jafran*

University of Peradeniya
03 APR 2014
LIBRARY

முஸ்லிம் மஜ்லிஸ்
பேராதனைப் பல்கலைக்கழகம்,
பேராதனை, இலங்கை.
www.peramajlis.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Muslim Majlis

*University of Peradeniya*

இச்சஞ்சிகையில் இடம்பெற்றுள்ள ஆக்கங்களுக்கு
அவற்றை எழுதியோரே பொறுப்புடையோர்


**Editorial Committee**

| Editor | Members |
|---|---|
| *M.J.M Jafran* | *K.R.M Mubeen* |
| | *M.N.F Nawfiya* |
| | *M.S.F Sanooja* |
| | *M.Y.F Shiyama* |
| | *A.L Althaf* |
| | *M.R.M Rifky* |

**Cover page & Advertisements Designed**
*By: M.J.Mohamed Jafran*



**Al-Inshirah 2013**

*Published By Muslim Majlis*

*University of Peradeniya.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# MESSAGE FROM THE VICE - CHANCELLOR

I have pleasure in sending my greetings to the Muslim Majlis on the release of its annual journal 'Al-Inshirah' for the year 2013.

The Al-Inshirah publishes articles and creative writings mainly on Islamic Art, hereditary Islamic Law, Muslim Society and Islamic traditions in Tamil and English for staff and students, I believe that it contributes significantly to the development of the literary and cultural dimensions of the Muslim and Tamil speaking communities in Sri Lanka.

It also gives students the opportunity to exchange their views and opinions on matters of mutual interest. This invariable leads to fostering of good relationship and understanding among individuals and community groups. I appreciate the service of the Muslim Majlis for their commintment and dedication in promoting extra curricular activities among Tamil speaking students.

While congratulating the members of the Muslim Majlis for their efforts and achievements and I wish them every success in their future endeavors.

University of Peradeniya
03 APR 2014
LIBRARY

*Prof. Atula Senaratne*
*The Vice - Chancellor,*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## MESSAGE FROM THE SENIOR TREASURER

*Alhamdulillah, Peace be upon the Prophet Mohammed(sal) and his companions.*

Indeed, it is my pleasure to write this message to Al-Inshirah, the annual Magazine of the Muslim Majlis , the students organization in the prestigious University of the country, University of Peradeniya.

Each society and culture is passing through a critical phase of the history of the world. There are potentials as well as critical challenges for the betterment of human and the ecosystem. But, the human failure to recognize the fact that he is the custodian of the world and accountable for his actions in the hereafter leads to mischief and chaos in the world. Muslim, as a society believes on this very strongly, should be a good model demonstrating this fact. As a student of a university, you have a big role to play in the university as well as in the country on social harmony, coexistence, equity and nation building. Al-Inshirah is a good opportunity to communicate and share the learning, views and experiences in the university on this regard.

I must congratulate the Editor, Mr. M.J.M. Jafran, editorial board and academic staff and students for their commitment and dedication to bring this volume in time. This is not a easy task, but you all have made it. Well done. I also appreciate the president of the Muslim Majlis and the members of the committee for their collective effort to make this Al-Inshirah a valuable output of the Muslim community in the university. I pray almighty Allah wishes all the success for those who have contributed.

*Dr. M.I.M. Mowjood*
*Senior Treasurer,*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# MESSAGE FROM THE PRESIDENT

*Bismillahir Rahmanir Raheem.*

I am pleased to have the opportunity to give the message to the annual magazine Al Inshira which is published by Muslim Majlis.

The Muslim Majlis has its executive which is filled sincere, dedicated, committed and hardworking personation programs and interests. They have brought our association to the life with fantastic, initiatives. I would like to pay my sincere thanks to my fellow friend and the committee for their massive support.

The Muslim Majlis servers and the representative body of Muslims on university caters to their needs, keep integrated and contributing body within the university committee. This publication is good opportunity to the students and the members of the staff to exchange their knowledge and express their views here by I am glad to thank who have submitted their knowledge as articles.

I am privileged to have witnessed the growth of the qualities of the inshira from the time of its beginning. To continue this progress, the present editorial committee has worked to stabilize the standard of inshira.

Inclosing, I feel quit privileged to pay my tribute to the editor and members for their dedication commitment which they showed in bringing this effort until it has been published successfully.

*M.F.N Ahamed*
*President,*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# MESSAGE FROM THE SECRETARY

*Bismillahir Rahmanir Raheem.*

All praises be to Allah, the most gracious and the most merciful. As the Secretary of Muslim Majlis of University of Peradeniya, it is a great pleasure to convey my message to this annual magazine "Al-Inshirah".

Muslim Majlis - University of Peradeniya promotes curricular and extra-curricular activities among students, looks after their welfares and encourages them to uphold the social and cultural values.

Publication of 'AL-INSHIRAH 2013' is one of the activities of Muslim Majlis. The Majlis has been publishing this annual magazine for a long period of time. Accordingly, for the year 2013, we are publishing 'AL-INSHIRAH 2013' that contains various articles and research documents written by budding talents from University of Peradeniya. I hope that you will enjoy 'AL-INSHIRAH 2013' and I would like to thank the editor and the members of the editorial board for their hard work to make this publication possible.

*A.M.Z. Zimar*
*Secretary,*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## MESSAGE FROM THE EDITOR

*Bismillahir Rahmanir Raheem.*

All praises be to Allah, I have pleasure and sending my wholehearted greeting message 'Al-Inshirah' which the Muslim Majlis, University of Peradeniya has just released its annual journal for the year 2013.

The 'Al-Inshirah' contributes significantly to exchange Islamic thought and promote mutual understanding among multy cultural society in our country. I believe 'Al-Inshirah' gives opportunity to bring out students' potentialities, promote their creativity and to express their view points on various aspects of Muslim community. we want to take this opportunity to express our thanks and gratitude to the members of executive committee, and our editorial committee for their dedication and commitment for bringing out this journal successfully and I extended my heartfelt thanks to all who submitted their articles to this annual journal.

Finally, All praise and thanks are due to Allah, without whose help and guidance nothing can be accomplished. we pray to Allah, Almighty to acceot our endeavor and render it of use to Muslim brothers & sisters, Amin!

*M.J.Mohamed Jafran*
*Editor*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'மாணவர்களின் முன்னேற்றத்திற்காகவும் சமூக மாற்றத்தை
விரும்பும் அனைத்து விரிவுரையாளர்களுக்காகவும் மற்றும் சுய
வளர்ச்சியினூடாக சமூக முன்னேற்றத்தை முன்கொண்டு
செல்லத் துடிக்கும் மாணவ உலகின் சுபீட்சமான
எதிர்காலத்திற்கு இது சமர்ப்பணம்.'

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொருளடக்கம்


| | |
|---|---|
| அறேபியர் இசை மரபில் கஸீதாவும், கஸலும் | 01 |
| இலக்கியமும், நூலாசிரியரின் மரணமும் - ஒரு மறு வாசிப்பு | 11 |
| மனிதன் யார் கட்டுப்பாட்டில் | 20 |
| பன்மைத்துவமும், இலங்கை சமூகத்தில் அதன் அவசியமும் | 23 |
| விடுகதை... | 28 |
| அலட்சியப்படுத்தப்படும் அவசியங்கள் | 33 |
| இஸ்லாத்தின் பார்வையில் நட்பும் அதன் சமகால போக்கும் | 38 |
| என் குமிழ் முனைப் பேனா...! | 42 |
| தொழில்துறை மற்றும் சமூக நிகழ்வுகளில் பெண்களின் வகிபங்கு | 43 |
| சமய நோக்கில் ஆய்வியல் - இஸ்லாம் சமயத்தை சிறப்பாதாரமாகக் கொண்ட ஆய்வு | 48 |
| Copernican Revolution of Immanuel Kant | 56 |
| இஸ்லாமிய தமிழ்க் காவியங்கள் | 60 |
| அனுபவம் | 63 |
| Mangrove ecosystem degradation | 69 |
| Why has this happened to the world? | 74 |
| உலகப் பால் உற்பத்தி நடவடிக்கைகளும் தொழில்நுட்ப சாதனங்கள் ஏற்படுத்தும் தாக்கங்களும் | 76 |
| பணியகவமைப்பும் சிவில் சமூகமும் | 81 |
| Dowry and Muslim Community in Sri Lanka | 89 |
| சமூகத்தில் சட்டத்தின் வகிபங்கு - மெய்யியல் நோக்கில் ஒரு அலசல் | 92 |


University of ... 03 APR 2014

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

...


வாழ்வியல் நெருக்கடியும் உளவளத்துணையின் தேவையும் 101

அடிப்படை உரிமைகள் 105

எரிக்கும் வார்த்தைகள்... 108

Personal law in Sri Lanka & Inability of laws to reduce gender inequality 113

சுயநலம் கொண்ட மனிதன்... 117

இலங்கையில் ஊடகச் சுதந்திரம் 118

தற்காலத்தில் உலமாக்கள் எதிர்நோக்கும் சவால்கள் (அறபு) 124

Environmental Law In Sri Lanka: Where Do We Stand? 127

Challengers of migrant women workers - special focus on Rizana Nafeek 132

உயிர்துடிப்புள்ள இஸ்லாமியத் தாய் 136

அல்-குர்ஆனின் அற்புதத் தன்மையும், அறிவியலும் 139

பேராதனைப் பல்கலைத் தாயே.. 143

இதுவரை பேசப்படாத பணியகவர்க்கத்தினர் 144

உணர்திறவுடைய இதயம் 146

செய்னம்பு நாச்சியார் மான்மியம் காட்டும் திருமணச் சம்பிராயங்கள் 151


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரேபியர் இசை மரபில் கஸீதாவும், கஸலும்

**பேராசிரியர் எம். எஸ். எம் அனஸ்.**
மெய்யியல் மற்றும் உளவியல் துறை.
பேராதனைப் பல்கலைக்கழகம்.

கஸீதா, பைத், மர்தியா என்ற அறபு கவிதை இனங்கள் இலங்கை முஸ்லிம்களின் மத்தியில் எப்போது ஒன்று கலந்தன என்று கூறுவது கடினம். எனினும் பல நூற்றாண்டுப் பழைமைக்கு அவை சொந்தமானவை. மத்திய கிழக்கு நாகரிகத்திற்கு குறிப்பாக, அறபு தொன்மை நாகரிகத்திற்குச் சொந்தமான இவற்றின் தொடர்பையும், செல்வாக்கையும் மத்திய கிழக்கிற்கு வெளியே வாழும் முஸ்லிம்களிடையேயும் இன்றும் காண முடியும்.

இலங்கையிலும் தமிழ்நாட்டிலும் இக்கவிதை மரபு இப்போதை விட முஸ்லிம்களின் வாழ்வோடு ஒன்றித்திருந்த காலப்பகுதி ஒன்றிருந்தது. பூசரி இமாமின் புர்தா ஷரீ∴ப் அல்லது கஸீதத்துல் புர்தாஹ் வீடுகள் தோறும் பாடப்பட்ட காலம் பற்றி மூத்த தலைமுறையினர் நன்கறிவர். மாப்பிள்ளை ஊர்வல பைத், மழை பைத், பக்கீர் பைத், குர்ஆன் மத்ரஸாக்களில் சிறுவர்கள் பாடிவந்த ஹம்ஸ் (பைத்) போன்று பல பைத் வகைகள் இருந்துள்ளன. இவை அறபு மொழியிலும் தமிழ் மொழியிலும் பாடப்பட்டன.

19ம் நூற்றாண்டில் அக்குறணையில் வாழ்ந்த கசாவத்தை ஆலிம் புலவர் பல கஸீதாக்களையும், மர்தியாக்களையும் பாடியுள்ளார். 'கஸீதத்துல் முரப்பஹா' கசாவத்தை ஆலிம் புலவர் அவரது தகப்பனார் பெயரில் அறபு மொழியில் பாடிய கஸீதாவாகும். அவரது ஆசான் தைக்கா சாஹிப் (வலி) அவர்களைப் புகழ்ந்து மர்தியா (சரமகவி)யும் பாடியுள்ளார். 23 பக்கங்களில் முஹம்மது நபி (ஸல்) அவர்கள் பற்றி பைத்துக்களும், ஹிக்காயத்துக்களும் கொண்ட அறபுக் கவிதை நூல் ஒன்றையும் கசாவத்தை ஆலிம் எழுதியுள்ளார் (ஏ. எம். நஜிமுதீன், 2000). அது தவிர பல்வேறு சூ∴பிகள், பெரியவர்களைப் புகழ்ந்து பாடப்பட்ட 'மவ்லீது' வகையிலான பைத்துக்களும், கஸீதாக்களும் 19ம் நூற்றாண்டிலும், 20ம் நூற்றாண்டின் முன்னரைப் பாதிவரையில் இலங்கை முழுக்கப் பிரசித்தி பெற்றிருந்தன.

பைத்துக்களும், கஸீதாக்களும் கஸல் போல் இசையும், கவிதை வரிகளும் கலந்த பாடல்களாகும். அதன் பிறப்பிடம் தொன்மை அரேபியா. இதன் காலத்தை கி.பி 6ம், 5ம் நூற்றாண்டு ஜாஹிலியாக்கால அரேபியா என்றோ அல்லது அதற்கும் சற்று முற்பட்ட காலப்பிரிவு என்றோ நிர்ணயிக்கலாம். அறபு மக்களின் இசைக் கலை வளர்ச்சிக்கு மூலக்கருத்தாக அமைவது அவர்களிடையே பண்டுதொட்டு நிலவிவந்த கவிதைக்கலை மரபாகும். அறபுக் கவிதை மரபைப் பேசாது தொன்மை அறபு இசையைப் பேசுவது கடினமாகும்.

கி.பி 5ம் நூற்றாண்டுக்கு முன்னரே கவிதை (அல்லது செய்யுள் இயற்றல்) அறபு மக்களின் பிரதான கலை இலக்கிய வடிவமாக இருந்துள்ளது. இலக்கியத்திற்கும் இசைக்குமான பொது ஊற்றாக கவிதை அல்லது பாக்கள் இருந்துள்ளன. உலகின் ஏனைய பல மொழிகளில் நிகழ்ந்தது போலவே அறபு மொழயிலும் வசன நடைக்கு முன்னரே செய்யுள் அல்லது பா இயற்றல் ஆரம்பமாகிவிட்டது எனலாம். இஸ்லாத்திற்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முற்பட்ட காலத்திலும், இஸ்லாம் தோன்றிய பின்னரும் அறபு மக்கள் கவிதைக்கும் இசைக் கலைக்கும் ஒரு முக்கிய இடத்தை வழங்கினர். கிறிஸ்து வருடம் தொடங்கிய காலத்திலேயே தென் அறேபியா இசை வளர்ச்சியின் முக்கிய களமாக விளங்கியது. பல கவிஞர்களினது இரத்தத் தொடர்பு பெருமளவில் தென் அறேபியாவிற்குரியதாகும். இஸ்லாமிய ஆட்சிக் காலத்தில் பயன்படுத்தப்பட்ட இசைக் கருவிகள் பல தென் அறேபியாவிற்குச் சொந்தமானவை. இன்று கூட (வட அறேபியாவைச் சேர்ந்த) அல்-ஹிஜாஸ் அறேபியர் சிறந்த அறபு இசையை அல்-யெமனிலிருந்தே பெற்றுக் கொண்டதாகக் கூறுகின்றனர்.

அல்-ஹிஜாஸ் மாநிலத்தில் மக்காவும் மதீனாவும் தென் அறேபியப் பழங்குடிகளின் வருகைக்கும், குடியேற்றத்திற்கும் அடிக்கடி உள்ளாகிவந்த நிலப் பரப்பாகும். அது தனது உள்நாட்டுக் கலைகளின் வளர்ச்சியில் அதிக முன்னேற்றத்தை வெளிப்படுத்தியது. மக்காவில் குறைஷியர் ஆட்சி நடைபெற்ற போது மக்காவும், கஃபாவும் உக்காஸ் சந்தையும் முன்னேற்பாட்டின்படி தேசிய ரீதியில் ஒன்றுகூடும் இடமாக விளங்கின. உள்ளூர் கலைகளின் மையமாகவும் இவை வளர்ச்சி பெற்றன (H. G. Farmer, 1994).

**முஅலாக்காத்**

கி.பி 6ம் நூற்றாண்டு முடிவடையும் போது அறபு மொழி மிகச் சிறப்பான அதன் காலத்தைப் பிரதிபலித்தது. துல்-ஹஜ் மாதத்தில் 'உக்காஸ்' சந்தையில் கவிதைப் போட்டிகள் நடைபெறுவது வழக்கம். அறபுத் தீபகற்பத்தின் பழங்குடிகள் தம்மிடமருந்து மிகச் சிறந்த கவிஞர்களை அந்தச் சந்தைக்கு தமது பிரதிநிதிகளாக அனுப்பி வைப்பர். பல்வேறு தலைப்புக்களில் பாடப்படும் கவிதைகள் மதிப்பீடு செய்யப்பட்டு சிறந்த கவிதைகள் பரிசுக்காக தெரிவு செய்யப்பட்டன. இங்கு 'தேர்ந்தெடுக்கப்படும் கவிதைகள் மக்காவில் கஃபா திரையில் மக்களின் பார்வைக்காகத் தொங்கவிடப்பட்டன.

அவை முஅலாக்காத், முஹாதாபாத் (பொன் முலாம் பூசப்பட்டது) என்று பெயரிடப்பட்டன. சேர். வில்லியம் ஜேன்ஸ் 1782ல் முலாக்காத்களை முதலில் ஆங்கிலத்தில் மொழி பெயர்த்தார். புகழ்பெற்ற அக்கவிதைகள் அக்காலக் மரபுக்குரிய வகையில் செய்யுள் அல்லது ஈரடிச் செய்யுள் (பைத்)களாகப் பாடப்பட்டன.

இந்தப் பா வகைகளில் உருவாக்கப்பட்ட செய்யுளடித் தொடர்கள் கஸீதா எனப்பட்டன. முஅலாக்காத் பாடல்களுக்கும் கஸீதா வடிவமே பயன்படுத்தப்பட்டது. கஸீதா என்பதன் மூலச் சொல் கஸ்த். கஸ்த் என்றால் 'நோக்கம்' என்று பொருள் தரப்படுகின்றது (http://www.sacreadtext.com2.10.13). போட்டிப் பாடல்களுக்காகவும் இது விசேடமாகப் பயன்படுத்தப்பட்டது. பேராசிரியர் அஹ்ல் பார்த் போன்ற சிலர் கஸ்த் என்பதற்கு வேறு ஒரு கருத்தை முன்வைக்கின்றனர். 'கஸ்த்' என்பதற்கு 'ஒரு பொருளைச் சம பங்காகப் பிரிப்பது என்று அர்த்தம்' கொள்ளப்பட வேண்டும் என்பது அவர்களின் கருத்து.

அதாவது ஒவ்வொரு 'பைத்'தும் அல்லது செய்யுள் அடிகளும் இரு சம பங்காகப் பிரிக்கப்பட்டிருக்கும். ஆனால் எல்லா அடிகளிலும் எதுகை மோனையின் இயக்கம் பொதுத் தன்மையாக இடம்பெற்றிருக்கும். கவிஞர்கள் 16 வகையான சந்த வடிவங்களைக் கையாண்டுள்ளனர். முஅலாக்காத் பாடியவர்களில் பலர் உயர்ந்த கவிவாணர்கள். அவர்களில் ஒரு சிலர் மட்டுமே எழுதப் படிக்கத் தெரிந்தருந்தனர். எழுத்தறிவில்லாத போதும் அவர்கள் இயற்கையாகப் பாடும் திறன் பெற்றிருந்த உயர்ந்த கவிஞர்கள் ஜாஹிலியாக்காலத்திலும், அதற்குப் பின்னரும் கையாளப்பட்ட தொன்மை கஸீதாக்கள் பின்வருமாறு வகைப்படுத்தப்பட்டுள்ளன:

மாதிஹ் (துதிப் பாடல்)
ஹிஜா (வஞ்சப் புகழ்ச்சி)
கஸல் (காதல் துயர்)
ரிதா (புலம்பல்)
வாஸ்வ் (ஒரு பொருளை விவரித்தல்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஃபக்ர் (சுய – புகழ்பாடுதல்)
ஹிக்மா (உபதேசம், அறிவு சார்ந்த -கருத்து)

ஆரம்ப காலப் பாடல்கள் (அல்லது பாக்கள்) அடிப்படையில் பழங்குடிப் பண்புகளை வெளிப்படுத்தின. பழங்குடி-கள் நாடோடிகள். தமது தேவைகளுக்-குப் பெருமளவில் ஒட்டகங்களையும், செம்மறி ஆடுகளையும், ஓரளவிற்கு குதி-ரைகளையும் நம்பிப் பாலைவனங்களில் அல்லது அரைப்-பாலைவனங்களில் வாழ்-க்கை நடத்தி வந்த மக்கள். தொன்மைக் காலத்திலிருந்து ஆரம்ப கால கலீபா-க்கள் ஆட்சி வரை பெரும்-பான்மையான கவிஞர்கள், நாடோடிக் காட்டறபிகள். ஓரி-டத்தில் தரித்து வாழ்ந்தோரின் தொகை மிகவும் குறைவாகவே இருந்தது.

தொன்மைக்காலச் செய்யுட்களில் வள-மான வார்த்தைகள் பயன்படுத்தப்பட்டன. மற்றும் வீரதீரக் காதல் செயல்கள் கருத்துக்களாக வடிவம் பெற்றன. சொல் நயமும், பொருட் செறிவும் கொண்டவை-யாக இக்கவிதைகள் விளங்கின. இச்-செய்யுட்களில் இலக்கிய வகைகள் துதிப் பாடல்களாகவோ, எள்ளலாகவோ, ஒப்பாரியாகவோ, குலப் பெருமைப் பாடல்களாகவோ வெளிப்பட்டன. வீரம், தீரம், விருந்தோம்பல், ஈகைத் தன்மை, சுற்றத்திடம் அன்பு போன்ற இயல்புகள் அவற்றிலிருந்தன (பார்க்க: மு. அ. அஹ்மது ஜுபைர், 2009).

**தொன்மை வடிவம்**

அடிப்படையில் அறபுக் கவிதை நாடோ-டிகளின் சொத்து. தொன்மைக் காலம் முதல் ஆரம்பக் கலீபாக்கள் வரை பெரும்பான்மையான கவிஞர்கள் நாடோடி-கள். தரித்து வாழ்ந்தோரைவிட கவிதைச் செல்வாக்கு நாடோடிகளிடமே அதிகம் காணப்பட்டது. அதனால் மக்காவிலும், மதீனாவிலும் கவிஞர்கள் இருக்கவில்லை என்று பொருள் அல்ல. ஆனால், அக்கவிஞர்கள் நாடோடிக் கவிஞர்கள் அளவு செல்வாக்குப் பெற்றவர்களாக இருக்கவில்லை.

தரித்து வாழ்ந்தோரிடையே கவிதைக்குப் புகழ்பெற்ற இடமாக அல்-ஹீரா நகர் போற்றப்படுகிறது. (நவீன ஈராக்கில் கூபா-வின் தென் பகுதியில் உள்ள நகரம்) தொன்மைப் பாடல்கள் 'ரஜஸ்' என்ற செய்யுள் அடியில் பாடப்பட்டுள்ளன. ஆனால், அவை பொருத்தமான கவிதை-களாகக் கொள்ளப்படவில்லை. 'காரித்' என்ற வகைக்கு ஒரு முக்கியத்துவம் தரப்பட்டது. 'காரித்' இரு வகைகளாகப் பிரிக்கப்பட்டுள்ளது: ஒன்று 'கித்தா' மற்றது 'கஸீதா. இவ்வகையீடு மிகப் பழைமையானதென்று இலக்கிய ஆய்வா-ளர்கள் கருதுகின்றனர். 'கித்தா' என்பது தான் ஆரம்பக் கவி வடிவம் என்றும், அதிலிருந்து தான் 'கஸீதா' வளர்ச்சி பெற்றிருக்கலாம் என்றும் ஆய்வாளர்கள் கருதுகின்றனர்.

கி.பி 6ம் நூற்றாண்டாகும் போது 'கித்தா'வை விட 'கஸீதா' முன்னேற்ற-மடையத் தொடங்கிவிட்டது. 'கித்தா' 7, 8 வரிகள் கொண்ட சிறிய பாடல் என்று இலக்கியத் தகவல்கள் கூறுகின்றன. சிலர் 'கித்தா 20 வரிகள் வரை காணப்பட்டதாவும் கூறுகின்றனர் (Early Arabic Poetry - Selected poems, 2011).

அந்த 7 வகை பாடல்களும் இன்று கிடைத்துள்ளன. அவை அறபுக் கவிதை-யின் உச்சத்தைக் காட்டுகின்றன. பல்வேறு மனித உறவுகளைச் சிறப்பா-கத் தொடர்புபடுத்துவதற்கும் இயற்கை-யின் பல்வேறு பண்புகளைக் காட்டு-வதற்கும் பிரிவுத் துயர் மற்றும் அக உணர்ச்சியை வெளிப்படுத்துவதற்கும் முஅலாக்காத் அறபுக் கவிதைகள் தொடங்கிய காலத்திலேயே சாதனைக-ளைப் புரிந்துள்ளன. தென்மை அறபுக் கவிதைகளின் சிறப்புப் பண்பாக இது எடுத்துக்காட்டப்படுகிறது.

இஸ்லாத்திற்கு முற்பட்ட அல்லது ஜாஹிலியாக் கால அறபுக் கவிதைகள் வாய்வழியாக பாதுகாக்கப்பட்டவை. எழுத்து வடிவத்தில் அன்றி ஞாபகத்தின் ஊடாகக் கடத்தப்பட்டு மக்களை வந்தடைந்தவை. ஜாஹிலியாக்கால கவி-தைகள் பாடல்களாகவே தோற்றம் பெற்றன. அவை கேட்கப்பட்டன; படிக்கப்படவில்லை. பாடப்பட்டன; எழுத-ப்படவில்லை. குரல் தான் இப்-


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாடல்களின் உயிர் நாடியாக இருந்துள்ளது. இவை செவிவழி-குரல்வழிக் காலசாரத்திற்குரியவை எனலாம்.

இப்பாடல்களைத் தொகுத்துச் சொல்வதில் பேச்சும், பேச்சைக் கடந்த ஒன்றும் இருந்தது. குரலுக்கும், பேச்சுக்கும் இடையிலான அபூர்வமான இணக்க நிலை இங்கு காணப்பட்டது. குரல், பேச்சு ஆகிய இரண்டின் இணைவையும் விளக்குவது கடினமானது. கேட்பவருக்கு அது ஒரு ஆழமான அனுபவத்தை வழங்கியது. பாடல் வடிவத்தில் பேச்சைக் கேட்க நேரிட்டால் ஒவ்வொரு தனித் தனிச் சொற்களையும் நாம் கேட்பதில்லை. பௌதீக நிலை கடந்த ஆத்மார்த்த பேச்சொழுங்கு அங்கு சாத்தியமாகிறது. சொல் குரலாகிறது. அது இசைச் சொல்லாகிறது. அதாவது பாடல் சொல்லாகிறது. இவ்வாறு தான் குரலும் மொழியும் ஒன்றிணைந்து உணர்ச்சியை எழுப்பின. ஜாஹிலியாக் காலக் கவிதைகளின் பிரதான பண்பு இதுவாகும் (பார்க்க: Adonis-1990).

பாடல் என்பதற்கான அறபு மொழி வேர்ச் சொல் 'நாஸிப்' என்றும் அது குரலைக் குறிக்கிறது என்றும், கவிதை பாடுவதும் குரலை அல்லது தொனியை உயர்த்துவதும் என்ற பொருளும் இதற்கு உண்டு என்றும் எடோனிஸ் கூறுகிறார். இஸ்லாத்திற்கு முற்பட்ட கவிதைகள் சந்தத்தோடு பாடப்பட்டன. கவிதைகளைக் கவிஞனே பாடினான். இயற்றியவனின் வாயினால் பாடப்படும் போது தான் கவிதை அதன் அழகைப் பெற்றுக் கொள்கிறது என்று அல்-ஜாஹிஸ் (கி.பி 775- 868) கூறியுள்ளார் (Adonis 1990).

தொன்மை மரபில் கவிதையானது பாடல் வடிவமாகவே வெளிப்படுத்தப்பட்டது. இதை உறுதிப்படுத்த அறபு இலக்கிய மரபில் பல அடையாளங்கள் உள்ளன. தான் இயற்றிய பாடலைத் தானே பாடும் ஒரு கவிஞனின் குரல் வானம்பாடியுடன் ஒப்பிடப்பட்டது. 'கேட்டல் தான் மொழிகளின் தந்தையாகும்' என்ற இப்னு கல்தூனின் கூற்று நினைவுபடுத்தத் தகுதியானது. (கவிதை) ஓதுதல் என்பது பாடுதல் ஆகும். ஓதுதல் பாடலுக்கு முந்திய கவிதை ஒப்புவிப்பாக இருந்தது. அறபு இலக்கியத்தில் இது ஒரு முக்கிய பண்பாக இருந்துள்ளது.

*நீ இயற்றும் எல்லாக் கவிதைகளையும்*
*நீ பாடு..*
*அந்தப் பாடல்தான் கவிதையின்*
*அதிகார வரம்பு*

என்ற புகழ் பெற்ற தொன்மை அறபுக் கவிதையும் இதையே கூறுகிறது (Adonis, 1990). பாடல் மூலமாகவே அறேபியர் கவிதையை அமைத்தனர், அதைப் பரப்பினர். எல்லா இனிய இராகங்களுக்குமான அடிப்படை அளவீடுகளை செய்யுளின் சீர்களாக வடிவமைத்துக் கவிதைகளை அழகுபடுத்தினர்.

**எதுகை மோனை**

இஸ்லாத்திற்கு முந்திய கவிதையில் (அல்லது கவிதை வடிவப் பேச்சில்) லயமும், எதுகை மோனையும் முக்கிய இடம் பெற்றிருந்தன. அறபுக் கவிதைகளில் செய்யுளின் சீரை விட எதுகை மோனை பழைமையானது என்று சில ஆய்வாளர் கருதுகின்றனர். கவிதையைக் கேட்பவர்களை இது இலகுவாக ஈர்க்க உதவியது. ஜாஹிலியாக் கவிதைகளில் எதுகை மோனை உச்ச நிலையில் கையாளப்பட்டுள்ளதாக இலக்கிய ஆய்வாளர்கள் பாராட்டுகின்றனர்.

ஆர்மேனிய, சீரிய, ஹிப்று அல்லது கிரேக்க மொழிகளின் தொன்மைக் கவிதைகளை விட அறபு மொழி தொன்மைக் கவிதைகள் அதிக சிறப்பிடத்தைப் பெற்றிருந்ததாக எடுத்துக் காட்டப்படுகிறது. தொன்மை அறபு மொழிக் கவிதைகளின் தனித்துவத்திற்கு அது வேறு எந்தக் கலாசாரத்திலும் தங்கியிருக்கவில்லை. அது அறேபியர்களின் சிறப்பும் வல்லமையும் ஆகும் (Adonis, 1990).

இன்னொரு வகையில் கூறுவதானால் ஒட்டகம் ஓட்டிகள் தமது விலங்குகளுக்காக எதுகை மோனையுடன் பாடிய அறபுக் கவிதைகள் அவற்றின் வார்த்தைகளிலும், ஒலிகளிலும் -


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யுத்தப்பாடல்களும் ஒப்பாரிப் பாடல்களும் லயத்திலும், மோனையிலும் கவிதையின் உச்சத்தை அடைந்தன எனலாம்.

**றாவீகள்**

அடுத்த தலைமுறையினருக்கு எவ்வாறு பாக்கள் கடத்தப்பட்டன என்பது பற்றி தொடக்க கால அறபுக் கவிதை நூல்கள் பல வரலாற்று விபரங்களைத் தந்துள்ளன. 'றாவீக்கள்', கடத்திகள் ஊடாகத் தான் கவிதைகள் கடத்தப்பட்டிருக்கின்றன. ஆனால், பெரிய கவிஞர்கள் தமக்கென்று கவிதைக் 'கடத்திகளை' அதாவது றாவிகளைப் பெற்றிருந்தனர். பொதுவாகக் கவிஞர்களின் சொந்தப் பழங்குடியினர்கள் தொடர்ந்து அவர்களது பாக்களைப் பாடுவதன் மூலம் அவற்றிற்கு உயிர் ஊட்டினர். வாய் மொழிப் பாடலாகப் பிரதேசம் முழுக்க அக்கவிதைகள் பரவின. இது ஒரு பொதுவான முறை. 'றாவிகள்' அல்லது பாஒதுபவர்கள் ஒரு நிறுவனமாகச் செயல்பட்டுள்ளனர்.

ஒவ்வொரு பெரிய கவிஞனுக்கும் றாவி ஒருவர் இருந்தார். தனது கவிதைகளை அக்கவிஞன் றாவிக்கே பொறுப்புச் சாட்டினான். றாவி அக்கவிதைகளை மற்றவர்களுக்குப் பரப்பினான். பல றாவிகள் தம் அளவில் கவிஞர்களுமாவர். புகழ்பெற்ற கவிஞர்களும் றாவிகளாக இருந்துள்ளனர். கிந்தா குலத்துப் புகழ்பெற்ற இளவரசனான இம்றஉல் கைஸ், அல்-ஹீராவின் அபூ-துவாத் என்ற கவிஞனுக்கு 'றாவியாக' இருந்துள்ளார். முஸயானாவின் ஸுஹைர் என்பவர் தமீமைச் சேர்ந்த ஹாஜரின் மகன் அவுசிற்கு றாவியாக இருந்துள்ளார். இவ்வாறு பெயர் பெற்ற பல கவிஞர்கள் றாவிகளாக இருந்துள்ளனர். இதன் மூலம் இருநூறு ஆண்டுகளுக்கு மேலாக அறபுக் கவிதைப் பாரம்பரியத்தை அவர்கள் பாதுகாத்துள்ளனர்.

ஆனால், எல்லாக் கவிஞர்களும் சிறந்த கவிதைக் கடத்திகளாக (றாவிகளாக) இருக்கவில்லை. சிறந்த ஞாபக சக்தியும், கவிதைகளை இசைக்கும் திறனும் உடையவர்கள் தான் றாவிகளாக இருக்க முடியும். அவர்கள் கவிஞர்களாகவும் இருக்கலாம். ஆனால் அவர்கள் 'ஞாபக சக்தி' அதிகம் உள்ளவர்களாக இருந்தாக வேண்டும்.

**மறாத்தி**

ஆரம்ப மறாத்தி வகைப் பாக்கள் மரண அவலங்களின் போது பாடப்பட்டுள்ளன. எதுகை மோனையுடன் அமைந்த இப்பாக்களைப் பாடியதில் பெண்களுக்கும் கணிசமான பங்கிருந்தது. 6ம், 5ம் நூற்றாண்டுகளில் அதிகளவான பெண்கள் இப்பாடல்களைப் பாடியுள்ளனர். அல்-காஸ்ஸா, லைலா, அல்-அக்யாவியா போன்ற பல பெண்(பாடகிக)ளின் பெயர்கள் வரலாற்றுப் பதிவுகளில் இடம்பெற்றுள்ளன. மேற்குறிப்பிட்டவர்களைப் போன்றவர்கள் உண்மையான கவிஞர்களாகவும் திகழ்ந்தனர். ஆனால் அதிகமான பாடகிகள் தமது குடும்பங்களில் இறந்தவர்களுக்காக ஒப்பாரி பாடுபோராக மட்டுமே காணப்பட்டனர். இவை 'மறாத்தி' வகைப் பாடல்களாகும். ஆண்களின் ஒப்பாரிப் பாடல்களை விட பெண்களின் ஒப்பாரிப் பாடல்கள் அதிக உணர்ச்சிபூர்வமானதாக இருந்ததாக கூறப்படுகின்றது.

**மர்தியா**

'மர்தியா'வும் கஸீதாவைச் சேர்ந்ததாகும். சிலர் இரண்டும் வெவ்வேறானவை என்றும் கூறுகின்றனர். பொதுவாக மர்தியா இறந்தவர் பேரில் துதி பாடுவதாகும். இறந்தவர் மீது பாடப்படும் துதியும், உயிர் வாழ்பவர் மீது பாடப்படும் துதியும் ஒன்றல்ல. இருந்தபோதும் இவை இரண்டையும் பொதுவாக ஒன்றாகவே எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளது. மர்தியா ஒன்று பின்வரும் அமைப்பைப் பெற்றிருக்கும்.

1.மரணச் செய்தி,
2.மரணத்தை உருவாக்கிய நிகழ்வுகள்,
3.துதி,
4.ஆறுதல் கூறுதல்.

'மர்தியா' என்பது அறபு மொழி துதிப் பாடல் வகை. இஸ்லாத்திற்கு முந்திய அறேபியாவில் செல்வாக்குடன் விளங்கிய பாடல் அல்லது செய்யுள் வகைகளில் இதுவும் ஒன்று. 'மர்தியா' பாடல் வரி-


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

களை எதுகை மோனை அழகுபடுத்தியது. தைக்கா சாஹிபு அவர்கள் பேரில் கசாவத்தை ஆலிம் 19ம் நூற்றாண்டில் பாடியுள்ள மர்தியாவிலும் எதுகை மோனையின் செல்வாக்கைப் பின்வரும் வரிகளில் பார்க்கலாம்:

*இப்த்தி தாயி நளிமி பிஸ்மில்லா*
*ஹிலில்மா வாஹித்*
*இப்னு திப்து இந்திஜாஹி செய்கு*
*தைக்கா ஸாஹிபி*

மர்தியாக்கள் 'லயத்'துடன் பாடப்பட்டன. சடங்கு சார்ந்த பாடல்களுக்கு 'லயம்' அவசியமான அங்கம் என்று கருதப்படுகின்றது. கஸீதாவை விட 'மர்தியா'-க்கள் நீளமானவை என்று கூறப்படுகின்றது. மர்தியா துதிப்பாடல் என்று கூறும் போது ஆங்கிலேய அல்லது கிரேக்க மொழி துதிப்பாடல்களிலிருந்து இது வேறுபட்டதென்றும் ஆய்வாளர் விளக்கியுள்ளனர். துறை சார்ந்த பெண்களே இப்பாடல்களைப் பாடினர். ஒரு தாய், சகோதரி, மகள் முறையான பெண்கள் தான் இப்பாடல்களில் தமது உறவுகளின் சார்பில் பங்கேற்றனர். இறந்த நபரின் ஆன்மா சாந்தி அடைய வேண்டுவதாகவும். இறந்தவர்களின் புகழையும், நற்பண்புகளையும் போற்றுவதாகவும் அவ் ஒப்பாரிப் பாடல்கள் அமைந்திருந்தன.

கஸீதாவும், மர்தியாவும் அறபு இலக்கியத்தில் வரலாற்றுக்கு முற்பட்டவை என்றும் இரண்டிற்கும் இடையில் சில ஒத்த தன்மைகள் இருப்பதாகவும், கஸீதாவிற்கும் மர்தியாவிற்கும் இடையிலான வேறுபாடுகள் பற்றிய ஆய்வுகள் கூறுகின்றன. பழங்குடியின் புகழ், வீரம், பெருமை என்பவற்றோடு பிரதேச செய்திகளையும், இவ்விரு வடிவங்களும் உள்ளடக்கமாகக் கொண்டிருந்தன.

'மர்தியா'வின் தோற்றம் பெண்களின் புலம்பல் பாடல்களுடன் ஆரம்பமாகின்றது. இப்புலம்பல் பாடல்களில் பெண்களின் மென் உணர்வுகள் வெளிப்படுத்தப்பட்டிருக்கும். புலம்பல் கீதங்களை பெண்களே அதிகம் பாடினர். அவை உணர்ச்சிபூர்வமானவையாக அமைந்திருந்தன. இமாம் கஸ்ஸாலி தனது 'இசைப் பாடம்' பற்றிய நூலில் புலம்பல் பாடல் பற்றி பின்வருமாறு கூறுகின்றார்.

'நடந்து போன நிகழ்ச்சிகளுக்காகப் பாடப்படும் புலம்பல் பாடல்கள் மனதில் துக்கத்தைத் தூண்டிவிட்டு அழுகையையும், மீளாத் துயரத்தையும் மனித மனங்களில் உருவாக்கிவிடுகின்றன.'

**கஸீதா**

கஸீதா ஒரு பிரத்தியேகமான கவிவடிவம் எனலாம். ஆனால், அதையும் விட குறிப்பிட்ட நீளத்தைக் கொண்ட சீரான செய்யுள் அடிகள் தான் ஒரு கஸீதாவை தீர்மானிப்பதாகக் கூறப்படுகின்றது. அவ்வகைப் பாடல்கள் அனைத்தும் இஸ்லாத்திற்கு முந்திய அறேபியாவில் கஸீதா என்றே கொள்ளப்பட்டுள்ளன. சுமார் 30 வரிகளிலிருந்து 150 வரிகள் வரை கஸீதாவின் நீளம் மதிப்பிடப்பட்டுள்ளது.

கஸீதா தனியான தலைமைக் கருத்தொன்றை கொண்டிருக்கும். ரட்சிப்பவன் அல்லது ஆதரவளிப்பவன் பேரில் முன்வைக்கப்படும் மனுவைப் போன்றது கஸீதா. அது தர்க்கரீதியாக வளர்க்கப்பட்டு முடிவைப் பெறும். கஸீதாவில் விடயங்கள் ஒவ்வொரு கட்டமாக எடுத்துக் கூறப்பட்டிருக்கும். பொதுவாக 'நாஸிப்' உடன் கஸீதா தொடங்குகிறது. பாலுணர்ச்சி சார்ந்த முன்னுரை போல் அது அமைந்திருக்கும். 'நாஸிப்' கட்டம் முடிவடைந்த பின்னர் கவிஞன் தனது பிரயாணத்தைப் பற்றிப் பாடுகிறான். இதை முடித்த பின்னர் அவன் பேச விரும்பிய அடிப்படையான நோக்கத்தைக் கூற முற்படுகின்றான். ஒன்றில் அவன் பெருமை பேசுகிறான் அல்லது துதி (மாதிஹ்) பாடுகிறான். தமக்கு ஆதரவளிக்கும், பாதுகாப்பளிக்கும் பழங்குடியின் அல்லது பழங்குடித் தலைவர்களின் பெருமைகளைப் புகழ்ந்துரைக்கின்றான்.

அறபு இலக்கிய ஆய்வாளரான ஈரானைச் சேர்ந்த இப்னு குத்தைப்பா (கி.பி 828-885) 'கித்தாப் அல்-ஷிர்வா அல்-ஷுஹறாறா' என்ற நூலில் அறபுக் கஸீதாவின் மூன்று பாகங்களை பின்வருமாறு குறிப்பிடுகிறார்:


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*1-முதல் பகுதி 'நாஸிப்'. வீடு திரும்ப வேண்டும் என்ற எண்ணத்தைக் கவிஞன் வெளிப்படுத்துகின்றான். காதலன் ஒருவன் காரவன் பயணத்தில் தனது காதலி வாழ்ந்த கூடாரத்தை அடையும் போது காதலியின் பழங்குடியினர் அங்கிருந்து வேறொரு நீர்ச்சுனையைத் தேடிச் சென்றுவிட்டனர் என்பதைத் துயரத்துடன் எண்ணிப்பார்ப்பது.*

*2-'நாஸிப்' என்ற வீடு திரும்பும் பிரிவுத்துயரிலிருந்து மாறி பிரயாணப் பகுதிக்குள் கவிஞன் நுழைகிறான். அது 'றாஹில்' என்று கூறப்படும். பழங்குடியைப் பிரிந்திருப்பதால் எழும் துயர் இங்கு பேசப்படுகிறது.*

*3-மூன்றாம் பகுதி பாடல் கூறும் செய்தியாகும். அது பல வடிவங்களாக அமையும். பழங்குடியின் பெருமை பேசுதல், ஏனைய பழங்குடிகளைக் கிண்டல் செய்தல் அல்லது ஒழுக்கப் புத்திமதிகள் கூறுதல்.*

இஸ்லாத்திற்கு முன்னர் எழுதப்பட்ட இம்ர உல் - கைஸின் முஅலாக்காத் மிகவும் புகழ் பெற்ற கவிதை. தொன்மை அறபு இலக்கியத்தின் முக்கிய படைப்பாக முஅலாக்காத் போற்றப்படுகிறது. தெரிவு செய்யப்பட்ட ஏழு முலாக்காத் கவிதைகள் கி.பி 6ம் நூற்றாண்டு அறபு இலக்கியத்தை சிறப்பாகப் பிரதிபலிக்கும் படைப்புக்களாகக் கொள்ளப்படுகின்றன. இப்பாடல்கள் தங்க மையினால் எழுதப்பட்டு எல்லோரும் அறியக் கூடியதாக க:.பாவின் சுவர்த்திரைகளில் தொங்கவிடப்பட்டன. இவ்வாறு தொங்கவிடப்பட்ட கவிதைகளில் இம்ரவுல் கைஸின் கவிதையும் ஒன்று. முஅலாக்காத் கவிதையின் பிரதான முன்னோடி என்றும் இம்ரவுல் கைஸ் போற்றப்படுகிறார்.

இம்ரவுல் கைஸ் தான் முலாக்காத் பாடல்களின் தந்தை என்று கூறப்பட்டாலும் அவருக்கு முன்னர் வாழ்ந்த சில கவிஞர்களின் தாக்கங்களிலிருந்தே இம்ரவுல் கைஸின் கவிதை முயற்சிகள் ஆரம்பமானதாகக் கூறப்படுகிறது. கைஸ் இப்னு ஜனப் அல் கல்பி, அம்ர் இப்னு காபிய்யா, அபூது ஆ அல்லியாதி ஆகிய புகழ்பெற்ற மூன்று கவிஞர்களின் செல்வாக்கு பற்றி தொன்மை அறபு இலக்கிய வரலாறு சில செய்திகளை முன்வைத்துள்ளது. இம்ரவுல் கைஸின் ஒரு பாடல் பாலைவனத்தில் அழிந்து கிடக்கும் அவரது காதலியின் கூடாரத்தையும், காதலியின் பிரிவையும் கூறுவதாக ஆரம்பமாகிறது. எதிரிப் பழங்குடியைச் சேர்ந்த உனைஸா என்ற பெண்ணின் மீதான காதலை ஒரு பாடல் விவரிக்கின்றது.

முஅலாக்காத் அடிப்படையில் கஸீதாவின் 'நாஸிப்' என்ற பாகத்துடன் தான் ஆரம்பமாகிறது. நாஸிப் காதல் உணர்வுகளை வெளிப்படுத்தும் பகுதி. அது ஒரு இசைப் பாடல். அறேபிய இசை மரபிற்குரிய 'லயம்' அதில் ஒன்று கலந்திருப்பதாகக் கூறப்படுகிறது.

'நாஸிப்' ஒரு கெஞ்சலான காதல் பிரிவை உணர்ச்சிபூர்வமாகக் கூறினாலும், உலகியலுக்கும் ஆன்மீகத்திற்கும் இடையிலான மங்கலான ஒரு இடைவெளியை அப்பாடல்கள் பிரதிபலிப்பதாகக் கூறப்படுகிறது. இம்ரவுல் கைஸ் உலகக் காதலையே பாடியுள்ள போதும் அந்தப் பாடல்களில் மெல்லியதான ஆன்மீக வர்ணம் புலனாகின்றது என்பது சில ஆய்வாளர் கருத்து.

அழகிற்கான பெண் கடவுள் அல்-உஸ்ஸா அப்பாடலில் நினைவுபடுத்தப்படுகிறது. கவிதையின் தொடக்க வரிகளில் இடம்பெறும் இத் தெய்வீக அறிமுகம் பாடலுக்கான இறைகாப்புப் போன்றது என்பது சிலரின் கருத்து. ஆயினும் இம்ரவுல் கைஸின் பாடல்கள் உலகக் காதல் பற்றியவை என்பது தான் பொதுவான கருத்தாகும். ஒரு காலத்தில் கூடாரத்தின் அருகில் சந்தித்துப் பழகிய பெண்ணை (காதலியைப்) பிரியும் துயரம் பற்றியதாக அவரது ஒரு பாடல் அமைந்துள்ளது. அப்பிரிவை இம்ரவுல் கைஸ் பின்வருமாறு கூறுகிறார்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**நண்பர்களே! பயணத்தைச் சற்று நிறுத்துங்கள்**
**எனது காதலியை நினைத்து நான் அழுவதற்காக**
**நண்பர்களே! பயணத்தைச் சற்றுத் தாமதியுங்கள்**
**சுட்டெரிக்கும் இந்தப் பாலைவனத்தின் ஒரு கோடியில்**
**அவள் வாழ்ந்த அந்தக் கூடாரம் இருந்தது.**
**காற்றும் புயலும் குதியாட்டம் போட்ட**
**ஒரு புயல் நாளின் போது**
**அவள் வாழ்ந்திருந்த கூடாரங்கள்**
**சரிந்துகிடந்ததைக் கண்டேன்.**

பொது உரையில் ஆரம்பித்துப் பின்னர் பொது துதிப்பாடல் கவிதைகளாக எழுதப்பட்டிருக்கலாம் என்று கருதப்படுகிறது. ஒரு நபரை அல்லது பொருளை உயர்வாகப் புகழ்ந்து பாடுதல், பொதுச்சபைக்கு ஏற்ற உரை என்று கிரேக்கர்கள் துதிப் பாடல்களுக்குப் பொருள் கூறினர். தேசிய கொண்டாட்டங்களின் போதும், விளையாட்டுக்களின் போதும் கிரேக்கத்தில் இத்தகைய புகழ் உரைகள் இடம்பெற்றன.

**கஸல் - தோற்றம்**

இழப்பின் அல்லது பிரிவின் வேதனையை கஸல் வெளிப்படுத்தும். இந்த வடிவமும் தொன்மையானது. அறபு துதிப்பாடலான கஸீதாவில் இருந்து தான் கஸல் தோன்றியுள்ளது என்று கருதுவோரும் உள்ளனர். அதே வேளை இதன் மற்றொரு வளர்ச்சியை இந்திய – பாரசீக – அறபு நாகரிகம் கிழக்கு இஸ்லாமிய உலகத்திற்கு வழங்கிய கஸல் கலை மரபெனக் கூறலாம். இஸ்லாமிய ஆட்சியினாலும், சூ.்.பிக்களின் செல்வாக்கினாலும் கி.பி 11ம், 12ம் நூற்றாண்டுகளில் தென் ஆசியாவில் கஸல் பரவியது. கஸல் அறபு உலகினதும் முஸ்லிம் உலகினதும் பிரதான கவிதை வடிவமாகும். கஸலின் முன்னோடிகளும், பிதாமகர்களும் என ரூமி(13ம் நூற்றாண்டு), ஹாபிஸ்(14ம் நூற்றாண்டு), மிர்ஸா காலிப்(19ம் நூற்றாண்டு), அல்லாமா இக்பால்(20ம் நூற்றாண்டு) போன்றோரைக் குறிப்பிடலாம்.

இஸ்லாத்திற்கு முந்தைய அறேபியாவில் கஸலை விடக் கஸீதா ஒரு முக்கிய கவிதை வடிவமாக இருந்தது. முக்கியமாக துதிப்பாடல் - கஸீதாவிற்கு அதிக முக்கியத்துவம் தரப்பட்டது. சற்றுப் பிற்பட்ட காலத்தில் இஸ்லாத்திற்கு முந்திய அறேபியாவில் கஸீதாவை விட கஸல் முக்கிய இடத்தைப் பெறத் தொடங்கியது.

எல்லா அறபுக் கவிதை வடிவங்களிலும் கஸீதாவும், கஸலுமே அதிக செல்வாக்கும், செழுமையும், நீடித்த வரலாறும் கொண்டவை எனக் கருதப்படுகிறது. அதிலும் கஸல் பாடலின் செல்வாக்கும், புகழும் அனைத்து வடிவங்களை விடவும் அதிகமானது. பெரும்பாலும் பாரசீக வடிவம் என்று அறியப்பட்டுள்ள கஸலின் தோற்றமும், வளர்ச்சியும் அறபு மண்ணிற்குரியதாகும். அறபுக் கஸீதாவின் அழகிய பாகமான 'நாஸிப்' உடன் அதன் தோற்றத்தை இலக்கிய விமர்சகர்கள் தொடர்புபடுத்துகின்றனர்.

ஆரம்பகால கவிதைப்பிரிவில் கஸல் காதல் பாடலாக மட்டும் இருக்கவில்லை. பின்னர் தான் கஸல் ஒரு முக்கிய பாடல் மரபாகவும், அக உணர்ச்சிப் பாடலாகவும் வளர்ச்சி பெற்றது. கவிஞர் எந்தப் பொருளைப் பற்றிப் பாட விரும்புகிறாரோ அதன் புகழைப் பாடுதல் அன்றையப் பொது மரபு. இப்னு குத்தைபா(இ. 889)வின் கஸீதாக்கள் தாய் மண்ணைப் புகழும் பாடலாகவும், பழைமையைப் போற்றும் பாடல்களாகவும் இருந்துள்ளன. கஸீதா அமைப்பிற்கேற்ப கவிஞன் தனது துக்கத்தையும், ஏக்கத்தையும், மண்ணையும் பாடுகிறான். தனது பயணங்களைப் பற்றி குறிப்பிடுகின்றான். அதன் பின்னர் 'நாஸிப்' இற்கு வருகின்றான். தனது உணர்ச்சியின் வேகத்தையும் பிரிவாற்றாமையின் கொடூரத்தையும் பாடுகின்றான். தனது காதலி மீதான உணர்வுகளை வெளியிடுகிறான். அதன் பின்னர் 'மாதிஹ்' புகழ்பாடும் பிரிவு ஆரம்பமாகின்றது, தாராளத் தன்மை, ஆதரவு பற்றிய விடயங்களை கவிஞர் முன்வைக்கின்றனர். தமது நண்பர்கள் மீதிருக்கும் ஆழ்ந்த அன்பையும் கவிஞர் வெளிப்படுத்தினர். நல்ல கவிஞன் கஸீதாவின் ஒவ்வொரு பாகத்திற்கும் சமமான முக்கியத்துவத்தை வழங்கினான். நவீன ஆய்வாளர் ஹயாத்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஜாஸிம்: அறபு நாடோடி வாழ்வின் பின்னணியில் கவிஞனுக்கும், கேட்பவர்களுக்கும் இடையிலான முக்கிய தொடர்பை நிரப்புவது நாஸிப் என்று கூறுகிறார்.

காதல் என்பது ஒரு வகையில் அழகு பற்றிய மன எழுச்சி. அது மக்கள் அனைவரினது உள்ளங்களிலும் இழையோடும் உணர்வு. இளைஞர், முதியவர் எல்லோருக்கும் அவர்களினது மனவல்லமைக்கும், மனநிறைவிற்கும் அது வழிவகுக்கின்றது. மரணத்தை எந்த நேரத்திலும் எதிர்பார்த்தவாறு பல்வேறு கஷ்டங்களைச் சுமந்தவர்களாக வாழ்க்கைப் போராட்டத்தில் ஈடுபட்டிருந்த தொன்மை அறேபியர் அதன் பயனை எவ்வாறு கைவிடுவார்கள். எது வாழ்க்கையில் நலவாக அமைகிறதோ அதைத்தான் அன்பு பிரதிநிதித்துவம் செய்கின்றது. மகிழ்ச்சிக்கும், வளர்ச்சிக்குமான தூண்டுதல்களையும் அன்பு மனிதருக்கு வழங்குகிறது. பிரிவும் ஏக்கமும், கண்ணீரும் கவலையும், இனிமையான துன்பத்தையும், இனிமையான வலியினையும் தரக் கூடியன. இஸ்லாத்திற்கு முந்திய 'நாஸிப்' அறபு நாடோடி வாழ்வின் உணர்ச்சித் தூண்டல்மிக்க ஒரு உண்மைக் காட்சியை கவிதையாக உலகிற்கு விவரிக்கிறது. அது மட்டுமன்றி, இம்மரபு அண்மைக் கிழக்கு நாடுகளின் தொன்மங்களையும், கவிதைக் கலையையும் உள்வாங்கி வளர்ச்சி பெற்றுள்ளது என்று ஜொரஸ் லோவ் நெக்கோவிச் இனது ஆய்வுகள் குறிப்பிடுகின்றன.

**பாரசீக கஸல்**

அப்பாசியர் கால அறபுக் கவிதைகளின் அளவுகளையும், பாரசீகக் கவிதைக் கட்டமைப்புக்களையும் பாரசீக மொழி உட்படுத்தியது. உண்மையில் கூறுவதானால் பாரசீக மொழியில் முதலில் தோன்றிய கஸல்கள் அறபு கஸல்களாகும். கஸல் வகைகளை மட்டுமன்றி பாரசீகர் அறபு மொழியில் புகழ் பெற்ற துதிப்பாடல் போன்ற வடிவங்களையும் கையாண்டனர். ஈரானின் முதல் கவிஞராக வர்ணிக்கப்படும் அப்துல்லா ஜாப்பர் ருதாக்கி (கி.பி 859-941) கஸல் பாடல்களை இயற்றிய புகழ்பெற்ற கவிஞராவார்.

தொன்மை அறேபியாவிலும், பாரசீகத்திலும் நாடோடிகள் கவிதைகளை உரையாடல்களாகப் பயன்படுத்தியுள்ளனர். எத்தனையோ பாடல் வடிவங்களில் பழங்குடிகளின் பங்கேற்கும் பண்பு பொதுவாக இருந்துள்ளது. அறபு கலாசாரத்தில் இன்றும் பொதுச்சாலைகளில் கதை கூறுவதும், போட்டிக்காக, எழுந்தமானமாக வீதிகளில் பாடுவதும் இன்னும் காணக் கூடியதாகவுள்ளது என்ற செய்தியையும் இங்கு நினைவுபடுத்தலாம்.

பிரிவுத்துயர் கூறும் கவிதைகளையும், காதல் கவிதைகளையும் கவிஞர்கள் அதிகமாகப் பாடினர். அநேக கவிதைகள் பிரிவுத்துயர் பாடல்களுடனேயே ஆரம்பமாகின. 'நாஸிப்' முக்கிய கருப் பொருளாக இருந்தது. கவிஞன் தனது பிரிவுத் துயரை வெளிப்படுத்துதல், காதலி வாழ்ந்த அழிபாடுகள் மற்றும் பழைய இடிபாடுகளின் மத்தியில் நின்று பிரிவுத் துயரை வெளியிடுதல் என்பதாக இக்கவிதைகள் அமைந்திருந்தன.

இஸ்லாமிய ஆட்சிக் காலத்தில் இஸ்லாத்திற்கு முற்பட்ட கவிதைகள் சமய - ஒழுக்கவிதிகளுக்கு ஏற்புடையன அல்ல என்று கருதப்பட்டது. அதனால் பழைய கவிதைகளின் தொடர்ச்சியில் பல தடைகள் ஏற்பட்டன. ஆயினும் கவிதைகள் அடக்கி ஒடுக்கப்படவில்லை. பழைய கவிஞர்கள் பலர் இஸ்லாத்தைத் தழுவினர். இஸ்லாத்தைப் புகழ்ந்து பாடும் கவிதை மரபின் வளர்ச்சிக்கு இவர்கள் உறுதுணையாக இருந்தனர்.

கையான் இப்னு உக்காபா(தூ அல்றும்மா 697-735) கடைசி நாடோடி அறபு புலவராகக் கருதப்படுகின்றார். அவர் இஸ்லாத்திற்கு முற்பட்ட மரபுகளைப் பின்பற்றி பல பாடல்களை இயற்றினார். அவரது மிக அதிகமான கவிதைகள் பாலைவன வாழ்க்கையைப் பிரதிபலிப்பனவாக அமைந்திருந்தன. இந்த வகை கருப்பொருள்களும், மரபுகளும் தொடர்ந்து பின்பற்றப்பட்ட போதும் நவீன நகர்ப்புற கவிதைகளின் தோற்றத்திற்கும் இவை ஆதாரமாக விளங்கின. அரசவைக்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கவிஞர்கள் தோற்றம் பெறுவதை உமையாக்களின் ஆட்சிக் காலத்தில் அவதானிக்க முடிகிறது. செல்வ வளமும், தரித்து வாழும் நகர்ப்புற வசதிகளும், ஆடம்பர வாழ்வும் அரசவையில் கஸல் வகைக் கவிதைகளுக்கு அதிக வாய்ப்பை வழங்கின.

இஸ்லாமிய காலப்பகுதியில் குறிப்பாக 7ம் நூற்றாண்டுக் (622-661) காலப்பகுதியில் கவிதைப் பயிற்சியில் குறிப்பிடத்தக்க மாற்றங்கள் நிகழ்ந்தன. பழைய மரபு ஓரளவு அதே விதமாகத் தொடர்ந்து வந்ததாக கூறப்படுகின்றது. கஸல் இன்னும் முக்கிய பாடல் வகையாக வளர்ச்சி பெற்றிருக்கவில்லை. உமையாக்களின் காலப் பிரிவிலேயே கஸல் (661-750) முக்கிய கவிதைப் பிரிவாக வளர்ச்சி பெற்றது. அப்பாசியர் காலத்திலும் இதன் தாக்கம் சிறப்பாக நீடித்தது.

கஸல் சுதந்திரமான, தனித்துவமான கவிதைப் பிரிவாகத் தனக்கென்ற அடையாளத்தைப் பெற்றுக் கொண்ட காலப்பிரிவு இதுவாகும். முஆவியாவின் காலத்தைத் தொடர்ந்து உமையாக்களின் ஆட்சிக் காலம் ஆரம்பமாகிறது. கவிதைகள் மீது முன்னர் விதிக்கப்பட்டிருந்த கட்டுப்பாடுகள் உமையாக்கள் காலப்பிரிவில் தளர்த்தப்பட்டன. கவிதைப் படைப்புக்களுக்கான செழிப்பான காலத்தின் தோற்றம் என்று வரலாறு இக்காலப்பகுதியை வர்ணிக்கிறது.

உமையா ஆட்சியாளர்கள் கவிதையை உண்மையாகப் பாராட்டுபவர்களாகவும், கவிஞர்களை ஆதரிப்பதில் மிகவும் தாராளத்தன்மை காட்டுவோர்களாகவும் விளங்கினர். உமையா கலீபாக்களும். அவர்களின் ஆளுனர்களும் வேறு எந்த வடிவங்களை விடவும் கஸல் பாடலை மிகவும் விரும்பினர். கஸலின் இனிய இராகமும், அக உணர்ச்சியைத் தூண்டும் அதன் கவித்துவ அழகும் அவர்களைப் பெரிதும் கவர்ந்தன.

உணர்ச்சிச் செறிவும், உணர்ச்சி வெளிப்பாடும் கஸல் பாடல்களின் உயர்ந்த பண்பாகும். கஸல் கவிஞர்களை சமூகம் பாதுகாத்ததோடு ஆட்சியாளர்களும் அவர்களை ஆதரித்தனர். உமையாக்களின் காலத்தில் காதலையும், காதல் பிரிவையுமே கஸல் கருப்பொருளாகக் கொண்டிருந்தது. கஸீதாவிற்குரிய வழமையான பாடல் வரிகளும் அமைப்பும் அதே விதமாகவே இருந்தன. பல மொழிகளுக்கும், பல கலாசாரங்களுக்கும் கஸல் பரவிச் சென்ற போதும் இந்த இரு அடிப்படைகளிலும் எந்த மாற்றமும் ஏற்படவில்லை.

உமையாக்களின் காலப்பிரிவில் உயர் வகுப்பினர்களும், நகர்ப்புற மக்களும் பொழுது போக்கை விரும்பினர். இசையும், பாடலும் பொழுது போக்கின் பிரதான தேவைகளைப் பூர்த்தி செய்தன. இசையுடன் கஸல் இணைந்திருந்ததால் கஸல் பாடல்களை மக்கள் ஆர்வத்துடன் வரவேற்றனர். பின்னர் புதிய தேவைகளுக்கும், இரசனைக்கும் ஏற்ப கஸலிலும் மாற்றங்கள் நிகழ்ந்தன. மெல்லிசைப் பொழுது போக்கிற்கு உகந்த இசை முறையாக கஸல் இனங்காணப்பட்டது. முன்னர் கஸீதாக்கள் போல் நீண்ட பாடல்களாக இருந்த கஸல்கள் இப்போது குறைந்த வரிகளுடன் பாடப்பட்டன. பிரிவுத்துயரையும், வீடுவாசல்களைப் பிரிந்து செல்வதால் ஏற்படும் வேதனையையும் பேசிய கஸல் காதல் உணர்வையும், சிருங்கார ரஸத்தையும் மிக உயர்ந்த அழகுபடுத்தப்பட பாடல்வரிகளாக மக்களிடம் கொண்டு சென்றது.

**உசாத்துணைகள்**


Early Arabic Poetry (Selected Poems, Ithaca Press, U K, 2011)

Adonis, (1990) An Introduction To Arab Poetics, Trans:Catherine Cobham, London 1990.

H.G. Farmer, (1994) A History Of Arabian Music, London.

Imam Ghazzali, (1995) Ihya Ulumid-Din, India.

மு. அ. அஹமது ஜுபைர் (2009), நவீனகால அறபிக் கவிதைகள், சென்னை.

ஏ. எம் நஜிமுதீன் (2000), கசாவத்தை ஆலிம் புலவர், கண்டி.

http://www.ghazalpage.net (04.10.2013)

http://www.sacread-text.com (02.10.2013)





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலக்கியமும் நூலாசிரியனின் மரணமும் -ஒரு மறு வாசிப்பு

**கலாநிதி பி. எம் ஜமாஹிர்**
முதுநிலை விரிவுரையாளர்,
மெய்யியல் மற்றும் உளவியல் துறை
பேராதனைப் பல்கலைக்கழகம்

**அறிமுகம்:**
எதனையும் ஆய்வறியும் மனித சிந்தனை உலக நிலவரங்களை மாற்றியமைக்கின்றது. இச்சிந்தனை வளர்ச்சி ஒருவனின் மெய்யறிவைத் தூண்டி நிற்கின்றன. மன மெய்யியலில் (Philosophy Of Mind) சிந்தித்தல் என்ற சொல் மிக விரிவானதும், சிக்கலானதுமாகும். உளவியலாளர்கள் சிந்திக்கும் நிகழ்வுப் போக்கினை அறிகை ஆற்றல் எனக் குறிப்பிடுகின்றனர். ஒரு நோக்குடன் கூடிய பல்வேறு கருத்துக்களின் தொகுப்பு சிந்தனை எனக் கூறப்படுகின்றது. அதிலும் சிந்தனை ஒரு பிரச்சினையால் தூண்டப்பட்டு அது தொடர்பான எண்ணங்கள் தோன்றும் நிலையாகவுள்ளது. சுருக்கமாக சிந்தனை முறை என்பது தனக்குத் தானே பேசிக்கொள்வது என்றும் கூற முடியும். இச்சிந்தனை முறை காரணங்காணல், சிந்தித்தல், பிரச்சினை தீர்த்தல், படைப்பாக்க மலர்ச்சி, இலக்கியங்கள், கலைகள், கண்டுபிடிப்புக்கள் என பல அறிவுச் செயற்பாடுகளை ஒன்றிணைக்கின்றது.

சிந்தனைக்கும் மொழிக்குமான தொடர்பு எத்தகையது? மொழியின் உருவாக்கம், உற்பத்தி, பிறப்பு, அதன் விருத்தி, அதன் பரம்பல் மற்றும் மொழியின் வடிவக் கூறுகள் (ஒலியன், உருபன், சொல், சொற் தொடர், வாக்கியம்) எனும் முழுச் செயற்பாடுகளும் எமது சிந்தனையோடு தொடர்புடையதாகும். மொழியானது எமது சிந்தனையின் வழி என்பர். மொழியாலேயே சிந்தனை தூண்டிவிடப்படுகின்றது. அதாவது நாம் உலகை அறிந்து கொள்வது மொழி மூலமேயாகும். அனுபவ அறிவைத் திரட்டுவதற்கும், கருத்துப் பரிமாறுவதற்கும் மொழியே பிரதான ஊடகமாகும். மனிதன் சூழலுக்கு இசையுறுவதற்கும் மொழி உதவுகின்றது.

மொழியினூடாக சிந்திக்கலாம் என்பது இவற்றிலிருந்து காணும் உண்மையாகும். சிந்தனையும், மொழியும் தொடர்புறும் பாடப்பரப்பு அறிவுசார் (Cognitive Psychology) உளவியலுக்குரியதாகின்றது. இவ்வாறு மக்களின் கருத்துப்பரிமாற்ற ஊடகமான மொழி அவர்களின் சிந்தனைகள், அனுபவங்கள் மற்றும் உணர்வுகளைப் பதிவுசெய்ய முற்பட்டதின் வழி இலக்கியங்கள் மிளிர்ந்தன. இலக்கியம் ஏனைய கலை வடிவங்களைக் காட்டிலும் மொழிக்கலை என்ற வகையில் முக்கியத்துவம் மிகுந்ததாகின்றது. சிந்தனையும் மொழியும் இலக்கியத்தின் ஊடகமாக இருப்பதால் இலக்கியம் மொழியியல் (Linguistics) பரப்புக்குரியதாகின்றது. இப்பின்னணியில் மொழியியல் வழிவந்த அமைப்பியல் (Structuralism) அணுகுமுறையை அதிலும் றோலன் பார்த்தின் (Roland Barthes, 1915-1980) "***நூலாசிரியரின் மரணம்***" - (Death of Author ) எனும் கருத்துரு படைப்பாக்கம் கொண்ட இலக்கியத் திறனாய்வுக்கும், இலக்கியத் திறனாய்வு ஒரு புதிய அறிவுப் பிரிவாக உருவாகவும் எவ்வாறு வழிவகுத்தது எனும் அண்மைப் பதிவுகள் குறித்து இக்கட்டுரை ஓரளவு மறுவாசிப்புச் செய்கின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**இலக்கியம்:**

எது இலக்கியம்? இலக்கியம் என்பது காலம் காட்டும் கண்ணாடி என்பர். அது நம் வாழ்க்கையின் நிகழ்வுகளைப் படம் பிடித்துக் காட்டவல்லது. ஒவ்வொரு காலத்திலும் அதாவது, ஓர் உணர்வு மேலோங்கி நிற்கும். இதைக் 'கால உணர்வு' என்பர். அவ்வக் கால மக்களின் வாழ்க்கை நிலையினையும், வாழக் கூடிய வழிமுறையினையும் மற்றும் நாகரீகம், பண்பாடு என அனைத்தையும் எழுத்தில் தெளிவாக படம்பிடித்துக் காட்டுகின்றன. இதனால் இலக்கியத்தை காலவோட்டத்தில் "மாறுநிலை" பெற்ற கருத்துரு என வரையறுப்பதுமுண்டு.

பொதுவாக இலக்கியம் என்பது இலக்கினையுடையது, குறிக்கோளினை உடையது என்பர். வாழ்க்கையின் ஏதேனும் ஓர் இலக்கை, குறிக்கோளை எடுத்துக் கூறும் பணியைச் செய்கின்றது. வெறும் குறிக்கோளினைச் சொல்லும் போது அது மக்களிடம் சென்றடையாது. எனவே, ஒரு படைப்பினைப் படைக்க விரும்பும் படைப்பாளன் பல்வேறு உத்திகளைக் கையாண்டு அந்தக் குறிக்கோளினைப் படைப்பான். எடுத்துக்காட்டாக உவமை, உருவகம். குறியீடு, கதை மாந்தரிடம் பேசவைக்கக் கூடிய முறைகள், காட்சி அமைப்பு, நாடகப்பாங்கு, உரையாடல், கலை மற்றும் அதனுடன் தொடர்பான கேள்விபதில் நிரல் முறைகள் இவை போன்ற உத்தி முறைகளை ஓர் இலக்கியத்தில் காணலாம். அதிலும் ஒரு புதிய கருத்தினைக் கொண்டு வரும் போது அவ்வாறான நிலைப்பாட்டினைக் காண முடியும். ஒரு படைப்பாளி தன்னைச் சார்ந்திருக்கக் கூடிய சமூகத்தின் கட்டமைப்பிலிருந்து தான் கையாளக்கூடிய உத்திகளை எடுப்பான். அதாவது சமூகத் தலைப்பிலிருந்தே அந்தப் படைப்பின் உருவாக்கம் காணப்படும்.

அதேசமயம் மொழியியல் நோக்கில் இலக்கியத்தை ஒரு மொழிக்கலை என வரையறுப்பர். மொழியில்லாமல் இலக்கியம் இல்லை. மொழியே இலக்கியத்தின் ஊடகமாகும். ஒரு இலக்கிய படைப்பு மொழியினால் ஆன மொழி என்பர் (எம். ஏ. நு.்.மான், 2007:255-256). கவிதை, சிறுகதை, நாவல் முதலான இலக்கிய வடிவங்கள் படைப்பாளனின் படைப்பாக்கத்தையும், புதிய செய்தியையும் வெளிப்படுத்துவதாக இருக்க வேண்டும். இவ்வாறு வெளிப்படுத்தும் செய்தியே ஒரு இலக்கியத்தின் சிறப்பாகும். ஒரு சமூகத்தின் வாழ்வியல் உண்மை, மற்றும் மானிட வரலாற்றையும் உயரிய அழகியல் நுட்பத்துடன் சித்திரிப்பதோடு சமூகச் சிக்கல்களைக் கட்டவிழ்ப்பதாகவும், வாசகனின் எதிர்பார்ப்பை மனதில் கொண்டதாகவும் இருத்தல் வேண்டும். இத்தகைய வெளிப்பாடுகளே ஓர் இலக்கியத்தின் ஜீவனாக மதிப்பிடப்படுகிறது.

**நூலாசிரியனின் மரணம்:**

உடன் கால தமிழ் இலக்கியத் திறனாய்வில் அமைப்பியல் (Structuralism), பின் அமைப்பியல் (Post Structuralism) மற்றும் பின் நவீனத்துவக் (Post Modernism) கோட்பாடுகளின் செல்வாக்கை அறிய முடிகின்றது. அது ஒரு புதிய முன்னேற்றம் என்று கூற வேண்டும். இதில் அமைப்பியல் அணுகுமுறை மொழியின் கூறுகள் ஒவ்வொன்றையும் தொடர்புபடுத்திப் பார்ப்பதன் மூலம் பொருளறிகை உருவாக்கம் பெறுவதாய் உள்ளது. இவ்வணுகுமுறை கலை, மானிடவியல், சமூக விஞ்ஞானங்கள் முதலாம் துறைகளிலே ஆய்வுகளை மேற்கொள்வதற்குரிய ஒரு முறையியலாகவும், அணுகுமுறையாகவும் பயன்பட்டு வருகின்றது. அமைப்பியலை மீளாய்வுக்கும், உசாவலுக்கும் உட்படுத்தியதின் வெளிப்பாடாக பின் அமைப்பியல் தோன்றுவதற்குக் காரணமானவர்களாக றோலன் பார்த், டெறிடா (1930-2004) ஆகிய இருவரையும் குறிப்பிடுவர். இதில் றோலன் பார்த் என்ற பிரெஞ்சு அமைப்பியல் திறனாய்வாளர் நூலியம் அல்லது பிரதி (Text) பற்றிய மரபு வழி அறிகைக் கட்டமைப்பை மறுவாசிப்புக்குட்படுத்தியதன் வெளிப்பாடாக தமது "நூலாசிரியரின் மரணம்" என்ற கட்டுரையில் அமைப்பியலின் புதிய பரிணாமத்தை வெளிப்படுத்தினார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒரு பிரதியின் (இலக்கியத்தின்) ஆசிரியன் அந்தப் பிரதியை எழுதும் போது தான் ஆசிரியனாக இருக்கிறான். பிரதி எழுதி முடிந்ததும் அவன் மரணமடைந்து (மறைந்து) விடுகின்றான். அதன் பிறகு அவன் ஆசிரியன் அல்ல. (அவனுடைய படைப்பு அவனுடைய காட்டிலிருந்து விடுதலை பெறுகின்றது) அவனும் ஒரு வாசகனே, விமர்சகனே. ஏனெனில், எழுதப்பட்ட போது அவன் வெளிப்படுத்த விரும்பிய அர்த்தங்கள் வேறு, வாசகன் படிக்கும் போது அவனுக்குத் தோன்றும் அர்த்தங்கள் வேறு. அவன் வேறு மாதிரியான அர்த்தங்களைக் கண்டு கொள்கின்றான். (ஒரு பிரதி பல்வேறு பொருள் விளக்கத்திற்கு இடம் தரும்). எழுதும் போது ஆசிரியனின் மனதில் தோன்றிய ஒற்றைக் கருத்து, வாசிக்கும் போது பல விதமான கருத்துக்களை உற்பத்தி செய்ய ஆரம்பித்துவிடுகின்றது. ஒற்றை அர்த்தம் என்பது இல்லாததால் அந்த ஒற்றை அர்த்தத்தைக் கொண்டிருந்த ஆசிரியன் மரணமடைந்து விடுகிறான் என எழுதினார் (The Death of the Author – T Book மற்றும் எம். ஜி. சுரேஷ் 2004:64).

ஒரே வகையான வாசிப்பு ஒரே வகையான பொருளைத் தருதல் என்ற ஒருமைத் தன்மையை உடைத்தெறிந்து வாசிப்பில் பன்மைத்தன்மைக்கு பார்த் வழி தருகின்றார். வேறு சொற்களில் கூறுவதானால் ஒரு பிரதிக்கு ஒரு வாசகன் அல்லது விமர்சகன் தனக்கு சாத்தியமான பல வழிகளில் வியாக்கியானம் செய்ய நூலாசிரியரின் மரணம் வழியமைத்தது. இதனால் ஒரு பிரதி ஆசிரியனின் ஒற்றை அர்த்தத்திற்கு அப்பால் பலதள பொருண்மைகளைத் தரலாம் என்பதே அமைப்பியல் சார் விமர்சகர்களின் கருத்தாகும். இவ்வாறு ஒரு பிரதிக்கு பல வாசிப்புக்கள் அல்லது பலதள அர்த்தங்கள் எவ்வாறு சாத்தியம்? பிரதியின் கட்டமைப்பு அதற்கு இடம் கொடுப்பதனால் அது சாத்தியமாகின்றது. அதாவது பிரதி தன் உள்ளேயே இத்தகைய பொருள் விளக்கத்துக்குரிய சாத்தியப்பாடுகளைக் கொண்டுள்ளது.

**அதிலும் இலக்கிய உணர் திறனும், படைப்பு மனமும் கொண்ட வாசகனிடம் பிரதி புது உயிர்ப்பு பெறுகிறது என்று எம். ஏ. நு.்.மான்** (2007:213-215) கூறுவதும் மனங்கொள்ளத்தக்கது.

ஆசிரியனின் மரணத்தை அறிவித்ததன் மூலம் றோலன் பார்த்தும் அவர் வழி நவீன திறனாய்வாளர்களும் "ஆசிரியர் மையம்" கொண்ட மரபு சார்ந்த கருதுகோளை நிராகரித்ததை அறியலாம். ஆக, ஒரு பிரதியின் அர்த்தத்தை ஆசிரியனின் நோக்கம் தீர்மானிப்பதில்லை. வாசிப்போரும் பிரதியின் கட்டமைப்பும் (மொழி) தான் தீர்மானிக்கின்றது என மேலும் அறியலாம். இக்கட்டுரையைக் கூட வாசகனாகிய நீங்கள் வாசித்து முடிகின்ற போது இக்கட்டுரையாளனும் கூட மறைந்து விடுவான். அப்போது வாசகனாகிய நீங்கள் பலதள அர்த்தங்களைத் தருவதற்குரியவர்கள். எனினும் இக்கருத்தை ஏற்றுக்கொள்ளும் மன நிலையில் ஆசிரிய மையம் கொண்ட சமகால கலை இலக்கிய உலகம் இல்லை என்பதே யதார்த்தமாகும்.

பிரதி என்பது மொழிக்குள் குறிகள், சுட்டிகள் (Signs) நடத்தும் விளையாட்டு என்றார் பார்த். இந்த விளையாட்டு பிரதி-எழுத்தாளன், வாசகன்- விமர்சகன் போன்றோர் பங்குபெறும் விளையாட்டாகும். எனவே, இதில் நூலாசிரியனை மட்டும் கொண்டாடுவதில் அர்த்தம் இல்லை. ஆசிரியன் பிரதியின் மூலம் அல்ல. ஒரு பிரதியின் அர்த்தம் என்பது அதில் தொகுக்கப்பட்டுள்ள குறிகளின் மற்றும் ஆசிரியன் உள்வாங்கிக் கொண்ட பல பிரதிகளின் தாக்கம் தரும் அர்த்தங்களின் தொகுப்பேயாகும். இவை எல்லாவற்றையும் வாசகனால் மட்டுமே புரிந்து கொள்ள முடியும். பிரதி என்பது வாசகனால் தான் உயிர் பெறுகின்றது. வார்த்தைகளை அவன் தான் பொருள்படுத்திப் பார்க்கின்றான். ஆசிரியன் என்பவன் அநாமதேய ஆசாமி. அவனுக்கும் அவனால் எழுதப்பட்ட பிரதிக்கும் யாதொரு சம்மந்தமும் இல்லை. ஏனெனில், ஒரு பிரதியை எழுதி முடித்ததுமே அவன் இறந்தவனாகின்றான். ஒரு பிரதியை


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எழுதும் போது தான் அவன் ஆசிரியன். எழுதி முடிந்த பின் அவனும் ஒரு வாசகன். பார்வையாளன், விமர்சகன் அவன் எழுதிய பிரதியை அவனே விமர்சிக்-கலாம். கிழி கிழி என்று கிழிக்கலாம். என்று சொல்லி ஆசிரிய-னின் தலைக்குப் பின்னால் சுழலும் ஒளிவட்டத்தை பார்த் ரத்துச் செய்கின்-றார் (எம். ஜி. சுரேஷ் 2004:105-106).

ஸ்விட்சர்லாந்து மொழியியலாளரான பேர்டிணாண்ட் டி சசூரின் (1857-1913) கருத்தில்; சொற்கள் என்பது பொருள்-களைக் குறிப்பது என்பது தவறு. உண்மையில் அவை குறிகளே. குறி-களுக்கு இரண்டு அம்சங்கள் உண்டு. ஒன்று, குறிப்பான் (Signifier) எடுத்துக்-காட்டாக, "நாய்" என்ற சொல் நாயைச் சுட்டுவது. அது பூனை, பறவைகளை அர்த்தப்படுத்துவது இல்லை. நாய் என்ற ஒலியன்களால் (Sound Image) ஆன சொல்லே குறிப்பான் ஆகும். மற்றையது, குறிப்பீடு (Signified) "நாய்" என்ற விலங்கு பற்றி எமது சிந்தனையில் இருக்கும் கருத்து குறிப்பீடு ஆகும். குறிப்பானும், குறிப்பீடும் சேர்ந்தே "நாய்" என்ற குறியை (Sign) உருவாக்-குகின்றன. மொழி என்பது உலகிலுள்ள குறி முறைகளில் ஒன்று. அது போல குறி முறைகள் பல உள்ளன. இதைப் பற்றி ஆராயும் துறைக்கு குறியியல் (Semiology) என்பர். இந்த நோக்கில் பார்க்கும் போது அர்த்தம் என்பது குறிகள் இணைக்கப்படும் முறையிலேயே உண்டாகின்றது. (பார்க்க, http://en.wikipedia.org/ wiki/French-philosophy). ஆக, ஒரு பிரதியை குறிக-ளால் ஆன ஒரு குறி எனவும் அறியலாம்.

அதே சமயம், மொழி என்பது உண்மை அல்லது யதார்த்தத்தை உள்ளபடியே ஊடுருவிப் பார்க்க உதவும் சுத்தமான கண்ணாடி போன்ற ஊடகம் என்று கூறி வாசகனைத் தவறான பாதையில் திருப்புவது இலக்கியவாதிகள் புரியும் மிகப் பெரிய குற்றம் என்று பார்த் கூறுகின்றார். கூறுணர்வு கொண்ட உண்மையான இலக்கியவாதி மொழித் திறமையின் விளையாட்டை (Language game) உள்ளபடி உணர்ந்து சரியான முறையில் அதை விளையாடுகின்றான் என்று அதை மேலும் அவர் சுட்டிக் காட்டியுள்ளார் (கோபிசந்த் நாரங்க, 2005:145-146).

நூலாசிரியன் தன் பிரதியை தானே விமர்சிக்கலாம், கிழி கிழி என்று கிழிக்கலாம் என்பதற்கு எடுத்துக்காட்டாக பார்த்தைக் கூறலாம். பார்த் தன்னுடைய சுய சரிதையை **"றோலன் பார்த்தைப் பற்றி றோலன் பார்த்"** - (Roland Barthes by Roland Barthes) என்ற தலைப்பில் எழுதினார். அந்த பிரதியில் "இதிலுள்ள எல்லாமே ஒரு நாவலில் வரும் கதாப்-பாத்திரம் தன்னைப் பற்றிச் சொல்லிக் கொள்வதாக கருத வேண்டும்" என்பதாக சொல்கின்றார். பார்த் இதன் மூலம் உண்மை புனைவாகவும், புனைவு உண்மையாகவும் இருக்கிறது என்றார். அந்தப் பிரதியில் இரண்டு விதமான குரல்கள் ஒலிப்பதை உணரலாம். ஒன்று ஆசிரியர் பார்த்தின் குரல். இன்னொன்று பார்த் என்ற கதாப்ப-ாத்திரத்தினுடையது. அதே பிரதியை பார்த் திறனாய்வு செய்கின்றார். அப்போது பார்த் ஆசிரியரும் அல்ல, கதாப்பாத்திரமும் அல்ல, விமர்சகர். ஆக, அது மூன்றாவது குரல். (மேலது 2004:91) இங்கு பார்த் சுயசரிதை என்ற இலக்கிய வகையை உண்மைக்குப் புறம்பானது, செயற்கையானது என்று கூறி தம்மைத் தாமே ரத்துச் செய்வதை அறியலாம். இவ்வாறே பகுப்பாய்வு மெய்யியல் வரலாற்றில் மொழியின் தர்க்கத் தவறுகளைக் களைய தம்மைத் தாமே ரத்துச் செய்த விட்கன்ஸ்-டைனையும் கூறலாம். தனது "ட்ரெக்டேட்டஸ் (Tractatus-1921)" என்ற பிரதியை மறுதலித்து "மெய்யியல் ஆய்வுகள்" (Philosophical Investigation - 1953) என்ற பிரதியை படைத்த நிகழ்-வும் குறிப்பிடத்தக்கது. தனது முதல் பிரதியான "ட்ரெக்டேட்டஸ்" பெரிய மெய்யியல் பிரச்சினைகள் அனைத்-தையும் கொள்கை அளவிலேனும் தீர்த்துவிட்டதாக நம்பிய விட்கன்ஸ்டைன் சில காலங்களின் பின் ஒரு வாசகன் நிலையிலிருந்து அதனை வாசித்த போது


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதில் பாரிய தவறுகள் இருப்பதை உணர்ந்து அதனை மறுதலித்து இரண்டாவது பிரதியான "மெய்யியல் ஆய்வுகளைப் படைத்த நேர்மை அறியத்தக்கது. ஆக, ஒரு பிரதியின் அர்த்தத் தன்மை அந்தப் பிரதியிலேயே உள்ளதால் ஒற்றைப் புரிதல், மறைந்து பன்மைப் புரிதலுக்கு இடமளித்தல், அமைப்பியலின் அதிலும் பின் நவீனத்துவத்தின் அடிப்படைக் கூறுகளில் ஒன்றாகும். உண்மையில் ஒற்றைக் கருப்பொருள் என்ற மையத்தை வைத்து நேர்கோட்டு முறையில் எழுதப்படும் எழுத்துக்கள் பழமையானதும் காலங்கடந்ததுமாகும். ஆக, நவீன போக்கில் புரிந்து எழுதுதல், பேசுதல், திறனாய்தல் வலியுறுத்தப்பட வேண்டும்.

"பழையது கழிந்து புதியன வருவது தவிர்க்க முடியாதது" அதாவது "இடை-மாறுதல்" என்ற மாற்றத்துக்கமைய இலக்கிய பண்பாட்டுச் சூழலும் மாறும் என்பதை புரிய வேண்டும். மாற்றம் என்ற தத்துவம் மாறாதது என்பது உலகப் பொருண்மையின் இயற்கையாகக் காணப்படுகின்றது. நூலாசிரியரின் மரணமும், அது சார்பு திறனாய்வுகளும், பிரதியின் அதிகார மையமாகக் கருதப்பட்டு வந்த நூலாசிரியன் பற்றிய மரபு ரீதியான பழைய கருத்துநிலையை முதன்மையாகக் கொள்ளாமல் அக்கருத்து நிலையை கடுமையாகச்சாடி வாசகனினதும், பிரதியை மதிப்பிடும் திறனாய்வினதும் கருத்தையே அடி ஆதாரமாகக் கொள்ளவேண்டும் என வலியுறுத்திய மாற்றமானது கலை, இலக்கிய, பண்பாட்டு மற்றும் மெய்யியல் தளங்களில் மாறுதல்களை நிகழ்த்தின.

**திறனாய்வு:**

உலக இலக்கியத் திறனாய்வுத் தந்தை என்று போற்றப்படும் அரிஸ்டோட்டில் தனது நிக்கோமேச்சியின் ஒழுக்கவியலில் (The Nicomachean Ethics) பொருள்களை வகைப்படுத்திக் காணும் போது ஒவ்வொரு வகைக்கும் உரிய தனிக் கூறுகளைத் துல்லியமாக வேறுபடுத்திக் காண்பது ஓர் அறிஞனுக்குரிய இலக்கணமாகும் என்றார் (அ. அ. மணவாளன் 2002:10). அரிஸ்டோட்டில் மானுட அறிவுத்துறைகள் பலவற்றை அவற்றின் நோக்கம், விடயப்பொருள் என்பனவற்றின் அடிப்படையில் வகையீடு செய்தார். அரிஸ்டோட்டிலுக்கு முந்திய மெய்யியலாளர் தனித்தனிப் பாடங்களுக்கிடையிலான வேறுபாடுகளை வகுக்கவில்லை. அவர்கள் முழு அறிவுப் பரப்பையும் ஒரு ஆதிக்க எல்லைக்குட்பட்டதாகவே கருதினர்.

திறனாய்வு என்பது ஒரு இலக்கியப் படைப்பின் (பிரதி) நிறைகளையும், குறைகளையும் பற்றிய மதிப்பீடாகக் கருதப்படுகிறது. ஒரு படைப்பாளனால் படைக்கப்பட்ட படைப்பினைத் திறனாய்வாளர்கள் தங்களுடைய பார்வையின் நோக்கங்களுக்கும், கோட்பாடுகளுக்கும் ஏற்புடையதாக இருக்கின்றதா? எஞ்சி இருக்கின்றதா? அல்லது அதிலிருந்து மாறுபட்டு இருக்கின்றதா? அந்த இலக்கியம் காலம் கடந்து நிற்கக் கூடிய தன்மையுடையதா? என்பதை பல்வேறு கோணங்களின் வழி நோக்குவர். வட மொழியில் விமர்சனம் என்று அழைக்கப்படும் இக்கலையை தமிழில் திறனாய்வு என்பர். உண்மையில் திறனாய்வு ஒரு படைப்பின் பின் வந்த எதிர்விளைவுகளாக அமையும். அது அந்தப் படைப்புக்கு ஆக்கம் தேடுவதாகவும் இருக்கலாம் அல்லது அந்தப் படைப்பின் குறைபாடுகளைச் சுட்டிக்காட்டி, இனி வரக்-கூடிய படைப்புக்களில் அது போன்ற தவறுகள் நிகழாமல் இருக்க உதவுவதற்காகவும் அமையலாம். இந்த திறனாய்வு பல்வேறுபட்ட நிலைகளில் அமையும். ஒரு செய்தியினைத் திறனாய்தல், ஒரு படைப்பினைத் திறனாய்தல், ஒரு ஊடகக் காட்சியினைத் திறனாய்தல், வடிவமைப்பைத் திறனாய்தல் எனப் பல்வேறு நிலைகளில் அமையும். திறனாய்வு எவ்வகையில் அமைந்தாலும் அதனுடைய நோக்கம் என்பது அந்தப் படைப்பின், அந்தக் காட்சியின், அந்த நிகழ்வின், அந்த நாடகத் தன்மையின் திறன்களை பற்றிய நிறை குறைகளை ஆராய்ந்து அதனை மதிப்பிடுவதாகும். இப்போது ஆரோக்கியமான திறனாய்வு, திறனாய்வுக் கலை என்பது கீழைத்தேயங்களில் இல்லாமல் போய்விட்டது எனவும் சொல்லத் தோன்றுகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேற் கருத்தை எம். ஏ. நுஃமானின் வார்த்தைகளில் கூறுவதாயின் இலக்கியத் திறனாய்வு இலக்கியத்தின் சகல அம்சங்களையும் விளக்குவதையும், மதிப்பிடுவதையும் அடிப்படையாகக் கொண்டது. ஒரு இலக்கியப் படைப்பு எவ்வாறு தொழிற்படுகின்றது, அதன் அழகியல் அம்சங்கள் எவை, அது தரும் உளவியல் தாக்கம் எத்தகையது, அதன் வடிவங்களுக்கும் பொருளுக்கும் இடையில் உள்ள உறவு என்ன, அதன் கவர்ச்சி அல்லது கவர்ச்சியின்மையின் அடிப்படைகள் எவை, அதன் மொழி அமைப்பு எத்தகையது, ஒரு இலக்கியப் படைப்புக்கும் அது தோன்றிய சமூகத்திற்கும் இடையே உள்ள உறவு என்ன என்பது போன்ற கேள்விகளுக்கு இலக்கியத் திறனாய்வாளன் விடை காண முயல்கின்றான். (2007:252). இவ்வாறு எடுத்துக் கொண்ட செய்தியை, தன் பிரதியில் வெளிப்படுத்தக் கையாளும் உத்தியையும் மொழியையும் அடிப்படையாகக் கொண்டே ஒரு பிரதி மதிப்பிடப்படும். சுருக்கக் கூறின் வாசிப்பின் உருவகமே திறனாய்வாகும்.

இத்தகைய திறனாய்வுகளின் பயன் அல்லது எதிர்பார்ப்பு என்ன? இலக்கியம் மிகுதியாக மக்களைச் சென்றடைவதற்கும் மக்கள் கூடிய இலக்கியப் பிரக்ஞையினை ஈட்டுவதற்கும் உகந்த வகையில் அறிவுத் தரத்தினையும், பண்பாட்டுத் தரத்தினையும் உயர்த்த இலக்கியத் திறனாய்வு உதவும். மேலும், தரமான இலக்கியங்கள் தோன்றுவதற்கும், தரமான வாசகர்கள் பெருகுவதற்கும் திறனாய்வு உதவ வேண்டும் என சி. தில்லைநாதன் (2012: 26) எடுத்துக் காட்டியுள்ளார். ஆக, இலக்கியங்கள் வாழ்க்கைக்கு பயனுடையதாக விளங்க வேண்டும் என அறியலாம்.

மரபு வழி இலக்கியத் திறனாய்வில் ஆசிரியன் தான் மையப் பொருளாக இருக்கிறான். அவனுக்கு அதீத முக்கியத்துவம் வழங்கப்படுகின்றது. அதிலும் படைப்பாளிகள் அமானுஷ்யத் தன்மை, பிரம்மாத் தன்மை, அதி மானுடத் தன்மை கொண்டவர்கள் என்றும், அவை அவர்களின் பிரதி புனிதம் என்றும், பயபக்தியுடன் அணுகப்பட வேண்டும் எனும் பழைய புகழாரத்தை 'நூலாசிரியனின் மரணம்' பல நிலைகளில் துணிவுடனும், நேர்மையுடனும் பிரதியை வாசிப்பதற்கும் கேள்விக்குட்படுத்துவதற்கும் வாய்ப்பளித்தது. அதிலும் குறிப்பாக என்னுடையதை, என் கருத்தை, நான் பேசியதை, அதிலும் நான் எழுதியதை எங்கள் புலத்தைச் சார்ந்த பிரதிகள் மதிப்பீட்டுக்கும், திறனாய்வுக்கும் உரியதல்ல நுகர்வுக்கே எனும் ஆசிரிய மையம் தழுவிய அதிகார மன நிலையை நிராகரித்ததுடன் வாசகன் மையத்துக்கு முக்கியத்துவம் கொடுத்தது.

பின் அமைப்பியலில் 'மையமும் விரிந்த விளிம்பும்' (Center and Periphery) என்ற புதிய கருத்தாக்கத்தை மிசேல் பூக்கோ (Mitchell Foucault 1926-1984) முன்வைத்து மையம் அதிகாரத்தை எவ்வாறு நிலைநாட்டுகிறது என்பதை வாசிப்புக்குற்படுத்தினார். மையம் குறிப்பிட்ட கருத்துக்களையும், அபிப்பிராயங்களையும் விளிம்புநிலைக்கு தள்ளும் பண்பு கொண்டது. அறிவை அதிகாரத்துடன் இணைத்துச் செயற்பட்டுக் கொண்டிருக்கும் மையமானது தனக்கு ஒவ்வாதவற்றை தரமற்றது என்றும், தனது வெறுப்புக்குள்ளான கருத்துக்களை முறையற்றது, பொறுப்பற்றது, உண்மையற்றது என்றும் எல்லைப்படுத்திக் கொண்டு தன்னைப் பாதுகாத்துக் கொள்ள விளிம்பு பற்றிய ஒரு தலைப்பட்சமான மதிப்பீடுகளை அறிவு வடிவிலே மையம் கட்டுமானம் செய்த வண்ணமிருக்கும். அதிகாரத்தினால் ஓரங்கட்டப்பட்டு விளிம்பு நிலைக்குத் தள்ளப்பட்டவர்களின் குரலும், கருத்துக்களும் போலியானவை என்று ஒதுக்கி வைக்கப்படுகின்றன. மைய நிலையில் உள்ளவர்களுக்கு சார்பான நிலையில் தேசியம், பால் நிலை, சிறுபாண்மையினர், குற்றவாளிகள் பெரும் இலக்கியங்கள் முதலாம் கருத்துக்களைத் தாங்கிய வினைப்பாடுகள் உருவாக்கப்பட்டிருக்கும். மைய நிலையை விதந்து பேசும் இலக்கி-யங்கள் அதிகாரத்தின் வடிவமாகவும், ஆக்கிரமிப்பின் வடிவமாகவும் இருத்தல் சுட்டிக் காட்டப்ப-


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

டுகின்றது. பெரும் இலக்கியங்களும், பெரும் பிரதிகளும் அதிகார மையத்தற்கு சார்பான முறையிலேயே உருவாக்கம் பெற்றுள்ளன. (மனுதர்ம சாஸ்திரம், மகாவம்சம்) அவற்றால் கட்டியெழுப்பப்படும் பண்பாடே உயர்ந்த பண்பாடாகச் சித்தரிக்கப்படுகின்றது. இவ்வாறு மையம் தழுவிய அதிகாரத்தோடு இணைந்த இலக்கியங்களை பின் நவீனத் திறனாய்வு இனங்காட்டியது. (பார்க்க, சபா. ஜெயராசா 2013:4) உண்மையில் பிரதியின் ஒவ்வொரு விளிம்பிலும் எண்ணிறைந்த 'மற்றமை', 'பிறர்', 'உறவுகள்' (Other) தொடர்புபடுவதால் பலவிதமான கருத்துக்களையும், பலதள அர்த்தங்களையும் அறிந்து கொள்வதற்கு பின் நவீனத்துவ திறனாய்வு அதிலும் 'நூலாசிரியனின் மரணம்' வழியமைத்தது என மீண்டும் அறியலாம்.

ஒரு பிரதி ஒரு குறிப்பிட்ட சமுதாய அரசியல், பண்பாட்டு சூழல்களில் தோன்ற வேண்டும் என்பதை திறனாய்வு எதிர்பார்க்கின்றது. பிரதியில் புரட்சி, விவேகம், ரிதம், ஜனரஞ்சகம், அழகியல், நம்புத் தன்மை, காரண காரியம் போன்ற பண்புகளும் வலியுறுத்தப்படுகின்றது. மாறாக, அதிகார அழுத்தங்கள் சில இரண்டாம் தரமான பிரதிகளை இலக்கியத் தன்மையும், தகவும் கொண்டனவாக அங்கீகரிக்க வலியுறுத்துவதையும் பொன்னாடைக்கு ஆசைப்படுவதையும் அறியலாம்.

திறனாய்வில் பேசப்பட வேண்டிய மற்றொரு அம்சம் எதிர் - இயல்புப் பண்பு எனும் 'ரொமாண்டிக்' (Romanticism) மன நிலையாகும். திறனாய்வில் 'ரொமாண்டிக்' பிரதிபலிப்பது சிலருக்கு கூச்சமாக இருக்கலாம். அது ஒன்றும் கேவலாமான ஒன்றல்ல. இன்றையச் சூழலில் அது தவிர்க்க முடியாது. காதல், பாலியல், கவர்ச்சித் தன்மை, கற்பனை, ஏக்கம், மிருகத்தன்மை, துயர், சாத்தான் தன்மை, மர்மம் போன்றன இல்லாமல் எதுவும் இல்லை எனலாம். அவருக்குப் பிடிக்கவில்லை இவருக்குப் பிடிக்கவில்லை எனும் அதிகாரக் குரல் பழமையும் காலமும் கடந்ததுமாகும். உண்மையில் ஒரு சில தனி நபர்களின் நிலைமை முக்கியமானதல்ல. பெரும்பான்மை ஆர்வலர்களின் வரவேற்பே முக்கியமானதாகும். அதுவே ஜனநாயகமும் கூட. இன்று மேடைப் பேச்சு. விவாத அரங்கு, ஆய்வரங்கு, எழுத்தின் எழுத்து, சினிமா, விரவுரைகள் என இவற்றுள் ஏதோ ஒரு வகையில் ரொமாண்டிஸம் எதிர்பார்க்கப்படுகின்றது. நுகர்வோரை, பார்வையாளரை, மாணவர்களைக் கட்டில் வைத்திருக்கும் உத்தியும், சுவாரஸ்யமுமாகும். அது இல்லாத போது மேற்கூறிய கலை வடிவங்கள் எமது கட்டில் இல்லாமல் கை நழுவிப் போய் அங்கு கூச்சலும் கும்மாளமும் கவனச் சிதைவுமே நிலவும். உடன் கால தமிழ் சினிமாவில் கலகலப்பு, கண்ணா லட்டு தின்ன ஆசையா, ஒன்பதில குரு, கேடிபில்லா கில்லாடி ரங்கா, ஒரு கல் ஒரு கண்ணாடி, வருத்தப்படாத வாலிபர் சங்கம் போன்ற திரைப்படங்கள் இன்றைய சூழலில் கூச்சத்தையும் மிஞ்சி வசூல் படங்களாக உள்ள நிலையில் எவ்வாறு ரொமாண்டிஸத்தைத் தவிர்ப்பது. அதனைத் தவிர்ப்பது என்பது வாசகனை, நுகர்வோனை, ஆர்வலர்களை, மாணவர்களை வெறும் சடமாக, வெறும் பண்டமாக, வெற்று இயந்திரமாகக் கருதுவதற்கு ஒப்பானது எனலாம். இவர்கள் அனைவரிடமும் ஒரு ஆன்மா உண்டு, அதற்கு உணர்வுகளும், உணர்ச்சிகளும் உண்டு என்பதை உணர வேண்டும். மார்க்சிய சிந்தனை மனிதனை வெறும் பண்டமாக, வெற்று இயந்திரமாகக் கருதிய பழைய பொருள்முதல் வாதத்தை கடுமையாக விமர்சித்ததோடு மனிதனை, அவன் இயல்பை, அவன் விடுதலையை, அவன் வாழ்வை முதன்மைப்படுத்தியதும் அறியத்தக்கது. வாசகனின் உள்ளக்கிளர்ச்சிகளை தூண்டும் வகையில் அழுகை, கிளிவரல். மருட்கை, அச்சம், பெருமிதம், வெகுளி என்பன போன்ற ஒன்பது சுவைகளுடன் கூடிய இலக்கி-யங்களும் அறியத்தக்கன.

ஆக, இலக்கிய நெறிகளில், இலக்கிய வடிவங்களில், கலைகளில், திறனாய்வுகளில், ரொமாண்டிக் மன நிலையும் சமுதாய சித்திரிப்பாக அமைய முடியும். அத்துடன் திறனாய்வாளன் சில சந்தர்ப்பங்களில் தன் செய்தியை பேச்சு


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மொழி அல்லது வட்டார வழக்குகளைக் கொண்டும் வெளிப்படுத்தி தன் நுகர்வோரை தன் கட்டில் வைத்திருக்க முடியும். அதாவது சமூகத்தில் மிக இயல்பாகவுள்ள விடயங்களை, சொல்லாடல்களை குறித்த பிரதேசத்தில் வாழும் மக்களின் தனித்துவமான பழக்க வழக்கங்களை இயல்பாக பேச்சில் பேசுவது ஒன்றும் அருவருப்பல்ல பிரதேச இலக்கியங்களின் ஜீவனாக இவையே உள்ளது. எனவே, திறனாய்வு குறித்து மாற்றுக் கருத்துக்களுடன் உலா வருபவர்கள் மேற்கருத்துக்களையும் புரிந்து கொள்ள வேண்டும். அத்துடன் பிரதி வாசிப்பின் உடன் காலத் தன்மையையும், அதன் அணுகுமுறைகளையும் அறிந்து வரவேற்க முயல வேண்டும். அத்துடன் உங்களால் புரிந்து கொள்ள முடியாதவற்றைப் பற்றிக் கருத்துக் கூறுவதைத் தவிர்க்கலாம். இல்லையேன் உங்கள் நிலை உதைப்பந்தாட்டத்தில் தோல்வியடைந்து கொண்டிருக்கும் அணிவீரர்கள் ஒரு நிலையில் பந்துக்கு உதைப்பை விடுத்து வெற்றியடைந்து கொண்டிருக்கும் அணிவீரர்களின் கால்களுக்கு உதைப்பதற்கு ஒப்பானதைப் போல் இருக்கும்.

இப்பின்னணியில், எழுத்தின் வாசிப்பில் என்ன நடந்தது என்பதைத் தெரிந்து கொள்வதற்கு முன்னதாகவே 'தவளை தன் வாயால் கெடுவது போல' தீர்ப்புக்களை வழங்கி வரும் கோமாளிகள் பேசாமல் இருப்பது பாதுகாப்பானது என பேசாமல் இருக்கும் கோமாளிகள் எண்ணிக்கொண்டு இருக்கிறார்கள். அமைதியே சிக்கல்களைத் தவிர்க்க சிறந்த வழி என்றும் ஆனால் பேசுவதை விடவும், பேசாமல் இருப்பது ஆபத்தானது என்பதை பேசாமல் இருக்கும் கோமாளிகள் ஒரு நாள் புரிந்து கொள்ள வேண்டிவரும். அப்போது எல்லாமே கை நழுவிப் போயிருக்கும். ஆக, எழுத்தின் வாசிப்பில் அதிகாரத்திற்கு அஞ்சி 'அடக்கி வாசித்தல்' என்பது பிரதி வாசிப்பில் அல்லது திறனாய்வில் மேற்கூறிய பண்புகளை சுருக்கியும், விரித்தும் நோக்கப்படலாம். எனவே தொழில்சார் எழுத்துப் பணிகளில் ஈடுபடாது அத்தி பூத்தாப் போல பிரதி பிரதி வாசிப்பில் அல்லது திறனாய்வில் கோமாளித்தனமாகும். எனினும் உன்னையும் நீர் கூறும் உண்மையும் யாருக்காவது பிடிக்கவில்லையென்றால் ஒப்புக்கு மாரடிப்பதை விட ஒதுங்கி விடுவது சுகமாகும். கலீல் ஜிப்ரானின் சொற்களில் கூறுவதாயின்;

'உண்மை என்பது எப்போதும் அறியப்பட வேண்டியது. சில போது வாய்விட்டு உரக்கச் சொல்லப்பட வேண்டியதாகும்'.

**பரிந்துரைகள்:**

ஓர் ஆசிரியன் இப்படித் தான் எழுத வேண்டும் என்ற கறாரான சட்டதிட்டம் கிடையாது. எனினும் எழுதும் எழுத்தில் பின்வரும் அம்சங்களை மனங்கொள்ளும் போது தரமான பிரதிகள் அல்லது இலக்கியங்கள் சிருஷ்டிக்கப்படலாம்:

* இலக்கியங்கள் சமூக மாற்றத்திற்கான மாற்றுக் கருத்துக்களை முன்வைக்க வேண்டும். அதாவது சமூகத்தில் நிலவும் கருத்தியல் வெற்றிடத்தை நிறைவு செய்ய வேண்டும்.

* இலக்கியம் மனித இருப்பு, அவனது நாளாந்த சிக்கல்கள், அவனது நட்பியல் முரண்பாடுகள், அவனது விடுதலை சார்ந்ததாக அமைய வேண்டும்.

* ஓர் இலக்கிய வடிவம் ஜீவனுள்ளதாக இருக்க வேண்டும். அதற்கு இலக்கியத்தில் பொருத்தமான அழகியல் உத்திகளைப் பின்பற்ற வேண்டும்.

* தெளிவான கருத்தோட்டமும், அதற்கேற்றவாறு வசனப் பரிவர்த்தனையும் கொண்டு பொது ஆர்வலர்களும் புரிந்து கொள்ளும் வகையில் உணர்த்தப்படும் செய்தி எழுதப்பட வேண்டும்.

* ஓர் இலக்கிய வடிவம் தேடலுக்கான ஆர்வத்தை ஏற்படுத்த வேண்டும்.

மேற்கூறிய பண்புகளை சுருக்கியும், விரித்தும் நோக்கப்படலாம். எனவே, தொழில்சார் எழுத்துப் பணிகளில் ஈடுபடாது அத்திப் பூத்தாப் போல கணிப்புத் தேவை கருதி எழுதும் ஆய்வு நிலை மாணவர்களும், அறிவு ஜீவிகளும்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மற்றும் ஆய்வு முறையியலைச் சிதைத்து அதாவது யாதாயினும் ஒரு சுலோகத்தை அல்லது வேதவாக்கியத்தை முடிந்த முடிவாக மேற்கோள் காட்டி கட்டுரை வடிக்கும் சமய முகவர்களும் மேற்குறித்த பரப்புக்களில் கவனம் கொள்ளும் போது கேள்விக் கலை வடிவமான கட்டுரை சிறந்த முறையில் கட்டமைய முடியும். இல்லையேல் எழுதும் எழுத்து வீணா எழுத்தாகவும், வீணான ஓர் ஆய்வறிவாளராகவும் எம்மை அடையா-ளப்படுத்தும் என்பதில் ஐயமில்லை.

**உசாத்துணை**


கோபிசந்த் நாரங்க, (2005) **அமைப்புமையவாதம் பின் அமைப்பியல் மற்றும் கீழைக் காவிய இயல்,** சாகித்திய அகாதெமி, புதுதில்லி.

சுரேஷ் எம். ஐ, (2004) **பின்-நவீனத்துவம் என்றால் என்ன?**, புதுப்புனல், சென்னை.

தில்லைநாதன் சி, (2012) **இலக்கியமும் பண்பாடும்,** குமரன் புத்தக இல்லம், கொழும்பு-சென்னை.

நு.்.மான் எம். ஏ, (2007) **மொழியும் இலக்கியமும்,** காலச்சுவடு பதிப்பகம், நாகர் கோவில்.

மணவாளன் அ. அ. (2002) **இருபதாம் நூற்றாண்டின் இலக்கியக் கோட்பாடுகள்,** உலக தமிழாராய்ச்சி நிறுவகம், சென்னை.

மார்க்ஸ் அ, (1996) **பின் நவீனத்துவம்-இலக்கியம் - அரசியல்**, விடியல் பதிப்பகம், கோவை.

ஜெயராசா சபா, (2013) **மையமும் விரிந்த விளிம்பும்,** சனி தினக்குரல் 05 ஜனவரி, கொழும்பு.

**Cross – References:**

- -http://en. wikiredia.org/wiki/French-philosophy
  The Death of the Author – T Book
- -http://www.tbook.constantvzw.org/wp-content/death-authorbarthes.pdf
  Roland Barthes; Death of The Author
- -http://ceasefiremagazine.co.uk/in-theory-barthes-4


**அடிக்குறிப்பு:**
இது தொடர்பான விரிவான விவாதங்-களுக்கு பார்க்கவும், பேராசிரியர் எம். ஏ. நு.்.மான் எழுதிய '<u>பிரதியின் மரணம்</u>' காலச்சுவடு, 14 ஜுன் 1996








Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மனிதன் யார் கட்டுப்பாட்டில்

உ. மு லுத்பி(f)
வீடுகை வருடம்,
இயன் மருத்துவம்,
இணைந்த சுகாதார பீடம்.

இந்தக் கட்டுரையானது நாஸ்தீக-வாதிகளை, விஞ்ஞான அடிப்படை-வாதிகளை ஆன்மீக நீரோட்டத்துக்கு அழைத்துச் செல்வதற்கான ஒரு முட்னோட்டமாகும். விஞ்ஞான அடிப்படை-களிலிருந்தே ஆன்மீக எண்ணக்-கருக்களுக்கு உயிர்ப்பளிக்க முயற்சித்-திருக்கிறேன். இக்கட்டுரையின் தொனிப்-பொருள் இன்னும் விசாலமாக ஆராயப்படவும், எடுத்துச் சொல்லப்படவும் வேண்டிய ஒன்றாகும். எனினும் இங்கு சில ஆரம்பக் குறிப்புக்களை மாத்திரமே என்னால் தர முடிந்துள்ளது.

இனி விடயத்துக்கு வருவோம்.

**'மனிதனைக் கட்டுப்படுத்துவது எது?'** என்று ஒரு வினாவை தொடுத்தால் எம்மில் அதிகமானோரின் பதில் 'அறிவு, பகுத்தறிவு, அல்லது சிந்தனா சக்தி' என்ற சாயலில் தான் இருக்கும். ஆம், இது சரியான பதில் தான். நல்லது, கெட்டது எது என்பதை பிரித்தறிய, சமயோசிதமாக நடந்து கொள்ள, நாளாந்த நடவடிக்கைகளை மேற்-கொள்ள, கற்றல் சார்ந்த நடவடி-க்கைகளை முன்னெடுத்துச் செல்ல, உறவு – நட்பினை பேணிக் கொள்ள மற்றும் சுகாதாரம் சார்ந்த நடவடிக்கைகளை முன்னெடுக்க என வெளிப்படையான அனைத்து செயற்பாடு-களும் அறிவினால் தான் முன்னெடுக்-கப்படுகின்றது. அறிவு என்பது மனித மூளையின் மூளையம் எனும் பகுதியில் இருந்துதான் ஊற்றெடுக்கின்றது. மூளை-யின் மூளையம் எனும் பகுதியே சிந்தனையை (Cognitive Function) உருவாக்குகின்றது. ஆம், நாம் மேலும் சில நடைமுறைச் செயற்பாடுகளை இங்கு கருத்திற் கொள்வோம் அல்லது உதாரணங்களாக எடுத்துக் கொள்வோம். நாம் உட்கொள்கின்ற உணவானது வாய், தொண்டை, களம் என்பவற்றைக் கடந்து இரைப்பையை அடைந்து குதத்தினூடாக கழிவாக வெளியேற்றப்-படுவதற்கிடையில் உட்கொள்ளப்பட்ட உணவானது இரைப்பையினால் அரைக்-கப்பட்டு அகத்துறிஞ்சுவதற்கு ஏற்ற விதத்தில் மாற்றப்படுதல், தேவையான போசணைகள் அகத்துறிஞ்சப்படல், எஞ்சிய சமிபாடடையாத உணவுப் பதார்த்தங்கள் சிறுகுடல் மற்றும் பெருங்குடல் என்பவற்றுக்கூடாக பயணம் செய்து நேர்குடலை அடைதல் என்பன எமது பகுத்தறிவின் மூலமாகவா கட்டுப்ப-டுத்தப்படுகின்றன? நாம் சிந்தனை செய்து தானா இந்த செயற்பாடுகள் மேற்-கொள்ளப்படுகின்றன? இல்லையே, இச் செயற்பாடுகளுக்கும் எமது அறிவிற்கும் இடையில் நேரடி தொடர்பு இல்லை அல்லவா? மனிதனின் இச்செயற்பாடுகள் மனித அறிவினால் கட்டுப்படுத்தப்-படவில்லையே.

மனித உடலில் ஏறத்தாழ 5 லீட்டர் இரத்தம் காணப்படுகின்றது. இது ஒவ்வொரு நாளும் புதிய குருதிக்-கலங்களை உற்பத்தி செய்யப்படுவதன் மூலம் புதுப்பிக்கப்பட்டு, புதிய இரத்தம் உடலுக்கு சேர்க்கப்பட்டு பழைய இரத்தமானது உடலிலிருந்து அகற்றப்-படுகின்றது. புதிய இரத்த உற்பத்தி-யானது மனித உடலுக்கு மிக அத்தியவசியமான நிலையில் ஒவ்வொரு நாளும் வேறுபட்ட குருதிக் கலங்களை அவற்றின் ஆயுற் காலத்திற்கேற்ப



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உற்பத்தி செய்யப்படுவதை நாமாகவே சித்தித்துதானா செய்கிறோம்? இவ்விரத்தம் புதுப்பித்தலானது எமது அறிவின் ஆளுகைக்கு உட்பட்டதுதானா? இல்லையே, இச்செயற்பாடாது எமது சிறுநீரகங்களால் உற்பத்தி செய்யப்படும் எரித்ரோபொயிட்டின் (Erythropoietin) எனும் ஓமோனினால் எமது உடலின் நெஞ்சறை முள்ளென்பு மற்றும் உடலின் நீளமான என்புகளிலுள்ள என்பு மச்சையை தூண்டப்படுவதன் மூலமே இரத்தம் உற்பத்தி செய்யப்படுகின்றது.

நாம் இன்னுமோர் உதாரணத்தை எடுத்துக் கொள்வோம். பாலூட்டும் தாய்மாரை கருத்திற்கொள்வோம். இத்தாய்மார் கர்ப்பிணியாக உள்ள காலத்தில் அவர்களில் தாய்ப்பால் உற்பத்தி செய்யப்படுவதில்லை. மாறாக பிரசவம் நடைபெற்ற தினமே தாய்ப்பால் சுரக்கத் தொடங்கிவிடுகின்றது. கர்ப்ப காலத்தின் தாய்ப்பால் உற்பத்தியானது இல்லாத நிலையையும், பிரசவத்தின் பின்னர் தாய்ப்பால் சுரத்தலையும் நாம் சிந்தித்து கட்டளை இடுவதன் மூலமாகவா மேற்கொள்கிறோம்? பிரசவத்தின் பின்னர் தாய்ப்பால் சுரத்தலானது Prolactin மற்றும் Oxitocin எனும் இரு ஓமோன்களின் ஆளுகையின் மூலமே. இச்செயற்பாடுகள் உரிய கால அடிப்படையில் முன்னெடுக்கப்படுகின்றன.

மேற்கூறப்பட்ட உதாரணங்கள் யாவும் எமது பகுத்தறிவின் ஆளுகைக்கு அப்பாற்பட்டது, அப்படியானால் இவை எப்படி நடைபெறுகின்றது? எப்படி சாத்தியமாகின்றது? ஆம், இச்செயற்பாடுகள் எமது உடலில் அமைந்துள்ள கபச்சுரப்பி, பரிவகக்கீழ், தைரொயிட் சுரப்பி போன்ற அகஞ்சுரக்கும் சுரப்பிகளால் சுரக்கப்படும் ஓமோன்களின் மூலமே மேற்கொள்ளப்படுகின்றன. ஓமோன்கள் என்பது மேற்படி சுரப்பிகளால் சுரக்கப்படும் திரவ நிலையிலான செய்தி கடத்தும் பதார்த்தங்களாகும். இவை இரத்த ஓட்டத்தின் மூலம் உடலின் பல்வேறு பகுதிகளுக்கும் கொண்டு செல்லப்பட்டு வெவ்வேறு வகையான உயிரியல் செயற்பாடுகள் நடாத்தப்பட தூண்டுகோலாய் அமைகின்றன. மேற்கூறிய உதாரணங்கள் உட்பட எமது உடலில் ஓமோன்களின் மூலம் ஆயிரக்கணக்கான உயிரியல் செயன்முறைகள் கட்டுப்படுத்தப்படுகின்றன அல்லது நிறைவேற்றப்படுகின்றன. எனவே மனித உடலானது அறிவினாலும் ஓமோன்களினாலும் கட்டுப்படுத்தப்படுகின்றது என்பதை நாம் விளங்கிக் கொள்ள முடியும்.

இந்தக் கட்டுரையின் மூன்றாவது கட்டத்துக்கு நாம் செல்வோம். எமது உடலில் நடைபெறுகின்ற அல்லது நிகழ்கின்ற சில செயன்முறைகளை இப்போது கருத்திற் கொள்வோம்.

எமது கண்களை அல்லது முகத்தை நோக்கி பொருளொன்று வேகமாக வரும் போது கண் இமைகள் உடனடியாக மூடிக் கொள்கின்றன. இச்செயற்பாடானது எம்மால் சிந்தித்து செய்யப்படுவது அல்ல மாறாக ஓமோன்களின் ஆளுகைக்கு உட்பட்டதும் அல்ல. அப்படியானால் இது எப்படி சாத்தியமாகின்றது? ஆம், இது தெறிவினைச் செயற்பாடாகும். தெறிவினை என்பது மனித மூளையின் நேரடி கட்டுப்பாடின்றி, மிகக் குறுகிய நேர இடைவெளியில் நடைபெறுகின்ற செயன்முறையாகும். எனவே உடனடியாகக் கண் இமைகளை மூடுதல் ஒரு தெறிவினைச் செயற்பாடாகும்.

அதே போன்று சூடான பொருளொன்றில் எமது உடற்பாகம் பட்டவுடன் துரிதமாக உடற்பாகத்தை விலக்கிக் கொள்ளல், சுவையான உணவுப் பண்டத்தை பார்த்ததும் அல்லது அதன் வாசனையை நுகர்ந்ததும் எமது வாயினுள் உமிழ்நீர் சுரத்தல் போன்ற செயற்பாடுகளை சாதாரணமாக நாம் சிந்தித்து செய்வது இல்லையே அல்லது அவை தொடர்பாக நாம் கருத்திற் கொள்வதும் இல்லை எனினும் இச்செயற்பாடுகள் நாளாந்தம் நடைபெற்றுக் கொண்டு இருக்கின்றன அல்லவா? ஆகவே இவை போன்ற பல்லாயிரக்கணக்கான தெறிவினைச் செயற்பாடுகள் உடலின் புறத்திலும் அகத்திலும் நடைபெற்றுக் கொண்டு


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருக்கின்றன. எனவே இவ்வாறான செயற்பாடுகள் மனித அறிவினாலோ அல்லது ஓமோன்களினாலோ அன்றி தெறிவினை மூலமாகவே ஒருங்கிணைக்கப்படுகின்றன. கட்டுரையின் ஆரம்பத்தில் தொடுக்கப்பட்ட வினாவுக்கான பதிலை நாம் இப்போது இவ்வாறு கூறமுடியும். *'மனிதன் என்பவன் அறிவு, ஓமோன்கள் மற்றும் தெறிவினை ஆகியவற்றால் கட்டுப்படுத்தப்பட்டு ஒருங்கிணைக்கப்படுகின்றான்'.*

ஆனாலும் இம்மூன்று காரணிகளும் அல்லது இம்மூன்று விடயங்களும் மனிதனை ஒரு சீரான ஒழுங்கிலே கட்டுப்படுத்திக் கொண்டிருக்கின்றன. இவை தமக்குள் நேர்த்தியான அமைப்பிலே செயற்பட்டுக் கொண்டிருக்கின்றன. அறிவினால் கட்டுப்படுத்தப்படுகின்ற ஒரு செயற்பாடானது ஓமோன்களினால் கட்டுப்படுத்தப்படுவதில்லை. அதே போன்று ஓமோனினால் கட்டுப்படுத்தப்படும் ஒரு செயலில் தெறிவினையின் தலையீடுகள் இருப்பதில்லை. இவை ஒவ்வொரும் அவற்றுக்கே உரிய தனித்துவமான செயற்பாடுகளை தாமாகவே ஒருங்கிணைந்து கட்டுப்படுத்திக் கொண்டிருக்கின்றன.

மேலும், இவை மூன்றும் ஒருங்கிணைந்த கட்டுப்பாட்டில் செயற்படுவதற்கும், இவை மூன்றையும் கண்காணிக்கும் சக்தியொன்று காணப்பட வேண்டும் அல்லவா? எமது அறிவையே கட்டுப்படுத்தும் ஆற்றல் கொண்டதாக உள்ள அந்த சக்தி மிகப் பிரமாண்டமானதாக இருக்க வேண்டியதுதான் யதார்த்தம். எம்மைக் கட்டுப்படுத்தும் காரணிகளை தனது செல்வாக்கில் வைத்திருக்கும் அந்த சக்திதானே எமது உடலையும் படைத்திருக்க வேண்டும். அந்த சக்திதான் எமது அறிவை தீர்மானித்திருக்கின்றது, எமது செயற்பாடுகளை கட்டுப்படுத்துகின்றது அல்லது ஒருக்கிணைக்கின்றது. மனித குலத்தையே வழிநடத்துகின்றது. அப்படியானால் அந்த பிரமாண்ட எழுச்சி என்னவாக இருக்க முடியும்? அறிவிற்கெல்லாம் மூல ஊற்றாக, சிந்தனைக்கெல்லாம் அப்பாற்பட்டதாக, படைப்பின் முன்னோடியாக் திகழும் அந்த பிரமாண்டம் நிச்சமாக இறைவனாகத்தான் இருக்க முடியும்.

*''அவன்தான் அல்லாஹ்: படைப்பவன்*
*அவனே படைப்புக்களை ஒழுங்குபடுத்தி*
*உண்டாக்குபவன், அவனே*
*படைப்பினங்களின் உருவத்தை*
*அமைப்பவன், அவனுக்கு அழகான*
*பெயர்கள் இருக்கின்றன. வானங்களிலும்*
*பூமிகளிலும் உள்ளவை அனைத்தும்*
*அவனையே துதி செய்கின்றன. அவனே*
*யாவற்றையும் மிகைத்தோன். தீர்க்கமான*
*அறிவுடையோன்.''*

*(அல்குர்ஆன்)*

*With Best Wishes From...*



**Whole Sale & Retailer**

**MAHAWELI STORES**

**No:96, Colombo Road, Peradeniya.**

**Tel: 081 3810874**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பன்மைத்துவமும், இலங்கை சமூகத்தில் அதன் அவசியமும்

University of Peradeniya
03 APR 2014
LIBRARY

முபீஸால் அபூபக்கர்.
விரிவுரையாளர்,
மெய்யியல் உளவியல் துறை,
பேராதனைப் பல்கலைக்கழகம்.

**பன்மைத்துவத்தின் பின்னணி**
**(Background of Pluralism)**

சமூக விஞ்ஞான பாடத்துறைகளிலும் தேசிய மற்றும் சர்வதேச அரசியல் சமாதான சொல்லாடல்களிலும் சமூகவியல் சார் கோட்பாடுகளிலும் அதிகளவில் உச்சரிக்கப்படும் சொல்லாக இன்று 'பன்மைத்துவம்' (Pluralism) மிகுந்த முக்கியத்துவப் பெற்றுக் கொண்டுள்ளது.

உலக நாடுகளின் அரசியல், சமூக போக்கை சற்று பின்னோக்கிப் பார்த்தால் 1990களுக்கு முன்னர் நாடுகளுக்கிடையேயான போராட்டங்களே அதிகளவு இடம்பெற்றுள்ளன. ஆக்கிரமிப்புக்களும், பலாத்காரமான இராணுவப் போராட்டங்களுமாக ஒரு நாடு பிறிதொரு நாட்டின் மீது தனக்கு சார்பான நாடுகளை இணைத்துக் கொண்டு யுத்தம் செய்துள்ளதை வரலாறு முழுவதும் காண முடிகிறது. உதாரணமாக முதலாம், இரண்டாம் உலக மகா யுத்தங்களைக் குறிப்பிடலாம். என்றாலும் 1990களின் பின்னர் இந்நிலை சற்று மாற்றமடைந்து நாடுகளுக்கிடையில் உள்நாட்டுப் பிரச்சினைகளே அதிகளவில் இடம்பெறத் தொடங்கியது. குறிப்பாக இன முரண்பாடுகளே அதிகளவில் இடம்பெறத் தொடங்கின. 1950களிலிருந்தே இனமுரண்பாடு ஆங்காங்கே உலக நாடுகளில் இடம்பெற்ற போதிலும் 1990களின் ஆரம்பத்திலேயே இவை உக்கிரமடையத் தொடங்கின.

மேற்படி உள்நாட்டுப் பிரச்சினைகளுக்கும் இன முரண்பாடுகளுக்கும் பிரதான காரணம் 'பன்மைத்துவம்' என்ற எண்ணக்கரு சிறப்பாக பேணப்படாமையாகும். எனவே, பன்மைத்துவம் பற்றிய தெளிவையும் அறிவையும் அனைவரும் பெற்றிருப்பது அவசியமாகும்.

'பன்மைத்துவம்' என்ற சொல்லிருந்தே பன்மைத்துவம் என்றால் என்ன என்பதைப் புரிந்து கொள்ள முடியும். ஒருமைக்கெதிரானது பன்மையாகும். அதாவது, ஒன்றுக்கு மேற்பட்ட அம்சங்களை அல்லது விடயங்களைத் தன்னகத்தே கொண்டுள்ள ஓர் எண்ணக்கருவாக இதனை அடையாளப்படுத்தலாம். குறிப்பாக, பல்லின மத, கலாசார, மொழி, பண்பாடு, பிரதேச வேறுபாடுகளைக் கொண்ட சமூகங்களுக்கிடையே பரஸ்பர புரிந்துணர்வுடனும் சகிப்புத் தன்மையுடனும் அவரவர்களது ஆழமான கலாசார, சமய அடையாளங்களை ஏற்றுக் கொள்வதன் மூலம் ஒன்றிணைந்து வாழ்வதை பன்மைத்துவம் குறித்து நிற்கின்றது எனலாம்.

**பன்மைத்துவம் என்றால் என்ன?**
**(What is Pluralism?)**

பன்மைத்துவம் ஒரு சமுதாயத்தின் அரசு. இதில் பல்வேறு இன, சாகிய, மத அல்லது சமூகக் குழுக்களின் உறுப்பினர்கள் ஒரு பொதுவான நாகரிகத்தின் வரம்புக்குள் தமது பாரம்பரிய கலாசாரம் அல்லது விசேட நலனில் சுயாதீனமான பங்கேற்பையும் அபிவிருத்தியையும் பேணுவார்கள். *மெரியம் - வெப்ஸ்டர் அகராதி*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேற்படி வரைவிலக்கணத்தின் படி பன்மைத்துவம் என்பது பல்வேறு இன, மத, கலாசார, சாதி, வகுப்பு வேறு-பாடுகளையும் கடந்து சமூகத்தினை ஒன்றிணைத்து வாழ்வதை இலக்காகக் கொண்டுள்ள ஓர் எண்ணக்கருவாகும்.

மேலும், இது பல்வகைத் தன்மையுடன் பொது நன்மையை நோக்கிய ஊக்கம் நிறைந்த செயற்பாட்டைக் குறித்து நிற்கின்றது. இதன்படி பன்மைத்துவம் எமது தனித்துவங்கள் கைவிடப்படுவதை அவசியப்படுத்தவில்லை. எமக்கிடையே வேறுபாடுகள் இருந்தபோதிலும் அவற்றை ஏற்றுக் கொண்டு எவ்வாறு எம்மால் ஒன்றாகப் பணியாற்ற முடியும் என்ப-தற்கே பன்மைத்துவம் முதலிடம் தருகின்றது.

எனவே, பன்மைத்துவத்துவம் என்பது வேற்றுமைக்குள் ஒற்றுமையை வலியு-றுத்துவதாய் அமைந்துள்ளது.

**பன்மைத்துவத்தின் பண்புகள்**
**(Characteristics of Pluralism)**

பன்மைத்துவத்தின் பண்புகளாக பின்வரு-வனவற்றை அடையாளப்படுத்தலாம்.

1.பன்மைத்துவம் என்பது வெறுமனே பல்வகைமையை விபரிப்பது அல்ல. மாறாக அது அவற்றுக்கிடையிலான இணைப்புக்களைப் பேசுகின்றது.

2..பண்மைத்துவம் என்பது சாதாரன சகிப்புத் தன்மை மாத்திரமல்ல. மாறாக அது புரிந்துணர்வின் ஊடான வேறுபாட்டு உணர்வுப் பகிர்வு.

3.பன்மைத்துவம் என்பது எமது அடை-யாளங்களையும் தனித்துவத்தையும் இல்லாமலாக்குவதல்ல. எமது ஆழமான அடையாளங்களையும் சமய வேறுபாடு-களையும் கலாசார விழுமியங்களையும் உணர்ந்து செயற்படும் ஒன்று.

4.பன்மைத்துவம் சம்பாசணைகளை அடிப்படையாகக் கொண்டது. பன்மைத்-துவத்தின் மொழி கொடுத்தல், பெறுதல், விமர்சனம், சுய விமர்சனம், கேட்டல் என்பதாகும்.

5.பன்மைத்துவம் ஒரு சமூகத்தின் நன்மையல்ல. மாறாக அது பொது நன்மை (Common Good) உதாரணமாக அரச பன்மைத்துவம் (State Pluralism) உள்ள நாட்டில் பாரபட்சம், பக்கச்சார்பு இருக்காது. மாறாக ஒவ்வொருவரும் அதிகாரத்திலும் தீர்மானம் எடுத்தலிலும் பங்குகொள்ள முடியும்.

**பன்மைத்துவத்தின் அவசியம்?**
**(Importance of Pluralism)**

பன்மைத்துவமானது பெரும்பான்மை சமூ-கங்களும், சிறுபான்மை சமூகங்-களுக்கும் மதிப்பளித்து சிறப்பான சமுதாயத்தைக் கட்டியெழுப்புவதற்கான சாதகமான முறை -யின் இணைப்புச் செயற்பாட்டை மேற்-கொள்ள வழிவகுக்கின்றது.

பன்மைத்துவத்தில் மதங்கள், கலா-சாரங்கள், பிராந்தியங்கள், மொழிகள் போன்றன ஏற்றுக் கொள்ளப்படுகின்றன. உரிமைகள் சர்வதேச மனித உரிமைத் தரங்களை அடிப்படையாகக் கொண்-டவை. இதில் பாரபட்சமற்ற ஆதரவு தேடலும், நடுநிலைமையும் அறிவு சார் தன்மையுடன் நோக்கப்படுகின்றது.

பன்மைத்துவம் ஏகத்துவவாத சக்திகளு-க்கும், பிரிவினைவாத சக்திகளுக்கும் எதிரான சிவில் சமூகத்தின் அறிவுசார் குரலாகவும் ஒலிக்கின்றது.

சிறுபான்மை இனத்தவர்களையும் அரசி-யல், சமூக, பொருளாதார அபிவி-ருத்தியில் இணைத்துக் கொண்டு செயற்பட முனைகின்றது.

ஜனநாயகப் பாரம்பரியங்களைப் பேண-வும், அனைவரையும் அரசியல் செயற்பா-டுகளில் ஒன்றிணைக்கவும் உதவுகின்றது. நாடுகளின் பாரம்பரிய இயல்புகளையும், கௌரவங்களையும் பேணிப் பாதுகாப்ப-தற்கு பன்மைத்துவம் வாய்ப்பளிக்-கின்றது.

பன்மைத்துவமானது ‘இரண்டாம் தரப் பிரஜைகள்’ என்ற தன்மையை இல்லா-தொழித்து அனைவரும் ஒரு நாட்டின் பிரஜைகள் என்ற தொனியில் செயற்படும் போக்கை ஏற்படுத்துகின்றது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**பன்மைத்துவத்தின் நிபந்தனைகள்**
**(Conditions of Pluralism)**

அனைத்துக் குழுவும் உற்சாகமான பொது நலத்தை அடைய தமக்கிடையே பெறுமானங்களைப் பகிர்தல், வேறுபாடுகளைப் புரிந்து கொள்ளல், அதிகாரப் பகிர்வு, முரண்பாட்டுத் தீர்வு என்பவற்றில் ஒன்றிணைய வேண்டும்.

**1**-பரஸ்பர புரிந்துணர்வும், சகிப்புத் தன்மையும் மிக முக்கியமானது. ஏனெனில் வேறுபாடுகளைக் கொண்ட குழுவினர் எவர்களது கட்டாயமுமின்றி தாமாகவே நேர்மையாக ஒன்றிணைந்து வாழ முயற்சிக்க வேண்டும்.

**2**-முரண்பாடுகளை பேச்சுவார்த்தைகள் அல்லது சம்பாசணைகள் ஊடாக பூரண புரிந்துணர்வுடன் விட்டுக் கொடுத்து தீர்த்துக் கொள்ள வேண்டும்.

**பன்மைத்துவத்தின் வகைகள்**

1. ***சமய பன்மைத்துவம்***
**(Religious Pluralism)**

சமயம் என்பது மனித வாழ்வின் மறைபொருளையும் அதன் நோக்கத்தையும் புரிந்து கொள்ளவும் மனித நேயமுள்ள வாழ்க்கையை வாழ்வதற்கும் சொந்த மதம், கலாசாரம், சமூகம் என்பவற்றுக்கு வெளியே உள்ளவர்களுடனும் ஒற்றுமை, சமாதானம் என்ற உலகலாவிய குறிக்கோள்களின் அடிப்படையில் மானிட குலத்திற்கு விடுக்கும் அழைப்பையே இது குறிக்கின்றது.

"மதங்கள் மத்தியில் சமாதானம் இல்லாவிட்டால் உலகில் சமாதானம் கிடையாது. மதங்களுக்கிடையில் சம்பாசணை இல்லாவிட்டால் மதங்களுக்கிடையில் சமாதானம் இல்லை."
-*(ஹான்ஸ் கிங்)*

ஒவ்வொரு மதமும் மக்களின் ஒற்றுமைக்கும் பன்மைத் தன்மைக்கும் எதிரான தீய சக்திகளை எதிர்த்துப் போராடுவது ஒழித்துக் கட்டுவது போன்றவற்றுக்காகச் செயற்படுவதை வலியுறுத்துகின்றன.

புரிந்துணர்வு இல்லாத சமய வெறி, விலை மதிக்க முடியாத ஆற்றல்களை இல்லாமல் செய்திருப்பதுடன் முரண்பாடுகள் மரணங்கள் என்பவற்றையும் ஏற்படுத்தி இருக்கின்றன. பஞ்சாப் பல்கலைக் கழக டாக்டர் எல்.எம். ஜோசியின் கூற்றுப்படி,

"மனித நேயமிக்க சமயங்கள் ஒன்றுபடுமானால் அதுவே பூமிக்கு கிடைத்த பெரும் அருளாகும். நிச்சயமாக ஒற்றுமையை தவறான அல்லது தெளிவற்ற அடிப்படைகளிலிருந்து மாறுபட்ட கொள்கைகளால் பெற முடியாது. மாறாக பிற சமயங்களின் கொள்கைகளை, கொள்கை ஏற்புடையவர்களை அவர்களின் நம்பிக்கைகளை பழக்க வழக்கங்களை மதிக்கவும், வேறுபாடின்றி போற்றவும் பல்வேறு மலர்களிலிருந்து தேன் சேகரிக்கும் தேனிக்களைப் போல பிறரைத் துன்புறுத்தாமல் மனதை நோகச் செய்யாமல் பல்வேறு சமயப் போதனைகளின் உண்மைகளை நாம் ஏற்றுக் கொள்ள வேண்டும்."

***இதன்படி:***

*பௌத்தம் போதிக்கிறது "பிறரைத் துன்பப்படுத்தாதே. அது உனக்கு நீயே துன்பப்படுத்திக் கொள்வதாகும்"

*தாவோயிசம் கூறுகிறது "உன் அண்டை வீட்டாரின் இலாபத்தை உனது இலாபமாகவும் அவரின் நட்டத்தை உனது நட்டமாகவும் கருது"

*கிறிஸ்தவம் கூறுகிறது "எவற்றை எல்லாம் பிறர் உனக்கு செய்ய வேண்டும் என்று கருதுகிறாயோ அதையெல்லாம் நீ பிறருக்குச் செய்"

*இஸ்லாம் கூறுகிறது "மற்றவர்கள் உனக்கு எதை செய்ய விரும்புகிறாரே அதை நீ அவர்களுக்குச் செய். நீ எதை நிராகரிக்கிறாரோ அதை பிறருக்கும் செய்யாது நிராகரி"

*இந்து சமயம் கூறுகிறது "பிறருக்கு எதையும் கொடுக்காதவர் அவர் அவருக்கே எதனையும் கொடுக்காததைப் போன்றது"


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதன்படி மனித நேய ஒற்றுமையே எல்லா சமய நிறுவனங்களினதும் அடிப்படை நோக்கம். நல்லிணக்கத்தை வளர்ப்பது சகிப்புத் தன்மை, நல் விருப்பம், புரிந்துணர்வு என்பதை உலகின் அனைத்து மக்களிடமும் கொண்டு செல்வதே உலகின் அனைத்து சமயங்களினதும் குறிக்கோளாக இருக்கின்றது.

### 2. *கலாசார பன்மைத்துவம் (Cultural Pluralism)*

இது ஒரு பெரும்பான்மை சமூகத்தில் குறித்த ஒரு சிறிய சமூகம் தமது கலாசாரங்களுடன் வாழ்வதைக் குறிக்கும். ஒவ்வொரு சமூகமும் தமக்கே உரித்தான கலை, கலாசார, பண்பாடுகளை உயிரோட்டமுள்ளதாகப் பேணி வருவதற்கும் ஏனையோரது கலாசார விழுமியங்களைப் புரிந்து கொள்வதற்கும் முயற்சித்தலையே இது குறிக்கின்றது.

ஒரு சமூகத்தின் நீடித்த உயிர் வாழ்க்கைக்கு அதன் கலாசாரம் மிக முக்கியமானது என்பதை பன்மைத்துவம் ஏற்றுக் கொள்கின்றது. பொது நிகழ்வுகள், விழாக்கள், கிரியைகள் என்பன இதில் முக்கியமானவை. உதாரணமாக அமெரிக்காவில் உள்ள சமூக நல நிறுவனங்கள் இந்தியாவின் யோகா (Yoga) தியானத்தையம் சீனாவின் எழுத்தணி (Calligraphy) கலையையும் மக்களுக்குப் போதிப்பதில் ஆர்வம் காட்டி வருகின்றன.

### 3. *அரசியல் பன்மைத்துவம் (Political Pluralism)*

ஒரு நாட்டின் எல்லைக்குள் வாழ்கின்ற வேறுபட்ட இன, மத, மொழி, கலாசார, பிரதேச பிரிவினருக்கிடையேயான முரண்பாடுகள் இல்லாத இணக்கப்பாட்டுடனான உறவு முறையை இது குறிக்கின்றது. இன்னும் இது அரசியல், பொருளாதார, சமூக, கலாசார அடிப்படையில் நிருவாகக் கட்டமைப்பில் காணப்படுகின்ற ஒருமைப்பாட்டையும் குறிக்கும். இதில் தேசிய ஒருமைப்பாடு (National Integration), பிரதேச ஒருமைப்பாடு (Territorial Pluralism) ஆட்சியாளர்களுக்கும் மக்களுக்குமிடையிலான தொடர்பு, விழுமிய ஒருமைப்பாடு, நடத்தை ஒருமைப்பாடு என்பவற்றைக் குறிக்கும். இதன்படி நீதியான ஆட்சியின் மூலம் சிறந்த சமூகத்தைக் கட்டியெழுப்புவதில் அரசினதும் மக்களினதும் பங்கு வலியுறுத்தப்படுகின்றது.

### உலக நாடுகளில் பன்மைத்துவம் (Pluralism in the World)

“எமது வரலாறு முழுவதிலும் பிராந்திய, இன, மொழிவாரி அல்லது மத சிறுபான்மைக்கு இடமளிப்பது ஒரு நாடு என்ற வகையில் கனடாவின் ஒட்டுமொத்தமான ஆரோக்கியத்துக்கு முக்கியத்துவம் வாய்ந்தாக இருந்து வந்துள்ளது” என கனேடிய பிரதமர் குறிப்பிடுகின்றார்.

கனடாவில் 200க்கும் மேற்பட்ட இன கலாசார சமூகங்கள் உள்ளன. உண்மையில் கனேடிய மக்கள் தமது பெறுமானங்கள், சுதந்திரம், ஜனநாயகம், மனித உரிமைகள், பால் சமத்துவம், சட்டத்தின் ஆட்சி ஆகியவற்றுக்கு மதிப்பளிப்பதுடன் தமது பல்வகைத் தன்மையைப் போற்றி வளர்த்தல், அவற்றைப் பாதுகாத்தல் என்பதில் கவனமாக இருக்கின்றனர்.

இந்தியாவில் 4599 சமூகங்களும் 325 அடையாளம் காணப்பட்ட மொழிகளும் 24 எழுத்து மொழிகளும் காணப்படுகின்றன. மத சார்பற்ற கொள்கையைக் கடைப்பிடிக்கும் இந்நாடு முடியுமான வரை அனைவராலும் பன்மைத்துவம் கொண்ட நாடாகவே அடையாளம் காணப்படுகின்றது.

லெபனானில் 18 வித்தியாசமான சமயக் குழுக்கள் 10452 சதுர கிலோமீற்றரில் சமூகமாக வாழ்கின்றனர். ஆனாலும் உலகில் நாடுகளும் கலாசாரங்களும் சமயங்களும் மோதிக் கொள்ளவே செய்கின்றன. பல்வகைப்பட்ட சமூகங்களில் இவை இயல்பானவைதான். இதற்கு பேச்சுவார்த்தைகள் மூலமும் விட்டுக் கொடுத்தல்கள் மூலமுமே தீர்வு காணப்பட வேண்டும் என்பதே பன்மைத்துவத்தின் வாதமாகும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இலங்கையில் பன்மைத்துவம் (Pluralism in Sri Lanka)

இலங்கை பல இன மக்களையும் கலாசாரங்களையும் கொண்ட அழகிய தீவு. சிங்களவர், தமிழர், முஸ்லிம், கிறிஸ்தவர்கள் என ஒருவரை ஒருவர் மதித்துப் போற்றுகின்ற போதே சிறந்த சமாதான வாழ்வைக் காண முடியும். மாறாக எங்கெல்லாம் பன்மைத்துவம் மறுக்கப்படுகின்றதே, எங்கெல்லாம் பன்மைத்துவத்திற்கெதிராக ஏகத்துவம் வலியுறுத்தப்படுகின்றதோ அங்கு எல்லா வகையான சுதந்திரங்களுக்கும் நெருக்கடி வந்து விடுகின்றது. "நாம் பிறந்து வளர்ந்துள்ள எமது நாடான இலங்கையின் கலாசாரம் கிராமிய மரபுகளுடன் பின்னிப் பிணைந்ததாக இருக்கின்றது. எமது கலாசாரம் பல்லின, பல்மத, பன்மொழிப் பண்புகளினால் செழிப்பானதாகக் காணப்படுகின்றது. இலங்கையின் கலாசாரம் பௌத்த மதத்தினால் செழிப்பு மிக்கதாக இருப்பதோடு பின்னர் அது இந்து, இஸ்லாம், கிறிஸ்தவம் போன்ற மதங்களின் செல்வாக்கையும் கொண்டதாக அமைந்துள்ளது. அன்பு, கருணை, சகிப்புத் தன்மை என்பன முக்கிய உளவியல் சார் கோட்பாடுகளாக உள்ளன. அவை வாழ்க்கையின் நிச்சயமற்ற நிலைமைகளினூடே எம்மை வளர்த்துப் போசிக்கின்றன."

*-ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ*, ஒக்ஸ்போர்ட், 13 மே. 2008

இந்த வகையில் எமது நாட்டைப் பொறுத்த வரையில் நாட்டின் எல்லாப் பகுதிகளிலும் பல்லின கலாசார மக்கள் கலந்து வாழ்கின்றனர். பெரும்பான்மை சிங்கள சமூகத்தோடு தமிழ் முஸ்லிம் கிறிஸ்தவ சமூகங்கள் தமது கலாசர அடையாளங்களோடு சர்வதேச தரத்திலான மனித உரிமை, உத்தரவாதங்களுடன் சேர்ந்து வாழ்ந்து நாட்டின் அபிவிருத்தியில் பங்கேற்கவும், பயனடையவும் முயற்சிக்க வேண்டும். இன்னும் ஜனநாயகத்தை உறுதிப்படுத்துவதிலும் பல்வகைத் தன்மைக்கு மதிப்பளிப்பதற்கும் சம்பாசணையை ஊக்குவிப்பதற்கு அரசு முயற்சிக்க வேண்டும். முரண்பாடுகள் எழுகின்ற போது பேச்சுவார்த்தையே அதற்கான தீர்வாக அமைய வேண்டும். ஒவ்வொரு சமூகப் பிரிவினரும் தாம் சார்ந்த, சாராத சமூகத்தின் பிரச்சினைகள், கலந்துரையாடல், விவாதித்தல் என்பவற்றில் ஈடுபட வேண்டும். மாறாக வாய் மூடி மௌனியாக இருப்பது பன்மைத்துவத்தின் அடிப்படையாக அமையாது.

பன்மைத்துவம் பற்றிய பேச்சு சிறுபான்மையினரின் நிலைமையை உண்மையாகவே மாற்றுவதை விட ஆதிக்க நிலையுள்ள பெரும்பான்மையினரின் நிலையை மறைக்க துணை போகின்றது என்ற விமர்சனம் முன்வைக்கப்பட்டாலும் குறிப்பாக சிறுபான்மையினர் **'கரைந்து போகாமல் கலந்து வாழுதல், சண்டை இடாது சமாதானம் பேணல்'** என்ற அடிப்படைகளோடு இணைந்து வாழ்வதன் மூலம் உரிய பயன்களை அடைந்து கொள்ள முடியும்.

### பன்மைத்துவம் வாய்ந்த சமுதாயத்திற்கான ஊக்குவிப்புக்கள் (Motivations for the plural society)

- பேச்சுவார்த்தை கலாசாரத்தை உருவாக்குதல்.
- சமாதானக் கலாசாரத்தின் ஊடாக வன்முறையை நிராகரித்தல்.
- பொதுவான பாரம்பரியத்தின் மதிப்பினை உணர்த்தல்.
- கலாசார செயற்பாடுகளின் மூலம் உணர்வுபூர்வமான பிணைப்பை ஏற்படுத்தல்.
- சமூகத்தை அடிப்படையாகக் கொண்ட மக்கள் அமைப்புக்களை ஏற்படுத்தல்.
- அரசின் பொறுப்புணர்வையும் கடமையையும் எடுத்துச் சொல்லல்.
- சர்வதேச சமாதான செயற்பாடுகளையும் நீதிக்கான செயற்பாடுகளையும் ஊக்குவித்தல்.


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

முடிவுரை (Conclusion)

*பன்மைத்துவம் என்பது பல்வகைத் தன்மையுடன் ஆக்க பூர்வமான செயற்பாடுகளில் ஈடுபடுவது.

*வேறுபாடுகளைப் புரிந்து கொள்ளல்.

*சம்பாசணையை ஊக்குவித்தல்.

* ஜனநாயகத்தைப் பேணிப் பாதுகாத்தல்.

*சமூகத்தினதும் தனிமனித உரிமைகளுக்கும், சுதந்திரங்களுக்கும் மதிப்பளித்தல்.




# வீடு கதை...

A.Ijas Ahamed,
3rd Year,
Department Of Management Studies.

"இறைவா எனது தந்தையின் கஷ்டத்தை நீக்குவாயாக! அவர் மனதில் நிம்மதியையும் சந்தோஷத்தையும் அளிப்பாயாக. யாவற்றிற்கும் நீயே சக்தி பெற்றவன்." என்று தம் சீரிய அகப்பார்வையால் இறைவனை நோக்கிய வண்ணம் ருஷ்தாவின் பிரார்த்தனைகள் நடைபோடுகின்றன. தினமும் தன் தொழுகையின் பின் இவ்வசனங்களை அவள் உச்சரிக்காத நாளே இல்லை. ஒவ்வொருவரினதும் வாழ்வில் எத்தனையோ பிரச்சினைகள் ஏற்பட்டிருக்கலாம். ஆனால் ருஷ்தாவின் வாழ்வே பிரச்சினையாகவே இருந்தது.

தொழுகையை முடித்துவிட்டு அன்றைய தினத்தை ஆரம்பித்தாள் அவள். அன்றைய தினம் அவளுக்கு சற்று மாற்றமான நாளாகவே அமையவுள்ளது. ஏனெனில் ருஷ்தாவை பெண்பார்க்க ராஸிக் ஹாஜியாரின் குடும்பம் வருவதாக செய்தி அனுப்பியுள்ளது. எனினும் ருஷ்தாவின் வீட்டில் அதற்கான எந்த ஏற்பாடுகளையும் காணவில்லை. ருஷ்தாவை அவளது தாய் மட்டும் அலங்கரித்துக் கொண்டிருந்தார். அயல் வீட்டினருக்கு இது பற்றி நன்கு அறிந்திருந்தும் அதைப்பற்றி அவர்கள் அலட்டிக் கொள்ளவில்லை.

அஸர் தொழுகையின் பின்னர் ராஸிக் ஹாஜியாரும் அவரின் குடும்பமும் வருவதாக கூறப்பட்டிருந்தது. அஸருக்கான பாங்கோசை கேட்டு சற்று நேரமாகிவிட்டது. பாரிஸ் நானா தொழுகையை பள்ளிக்குச் சென்று முடித்துவிட்டும் வந்துவிட்டார். ருஷ்தாவும் தன்னை அலங்கரித்துக் கொண்டு காத்துக் கொண்டிருக்கிறாள். நேரம் பிந்திக் கொண்டே போகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவர்களின் படபடப்பும் அதிகரித்துக் கொண்டே செல்கிறது. "வருவர்களோ வராமல் விடுவார்களோ....?" பாரிஸ் நானாவின் உள் மனம் அவரை வரண்டிக் கொண்டே இருக்கிறது. எனினும் அவர்களின் தடுமாற்றத்தை தீர்க்குமுகமாக ராஸிக் ஹாஜியாரின் கார் 'சர்ர்' என வந்து நின்றது. மனதை மயக்கும் அழகிய காரிலிருந்து ராஸிக் ஹாஜியாரும் அவர் மனைவி மற்றும் மகன் ருஸைக் ஆகியோர் இறங்கினர். தாமதத்திற்கு வருந்திக் கொண்டு வீட்டில் சென்று-மர்ந்தனர். பேச்சுவார்த்தை இனிதே நிறைவேறியது. ருசைக் மணப்பெண்ணைப் பார்த்து சம்மதமும் சொல்லிவிட்டான். அவன் அதை எந்த நோக்கத்தில் கூறினானோ தெரியவில்லை. என்றாலும் அவன் வார்த்தைகள் ருஷ்தாவின் வரண்ட மனதுக்கு தேன் ஊற்றியது போன்றிருந்தது. அவள் கண்கள் ஆச்சரியத்தால் தாண்டவமாடியது. நடந்தவை எல்லாம் அவன் நாட்டப்படி நடந்தவை. நடந்துக்கொண்டிருப்பவையும் இனி நடப்பவையும் ஒருவனாகிய அல்லாஹ்வின் நாட்டப்படியே" என எண்ணிக் கொண்டு ஆச்சரியத்தை அடக்கிக் கொண்டாள் ஹம்ஸா. பாரிஸ் நானாவின் கண்களும் குளிர்ச்சியடைந்துவிட்டன. அவர் மனம் தாங்கிக்கொண்டிருந்த பாரத்தை இறக்கிவிட்டதையே எண்ணி அவர் கைகள் வானோக்கி உயர்கின்றன. கடந்த காலங்களில் தன் மகள் கண்ட சோதனைகளும், வேதனைகளும் பாரிஸ் நானாவின் கண்களில் தோன்றித்தோன்றி மறைகின்றன. அவற்றை எண்ணிப்பார்ப்பது பாரிஸ் நானாவுக்கு வேதனையாக இருந்தாலும் அவற்றை அவரால் மறக்கவும் முடிவதில்லை.

***

பாரிஸ் நானாவுக்கும் சுமையாவுக்கும் இடையிலான திருமண வாழ்வின் ஆரம்ப ஓரிரு வருடங்களில் ஹம்ஸாவை ஈன்றெடுத்தார்கள். ருஷ்தாவுடனான அவர்களுடைய வாழ்வு சில காலம் இன்பமாக கழிந்தது. எனினும் அவள் ஐந்து வயதையடைந்தும் அவளால் எந்தவொரு வார்த்தையையும் உச்சரிக்க முடியாமலிருப்பதையிட்டு சந்தேகம் கொண்ட பாரிஸ் நானா அவளை ஒரு வைத்தியரிடம் காண்பித்தார். சில பரீட்சைகளின் பின்னர் வைத்தியருடைய பதிலானது ருஷ்தாவின் பெற்றோரை திகிலடையச் செய்தது. மிஸ்டர் பாரிஸ் ருஷ்தாவுடைய தொண்டையில இருக்க ஒரு பிரச்சினையால அவளால பேச முடியாது. ஆனால் இந்த பிரச்சினைய சரிபன்னிடலாம். அதுக்கு.. நிறைய செலவாகும் வெளிநாடுகளுக்கு போகவரும். அது மட்டுமில்ல இத வளரவிட்டால் குணப்படுத்த முடியாது போய்விடும். அதனால ஓப்பரேஷன சீக்கிரமாகவே முடிக்கனும்." என அதிர்ச்சி தரும் விதமாக வைத்தியரின் பதில் அமைந்தது.

மாதாந்த குடும்பச் செலவுக்கே அல்லற்பட்டு கொண்டிருக்கும் பாரிஸ் நானாவால் இத்தனை பெரிய சுமையை எப்படி சுமக்க முடியும். என்றாலும் தனக்கிருக்கும் ஒரே குழந்தை, அதுவும் பெண்பிள்ளை எதிர்காலத்தில் இக்குறையின் காரணமாக அவள் சமூகத்தில் பந்தாடப்படுவாளோ, என்றெண்ணிய அவருக்கு தலை சுற்றியது. எனினும் மனதை திடப்படுத்தி இறைவன் மீது பாரத்தை போட்டுவிட்டு வைத்தியத்திற்கான செலவை மேற்கொள்ள முடியுமான நடவடிக்கையில் இறங்குகிறார். எத்தனையோ பேரிடம் உதவி கேட்கிறார். அவருக்கு தெரிந்த எவரும் அதற்கான செலவை ஏற்கும் அளவிற்கு வசதிபடைத்தவர்களல்லர்.

வசதிபடைத்தவர்களும் 'இல்லை' என்ற வார்த்தையால் திருப்பியனுப்பிவிட்டனர். நாட்கள் ஓடிக்கொண்டே இருக்கிறது. சிகிச்சைக்கு குறித்த தினமும் நெருங்கிவருகிறது. எனினும் தேவையான பணம் இன்னும் திரட்டப்படவில்லை. அவர் வீட்டை அடகு வைத்து வட்டிக்கு கடன் வாங்க பலர் ஆலோசனை கூறினர். எனினும் "மார்க்கத்தில் கடுமையாக தடைசெய்யப்பட்ட வட்டியில் நான் எப்படி ஈடுபடுவது. எல்லா சோதனைளையும் ஏற்படுத்துபவன் அந்த இறைவன். வாழ்வில் ஏற்படும் சோதனைகளின் போது தன்னை எவ்வாறு மனிதன் நினைவு படுத்துகிறான் என்பதை சோதிக்கவே வாழ்க்கையை சோதனைக்-


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

களமாக்கியுள்ளான் அந்த ஏக இறைவன். எனவே நான் அவனுக்குக் கட்டுப்படுவேன்." என தன்னுள் உள்ள அதீத பக்தியின் காரணமாக அந்த ஆலோசனையை கைவிட்டுவிட்டார் பாரிஸ் நானா.

ருஷ்தாவின் சிகிச்சைக்கான நாளும் கடந்துவிட்டது. இதன் பின்னர் அவளுக்கு சிகிச்சை அளித்து எந்தப் பயனும் இல்லை என வைத்தியர்களும் கூறிவிட்டனர். எதுவும் செய்ய முடியாமல் திகைத்து நின்றார் பாரிஸ் நானா. பாரத்தை இறைவன் மீது போட்டுவிட்டு அவளை ஒழுக்கத்தில் சீரியவளாக வளர்க்க எண்ணினார். நாட்கள் பாம்பாய் ஓடின...

***

ருஷ்தா தற்போது பாடசாலையில் விரல் விட்டு எண்ணக்கூடிய சிறந்த மாணவிகளில் ஒருத்தியாகவும், வீட்டில் பெற்றோர்க்கு பணிவிடை செய்யும் பணிப்பெண்ணாகவும் உயர்ந்துவிட்டாள். அவளால் பேச முடியாவிட்டாலும் பாடசாலையில் நன்றாகப் படித்து அனைவராலும் பேசக் கூடியவளாக மாறிவிட்டாள். உயர்தரப் பரீட்சையில் சிறந்த சித்தியடைந்து பல்கலைக்கழகம் செல்ல வாய்ப்பு கிடைத்திருந்தது அவளுக்கு. எனினும் 'காலங்கெட்டு கிடக்குது. அதுவுமில்லாம பொம்புல புள்ளக்கி எதுக்கு படிப்பு, காலநேரம் வந்தா கல்யாணத்த முடிக்கிறது தானே." எனும் பாரிஸ் நானாவின் கடுமையான நினைப்பு ருஷ்தாவின் எண்ணத்துக்கு முற்றிலும் வேறுபட்டிருந்தது'. பல்கழைக்கழகம் செல்ல வேண்டும். ஒரு வைத்தியராகி பெற்றோரை கண்ணியமாக வாழ வைக்க வேண்டும், ஏழைகளுக்கு இலவசமாக வைத்தியம் பார்க்க வேண்டும். எல்லாவற்றிற்கும் மேலாக தன்னைப் போன்று ஊமையாய் இருப்பவர்களுக்கு உதவி செய்வேன்." என ருஷ்தாவின் எண்ணங்கள் அலைமோதிக் கொண்டிருக்கின்றன.

மறுபுறத்தில் பாரிஸ் நானாவோ அவளுடைய கல்வியை நிறுத்திவிட்டு அவளுக்கோர் திருமணத்தை முடித்து வைப்பதற்காக ஆண்மக்களை தேடிக்கொண்டிருக்கிறார். இதற்கிடையில் ருஷ்தா பல்கழைக்கழகம் செல்வதற்கான ஏற்பாடுகளை செய்து கொண்டிருந்தாள். ருஷ்தா பல்கழைக்கழகம் செல்வதை விரும்பாத பாரிஸ் நானாவோ திருமணம் பேச்சை அவளிடம் போட்டார். ருஷ்தா நான் சொல்றத நல்லா கேட்டுக்க, நான் தினமும் உங்க ரெண்டு பேருக்கு சாப்பாடு போடவே ரொம்ப கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கேன். இதுல பெரிய பெரிய படிப்புக்கெல்லாம செலவழிக்கிறது ரொம்ப கஷ்டம். பொம்புல புள்ளய காலாகாலத்துக்கு கல்யாணம் பன்னி வச்சிடனும். அப்போ தானே பெத்த எங்களுக்கு நிம்மதி. அதனால நானும் உம்மாவும் உனக்கு கல்யாணம் பன்ன முடிவு பன்னியிருக்கோம். நாளன்னக்கி உன்ன பொண்ணு பார்க்க வாராங்க. அதனால நீ படிப்ப நிறுத்திட்டு கல்யாணத்துக்கு ரெடியாகு. சரியா" என நாசுக்காக சொன்னார்.

தன் கண்முன்னே தனக்கு நடக்கும் அநியாயத்தை பொறுக்க முடியாமல் கைகளாலும் கண்ணீராலும் வெளிப்படுத்தினால் ருஷ்தா. என்றாலும் அவற்றை பெரிதுபடுத்தாது சென்றுவிட்டார்.

ருஷ்தாவை பெண்பார்க்க அவர்கள் வரும் நாள் வந்துவிட்டது. அந்த நாள் அவளுடைய வாழ்கையையே கேள்விக்குறியாக்கிவிட்ட நாளாகும்.

மாலையாகிவிட்டது. திருமணத் தரகர் நிஸார் மணமகன் வீட்டிலிருந்து பெரிய படையொன்றையே கூட்டிவந்திருந்தார். ருஷ்தாவோ அயல் வீட்டுப் பெண்களின் அலங்கரிப்பால் பளபளத்துக் கொண்டிருந்தால். ஒரு காட்சிப்பொருளாக அவள் அந்த வீட்டில்.....!

மணமகன் வீட்டார் அவ்வீட்டில் குழுமியிருந்தனர். பாரிஸ் நானாவே பேச்சை ஆரம்பித்தார். 'நிஸார் உங்ககிட்ட எல்லாத்தையும் சொல்லியிருப்பர். எங்க மகளுக்கு பேச முடியாதுன்னு தெரிஞ்சும் நீங்க வந்திருக்கீங்கன்னா உங்களுக்கு பெரிய மனசுதான். ஜஸாக்கல்லாஹு." எனும் அவருடைய வார்த்தைகளால் அதிர்ச்சியுற்று நின்றார்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மணமகனின் தந்தை. என்ன உங்க மகளுக்கு பேச முடியாதா? என்ன விளையாடுறீங்களா? ஒரு ஊமக்கி என் மகன கட்டி வைக்க எனக்கு என்ன பைத்தியமா? நாங்க போறோம்." என்று கூறி அதிரடியாக சென்றனர். பாரிஸ் நானாவுக்கு என்ன செய்வதென்றே புரியவில்லை. மகளின் வாழ்க்கையை நாசமாக்கிவிட்டோமே என்கிற உணர்வு அவரை வதைத்துக் கொண்டிருந்தது. ஐயோ பாவம்! ருஷ்தாவின் நிலையை என்னவென்று விபரிப்பது. திருமணமும் இல்லை படிப்பும் இல்லை என்றாகிவிட்டது. அவளால் தந்தையை எதிர்த்துப் பேசவா முடியும்.

அச்சம்பவத்தின் பின் அவளை எத்தனையோ பேர் பெண்பார்த்துவிட்டு சென்றுவிட்டனர். அவளும் ஒரு கண்-காட்சியைப் போன்று அவர்கள் முன் தோன்றி மறைகிறாள். வாய்ப்பேச முடியாத கல்வியுமில்லாத ஒரு ஏழைப் பெண்ணை சராசரி மனிதர்கள் யார் தான் விரும்புவார்....?

இரண்டு வருடங்கள் ருஷ்தாவின் வாழ்வில் வீணாகக் கழிந்துவிட்டன. வீட்டில் பெற்றோர்க்கு பாரமாக இருப்பதை விட ஒரு தொழில் செய்தாலாவது அவர்களின் சுமை குறையும் என்றெண்ணி எத்தனையோ இடங்களில் வேலை தேடினாள். ஆனால் அவளை வேலைக்கமர்த்த யாரும் முன்வரவில்லை. இவளால் கடைக்கு வரும் வாடிக்கையாளர்கள் சிரமப்ப-டுவார்கள் என்றெண்ணியே யாரும் அவளை வேலைக்கமர்த்தவில்லை.

நீண்ட நாட்கள் தேடியும் வேலை கிடைக்காததனால் முயற்சியைக்-கை-விடாது தனக்கு தெரிந்த தையற்கலை மூலம் ஒரு ஆடைத் தொழிற்சாலையில் வேலைக்குச் சேர்ந்தாள். தையலுக்கு பேச வேண்டியதில்லையே..

சில காலங்களுக்குள்ளாகவே ஆலையில் தொழில் புரியும் எல்லா பெண்களிடமும் நன்மதிப்பைப் பெற்றாள் ருஷ்தா. அவளுடைய ஒழுக்கத்தையும் அவள் பிறருடன் பழகும் விதத்தையும் கண்டு ஆலை உரிமையாளரின் மகன் ருசைக்கினால் பெரிதும் விரும்பப்பட்டாள் ருஷ்தா. ருசைக் ருஷ்தாவை தன் துணைவியாக்கிக் கொள்ளவும் ஆசைப்-பட்டான். ருசைக்கின் குடும்பமோ அவனுக்காக பெரிய செல்வச்-சீமாட்டிகளை தேடிக் கொண்டிருக்கையில் அவனோ வாய்பேச முடியாத ஒரு ஏழைப் பெண்ணை தன் துணைவியாக்கிக் கொள்ள ஆசைப்படுகிறான் என்றால் அவளுடைய ஒழுக்கமானது செல்வத்தை-யும் மிஞ்சிவிட்டது. எவ்வாறோ தன் தந்தையிடம் பேசி திருமணத்திற்கான சம்மதத்தையும் பெற்று விட்டான் ருசைக்.

திருமணம் நிச்சயிக்கப்பட்டது. அதற்கான வேலைகள் வெகுவாக நடைபெற்றுக் கொண்டிருந்தது. ருஷ்தா-வின் கண்கள் நானத்தைக் கக்கிக் கொண்டிருந்தன. அவள் விரல்கள் திருமண நாளை எண்ணிக் கணக்கிட்டுக் கொண்டிருந்தன. பாரிஸ் நானாவுக்கு நடப்பவை கணவா நிஜமா என்ற சந்தேகம்.... அவர் கைகள் மேலுயர்ந்த வண்ணம் இறைவனை புகழ்ந்துக்-கொண்டிருந்தன. "இத்தனை நாட்களும் ருஷ்தாவின் காலம் வீணாகக் கழிந்து கொண்டிருந்தது. இனியாவது அவளு-டைய வாழ்க்கை இனிமையாக அமைய வல்ல நாயன் நீதான் அருள் புரிய வேண்டும்." என்று வேண்டிக்கொண்டார்.

நாட்களை எண்ணிக் கொண்டி-ருந்த ருஷ்தாவின் விரல்கள் தற்போது மணித்தியாலங்களை எண்ணுகிறது. விடிந்தால் திருமணம். நள்ளிரவாகி நெடு நேரமாகிவிட்டது. பாரிஸ் நானாவின் வீட்டுக் கதவை தட்டும் சத்தம் கேட்டு 'யாரு இந்த நேரத்துல?' என்று கேட்டார் பாரிஸ் நானா. "நான் ருசைக் வீட்டிலி-ருந்து வாரேன்" கதவை திறந்து பார்த்தார் பாரிஸ் நானா. வந்தவர் ருசைக் வீட்டில் பணிபுரிபவர். அவர் முகத்தில் தடுமாற்றமும் துக்கமும் மாறி மாறி விளங்கியது. 'இன்னக்கி பகல் நடந்த கார் விபத்துல ருசைக்..' என்று தடுமாறிய அவரிடம் 'ருசைக்குக்கு என்னாச்சு? என்று உரக்கக் கேட்டார் பாரிஸ் நானா. அது வந்து.. அதுல ருசைக் மௌத்தாகிவிட்டாரு. கொஞ்ச நேரத்துக்கு முதல்ல தான் செய்தி


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிடச்சுது. நான் இப்போ ஆஸ்பத்திரிக்குத் தான் போறேன். முதலாளி உங்ககிட்ட சொல்லச்சொன்னார்' என்று கூறி விடைபெற்றார் அவர். பாரிஸ் நானாவுக்கு நடப்பவற்றை மீண்டும் நம்ப முடியவில்லை. தலை சுற்றி ஒரு ஓரமாகப் போய் உட்கார்ந்தார். ருசைக் இறந்தது கூட அவருக்கு கவலையில்லை. இத்தனை நாட்களின் பின்னர் ருஷ்தாவுக்கு அமைந்த நல்ல வரமும் பறிபோய்விட்டதே என்பதை எண்ணும் போது தான் அவருக்கு சாகுவதற்கும் எண்ணம் தோன்றுகிறது. இதை எப்படி அவளிடம் சொல்லப் போகிறேன் என்ற தடுமாற்றத்துடன் திரும்பிய பாரிஸ் நானா, அருகிலிருந்து யாவற்றையும் பார்த்துக் கொண்டிருந்த ருஷ்தாவின் கண்களில் கண்ணீரையும் காண்கிறார். அவளால் என்னதான் செய்ய முடியும்? கதறி அழுதால் கவலை நீங்கவா போகிறது? ருஷ்தாவின் கைகள் பிரார்த்தித்தவாறு மேலுயர்த்தப்படுகிறது. மீண்டுமொரு வாழ்வை வேண்டி....

***

அல்லாஹ் உங்களுக்காக எழுதி விட்ட ஒன்று கிடைக்காமல் தவறிப் போகாது என்பதை நீங்கள் உறுதியாக நம்பும் போது
ஏன் நீங்கள் கலங்க வேண்டும்?
பிறருக்குக் கிடைக்கும் போது ஏன் நீங்கள் பொறாமைப் பட வேண்டும்?
நீதியான அல்லாஹ்வின் தீர்ப்பை ஏற்றுக்கொள்ளுங்கள். வாழ்வில் நிம்மதி பெறுவீர்கள்!


successful 23th Year
Diploma In
ENGLISH
93rd batch
வகுப்பு நடைபெறும் இடங்கள்...
Kandy
Kurunegala
Matale
Gampola
Akurana
விஷேடமாக பல்கலைக்கழக மாணவர்களுக்கு ஜனவரி 2014லில். கம்பொலயில் ஆரம்பிக்கப்படுகின்றது.
FAZLY NAWAS
தொடர்புகளுக்கு:
077 3439425, 077 3535666

கண்டி NCIயில் A/L பரீட்சை எடுத்தவர்களுக்காக...
⇨ Law Entrance
⇨ AAT
⇨ Diploma in English
⇨ GAQ & BA
வகுப்புக்களுக்கு...
NCI
கல்வி நிலையம்.
127, Kotugodella Street, Kandy.
Tel: 077 3535666





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அலட்சியப்படுத்தப்படும் அவசியங்கள்

**Rifasa Binth Muhideen**
Assistant Lecturer,
Dep't Arabic& Islamic Civilization.

என் பேனா முனையால் பேசப்படும் வார்த்தைகளை உங்கள் உள்ளங்களை அமைதிப்படுத்திய பின் சந்தியுங்கள்... இதயம் இயைந்து சிந்தியுங்கள். மனிதன் சாதாரணமாய் சாதாரணம் என்று முஃமினுக்காய் உருவாக்கப்பட்ட இறை கட்டளைகளை அதன் அர்த்தம், முழுமை, உண்மை புரியாமல் இரண்டாம் நிலையாக முன்வைக்கும் தீர்வுகளை ஏற்கக் கூடிய நிலையிலே இன்று உள்ளான். அதன்படி நாம் எப்போது புதிய சட்டங்களை உருவாக்கி வாழ்வில் நடைமுறைப்படுத்துகின்றோமோ, அன்றிலிருந்து இஸ்லாமியம் படிப்படியாக நலிவடைந்து சமுதாயத்திற்காக சட்டங்கள் மாறியமையும். அத்தோடு முஃமினையும் இவ்வுலகத்திற்கான அடிமையான மானிடனாக மாற்றுமென்பதில் எவ்வித கருத்து வேறுபாடுகளும் இல்லை எனலாம்.

ஒவ்வொரு முஃமினும் இஸ்லாமிய முறையிலமைந்த மனித வாழ்க்கை பெறுமானம் கொண்டது என்றும் பொறுப்பை நோக்கிய நீண்ட பிரயாணத்துக்கு அதனை உவமிக்கக் கூடிய இலகுவான வழி என்பதையும் அறிந்தே வைத்திருக்கின்றான். இருப்பினும் தனிமனித ஆளுமை விருத்தி, தன்நிலைச் சுதந்திரம், தனக்கேயுரிய கௌரவம், நற்பின் நன்மை, உறவுகளின் உயர் தன்மை இவற்றினை எதற்காகவும் விட்டுக்கொடுக்கா மனநிலையே புதுப்புது தீர்ப்புகள் உருவாக்கப்பட அடிப்படையாக அமைகிறது. அவ்வேளையில் இறை சட்டங்கள் சாதாரணமாய் அலட்சியப்படுத்தப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது. அதன்படி இலகுவாக நம்மால் அலட்சியப்படுத்தப்படும் அவசியங்களை ஆராய்வோம். முதலில் பெண்களின் ஒழுக்கமும், ஆடை அலங்காரமும் நாகரிக மாற்றத்துடன் மாறி வருவதனை அவதானிக்கக் கூடியதாக உள்ளது. அதன்படி இன்று முஸ்லிம் பெண்கள் மத்தியில் நிலவி வரும் ஆடை கலாசார முறையில் தமக்கிடையே பல்வேறு அவசியமற்றவைகளை அவர்களே புகுத்தியுள்ளார்கள். அவ்வகைகளை நாம் மூன்றாக பிரித்து ஆராய்வோமாயின்

1. முற்றிலும் அந்நிய கலாசார முறையில் அமைந்த ஆடை அணியும் பெண்கள் இவர்கள் முஸ்லிமானவர்களா? என இனங்காண முடியாத நிலை.

2. இரண்டாவது வகையினர் தான் முஸ்லிம் எனக் காட்ட நினைத்து ஒரு துப்பட்டவையோ 'Hijab' யோ அணிபவர்கள்.

3. மூன்றாவது வகையினர் இஸ்லாமிய ஆடையென முத்திரை குத்தப்பட்ட ஹிஜாப் ஆடையை தன்னுடைய தோற்றத்தை உணராமல் ஏனோ, தானோ என்று அணிந்து கொள்பவர்கள்.

இம்மூன்று பிரிவினரும் இஸ்லாமிய பெண்கள் ஆடை வரையரையை சரியான முறையில் அறிந்த போதும் அதனை ஒரு பொருட்டாக கொள்ளாதவர்கள் என்று கூறுவதே சிறந்தது.

*'நகரத்து மக்களில் நான் ஒரு போதும் காணாத இரண்டு வகையானவர்கள் இருக்கின்றனர் (அவர்கள்) ஒரு சாரார் மாட்டின் வாலைப் போன்ற தசைகளைக் கொண்டிருப்பர். அவற்றை கொண்டு மக்களை அடிப்பர். மற்றொரு சாரார்*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*உடையணிந்த நிலையிலும் நிர்வாண-மாக இருக்கும் பெண்களாவர். அவர்கள் தீய வழியில்(தவறான பாதையில்) செல்வதுடன் அவர்களது நிலையில் உயர்ந்து காணப்படும் அலங்கரிக்கப்-பட்ட முடியைக் கொண்டு மற்றவர்க-ளையும் தீய வழியில் செலுத்துவர். இப்பெண்கள் சுவனத்தில் பிரவேசிக்க மாட்டார்கள் (அது மட்டுமல்ல) சுவனத்தின் நறுமணத்தை நுகரக்கூடிய அளவு அருகில் இருந்த போதிலும் அதனை அவர்கள் நுகரும் வாய்ப்பை பெற மாட்டார்கள்' (ஸஹீஹ் முஸ்லிம்).*

அதன்படி பயந்து கொள்ளும் பெண்கள் அலட்சியப்படுத்துவதை வாழ்வில் அவசியமானதாக மாற்றுவது காலத்தின் தேவையாக உள்ளது. அதன் படி ஆடையானது

1-பூரண உடலையும் மறைக்கக் கூடிய உடையாக அமைதல் வேண்டும்.

2-அணியும் ஆடை கவர்ச்சிப் பொரு-ளாக, காட்சிப் பொருளாக அமையக் கூடாது.

3-அணியும் ஆடை மெல்லிய துணியால் அமைந்ததாக இருக்கக் கூடாது.

4-ஆடை உடலோடு ஒட்டியதாக இருக்கமாக இருந்து உடலின் வடிவமைப்பை வெளிக்காட்டக் கூடிய-தாக இருக்கக் கூடாது.

5-பெண்கள் அணியும் ஆடைகள் நறு-மணம் தடவப்பட்டதாக அமையக்-கூடாது.

நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள் *'ஒரு பெண் நறுமணம் பூசிக்கொண்டு அதன் வாடையை மக்கள் நுகரும் வகையில் கடந்து போவாளாயின் அவள் ஒரு விபச்சாரியாவாள்' (அபூதாவூத், நஸாயி, திர்மிதி)*

6-பெண்கள் அணியும் ஆடைகள் ஆண்-களின் ஆடைகளை ஒத்திருக்க கூடாது.

7-பிற மதப் பெண்களை ஒத்ததாக முஸ்லிம் பெண்களின் ஆடைகள் அமையக் கூடாது.

*'யார் பிற மத கலாசாரத்தை பின்பற்றுகிறாரோ அவரும் அவர்களைச் சார்ந்தவர்கள் தான்' (அபூ தாவூத்)*

8-புகழ் பெறுமையை வெளிப்படுத்தும் வகையிலும் பிரபல்யம் ஏற்படுத்தும் ஆடைகளாக அமையக் கூடாது.

அதன்படி பெண்களுக்கு அடக்கம், கற்பு, நாணம், பாதுகாப்பு இவற்றை இஸ்லாமிய உடையமைப்பு வழங்குகிற-தென்பது தெளிவாகின்றது. இருந்தாலும், இன்றைய நிலையில் அபாயாவாயினும் நாகரீகத்துக்காக (Fashion) இறுக்கமான முறையில் அணிந்து கொள்வது மலிதாகிவிட்டது. இதனால் உடலில் மறைக்கக் கூடிய பாகங்கள் தனியாக தெரியக்கூடிய வடிவில் அமைவதுண்டு. இதனை தவிர்த்து இம்மையிலும், மறுமையிலும் நன்மை பயக்கும் முறையாக இஸ்லாமிய உடையை அணிவது புத்திசாலித்தனமல்லவா? இன்னும் முழுமையாக மூடி மறைக்கும் பெண்களாயினும், தங்களின் மிக முக்கிய அவ்ரத்தான (கட்டாயமா மறைக்கப்பட வேண்டியது) கால்களை மறந்து விடுகிறார்கள். கொஞ்சம் கொஞ்சமாக பழக்கப்படுத்துவதை விட்டும் நாட்டின் காலநிலையை காரணம் காட்டி இலேசாக புறம் தள்ளுகின்றனர். கப்ரின் உஷ்ணத்தை சற்று சிந்திப்பதற்கு மறந்துவிட்டோம் போலும் நாம்

அடுத்து வாழ்க்கையின் எல்லாத்-துறைகளிலும் பிணக்கைப் போக்கி, இணக்கத்தை உருவாக்க முயலுகின்ற இஸ்லாம், பல்சமய ஒற்றுமைக்கு இடையிலான நல்லுறவு, கடமைப்-பாடுகள் நிறைந்த அயலவர் உறவு, அந்நிய சமூகத்தவர்களுக்கிடையிலான நற்புறவு தொடர்பானதாகும். நல்லுற-வுக்கு ஆதரவு மட்டுமன்றி அதனை மார்கத்தின் அடிப்படை கடமையாகவும் ஆக்கியுள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*'மனிதர்களே நீங்கள் இறைவனுக்குப் பயந்து கொள்ளுங்கள். அவன் உங்கள் யாவரையும் ஒரே ஆத்மாவிலிருந்து உற்பத்தி செய்தான். அவரிலிருந்து அவரது மனைவியைப் படைத்தான். பின்பு அவ்விருவரிலிருந்து பல ஆண்களையும் பெண்களையும் பரவச் செய்தான்.' (அல்குர்ஆன்:04:01)*

மேற்கூறிய வசனத்தின் மூலம் அல்லாஹ் மனிதர்கள் அனைவரும் ஒரே இனத்தவராக இருக்கிறார்கள் என்பதை நிறுவுகிறான். ஒரு ஆத்மா -ஆதம் (அலை), பிறகு தம்பதிகள் (ஆதம்-ஹவ்வா) பிறகு குடும்பம், இனம் என அல்லாஹ் மனிதர்கள் அனைவரையும் பிறப்பைக் கொண்டு பிரித்து விடாது ஒரே இனத்துக்குள் உள்ளடக்கி சமத்துவத்தைக் காட்டுகின்றான்.

இன்றைய நிலையில் நம் இலங்கைத் திருநாட்டில் நம்மிடையே உள்ள சகிப்புத் தன்மை சில சந்தர்பங்களில் சோதிக்கப்படுவதுண்டு. இச்சந்தர்பத்தில் பல்சமயத்தவர்கள் வாழும் இந்நாட்டில் மத வேறுபாடுகளை ஆழ்மனதில் பதித்து விடாது சந்தர்ப்பத்திற்கு ஏற்றாற்போல் முடிவெடுத்து நாமும் இந்நாட்டு மக்களே என்பதை உறுதிப்படுத்துவது அறிவுடமைமையே. உரிமை, கடமை என்பதை ஏனைய சமுகத்தவர் முன்னால் அவர்களை விட உணர்ந்தவர்களாக செயற்பாட்டில் காட்ட வேண்டும். ஆனால் நாம் இன்று கடமைகளை பின்தள்ளிவிட்டு உரிமையை வென்றெடுக்க எத்தனிப்பது சாத்தியமற்றதே.

அதனடிப்படையிலே தான் அயலவர்களுடனான உறவுகளும் சிலரைப் பொருத்தவரை இறுக்கமானதாகவும், சிலரைப் பொருத்தவரை இலகுவானதாகவும் அமைவதுண்டு. அவைகள் நம்மிடையே திருத்தப்பட்டடு நடு நிலையான எழில்மிகு தோற்றப்பாடுகளை சமுதாயத்திற்கு வழங்கக் வேண்டும். இதனை மேன்மை பொருந்திய அல்குர்ஆனும், அல்-ஹதீஸும் எடுத்துச் சொல்லிவிட தயங்கவில்லலை.

*'நீங்கள் அல்லாஹ்வை வணங்குங்கள், அவனுக்கு எதையும் இணையாக்காதீர்கள். பெற்றோருக்கும், அவ்வாறே உறவினர்களுக்கும் அனாதைகளுக்கும், ஏழைகளுக்கும் உறவினரான அண்டை வீட்டாருக்கும் (அல்ஜாரில் ஜுனுப்) எப்பொழுதும் உங்களுடன் இருப்பவர்களுக்கு அன்புடன் உபகாரம் செய்யுங்கள்.' (அல்குர்ஆன்:3:36)*

மேலே கூறப்பட்ட வசனத்தில் ஒரு முஸ்லிம் முஸ்லிமல்லாதோரிடம் நடந்து கொள்ள வேண்டிய இங்கிதத்தையும், மென்மையையும் சாதி, மத, குல வேறுபாடுகளுக்கு அப்பாற்ப்படுத்தியுள்ளான். அத்தோடு இஸ்லாம் வரையறுத்துள்ள எல்லைகளுக்குள் நின்று சமய உறவாடலுக்கும், நல்லுறவுக்கும் அதி உறுதியான சுதந்திரத்தை அலட்சியப்படுத்தாமல் அவசியப்படுத்துவது இனிமையானது. இந்த உறவு ஒருவரை ஒருவர் சந்திக்கும் போது ஏற்படுகின்றது. இவ்வாறு சந்திக்கும் போது ஸலாம் கூறுதல், தேவையின் போது கடன் வசதிகளை செய்து கொடுத்தல், நோய் விசாரித்தல், பரிசுப் பொருட்கள் வழங்குதல் இன்னும் மாற்றப்பட வேண்டிய அவசியங்கள் எத்தனையோ

*'இன்னும் அவனே சிரிக்கவும் வைக்கின்றான், அழவும் வைக்கிறான்' (அல்குர்ஆன்-53:43).*

இன்பத்தின் போது அல்லாஹ்வை மறத்தலும், துன்பத்தின் போது இன்னும் இஸ்லாத்தை விட்டு விரண்டோடும் தன்மையைப் பற்றியும் சிந்திப்போம். சந்தோசம், துக்கம், கவலை, தோல்விகள், இழப்புக்கள், ஏமாற்றங்கள், வறுமை, நோய்கள் இவைகள் மாறி வருவதுண்டு. இதனால் நிகழ்காலம், எதிர்காலம் குறித்த அச்சம் மனித மனதில் ஏற்பட்டு நிம்மதியிழக்கச் செய்கின்றன. இதன் போது விரக்தியடைந்த *'சந்தோசத்தை அனுபவிக்கும் போது ஏன் தருகிறாய் என்று கேட்காத மனிதன், சங்கடத்தின் போது அங்கலாயிக்கிறான், புலம்புகிறான் இது நியாயமா? துன்பத்திலும் இன்பம் காணும் மனதை உருவாக்க முயல்வது*


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*தானே ஏற்புடையது. 'நிச்சயமாக ஒரு கஷ்டத்தில் தான் ஒரு இலேசு இருக்கின்றது' (அல்-குர்ஆன்:94-5).*

எனவே மேற்கூறப்பட்ட அல்குர்ஆன் வசனமானது மனித வாழ்வில் ஏற்படுகின்ற எந்தவொரு கஷ்டமும், பிரச்சினையும் இன்பத்தின் அறிகுறி என்பதை உணர்த்துகிறது. ஏதோ ஒரு விதத்தில் அவை சந்தோசமாகவே அமைகின்றன என்ற அல்லாஹ்வின் வரிகளை ஆழ்மனதில் பதித்துவிடுவது நம்மை உயர்ச்சியடையச் செய்யுமல்லவா?

இருப்பினும் ஒன்று முடிய மற்றொன்று என தொடராக வரும் கஷ்டங்கள், பிரச்சினைகளைத் தீர்க்க வழிதேடுவது அல்லது அவ்வப்போது வாழ்கையின் முக்கிய கட்டங்களில் மிக சரியான தீர்மானங்களை மேற்கொள்ளும் இடர் முகாமைத்துவம் சார்ந்த விடயங்களில் ஒரு சிக்கலை தீர்க்க மேற்கொள்ளப்படும் தீர்மானம் மற்றொரு பிரச்சினைக்கு வழிவகுக்கக் கூடாது. அல்லது அதே பிரச்சினையை மேலும் சிக்கலாக்கி விடவும் கூடாது என்பதை மனதில் பதித்துவிட வேண்டும். சாதாரண பிரச்சினைகளுக்கு தீர்மானம் மேற்கொள்வது வேறு, இன்னும் ஆழமாகச் சிந்தித்து அல்லது கலந்தாலோசித்து தீர்மானம் மேற்கொள்ள வேண்டியவை வாழ்க்கையின் பிரதான கட்டங்களில் நிலைமை வேறு, அங்கு அலட்சியத்திற்கு இடமளிக்கக் கூடாது. திட்டமிடலும் (Planning), ஒழுங்கமைப்பும்-Organizing, அனைத்துக் கருமங்களின் வெற்றிக்கு வழிவகுப்பது போன்று, சரியான சிந்தனையும் (Correct Thinking), சரியான தீர்மானமும் பிரச்சினைகள், கஷ்டங்களை வெல்வதற்குரிய பண்புகளில் முதன்மை தரத்தில் நோக்கப்படுவதோடு, *'தவக்குல், ரிழா (ஏற்பாட்டைப் பொருந்துதல்), யகீன் (திட நம்பிக்கை)'* இவற்றையெல்லாம் விட பிரதானமானவைகளாகும்.

*'உங்களுடைய தூதர் உங்களுக்கு எதைக் கொண்டு வந்தாரோ அதை உடுத்திக் கொள்ளுங்கள். எதை விட்டு எங்களைத் தடுத்தாரோ அதனை விட்டும் தவிர்ந்துகொள்ளுங்கள்' (அல் ஹஷ்ர்:07)*

இந்த வகையில் இஸ்லாமானது இஸ்லாம் சமூகத்தை நோக்கி கடுமையாக எச்சரிக்கின்ற பாவங்களில் ஒன்றும், நாம் அலட்சியப்படுத்தவதில் முதன்மையானதும் தான் பெண்களிடத்தில் ஆண் தனிமையாக இருப்பதாகும். ஒரு பெண் தன்னுடைய கற்பை சிறந்த முறையில் பாதுகாப்பவனாக இருந்தால் அவள் ஒரு சிறந்த முஃமினுக்கு எடுத்துக்காட்டாகும் என இஸ்லாம் கூறுகின்றது. இது தொடர்பில் நபி (ஸல்) அவர்கள் ஆண்களையும் கடுமையாக எச்சரித்தார்கள்.

*'நீங்கள் பெண்கள் தனியாக இருக்கும் இடத்தில் நுழைவதை விட்டும் உங்களை நான் எச்சரிக்கிறேன்'* எனக் கூறினார்கள். அப்போது ஒரு நபித்தோழர் எழுந்து *'அல்லாஹ்வின் தூதரே எனது சகோதரனின் மனைவியிடத்தில் நுழைவதுமா?'* எனக் கேட்டார்கள். அதற்கு நபி (ஸல்) அவர்கள் *'சகோதரனின் மனைவியிடத்தில் நுழைவது அழிவுக்கு ஒப்பாகும்'* எனக் கூறினார்கள் என உக்திப்னு அமீர் (ரழி) அறிவிக்கிறார்கள். *(அதாரம் முஸ்லிம்)*

பெண்களின் அழகோ அல்லது இன்னோரன்ன விடயங்களோ அனைத்தும் தங்களின் எதிர்கால கணவனுக்காக மட்டும் சொந்தமாக்கப்பட வேண்டியது என்பதை இஸ்லாம் சொல்லித்தருகின்றது. 'நான் தைரியமுள்ளவள் என்னை நினைப்பது போல் ஆண்கள் அணுக முடியாது' என நினைத்து மூன்றாவதாக ஷைத்தான் இடையில் நுழைவான் என்பதை மறந்து முஸ்லிம் பெண்கள் சாதாரணமாய் சுற்றித்திரிவதையும், Facebook, E-mail, Twitter, Skype...ect, ஊடாக தங்களை மறந்து உரையாடுவதையும் காண்கின்றோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முக்கியமான தேவைகளும், சந்தர்பங்களும் ஏற்படும் போது ஒரு ஆண், ஒரு பெண்ணை சந்திப்பதற்கு இஸ்லாம் அனுமதிக்கிறது என்பதையும் நாம் விளங்கிக் கொள்ள வேண்டும். ஆயினும் அந்த சந்தர்ப்பத்தில் பெண்ணானவள் தன்னுடைய குரலைத் தாழ்த்திக் கதைப்பதையோ தன் அங்கங்கள் தெரியும் அளவுக்கு வளைந்து, நெளிந்து கதைப்பதையோ வன்மையாகக் கண்டிக்கிறது. மறுமையில் அல்லாஹ் முன்னின்று கேள்விகளுக்கு அவசியமாக பதிலளிக்க இருக்கும் உரையாடலை மாத்திரம் அலட்சியப்படுத்துகிறோம்.

இஸ்லாம் அனுமதிக்கவில்லை என்று தெரிந்தும் தீமைகளை, தீங்குகளை பெற்றுத் தரும் விடயங்களை சாதாரணமாய் அலட்சியப்படுத்தும் சிந்தனை மாற்றத்திற்கு உட்பட்டவனாகவே மனிதன் இருக்கின்றான். இதனை அல்குர்ஆன், அல்ஹதீஸ் ஏற்றுக் கொள்கின்றது.

இன்னும் அப்பாவத்திலிருந்து மீள வேண்டும் எனவும் மேலெண்ணம் வைக்கின்றது. அதன்படி இஸ்லாமிய நெஞ்சங்களே இரகசியத்திலும், பரகசியத்திலும் இறைவனை அஞ்சி நல்லறங்களை சேமித்து நாளை மறுமையில் ஈடேற்றம் பெற முயற்சிப்போம். வாழ்வில் சகல துறைகளிலும் வழிகாட்டிச் சென்றுள்ள இஸ்லாம் எக்காலத்திலும், எவ்-வேளையிலும் பொருத்தமான ஒன்று என்பதை அவசியப்படுத்தி, அலட்சியமற்ற தூய்மையான முறையில் பின்பற்றி இறையருள் பெற்று, ஈருளகிலும் வெற்றி பெறுவோமாக. (ஆமின்)





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இஸ்லாத்தின் பார்வையில் நட்பும் அதன் சமகாலப் போக்கும்

**M.H.M Ramzeen**
Final Year,
Department of Law,
University of Peradeniya.

எக்காலத்துக்கும் பொருந்தக் கூடிய விதமான ஒரு பூரண வாழ்க்கை நெறி இஸ்லமாகும். இஸ்லாம் அல்-குர்ஆன் மற்றும் சுன்னா ஆகியவற்றின் அடிப்படையில் மனித வாழ்வுக்கான போதனைகளை வழங்கி நிற்கின்றது. மனித வாழ்வு முழுவதும் இபாதத்தாக அமைய வேண்டும் என எதிர்பார்க்கும் இம் மார்க்கமானது அல்லாஹ்வை ஈமான் கொள்வதோடு ஆரம்பித்து அவன் இவ்வுலகில் வாழும் வாழ்வின் ஒவ்வொரு துறையும் எவ்வாறு அமைய வேண்டும் என்பதை அனுவனுவாக போதனை செய்யவும் தவறவில்லை. அந்த வகையில் தனிமனித, குடும்ப, சமூக, பொருளாதார மற்றும் அரசியல் ஆகிய பெருந்துறைகளை நெறிப்படுத்தும் இஸ்லாம் இவ்வனைத்து துறைகளுடனும் தொடர்புபடும் **"நட்பு"** என்ற எண்ணக்கருவை மிக ஆழமான கண்னோட்டத்தில் நோக்கியுள்ளது.

இஸ்லாத்தின் மூலமந்திரமாகவும் அடிப்படைக் கடமைகளில் முதன்மையானதாகவும் காணப்படும் **"லாஇலாஹ இல்லல்லாஹ்"** என்பது **அல்லாஹ்வைத் தவிர வேறு எந்த இறைவனும் இல்லை** என்பதை வலியுறுத்தி நிற்கின்றது. இக்கலிமாவில் காணப்படும் 'இலாஹ்' என்ற அரபுச்சொல் வணங்கி வழிபட, **அன்பு** செலுத்த, சட்டம் இயற்ற, படைத்துப் பரிபாலிக்க, துஆக்களை அங்கீகரிக்க மற்றும் தேவைகளை நிறைவேற்ற தகுதியானவன் அல்லாஹ் மட்டும் தான் என்பதை ஆணித்தரமாக எடுத்துரைக்கின்றது. இங்கு அல்லாஹ்வின் மீது மட்டுமே அன்பு செலுத்த வேண்டும் என்றும் அவன் மட்டுமே அதற்கு தகுதியானவன் என்றும் அவனது வேறு எந்தப் படைப்புக்களின் மீதும் அன்பு செலுத்த வேண்டுமானால் அவனின் பொருட்டே அவனுக்காகவே அன்பு செலுத்த வேண்டும் என்பதை வலியுறுத்தப்படுவதனைக் காணலாம்.

*"யார் அல்லாஹ்வுக்காக நேசிக்கின்றாரோ அல்லாஹ்வுக்காக வெறுக்கின்றாரோ, அல்லாஹ்வுக்காக கொடுக்கின்றாரோ, அல்லாஹ்வுக்காக கொடுக்காமல் இருக்கின்றாரோ அவர் ஈமானை பூரணப்படுத்திக் கொண்டார்"* (அபூதாவுத்-4061)

அல்லாஹ்வின் பொருட்டு அன்பு செலுத்துதல் என்ற அம்சத்தினுள் பிற மனிதர்களுடன் நட்புக் கொள்ளுதல் மற்றும் ஏனைய உயிர்களுடன் அன்பு செலுத்துதல் என்பனவும் அடங்குகின்றன. இப்பின்னனியில் இஸ்லாத்தின் கண்ணோட்டத்தில் நட்பு, தோழமை (Friendship) பற்றி தெளிவுபடுத்துவதனை நோக்கமாகக் கொண்டதாக இக்கட்டுரை அமைகிறது.

மனிதனுடைய இயற்கையான பண்புகளில் ஒன்று தான் மற்றவர்களுடன் வாஞ்சை கொண்டு பழகுவதாகும். ஒருவனுடைய மனம் எவ்வேளையிலும் ஒரு துணையை வேண்டியவண்ணமேயுள்ளது. இவ்வுலகில் அனைத்துமே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சோடி சோடியாகத்தான் படைக்கப்-பட்டுள்ளன. ஆபத்தின் போது துணை நிற்கக் கூடிய ஒரு நண்பனைத் தேடிய வண்ணமே மனித சமுதாயம் இருக்கின்றது.

ஒரு புனிதமான மகத்தான, வாழ்வில் நளிவடையும் காலங்களில் எமக்கு கைகொடுக்கும் உறவு ஒன்று இருக்குமாயின் அது நட்பு ஒன்று தான். மனிதனுக்கும் விலங்குகளுக்கு இடையில் முக்கியமான வேறுபாடான அன்பை மனிதனில் எடுத்துக்காட்ட முடியும்.

இந்த வகையில் அன்பு, பாசம், நட்பு, மற்றும் நேசம் என்பன இஸ்லாமிய வாழ்வின் அடிப்படைக்குள் முக்கியமான-தாக அமைகிறது. இது தொடர்பாக குர்ஆன் பின்வருமாறு குறிப்பிடுகின்றது: '......*தமக்கிடையே அன்போடும், இரக்க-த்தோடும் இருப்பார்கள்.*'(அல்குர்ஆன் 48:29)

அன்பும் நட்பும் பரஸ்பர ஒத்துழைப்பும் பகிர்ந்து கொள்ளப்படும் சமுதாயத்தில் ஒழுக்கமானது மேலோ-ங்கிக் காணப்படுமாயின் இங்கு சட்டத்திற்கு தேவையிராது. ஒரு சமுதாயத்தை அன்பு அரவணைக்கும் போது அது உயிருள்ள சமுதாயமாக நல்வாழ்வு பெற்று செழித்து அபிவிருத்தியடையும் என்பதில் எவ்வித ஐயமுமில்லை. கொடுக்க கொடுக்க அதிகரித்துச் செல்லக்கூடிய ஒன்று அன்பே, தாராளமாக வழங்குங்கள் எவ்வித வேறுபாடுகளும் காட்டாமல் வழங்குங்கள் கொடுப்பதில் உள்ள சுகம் பெறுவதில் இருப்பதில்லை என்பதும் குறிப்பிடத்தக்கது.

ஒரு தாயின் நேசிப்பை விட 70 மடங்குகள் அல்லாஹ் தனது அடியார்-களை நேசிக்கின்றான். ஒரு தாய் தனது பிள்ளைகள் மீது எந்த அளவு அன்பு செலுத்துவாள் என்பதை அனுபவரீதியாக உணர முடியும். ஆனால் அதில் 70 மடங்கு என்பது எந்த அளவாக இருக்கும்? இது சிந்தனைக்குரிய விடயமாகும்.

முஸ்லிம்களின் அன்புக்கும் நட்புக்கும் விளக்கம் கொடுக்கும் போது மனிதனின் உடலை உவமானமாக குறிப்பிடலாம் என்று நபி (ஸல்) குறிப்பிடுகின்றார். உடலில் ஒரு பகுதியில் வேதனை ஏற்படும் போது அந்த வேதனை மற்ற பகுதிகளையும் தாக்குகிறது. இதே போன்று சமுதாய-த்தில் ஒரு மனிதனுக்கு ஏற்படும் துன்பம் மற்றவர்களுக்கும் வேதனை கொடுக்க வேண்டும். உங்களுக்கு எதை நீங்கள் விரும்புகின்றீர்களோ அதை மற்றவர்க-ளுக்கும் விரும்புங்கள் என்று நபி (ஸல்) குறிப்பிட்டிருப்பது எவ்வாறு நட்புக் கொள்ள வேண்டும் மற்றும் அதன் விளைவு எவ்வாறு வெளிக்காட்டப்பட வேண்டும் என்பது தொடர்பாக தெளிவுபடுத்துகின்றது.

எடுத்துக்காட்டாக, எமது பல்-கலைக்கழகத்தின் ஒவ்வொரு பீடத்திலும் தனிப்பட்ட மாணவர் சங்கங்கள் ஸ்தாபிக்கப்பட்டு செயற்பட்டு வருகின்றது. அவை இஸ்லாமிய நோக்கத்திலோ அல்லது வேறுபட்ட நோக்ககங்களை கொண்டேனும் திறன்பட செயற்படுவதைக் காணலாம். இதன் வெற்றிக்கு பின்னால் இருப்பது யாதெனில் அவர்களிடையே திட்டமிட்டு உருவாக்கப்பட்டுள்ள நட்பு தான். நட்பு என்பது கண்ணாடி போன்றது. அதில் ஒருவன் தன்னைக் காண முடியும். அவன் எவ்வாறு அதனை பார்க்கின்றானோ அவ்வாறே அதுவும் விம்பத்தைக் காட்டும். உளவியலாளர் சிக்மன் புரொய்ட் பின்வருமாறு குறிப்பிடுகின்றார். "*ஒருவனுடைய குணத்தை அறிவதற்கு அவனுடைய எண்ணங்களையும் செயல்-களையும் ஆராய்ந்தால் போதுமானது*" அகத்தின் அழகு முகத்தில் தெரியும் என்பார்கள் அதைப்போல.

மேலும் நட்புக்கும், நற்பண்புக்கும் இடையில் மிக நெருங்கிய தொடர்புள்ளதை இஸ்லாம் தெளிவாக எடுத்தியம்பியுள்ளது. நட்பு என்பது நற்பண்பின் கிளைகளில் ஒன்றாகும். நற்பண்புள்ளவர்கள் யாவரும் அன்பு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செலுத்தக் கூயவர்களாக இருப்பதோடு மட்டுமல்லாது அன்பு செலுத்தாதவர்களை யாரும் நட்பண்புள்ளவர்கள் என்று சொல்வதில்லை. பெருமானார் நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்

*"இறையச்சமும் நற்பண்பும் தான் மனிதர்களை மறுமையின் வெற்றிக்கு தகுதியுள்ளவர்களாக ஆக்குகின்றன."*
ஒரு விசுவாசியின் நோக்கம் அல்லாஹ்வின் பொருத்தத்தைக் கொண்டு சுவனம் நுழைய வேண்டும் என்பதாக தான் இருக்க வேண்டும். இந்நோக்கத்தை பூர்த்தி செய்யக் கூடிய விதமாக மேலே குறிப்பிட்ட ஹதீஸ் நட்பின் முக்கியத்துவத்தை, நற்பண்பின் ஒரு கிளையாக நின்று வழிகோளுகின்றது.

*ஒரு மனிதனுக்கு இறைவன் நல்லது செய்ய நினைத்தால் அவனுக்கு நல்லதொரு நண்பனை ஏற்படுத்துகிறான். அவன் நேர்மையை மறக்கும் போதெல்லாம் அந்த நண்பன் நேர்மையை நினைவுபடுத்துகிறான்.*
என நபி (ஸல்) அவர்கள் கூறிப்பிட்டுள்ளார்கள். நாம் நல்ல நண்பனை பெற்றுக் கொள்வதற்காக எவ்வாறான தியாகங்களையும் செய்ய முடியும் அதேபோல் கெட்ட நண்பர்களை பெற்றுக்கொள்வதில் இருந்து தவிர்த்துக் கொள்வதற்காக நாம் முடிந்தவரை முயற்சி செய்ய வேண்டும்.

*"கெட்ட நண்பனை விட தனிமை சிறந்தது. தனிமையை விட நல்ல நண்பனுடன் நட்புக் கொள்வது மேலானது"* (திர்மிதி).

*"அல்லாஹ் மறுமை நாளில் எனக்காக நேசம் வைத்துக் கொண்டவர்கள் எங்கே? என்னுடைய நிழலைத்தவிர வேறு நிழல் இல்லாத இந்நாளில் நான் அவர்களுக்கு எனது நிழலைத்தருகிறேன் என்று கூறுவான்."*
என நபி (ஸல்) அவர்கள் கூறிப்பிட்டுள்ளார்கள். மறுமை நாளில் ஏழு கூட்டத்தினருக்கு அல்லாஹ்வின் அர்ஷில் நிழல் கொடுப்பதாக வாக்குறுதியளித்துள்ளான் அந்தக் கூட்டத்தில் ஒருவர் தான் *அல்லாஹ்வுக்காக நட்புக்கொண்டு அல்லாஹ்வுக்காக பிரிந்தவர்* ஆவர்.

உமர் (ரழி) அவர்கள் நட்பு தொடர்பாக குறிப்பிடும் போது "இறைவனுக்காக அன்பு செலுத்துபவர்கள் ஒருவரை ஒருவர் சந்தித்துக் கொள்ளும் போது அவர்கள் செய்த தீமைகள் உதிர்கின்றன, காயந்த இலைகள் மரத்திலிருந்து உதிர்வது போல" என்றார்.

நபி ஈஸா (அலை) அவர்கள் நட்பு தொடர்பாக குறிப்பிடும் போது "யாரைப் பார்த்ததும் இறைவனின் எண்ணம் உண்டாகின்றதோ, யாருடைய பேச்சைக் கேட்டதும் உங்களுடைய செயல்திறன் வளர்கின்றதோ, யாருடைய செயலைப் பார்த்ததும் உங்களுக்கு மறுமை பற்றிய எண்ணம் ஏற்படுகின்றதோ அவருடன் பழகுங்கள் அவருடன் உட்கார்ந்து உரையாடுங்கள்" என்றார்.

*"நல்ல நண்பன் கஸ்தூரி வியாபாரி போலாவான் (அத்ர் வியாபாரி). இன்னும் தீய நண்பன் துருத்தி ஊதுபவன் போன்றவனாகும். கஸ்தூரி விற்பவன் உனக்கு இலவசமாக அதை தரக்கூடும் அல்லது அதை உன்னிடம் விற்கக்கூடும் அல்லது அதன் நறுமணத்தை நீ நுகரக்கூடும். துருத்தி ஊதுபவன் உனது ஆடையை எரித்து விடக்கூடும். அல்லது அவனிடமிருந்து கெட்ட வாடையை நீ அடைய நேரும்"* என நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள் (புகாரி, முஸ்லிம்).

அந்த வகையில் தற்காலத்தில் நட்பு என்ற வார்த்தைக்குள் பலவிதமான மறைவான அர்த்தங்கள் அடங்கியுள்ளதை காண முடிகின்றது. பாடசாலை மற்றும் உயர் கல்வி நிறுவனங்களில் தொடங்கி தொழில் செய்யக்கூடிய நிறுவனங்கள் வரை தற்காலத்தில் ஆண்-பெண் கலப்பானது தடுக்க முடியாத விடயமாக மாறியுள்ளளது. இலங்கை முஸ்லீம்களுக்கு தனியான சட்டங்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குறிப்பிட்ட சில விடயங்களில் மட்டும் பின்பற்றப்படுவதோடு ஏனைய சகல விடங்களுக்கும் பொதுவான இலங்கைச் சட்டமே பின்பற்றப்படுகின்றது. இஸ்லாமிய சட்டத்தை முழுமையாக நடைமுறைப்படுத்துவதற்கு இஸ்லாமிய ஆட்சி இன்றியமையாததாகும். ஆண்-பெண் கலப்பை தடுத்துள்ள இஸ்லாம், சிறுபான்மையினராக வாழும் போது எவ்வாறு இஸ்லாத்தை பின்பற்றவேண்டும் எனவும் தெளிவாக எடுத்துக்காட்டியுள்ளது. தனிப்பட்ட நபர்கள் தனது சிந்தனையின் அடிப்படையில் எந்த அளவு, எவ்வாறு ஆண்-பெண் கலப்பில் இருந்து தவிர்ந்து கொள்ள எண்ணுகின்றாரோ அவ்வாறே அல்லாஹ்வும் அவர்களுக்கு உதவுவான் என்பதில் ஐயமில்லை.

தற்காலத்தில் ஆண் பெண் கலப்பு, தொடர்பு பாடசாலையில் இருந்தே ஆரம்பித்து பல்கலைக்கழகங்களிலும் தொடர்வதை அறிவோம். இதன் விளைவுகளை பெற்றோர் அறிந்து கொள்வது சற்று சிரமமாயுள்ளது. குறிப்பிட்ட வயதை அடைந்ததும் இருபாலாரும் தொடர்பு கொள்வதற்கு எத்தனிப்பது இயற்கை நியதி. இது உடம்பில் இயற்கையாக அமையப் பெற்றுள்ள ஓமோன்களின் மாற்றத்தினால் நிகழக் கூடியது என்கிறது மருத்துவ உளவியல். எனினும் இருபாலாரும் அதிகளவான நேரம் உரையாடுதல் மற்றும் இருபாலாரினது இயலாமை (Weakness) விளங்கக்கூடிய விதமாக பேசிப்பழகுவதன் மூலம் தவறான வழிகளுக்கு இட்டுச் செல்லக் கூடிய வாய்ப்புள்ளது.

நட்பு என்ற வரையறைக்குள் தற்காலத்தில் காதலை தொடர்புபடுத்துவது தவிர்க்க முடியாததாக மாறியுள்ளது. இருபாலாரிடையே (திருமணத்திற்கு முன்) ஏற்படக் கூடிய ஈர்ப்பு/கவர்ச்சியையே (Attraction) அடிப்படை காரணமாகும். இக்கவர்ச்சியானது மேலும் விருத்தியடைந்து நட்பாகவோ காதலாகவோ அல்லது காமமாகவோ மாறமுடியும். இது இருபாலாரிடையே விருத்தியடைந்துள்ள ஈர்ப்பின் அளவு மற்றும் பெறுமதியின் தன்மையை பொறுத்து தீர்மானிக்கப்படுகின்றது.

காதலை ஒரு சமூக சீர்கேடாக ஒரு மனிதன் (இஸ்லாத்தை சாராத) கருதும் அளவுக்கு தற்போது உலகில் காணப்படும் காதல் விவகாரங்கள் தோற்றமளிக்கின்றன. இதற்கு செல்லிடப்பேசி (Mobile Phone) மற்றும் சமூக இணைத்தளங்கள் Social Networks மற்றும் குறிப்பாக முகப்புநூல் (Facebook) ஆகியவை உறுதுணையாக அமைவதை காணலாம். ஆனால் இஸ்லாம் இதனை 1434 ஆண்டுகளுக்கு முன்பே அஜ்னபி-மஹ்ரமி உறவு முறை எவ்வாறு அமைய வேண்டும் என்பதும் ஆண்-பெண் தொடர்பு எவ்வாறு இருக்க வேண்டும் என்றும் தெளிவுபடுத்தியுள்ளதை அறியலாம்.

இவ்வாறு சமூக சீர்கேடாக, சமூக சிக்கலாக கருதப்படும் காதலை இஸ்லாம் விபச்சாரமாகவே கருதுகின்றது. இஸ்லாத்தில் திருமணத்துக்கு முன் ஒரு ஆணும் பெண்ணும் அன்னியொன்னியமாக பழக முடியாது. அது நேரில் பேசுவதாக இருக்கலாம், தொலைபேசியினூடாக குழைந்து குழைந்து பேசுவதாக இருக்கலாம், குறுந்தகவல் (sms) மூலம் அரட்டை அடிப்பதாகவும் இருக்கலாம், மற்றும் 'Skype' மற்றும் 'Facebook' chatting இவை அனைத்தும் இஸ்லாத்தின் பார்வையில் குற்றமாகும். இவை விபச்சாரமாக இல்லாவிடினும் இறுதியில் விபச்சாரத்திற்கே வழிவகுக்கின்றது. எனினும் ஆண்-ஆண் பெண்-பெண் நட்பாக பழகுவதையோ மற்றும் கணவன்-மனைவி காதல் கொள்வதையோ இஸ்லாம் மறுக்கவில்லை. பருவ வயதை அடைந்தால் உங்கள் பிள்ளைகளுக்கான படுக்கையை (மஹ்ரமிகளுக்கிடையில்) வேறுபடுத்துமாறு கூறும் இஸ்லாம், எவ்வாறு ஒரு அஜ்னபியான ஆணும் பெண்ணும் பேசுவதையோ, நெருங்கிப் பழகுவதையோ அனுமதிக்கும். இதனை சிந்தனை


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செய்பவர்களுக்கு நல்ல படிப்பினை இருப்பதை அறியலாம். இத்தகைய தீய, வேண்டத்தகாத கலாசாராத்துக்கு, பின்பற்றுவதற்கு பொருந்தாத சூழலை உருவாக்குவதில் இருந்து தடுக்கும் வகையில் கல்வி நிறுவனங்கள் ஒழுங்குபடுத்தப்பட வேண்டும் என்பதே இஸ்லாத்தின் வலியுறுத்தல்களை முழுமையாக பின்பற்ற நினைக்கும் அல்லது பின்பற்றும் ஒவ்வொருவரினதும் அவாவாக இருக்க வேண்டும்.

ஆக, நட்பு (சகோதரத்துவம்) என்ற எண்ணக்கருவை கொண்டே இஸ்லாமிய வாழ்க்கை நெறி கட்டியெழுப்பப்பட்டுள்ளது என்பதில் எவ்வித ஐயமுமில்லை. அல்லாஹ்வுக்காக மட்டுமே நட்பு கொண்டு முழு வாழ்கையையும் இபாதத்தாக மாற்றுவதோடு நட்பு என்ற புனிதத்திற்குள் காதலை தொடர்புபடுத்தி நட்பினை கொச்சப்படுத்தாமல், கலங்கப்படுத்தாமல் இவற்றை வேறுபடுத்தி புரிய முயற்சிப்பதோடு இஸ்லாம் எக்காலத்துக்கும் பொருந்தக்கூடிய பூரண வாழ்க்கை நெறி என்பதை ஒவ்வொரு இஸ்லாமியனும் உறுதிப்படுத்த கடமைப்பட்டுள்ளதோடு பிற சமூக சகோதரர்களுக்கும் இந்த யதார்த்தங்களை புரிய வைக்க வேண்டும்.

With Best Wishes, From...
Al-Haj N. Y Mohamed Ali.
30 Years of Best Catering Service

Yoosufiya
EATING HOUSE
51/6/1/1, Yatinuwara Patumawatha, Kandy.
Tel:077 1234564, 071 5551936

# என் குமிழ் முனைப் பேனா...!

**எம். ஜே. றஜபுன்னிஸா**
உதவி விரிவுரையாளர்,
அரபு மற்றும் இஸ்லாமிய நாகரிகத் துறை,
பேராதனைப் பல்கலைக்கழகம்.

*பூகம்பத்தின் கொண்டையில்
எனக்கான பூவைச் செருகியவர்களின்
விருட்சங்களையே
விழுங்கும் வேர்களை
விதையிடப் போகின்றதென்
பேனா...*

*மன்னிக்கத் தெரியாத
மனமில்லாதவர்களின்
இதயத்தில் ஈரமுமிழும்
மழைத்துளிகளை
சமைத்தெடுக்கப் போகின்றதென்
பேனா...*

*இரவுகளின் அடர்த்தில்
இருட்டைக் கொட்டி
இருட்டடிப்புச் செய்தவர்களை
இல்லாமை செயத் துடிக்கும்
கவியாலே காத்திருக்கின்றதென்
பேனா...*

*விழியின் எல்லைக் கரையில்
கண்ணீர் கரைசல்
என் போலவே சதா
குமுறி அழுகிறது
என் குமிழ் முனைப்
பேனா...*

*நானின்றி, என் சொப்பனத்தில்
வரையப்பட்ட என் விடைத்
தாளின் வாசகன்
என் குமிழ் முனைப்
பேனா...*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தொழில்துறை மற்றும் சமூக நிகழ்வுகளில் பெண்களின் வகிபங்கு

எஸ்.ஏ.சீ பெறோசியா
விரிவுரையாளர்,
வரலாற்றுத்துறை,
பேராதனைப் பல்கலைக்கழகம்.

ஒரு சமூகத்தின் குறை நிறைகளைப் பிறிதொருசமூகம் சுட்டிக் காட்டுவதற்கு முன் அந்தச் சமூகமே அதன் குறைநிறைகளை இனங்கண்டு திருத்திக் கொள்வது பொருத்தமானதாகும். இன்று முஸ்லிம் சமூகத்தில் ஆண்களுடன் ஒப்பிடும் போது பெண்களின் கல்வித்தரம் அதிகரித்துள்ளது. இன்றைய முஸ்லிம் சமூகத்தில் பெண்களின் கல்வித்தரம் துரிதமாக அதிகரித்துள்ளது மட்டுமல்லாது தொழிலில் ஈடுபடும் பெண்களின் தொகையும் அதிகரித்துள்ளது என்பதைப் புள்ளிவிபரங்கள் எடுத்துக்காட்டுகின்றன. பெண்கள் ஆசிரியத் தொழில் செய்வதையே சமூகம் வரவேற்கிறது. அதுவே பெண்களுக்கு பொருத்தமானது, வசதியானது எனக் கருதுகின்றது.

இன்று பெரும்பான்மையான முஸ்லிம் பெண்களும் ஆசிரியத் தொழிலையே செய்து வருகின்றனர். ஆனால் சில பெண்கள் அரச அல்லது தனியார் துறைகளில் பணியாற்றுவதுடன், உயர் பதவிகளையும் வகித்து வருகின்றனர். இது சமூகத்திற்கு பெரும் வரப்பிரசாதமாகும். எனவே, பெண்களை உயர் கல்வித் துறைகளில் ஈடுபடுத்துதல், தன்னம்பிக்கையுடனும், விடாமுயற்சியுடனும் உயர் தொழில்களை நோக்கிச் செல்வதற்கு ஊக்கப்படுத்துதல் என்பன எமது சமூகத்தின் கடமையாகும். முஸ்லிம் பெண்களின் கல்வித்தரம் அதிகரித்த போதி-லும், யதார்த்த வாழ்வில் அதன் பிரதிபலிப்புக்களை காண்பது அரிதாக-வே உள்ளது. கல்விகற்ற பெண்கள் தமது கல்வித் தரத்தை தமது வாழ்வில், தொழிற்துறையில் பிரதிபலிப்பவர்களாக இருக்க வேண்டும். அவர்களுடைய செயற்பாடுகள் நேர்மையானதாகவும், உண்மையானதாகவும் அமைய வேண்டும். மேலும் வாழ்வில் தன்னம்பிக்கை, முயற்சி, உழைப்புத்திறன் உள்ளவர்களாகத் திகழ வேண்டும். எந்த விடயத்தையும் நடுநிலையாக சிந்திக்கவும், தெளிவாகப் புரிந்து கொள்ளவும், பக்குவமாக எடுத்துக் கூறவும், கல்வி அறிவினூடாக வாழ்க்கையின் யதாரத்தத்தைப் புரிந்து கொள்ளவும் கூடியவர்களாகப் பெண்கள் திகழ வேண்டும்.

இன்று எம் சமூகத்துப் பெண்களில் பெரும்பாலானவர்கள் (தொழில் செய்யும் பெண்கள், குடும்பப் பெண்கள்) ஆடம்பர பிரியைகளாக, போலியான, பகட்டான வாழ்க்கையை விரும்புகின்ற நிலையே காணப்படுகின்றது. சமூகத்தில் கல்வி கற்று உயர் நிலையில் உள்ள பெண்களிடம் கூட, இத்தகைய பண்பு காணப்படுவது கவலைக்குரிய விடயமாகும். மேலும் ஒரு சில படித்த பெண்கள் ஆணவம், அதிகாரம் என்பவற்றைக் கொண்டவர்களாகக் காணப்படுகின்றனர் என்பதும் மறுப்பதற்கில்லை. அதே வேளை,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவர்களில் பலர் மூடநம்பிக்கை கொண்டவர்களாகவும் காணப்படுகின்றனர். இன்று சில முஸ்லிம் பெண்கள் கல்வியை நாடிச் செல்லும் இடங்களிலும் மற்றும் தொழில் புரியும் இடங்களிலும் தமது நடை, உடை, பாவனைகள், நளினப் போக்குகள் என்பவற்றால் ஏனைய சமூகப் பெண்களையும் மிஞ்சுபவர்களாகக் காணப்படுகின்றனர் என்பதும் மறுப்பதற்கில்லை. மேலும், சில பெண்கள் இஸ்லாமிய ஆடை என்ற பெயரில் அணியும் 'அபாயா' இன்று அதீத நாகரிகத்தைப் பிரதிபலிக்கும் வகையில் வடிவமைக்கப்பட்டு அணியப்படுகின்றது. அபாயா அணிவதன் நோக்கத்தை அதில் காணமுடிவதில்லை. எனவே பெண்கள் புரிந்துணர்வும், விழிப்புணர்வும் பெறவேண்டும். இது காலத்தின் தேவையாகும்.

முஸ்லிம் பெண்களின் கல்வி துரித வளர்ச்சியைக் காண்கின்ற அதேவேளை, ஆண்களின் கல்வி துரிதமாக வீழ்ச்சியை நோக்கிச் செல்வதை அவதானிக்க முடிகிறது. இந்த நிலை இன்று முஸ்லிம் சமூகத்தில் மட்டுமல்லாது இலங்கையில் ஏனைய சமூகங்களிலும் காணப்படுகிறது. ஆண் கல்வியின் வீழ்ச்சியைப் பற்றி அங்கலாய்ப்பதைத் தவிர, அதனை முன்னேற்றுவதற்குச் சாத்தியமான எந்தச் செயற்பாடுகளும் சமூகத்தில் பொறுப்பு வாய்ந்தவர்களாலோ, அமைப்புகளாலோ மேற்கொள்ளப்படுவதாக தெரியவில்லை.

ஏனைய சமூகங்களிலுள்ள கல்விகற்ற, குடும்பப் பெண்களுடன் ஒப்பிட்டுப் பார்க்கும் போது எமது பெண்கள் பின் தங்கிய நிலையிலேயே உள்ளனர். எளிமையுடன் கூடிய பண்பாடு ஏனைய சமூகப் பெண்களிடம் காணப்படும் போது நம் பெண்களிடம் ஆடம்பரத்துடன் கூடிய பண்பாடே அதிகரித்து வருகின்றது. முன்மாதிரி மிக்கவர்களாகத் திகழ வேண்டிய நம் பெண்கள் மேற்கத்தேய நாகரிகத்தையும் பழக்கவழக்கங்களையும் நாடிச் செல்பவர்களாகக் காணப்படுகின்றனர். அவர்கள் கற்ற கல்வி அவர்களுடைய மனப்பாங்கில் மாற்றத்தை ஏற்படுத்தியதைக் காண முடிவதில்லை. இது ஆண்களுக்கும் பொருந்தும்.

இன்று, பெண்கள் கல்வி கற்பதும் தொழிலில் ஈடுபடுவதும் குடும்பப் பிரச்சினைக்கும், சமூகப் பிரச்சினைக்கும் வழிவகுக்கிறது, ஆண்களை நிருவகிக்கும் கேவலமான நிலைக்கு உள்ளாகிறது என்று கூறும் மன நிலை நம் சமூகத்து ஆண்களிடமும் பெண்களிடமும் காணப்படுகின்றது.

தொழில் செய்யாத பெண்களும் ஏனையோரும் கல்விகற்ற, தொழில் புரியும் பெண்கள் சமூகத்தின் சொத்துக்கள் என்ற யதார்த்தததைப் புரிந்து, அவர்கள் மென்மேலும் உயர்வடைவதற்கு ஊக்கம் அளிக்க வேண்டும். படித்த பெண்கள் ஏனையோருக்கும் வாழ்வின் யதார்த்தத்தைப் புரிந்துகொள்வதற்கு உதவுவது அவசியம் ஆகும். ஒவ்வொரு முஸ்லிம் பெண்ணும் தமது சகோதரிகளான ஏனைய முஸ்லிம் பெண்களை முன்னேற்றுவதற்கும், ஊக்குவிப்பதற்கும், அவர்களைப் பாராட்டுவதற்கும் முன் வரவேண்டும். அத்துடன் இளம் பெண்கள் வாழ்க்கையில் முன்னேறி சமூகத்தின் நம்பிக்கையையும் நன்மதிப்பையும் பெற்று வாழ்க்கையில் உயர்ச்சியடைய வேண்டும்.

மேலும், ஆண் சமூகத்தின் துணையின்றி பெண்கள் சமூகத்தில் முன்னேறிச் செல்ல முடியாது. எனவே ஆண்களின் ஆதரவு, ஊக்குவிப்பு என்பன நிச்சயமாக பெண்களின் வளர்ச்சிக்கு அவசியமாகும். இன்று பெண்கள் கல்வியிலும், தொழிலும் ஈடுபடுவது தொடர்பாக எதிர்மறையான மனப்பாங்கே சமூகத்தில் காணப்படுகின்றது. இத்தகைய மனப்பாங்கில் மாற்றம் வேண்டும். ஏனைய சமூகங்களில் ஆண்கள் பெண்களுக்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வழங்கும் ஆதரவு, ஒத்துழைப்பு என்பன எமது சமூகப் பெண்களுக்கும் கிடைத்தல் வேண்டும். அதே போன்று பெண்களும் தனது கணவன் சகோதரர்களின் கல்வி, தொழில் முன்னேற்றத்தில் ஆர்வமும் ஒத்துழைப்பும் வழங்குபவர்களாக இருக்க வேண்டும்.

எமது முஸ்லிம் பெண்கள் தம்மை சூழ நடைபெறும் விடயங்கள் பற்றி அறிந்துக் கொள்வதில் ஆர்வம் குறைந்தவர்களாகக் காணப்படுவதுடன், உலக அறிவைப் பெற்றுக் கொள்வதற்கு ஊடகங்களைப் பயன்படுத்துவது குறைவு. மாறாக, வெறுமனே பொழுதைக்கழிக்க உதவும் சாதனங்களிலேயே ஆர்வம் காட்டுகின்றனர்.

இன்னும் முஸ்லிம்கள் வர்த்தக சமூகம் என்பதை உறுதிப்படுத்தும் வகையில் பணத்துக்கு மட்டும் முதலிடம் வழங்குவதோடு அதனை அடிப்படையாகக் கொண்டு செயற்படும் சமூகமாகவே இருந்து கொண்டிருக்கிறது.

புள்ளிவிபரங்களில் முஸ்லிம் பெண்களின் கல்வி வளர்ச்சி உயர்ச்சியைக் காட்டுவது போன்று, குடும்பம், சமூகசெயற்பாடுகள் என்பனவற்றில் அது பிரதிபலிக்க வேண்டும்.

எமது சமூகத்தில் ஆண்,பெண் புத்திஜீவிகள் பலர் காணப்பட்ட போதிலும் அவர்கள் பெண்களுடைய கல்வி, தொழில் முன்னேற்றங்கள் தொடர்பாக கருத்துக்களை முன்வைப்பதற்கோ, சமூகத்தை விழிப்புணர்வு ஊட்டுவதற்கோ, தெளிவுபடுத்துவதற்கோ முன்வருவது குறைவாகவே உள்ளது. இலங்கையில் ஏனைய சமூகப் பெண்களைப் போல் சகல துறைகளிலும் முன்னேறுவதற்கு முஸ்லிம் பெண்களை ஊக்குவிப்பது இச்சமூகத்தைச் சேர்ந்த ஆண்களின் கடமையாகும்.

**சமூக நிகழ்வுகளும், முஸ்லிம் பெண்களும்.**

பொதுவாக முஸ்லிம் சமூகத்தில் பண்டிகைகள், வைபவங்கள் மற்றும் சமய நிகழ்வுகள் என்பன இன்று அருகி வருகின்றமையை அவதானிக்க முடிகிறது. சமயம் சார்ந்த நிகழ்வுகள், குறிப்பாக மஸ்ஜிதுகளை மையமாகக் கொண்டு நடைபெறும் வைபவங்கள் குறைந்துள்ளதுடன் அவற்றுக்கு பல்வேறு காரணங்களுக்காக பெண்கள் அனுமதிக்கப்படுவதுமில்லை.

இரு பெருநாட்களிலும், நோன்பு கால தராவீஹ் தொழுகைக்கும் மட்டுமே பெண்கள் பள்ளிவாசலுக்கு அனுமதிக்கப்படுகிறார்கள். ஆனால் அந்த ஓரிரு நிகழ்வுகளிலும் கூட எமது முஸ்லிம் பெண்களின் நடவடிக்கைகள் பொருத்தமானதாக அமைவதில்லை என்பதை கூறித்தான் ஆக வேண்டும். பெருநாள் தொழுகைக்காக பள்ளிவாசல் செல்வதன் நோக்கம் எந்தளவுக்கு நிறைவடைகின்றது என்பது கேள்விக்கிடமாகவே உள்ளது. பெரும்பாலான பெண்கள் கைக்குழந்தைகளுடன் வருவதால் அக்குழந்தைகள் சனநெரிசலில் அவஸ்தைக்குள்ளாகுவதும், அவர்களின் அழுகை சத்தமும் ஏனையோரின் தொழுகைக்கு இடையூறாக அமைவதை அவர்கள் உணர்வதில்லை. மேலும் சமூகத்தில் எல்லாத் தரங்களையுடைய பெண்களும் தொழுகைக்கு செல்லும் போது தமது புதிய நவீன ஆடைகளை ஏனையோருக்கு காட்டுவதற்கு வருவது போல் உள்ளது. ஒவ்வொருவரும் தமது ஆடை அலங்காரங்களை ஏனையோருக்கு காட்டுவதற்காகவே நடந்து கொள்வது போல் உள்ளது. அவர்கள் அணிந்து வரும் அணிகலன்கள், ஆபரணங்களின் ஓசை தொழுகைக்கு இடையூறாக அமைகின்றது. எளிமையான வாழ்க்கை முறையை வாழ வேண்டிய நாம் இவ்வாறு சமய செயற்பாடுகளைக் கூட முறையாக, திருப்தியாக நிறைவேற்றிக் கொள்ள முடியாத சூழலை நாமே உருவாக்கிக் கொள்கின்றோம். சமூகத்திலுள்ள



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொறுப்பு வாய்ந்த, படித்த பெண்களாவது இது தொடர்பாக கவனம் செலுத்துவதும், ஏனைய பெண்களை வழி நடத்துவதும் அவசியமாகும். ஆனால் அவர்களின் வழிகாட்டல்களை ஏற்றுக் கொள்ளக் கூடிய பக்குவமும் மனப்பாங்கும் எமது சமூகத்தில் இல்லை என்பதையும் கூறத்தான் வேண்டும்.

மேற்குறிப்பிட்ட நிகழ்வுகளைத் தவிர திருமண வைபவங்கள், மையத்து வீடுகள் மற்றும் ஏனைய சமூக நிகழ்வுகளை எடுத்துக் கொண்டால், திருமணம் என்பது இஸ்லாத்தைப் பொருத்தவரையில் முக்கியமானதுடன் எளிமையாக நடைபெறக் கூடிய நிகழ்வாகும். ஆனால் எமது சமூகத்தில் அன்றும், இன்றும் இந்த நிகழ்வு ஆடம்பரமாகவும், இஸ்லாத்திற்கு முரண்பட்ட விதத்தில் நடைபெறுவதை யாரும் மறுக்க முடியாது. மார்க்கத்தை நன்கு கற்றுத் தேர்ந்தவர்கள், ஏனையோர் என்று எந்த வித்தியாசமும் இன்றி மார்க்கத்துக்கு முரணான விதத்திலேயே நடைபெறுகின்றது. இந்த நிகழ்வுகளில் பெண்களின் வகிபங்கைப் பார்க்கும் போது திருமண வைபவத்தை ஒழுங்குபடுத்துதில் பெரும் பங்கு அவர்களுடையதாகவே உள்ளது. எனினும் அந்த ஒழுங்குபடுத்தலானது முறையாக சிறப்பாக நடைபெறுவதில்லை. மார்க்க கல்வியை அல்லது உலகக் கல்வியை கற்ற அனைத்துப் பெண்களும் கூட திருமண வைபவங்களை ஒழுங்குபடுத்தல் விடயத்தில் தமது கவனத்தை செலுத்துவதில்லை. இதே போன்று தான் மையத்து வீடுகளும். எமது முஸ்லிம் மரண வீடுகளுக்கு ஏனைய சமூகத்தினரும் வருவது இயல்பு. எனவே அவர்களது விமர்சனங்களுக்கு இந்த பெண்களின் நடவடிக்கைகள் உட்படுவது முறையல்ல.

மேலும், மரண வீடுகளில் குறிப்பாக மையத்தை எடுக்கும் நேரம் அண்மிக்கும் போது தான் அக்கம்பக்கம் உள்ளவர்கள் உட்பட அனைவரும் வந்து குவிவார்கள். சிறு குழந்தைகளையும் பிள்ளைகளையும் அழைத்து வருவதும், சன நெரிசலில் அவதிப்படுவதும் வழமையான ஒன்றாகவே உள்ளது. அத்துடன் எல்லா வீடுகளும் பெரும் தொகையான மக்கள் இருப்பதற்கு போதுமானதாக இருப்பதில்லை. எனவே அந்த வீட்டில் உள்ளவர்களுக்கு அசௌகரியம் ஏற்படுத்துவதாக அமைகிறது. மையத்தைப் பார்ப்பதற்கு முண்டியடித்துக் கொண்டு செல்ல வேண்டிய நிலை ஏற்படுகின்றது. குடும்பத்தினருக்குக் கூட மையத்தை இறுதியாக பார்க்க முடியாத அளவு சன நெருக்கம் ஏற்படுகின்றது. இந்த மரண வீடுகளுக்கு வரும் பெண்கள் இடத்துக்கு பொருத்தமான விதத்தில் நடந்து கொள்வதில்லை. தேவையற்ற கதைகளும், விசாரிப்புக்களும் வீடு முழுவதும் ஆக்கிரமித்துக் கொண்டு கண்ட கண்ட இடங்களில் எல்லாம் கூடி பொருத்தமற்ற முறையில் கதைப்பதும், சத்தமிடுவதும் மையத்தை சென்று பார்ப்பதற்கு உரிய முறையில் ஒழுங்கமைப்பு இல்லாமல் ஆக்கப்படுகின்றது. இவ்விடயங்களில் கல்வி கற்ற, தொழில் புரியும் பெண்களும் விதிவிலக்கல்ல. ஆனால் அவர்கள் தான் இவ்வாறான செயற்பாடுகளிலிருந்து ஏனைய பெண்களை வழிநடத்த வேண்டியவர்களாக உள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

அடுத்த விடயம் பெண்களின் உடைகள். திருமண வீட்டுக்கும், மரண வீட்டுக்கும் வித்தியாசம் தெரியாத பெண்கள் அதிமாகவே உள்ளனர். மரண வீடுகளுக்கு மிக எளிமையாக பொருத்தமான ஆடை அணிகலன்களை அணிய வேண்டும் என்பதை எமது பெண்களில் பெரும்பாலானவர்கள் உணராதவர்களாகவே உள்ளனர்.

ஏனைய சமூகங்களில் மரண வீடுகளில் பெண்களின் வகிபங்கும், எமது மரண வீடுகளின் பெண்களின் வகிபங்கிற்கும் இடையே மிகுந்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேறுபாடுகள் உள்ளதை அவதானிக்க முடிகிறது. எனவே சமூகம் சார்ந்த வைபவங்களை ஒழுங்குபடுத்துவதில் ஏனைய சமூகப் பெண்களைப் போன்று எமது முஸ்லிம் பெண்களும் குறிப்பாக, கல்வி கற்ற மற்றும் தொழில் புரியும் பெண்கள் ஏனைய பெண்களை வழிநடத்துவதில் முன்நிற்க வேண்டும். பெண்களுக்கான கூட்டங்கள், அமைப்புக்கள் என்பன இயல்பாகவே எமது சமூகத்தில் அரிதாக உள்ளதுடன், அவற்றில் எமது பெண்கள் ஈடுபாடு காட்டுவது மிகக் குறைவு.

எனவே, எமது சகோதரர்கள் தமது குடும்பங்களில் பெண்களை சமூகமயப்படுத்த முன்வர வேண்டும். அவர்களை ஊக்குவிக்க வேண்டும். இவ்வாறான அமைப்புக்களில் குறிப்பாக எம் மத்தியில் சமயத்துடன் சார்ந்த இயக்கங்களில் உள்ள பெண்கள் ஆங்காங்கே பெண்களின் ஒன்றுகூடலை நடத்தும் போதாவது இவ்வாறான விடயங்கள் தொடர்பான தெளிவுபடுத்தல்களை செய்ய வேண்டும்.

A WASTED LIFE, WITHOUT THE OBEDIENCE OF ALLAH, IS THE SADDEST FORM OF SUICIDE.

*With Best Wishes From...*

**KNOWLEDGE PARK**
அறிவுப் பூங்கா
Marikkar Street, Puttalam
(Infront of HUDHA Mosque)

P/Zahira Primary School
P/Zainab Primary School
ஆசிரியர்களின் வழிகாட்டலின் கீழ்
Primary Subject Grade 1 - 3
Scholarships Grade 4- 5
ஆகிய வகுப்புகளுக்கு பாடங்கள் கற்பிக்கப்படும்

Our Grade 6 - O/L Subjects
* Tamil * Maths * Science * History * English
* Geog & Civics * Art * Health Science * Sinhala
* Arabic * Busi & Accunt * ICT * Tamil Lit.

Our A/L Subjects
* Tamil * Maths * Science * History * English
* Geog & Civics * Art * Health Science * Sinhala
* Arabic * Busi & Accunt * ICT * Tamil Lit.

Special Maths Classes

இலகுவான முறையில் ஆங்கிலம் கற்றுக் கொள்ளலாம்

A/L எழுதியவர்களுக்கும் A/L எழுதவுள்ள மாணவர்களுக்குமான Revision Classes

2014 A/L எழுதவுள்ள மாணவர்களுக்கு Individual Class & Group Class செய்து தரப்படும்

O/L, A/L மாணவர்களுக்கான AAT Classes நடைபெறுகிறது. (Stage 1,2,3)

Contact Numbers: 0714405352, 0714405383, 0783243730



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமய நோக்கில் ஆய்வியல்

## இஸ்லாம் சமயத்தை சிறப்பாதாரமாகக் கொண்ட ஆய்வு

எஸ்.எம். தமீம்
உதவி விரிவுரையாளர்,
அறபு மற்றும் இஸ்லாமிய நாகரீகத்துறை,
பேராதனைப் பல்கலைக்கழகம்.

**அறிமுகம்.**

இஸ்லாம் ஓர் ஆய்வறிவியல் மார்க்கமாகும். அது மனித சமூகத்திற்கு வழங்கிய தனது போதனையின் ஆரம்பத்தையே 'ஆய்வு செய்வீராக' என்ற வாசகத்தோடு ஆரம்பித்துள்ளது. அல்குர்ஆனில் ஆய்வு பற்றி எடுத்துக் கூறும் சுமார் 750 இற்கும் மேற்பட்ட வசனங்கள் காணப்படுகின்றன. இஸ்லாம் வழங்கிய இந்தப் பின்புலமே மத்தியகால முஸ்லிம்கள் சன்மார்க்கக் கலைகளில் மாத்திரமின்றி அறிவியல், அழகியல் கலைகளிலும் தமது ஆர்வத்தினைச் செலுத்தி, மனித நாகரீக மேம்பாட்டிற்கு காத்திரமான பங்களிப்பை வழங்க வழி வகுத்தது. அலி இப்னு ஸீனா முதல் ஸ்பெய்னில் இப்னு நபீஸ் வரை நீண்டு செல்லும் முஸ்லிம் அறிஞர்களுள் பலர் தமது ஆய்வு முயற்சிகளினூடாக மனித சமூகத்திற்கு காத்திரமாகப் பங்களிப்புச் செய்துள்ளனர். அத்தோடு நவீன காலத்தில் ஏற்பட்டுள்ள அறிவியல் முன்னேற்றத்திற்கான அடித்தளத்தையும் அவர்களே இட்டனர். இது பற்றி ரொபர்ட் பிரிபோல்ட் (Robert Briffault) தனது 'The Making of Humanity' என்ற நூலில் "அரேபியர்களது பங்களிப்பு இல்லையெனில் நவீன மேற்கு ஐரோப்பிய நாகரிகம் ஒரு போதும் வளர்ச்சியடைந்திருக்க மாட்டாது. ஐரோப்பாவில் ஏற்பட்ட ஒவ்வொரு துறையினது விருத்தியிலும் முஸ்லிம்களது காத்திரமான பங்களிப்புக் காணப்படுகின்றது" எனக் குறிப்பிடுகின்றார்.

மேற்கத்தேய தத்துவத்தின் வரலாறு (History of Western Philosophy) எனும் நூலில் பெர்ட்ரண்ட் ரஸல் "அரேபியர்களே பரிசோதனை முறையின் மூலகர்த்தாக்களாக விளங்கினர்" எனக் குறிப்பிடுகின்றார். உண்மையில் கிரேக்கர்கள் முன்வைத்த சில கோட்பாட்டு விதிகளை விருத்தி செய்து, பரிசோதனை அடிப்படையில் முடிவுகளை முன்வைத்தவர்கள் முஸ்லிம்களே.

விஞ்ஞானம் என்ற போர்வையில் ஐரோப்பாவில் ஏற்பட்ட மாற்றங்கள் அனைத்திற்கும் அடிப்படை பரிசோதனை, அவதானிப்பு முதலான பல்வேறு முறைகளை அரேபியர் விருத்தி செய்ததன் விளைவே ஆகும். இதனாலேயே ஐரோப்பிய வரலாற்றில் இருண்ட காலம் என அழைக்கப்பட்ட கி.பி 6 ஆம் நூற்றாண்டு முதல் 10 ஆம் நூற்றாண்டு வரை உள்ள காலப் பகுதியில் இஸ்லாம் முழு உலகத்திலும் அறிவொளி பரப்பிக் கொண்டிருந்தது. சிசிலி மற்றும் ஸ்பெய்ன் வழியாக ஐரோப்பாவில் நுழைந்த இஸ்லாமிய நாகரீகம் அங்கு பெருந்தாக்கத்தை ஏற்படுத்தியது. மேற்கு ஐரோப்பிய மாணவர்கள் ஸ்பெய்னில் உள்ள இஸ்லாமியப் பல்கலைக்கழகங்களில் பயிலத் தொடங்கினர். கல்வியில் முஸ்லிம்கள் அவர்களை விட முன்னேற்றம் கண்டிருந்தனர் என்பதை உணர்ந்த ஐரேபாப்பியர்கள் முஸ்லிம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்வியியலாளர்களால் எழுதப்பட்ட நூல்களை இலத்தீன் மொழிக்கு மொழி பெயர்ப்புச் செய்தனர்.

ஐரோப்பிய மறுமலர்ச்சியைத் தூண்டிய பண்டைய கிரேக்க, இலத்தீன் இலக்கியம் முஸ்லிம் நூலகங்களிலிருந்த அரபுக் கையெழுத்துப் பிரதிகளின் மொழிபெயர்ப்புக்கள் மூலம் பெறப்பட்டது என்று Encyclopedia of Britannica கூறுகின்றது. இன்றைய நவீன காலத்தில் குஸ்டாவ் லிபான், ரொபர்ட் பிரிபோல்ட், ஜே.எம் ரொபட், முன்ட்கே மெரிவாட் முதலான அறிஞர்கள் ஐரோப்பாவின் நவீன அறிவியல் வளர்ச்சிக்கு வழிகோலியது அரேபியர்களின் ஆய்வு மற்றும் கண்டுபிடிப்புக்களே என்று சந்தேகத்திற்கு இடமின்றி ஏற்றுக் கொண்டுள்ளனர்.

இந்த வகையில் இஸ்லாம் அறிவுத் துறைக்கும் ஆய்விற்கும் அதிக பங்களிப்பை வழங்கியது. மத்திய கால அறிவியற் துறை விருத்தியில் முஸ்லிம்களே முன்னோடிகளாக விளங்கினர்.

**இஸ்லாத்தில் ஆய்வின் முக்கியத்துவம்.**

"அனைத்து முன்னேற்றங்களும் ஆய்ந்தறிவதிலேயே தங்கியுள்ளது. அளவு கடந்த தன்னம்பிக்கையை விட சந்தேகம் சிறப்பானது. சந்தேகமே ஆய்வுக்கு இட்டுச் செல்கின்றது. ஆய்வே கண்டு பிடிப்புகளுக்கு வழி வகுக்கின்றது" என்ற ஹட்சன் மெக்ஸிம் (Hudson Maxim) என்பவரது கூற்று ஆய்வின் முக்கியத்துவத்தினை எடுத்துக் காட்டுகின்றது. இதற்கு சற்றும் சளைக்காத வகையில் இஸ்லாம் ஆய்வினைத் தூண்டுவதுடன் அதற்குத் தேவையான வழிகாட்டல்களை வழங்கி அதனை ஊக்குவிக்கின்றது.

இஸ்லாமிய ஆய்வு முறையானது இறைத் தூதை அடிப்படையாகக் கொண்டது. இஸ்லாம் அறிவை பிரதான அடிப்படையாக ஆக்கி அதனடிப்படையில் செயற்படவே ஊக்குவிக்கின்றது. "அல்லாஹ்வைத் தவிர எக்கடவுள்களும் இல்லை என்பதை அறிந்து, பின்னர் உமது பாவத்திற்கு பிழை பொறுக்கத் தேடுவீராக!" (47:19) என்ற திருவசனம் அறிவிற்கு முதன்மை கொடுத்து அதனடிப்படையில் செயற்படுவதை வலியுறுத்துகின்றது. அறியாமையின் அடிப்படையில் செயற்படுவதை கண்டிக்கின்றது. "(நபியே!) எதைப் பற்றி உமக்கு தீர்க்கமான அறிவில்லையோ அதை நீர் பின் தொடராதீர். (ஏனெனில்) நிச்சயமாக, செவி, பார்வை, இதயம் (ஆகிய) இவை ஒவ்வொன்றும் அதைப் பற்றி விசாரிக்கப்படக் கூடியதாக இருக்கின்றது "(17:36) மேற்கூறப்பட்ட வகையில் மனிதப் புலன்களால் அடைய முடியுமான அறிவு யதார்த்தமானதாக இருக்க வேண்டும் என அல்குர்ஆன் வலியுறுத்துவதுடன் சந்தேகத்திற்கிடமான விடயங்களைப் பின்பற்றினால் அது பற்றிய இறைவனது விசாரணைக்கு பதில் கூறவேண்டியேற்படும் என்பதை எடுத்துக் கூறுகின்றது.

இஸ்லாமிய சமூகம் ஆய்வு மனப்பாங்கினைக் கொண்டிருக்க வேண்டும் என்ற அடிப்படையிலேயே அல்குர்ஆனின் முதன்முதலில் இறங்கிய வசனமே ஆய்வு செய்தல் பற்றிப் பேசுகின்றது. அது மனித சமூகத்திற்கு முதன் முதலில் முன்வைக்கும் விடயம் மனித கரு வளர்ச்சி சம்பந்தமானது. நவீன உலகில் கரு வளர்ச்சி பற்றியும் அதனோடு இணைந்த 'குளோனிங்' முறையிலான மனித உருவாக்கம், செயற்கைக் கருத்தரிப்பு முதலான அம்சங்கள் தொடர்பாக பல்வேறு ஆய்வுகள் இன்னும் முழுமை பெறாத நிலையில் திருக்குர்ஆன் தனது முதற் போதனையிலேயே கருவளர்ச்சி பற்றி பேசுவது இஸ்லாத்தின் ஆய்வு மனப்பாங்கை சிறப்பாக எடுத்துக் காட்டுகின்றது.

இஸ்லாம் சிலை வணக்கத்திற்குத் தடை விதித்ததன் யதார்த்தம் யாதெனில் அச்சிலைகள் விமர்சன நோக்கிலிருந்து


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விடுவிக்கப்பட்டதனாலாகும். உண்மையில் சிலைகள் புனிதப் பொருள்களாக மதிக்கப்படும் போது அவற்றின் பலவீனங்கள் மறைக்கப்பட்டு, ஆய்வு நோக்கிலிருந்து தவிர்க்கப்படுகின்றது. இச்சமயம் மனிதன் அச்சிலைகளை ஆராய்வின்றி பின்பற்ற விளைகின்றான். இதனால் இஸ்லாம் சிலை வணக்கத்தைத் தடை செய்து, அவற்றை ஆய்வு செய்யுமாறு ஏவுகின்றது. நபி இப்றாஹீம் (அலை) அவர்கள் சிலைகள் தொடர்பாகக் கொண்டிருந்த ஆய்வு நோக்கினை எமக்கும் எடுத்துக் காட்டி, எந்த ஒரு விடயமும் ஆய்வு மனப்பாங்குடன் அணுகப்படுதல் வேண்டும் என அல்குர்ஆன் வலியுறுத்துகின்றது.

அல்குர்ஆனியப் போதனைகளை நோக்கும் போது ஒரு விடயத்தை ஆராய்வின்றி ஏற்றுக் கொள்வது பாரிய சமூகத் தீங்கை ஏற்படுத்தும் எனக் குறிப்பிடுகின்றது. திருக் குர்ஆனில் "விசுவாசிகளே! தீயவன் உங்களிடம் ஏதேனும் செய்தியைக் கொண்டு வந்தால் (அதனை உடனே அங்கீகரித்து) அறியாமையால் (குற்றமற்ற) ஒரு சமூகத்தாருக்கு நீங்கள் தீங்கிழைத்து விடாதிருப்பதற்காக தெளிபடுத்திக் கொள்ளுங்கள். பின்னர் நீங்கள் செய்தவைகளைப் பற்றி நீங்கள் கைசேதப்படக் கூடியவர்களாக ஆகிவிடுவீர்கள்" (49:06) செய்தியொன்று பரப்பப்படும் போது அதன் உண்மைத் தன்மையினைத் தெளிபடுத்திக் கொள்ள வேண்டும். அதன் பின்னரே அதனடிப்படையில் செயற்படுவதா? இல்லையா? என்பதைத் தீர்மானித்துக் கொள்ள வேண்டும் என மேற்படி வசனம் குறிப்பிடுகின்றது.

"நீங்கள் உண்மை சொல்பவர்களாக இருந்தால் உங்களுடைய இவ்வார்த்தைக்குரிய ஆதாரத்தைக் கொண்டு வாருங்கள்" (02:111)

என்ற அல்குர்ஆனின் கட்டளை எவ்விடயத்தையும் முன்வைக்கும் போதும் ஆதாரத்துடன் முன்வைக்குமாறு கூறுகின்றது. எனவே அறிவு என்பது வெறும் ஊகங்கள், அனுமானங்கள் அடிப்படையில் அமையாது உறுதியான ஆதாரங்களின் அடிப்படையில் அமைய வேண்டும் என இஸ்லாம் வலியுறுத்துகின்றது.

"எலும்புகள் உக்கி மண்ணாய்ப் போன பின் யார் அவற்றை மீண்டும் மனிதனாக எழுப்புவான்? என மனிதன் வினவுகின்றான். நபியே கூறுங்கள் முதலாவது முறை அவற்றை உருவாக்கியவனே திரும்பவும் அவற்றிற்கு உயிர் கொடுப்பான்" (37:78-79) என்ற வசனம் ஆய்வுப் பிரச்சினையொன்றை முன்வைத்து, அதற்கு விடை காண ஊக்குவிக்கின்றது. இஸ்லாம் ஆய்வினை வலியுறுத்தி பிரதான இரு சட்ட மூலாதாரங்களுக்குப் புறம்பாக இன்னும் பல சட்ட முறைமைகளுக்கு வழிகாட்டியுள்ளது. இதன் பிரதான நோக்கம் மனித சமூகத்தில் தோன்றும் பிரச்சினைகள் ஆய்வு செய்யப்பட்டு அவற்றிற்கு தீர்வுகள் முன்வைக்கப்பட வேண்டும் என்பதேயாகும். இதனடிப்படையிலேயே இஜ்திஹாத் வலியுறுத்தப்பட்ட ஒரு அம்சமாக இஸ்லாத்தில் கூறப்பட்டுள்ளது. கியாஸ், மஸ்லஹா அல் முர்ஸலா, இஸ்திஹ்ஸான், இஸ்திஸ்ஹாப், உர்ப், இஜ்மா, முதலான சட்டம் பெறும் முறைகள் இவ்வகையிலே இஸ்லாத்தில் முக்கியத்துவம் பெறுகின்றன.

அல்குர்ஆன் மனிதனுக்கு நேர்வழி காட்ட வேண்டும் என்ற இலட்சியத்தினடியாகச் செயற்பட்டே தனது வழிகாட்டல்களை முன்வைக்கின்றது. என்றாலும் புவியியல், வானவியல், தாவரவியல், விலங்கியல் போன்ற துறைகள் பற்றிப் பேசும் விஞ்ஞான நூலாக அல்குர்ஆன் இருக்காவிட்டாலும் அவற்றைக் குறிப்பிடுவதன் நோக்கம் அத்துறைகளில் ஆய்வுகள் மூலம் புதிய பிரபஞ்ச உண்மைகள் முன்வைக்கப்பட்டு மனித நாகரிக விருத்திக்குப் பங்களிப்புச் செய்ய வேண்டும் என்பதாகும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆய்வில் ஈடுபடுவது ஒரு இபாதத் எனவும் அது நற்கூலிகளைப் பெற்றுத் தரும் எனக் கூறுவது இஸ்லாம் ஆய்விற்கு வழங்கும் முக்கியத்துவத்தினை எடுத்துக் காட்டப் போதுமானது. "இஜ்திஹாத் முயற்சியில் ஈடுபடும் ஒருவர் சரியான முடிவை முன்வைத்தால் இரண்டு நன்மைகளும் தவறான முடிவை முன்வைத்தால் (இம்முயற்சியில்) ஈடுபட்டமைக்காக ஒரு நன்மையும் உண்டு" (புகாரி) என்ற ஹதீஸ் ஆய்வாளர்களை ஊக்குவிக்கின்றது.

மத்தியகாலப் பகுதியில் கிறிஸ்தவ ஐரோப்பா அறிவியல் ஆய்வுகளுக்கு தடை விதித்து, மனித உழைப்பிற்கும் அவனால் முன்வைக்கப்படும் புதிய சிந்தனைகளுக்கும் பாராட்டுத் தராமல் அதனை மட்டந்தட்டுவதிலேயே குறியாக இருந்தது. இதனால் சோக்ரடீஸ் முதல் கலிலியோ கலிலி வரை அனைவரும் ஆய்வுக் கருத்துக்களை முன்வைத்தமைக்காக தண்டிக்கப்பட்ட வரலாறு நோக்கத்தக்கது. இதே காலப்பகுதியில் இஸ்லாம் ஆய்வு மனப்பாங்கினைத் தோற்றுவித்து, அதனை ஒரு வணக்கமாக அறிவித்தமை அது ஆய்வு மனப்பாங்கிற்கு வழங்கிய மாபெரும் அங்கீகாரமேயன்றி வேறில்லை. கிறிஸ்தவம் ஆய்வு முயற்சிகளை தடைசெய்ய, இஸ்லாம் அதற்கு ஊக்குவிப்புத் தருகின்றது எனின் இஸ்லாம் இதற்கு வழங்கியுள்ள முக்கியத்துவத்தினைப் புரிந்து கொள்ள இது ஒன்று மாத்திரமே போதுமானது.

அதேபோல் இஸ்லாமிய சட்டக்கலையுடன் தொடர்புடைய 'உஸுலுல் பிக்ஹ்' எனும் கலையைப் பொருத்தளவில் அல் இஸ்திக்ரா எனும் பகுத்தறி முறையினையும் அல் இஸ்தித்லால் எனப்படும் தொகுத்தறி முறையினையும் அறிமுகப்படுத்தி அல்குர்ஆன் சுன்னாவின் அடிப்படையில் சமகாலப் பிரச்சினைகளுக்கு தீர்வு பெற வழிகாட்டல் வழங்கப்பட்டுள்ளது. அத்தோடு ஹதீஸ் கலை அறிஞர்கள் 'ஸனத்' எனும் அறிவிப்பாளர் வரிசை மதன் எனப்படும் உள்ளடக்கம் பற்றிய உண்மைத் தன்மையினை அறிவதற்க பல ஆய்வு முறைகளை வகுத்துள்ளனர். அவ்வாறே இஸ்லாமிய வரலாறுகள் ஸனத் அடிப்படையில் பதிவு செய்யப்பட்டுள்ளமை ஏனைய உலக வரலாறுகளை விட இவ்வரலாறு நம்பகமானதும் ஆதாரபூர்வமானதும் என்பதை எடுத்துக் காட்டுகின்றது. இவ்வாறு பல்வேறு வழிமுறைகளில் இஸ்லாத்தில் ஆய்வின் முக்கியத்துவம் வலியுறுத்துப்பட்டுள்ளது.

## இஸ்லாத்தில் ஆய்வுக்கான வழிகாட்டல்கள்

ஆய்வு பற்றிய அல்குர்ஆனின் வழிகாட்டலாது மெய்யியல் சிந்தனைகளில் குறிப்பாக கிரேக்க மெய்யியல் சித்தாந்தங்களிலிருந்து வேறுபடுவதனைக் காணலாம். கிரேக்க மெய்யியல் தத்துவங்களானது கோட்பாட்டளவில் நிரூபிக்கப்படக்கூடிய, மெய்மைத் தத்துவங்களாக விளங்க இஸ்லாத்தினது ஆய்வு வழிகாட்டல்கள் அவை நடைமுறைச் சாத்தியமான பின்பற்றத் தக்க மெய்மைகளாக விளங்கின.

இஸ்லாம் வழங்கும் ஆய்விற்கான வழிகாட்டல்கள் இரு வகைத் தன்மைகளைக் கொண்டுள்ளது.

- ஆய்வுக்குத் தடையாகவுள்ள அம்சங்களை நீக்கியமை
- ஆய்வுக்கு வழிகாட்டியமை

### ஆய்வுக்குத் தடையாகவுள்ள அம்சங்களை நீக்கியமை:-

அல்குர்ஆன் ஆய்வு முயற்சிகளுக்குத் தடையாகவுள்ள பல்வேறு அம்சங்களைச் சுட்டிக் காட்டுகின்றது. அவற்றுள்,

**நிர்ப்பந்தம் (இக்ராஹ்)**:- மனித செயற்சுதந்திரம், ஆய்வு மனப்பாங்கிற்கு எதிரான எத்தகைய தடையும் இஸ்லாத்தில் இல்லை. இந்த சுதந்திர பூமியில் மனிதன் நிர்ப்பந்தமின்றி சுயமாக


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிந்திக்கவும், ஆய்வு செய்வதற்குமுரிய சந்தர்ப்பம் அவனுக்கு வழங்கப்பட்டுள்ளது. "சத்திய (இஸ்லாம்) மார்க்கத்தில் எத்தகைய நிர்ப்பந்தமுமில்லை. (ஏனெனில்) வழிகேட்டிலிருந்து நேர்வழி திட்டமாகத் தெளிவாகி விட்டது" (2:256) என்ற திருவசனம் இஸ்லாம் நிர்ப்பந்தத்தை ஓர் ஊடகமாகப் பயன்படுத்தி மனித ஆய்வுச் சுதந்திரத்தை மறுக்க முற்படவில்லை என்பதை எடுத்துக் காட்டுகின்றது.

**ஆராய்வின்றிப் பின்பற்றல் (தக்லீத்):-** இஸ்லாத்தில் ஆராய்வின்றிப் பின்பற்றுதல் முற்றாகத் தடை செய்யப்பட்டுள்ளது. மனிதன் ஆய்வு மனப்பாங்குடன் செயற்பட வேண்டும் என்பதற்காக தக்லீதை கண்டிக்கின்ற பல்வேறு திருவசனங்களை திருக்குர்ஆனில் காண முடியும். "அல்லாஹ் இறக்கி வைத்த வேதத்தின் பாலும் அவனுடைய இத்தூதரின்பாலும் வாருங்கள் என அவர்களுக்குக் கூறப்பட்டால் எங்களுடைய மூதாதையர்களை எதன் மீதிருக்க நாங்கள் கண்டோமோ அதுவே (நாங்கள் பின்பற்ற) எங்களுக்குப் போதும் எனக் கூறுகின்றனர். (5:104) மேற்கூறப்பட்ட வசனம் ஆராய்வின்றிப் பின்பற்றும் மனப்பாங்கை கண்டிப்பதை அவதானிக்கலாம்.

**மனோ இச்சை (ஹவா):-** மனோ இச்சையைப் பின்பற்றுதல் என்பது அல்குர்ஆனில் கண்டிக்கப்பட்ட மற்றொரு ஆய்வு மனப்பாங்கிற்கு எதிரான சிந்தனையாகும். "இன்னும் நீங்கள் நியாயம் வழங்குவதில் நீங்கள் உங்களது மனோ இச்சையைப் பின்பற்றாதீர்கள்"(4:135) என்ற திருவசனம் முற்சாய்வு எண்ணங்களை கண்டிப்பதை அவதானிக்க முடிகின்றது.

**தவறான எண்ணங்கள் (ழுன்):-** ழுன் என்பது உறுதியற்ற, தவறான, சந்தேகத்திற்கிடமான எண்ணங்களைக் குறிப்பிடுகின்றது. ஆய்வு மனப்பாங்கிற்கு எதிரான இச்சிந்தனையை அல்குர்ஆன் கண்டிப்பதை நோக்கலாம். மேலும் அவர்களில் பெரும்பாலோர், (அவசியமில்லாத) எண்ணத்தையே அன்றி (வேறு எதையும்) பின்பற்றுவதில்லை. நிச்சயமாக (அவசியமில்லாத) எண்ணம் உண்மையை அறிவதற்கு ஒரு சிறிதும் பயன்படாது. (10:36)

**சூனியம் அல்லது சாகசம் (சிஹ்ர்):-** அல்குர்ஆன் சூனியத்தையோ அல்லது சாகசச் செயல்களையோ உண்மையை அறிவதற்கான அல்லது அளவிடுவதற்கான எடுகோலாகப் பயன்படுத்தவில்லை. இவை ஆபத்தான, தவறான சிந்தனையொன்றாக அல்குர்னில் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளதை அவதானிக்கலாம். "மேலும் அல்லாஹ்வின் கட்டளையின்றி அதைக் கொண்டு அவர்கள் ஒருவருக்குமே தீங்கிழைக்கக் கூடியவர்களாக இல்லை. (2:102)

இவ்வாறு இஸ்லாம் ஆய்விற்கும், மனித சிந்தனைக்கும் தடையாகவுள்ள அம்சங்களைக் கண்டிப்பதனூடாக ஆய்வு பற்றிய சிந்தனையை வலியுறுத்துவதை அவதானிக்கலாம்.

## ஆய்வுக்கு வழிகாட்டியமை

மேற்கூறப்பட்ட ஆய்வுக்குத் தடையாக உள்ள அம்சங்களைக் கண்டித்த இஸ்லாம் பிரபஞ்சத்தையும் அதில் வாழும் மனிதனையும் ஆய்வு செய்து மனித நலனுக்கு பங்களிப்புச் செய்யுமாறு வலியுறுத்துகின்றது. ஆய்வு மனப்பாங்கினை விருத்தி செய்யும் வகையிலான பல்வேறு வழிகாட்டுதல்களையும் அது முன்வைக்கின்றது.

அல்குர்ஆனின் அநேக வசனங்கள் சிந்திக்குமாறும் அதனடிப்படையிலேயே செயற்படுமாறும் வலியுறுத்துகின்றது. "குர்ஆனாகிய இது பாக்கியமிக்க வேதமாகும். இதனுடைய வசனங்களை அவர்கள் சிந்திப்பதற்காகவும் அறிவுடையோர் நல்லுபதேசம் பெறுவதற்காகவும் நாம் இதை உம்மீது இறக்கி வைத்தோம்" (38:29)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவர்கள் இந்தக் குர்ஆனை ஆராய்ந்து பார்க்க மாட்டார்களா? அல்லது (அவர்களுடைய) இதயங்கள் மீது அவற்றிற்குரிய பூட்டுக்கள் போடப்பட்டு இருக்கின்றனவா? (47:24) போன்ற திருவசனங்கள் இதற்கு சிறந்த எடுத்துக் காட்டாகும். அல்குர்ஆன் ஆய்வு பற்றிய சிந்தனையை ஊக்குவிக்க பல்வேறு முறைமைகளை அறிமுகப்படுத்துவதைக் காணலாம்.

**அவதானிப்பு முறை (Observation):** அல்குர்ஆன் ஆய்வுச் செயன்முறையை ஊக்குவிக்க அவதானிப்பு முறையை கையாளுகின்றது. இதற்கான வழி-காட்டல்கள் அல்குர்ஆனின் அநேக இடங்களில் காணப்படுகின்றன. "ஆகவே மனிதன் தன்னுடைய உணவின் பால் பார்க்கவும். நிச்சயமாக நாமே நீரை தாரளமாகப் பொழியச் செய்தோம். பின்னர் பூமியை நன்கு பிளக்கச் செய்தோம். பின்னர் அதிலிருந்து தானியங்களை முளைக்கச் செய்கின்-றோம்"(80:24-29)

"வானங்களிலும் பூமியிலும் என்ன இருக்கின்றன என்பதை கவனித்துப் பாருங்கள் எனக் கூறுவீராக. எனினும் விசுவாசம் கொள்ளாதவர்களான சமூகத்-தாருக்கு அத்தாட்சிகளும் எச்சரிக்கை-களும் யாதொரு பயனும் அளிக்க மாட்டாது". (10:101)

**மனித அனுபவம்:-** இவ்வழிகாட்டலும் மனித அவதானத்துடனும் தொடர்புபட்டுக் காணப்படுகின்றது. ஒரு மனிதன் தனது வாழ்வில் பல்வேறு அனுபவங்களைப் பெறுகின்றான். அவற்றில் அவனது மரண வேளை மிக முக்கியமான தருணமாகும். அல்லாஹ்விடமிருந்து பூரணமாக விடு-பட்டவனாக அவன் காணப்பட்டால் அச்சந்தர்ப்பத்திலிருந்து அவனை அவனது குடும்பத்தவர்கள், அவனது உறவினர்கள் சொந்தங்கள் காப்பாற்றிட முடியும். எனினும் உண்மை அதுவல்ல. எனவே அவனது இத்தகைய அனுபவத்தை எடுத்துக் காட்டி ஆய்வு செய்யுமாறு அல்குர்ஆன் தூண்டுகின்றது. "நீங்கள் உண்மையானவர்களாக இரு-ந்தால் (அவருடைய உயிரானதை) நீங்கள் அவரின் பால் மீள-வைத்திருக்கலாமே? (56:83) என அல்குர்ஆன் குறிப்பிடுவதன் மூலம் மரணித்த ஒருவருடைய உயிரை எவராலும் மீட்டித் தர முடியாது என்ற உண்மையை மனித சிந்தனைக்கு விருந்தாக்குகின்றது.

அவ்வாறே கடலில் தற்செயலாக ஆபத்தில் மாட்டிக் கொண்டவனுடைய நிலைப்பாட்டினை எடுத்துக் கூறி அவனைக் காப்பது யார்? என்ற வினாவை எழுப்பி மனிதனது அனுபவத்-தோடு இஸ்லாம் சங்கமித்து அவனை சிந்திக்கத் தூண்டுகின்றது.

**மனித விருப்பம்:-** மனிதன் விரும்பும் விடயங்களை எடுத்துக் காட்டுவதனூடாக அல்குர்ஆன் ஆய்வு மனப்பாங்கினை ஊக்குவிக்கின்றது. "மனிதர்களே பூமியில் உள்ளவற்றிலிருந்து அனுமதிக்கப்பட்ட நல்லவற்றை உண்ணுங்கள் மேலும் செய்தானின் அடிச்சுவடுகளை பின்பற்றா-தீர்கள். நிச்சயமாக அவன் உங்களுக்கு பகிரங்கமான விரோதியாவான்".(2:168)

It's no more important to think that "what happened to the world?" because the answer is crystal clear. So here the question is "Why has this happened to the world?" When analyzing this question deeply, it's clear that it's not fair to attribute the whole blame to a particular party or group. Because, these issues are not new to the world and didn't happen suddenly, it's just now the world faces its extreme level. But we can say that the So-called Medias such as internet, television, films etc…have contributed a significant part. These have made several activities as the life's ultimate achievements of people that they earlier did as their leisure activities.

The central for this idea is none other than money. The Medias identified, for what people would spend their money, what their weaknesses



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

etc… They show those activities must be involved in our life. Failure to achieve these would be a waste of life. To promote this idea further they have created popular actors, actresses, sports people, poets etc... This has led to People change their role that must be played by them in the world to make it better. Most intellectuals are motivated to exploit their knowledge on joy and fun. Valuable resources such as time, money, and human are allocated just for enjoyment. Millions and billions of dollars are spending for a soccer match; people are running out of time because of the movies and concerts. Mean time people in Somalia and Ethiopia are dying without even a breakfast.

So it's clear that there is a problem, now time to think 'what is the solution?', Is it about involving everyone in the social and welfare activities? No it's not. But Art and sports must be there in the human life. If not the life would be bored. But the issue is that these have gone beyond their limit. NGOs, socially conscious writers, reporters, social reformers etc… must consider in balancing the social life and happiness.

They must promote that the real happiness is not just a little fun, it's about helping others, supporting poor, involving in family life, educating the community, discipline, order, ethics etc… and also it's the people's duty to be aware of not to be exploited by the socially irresponsible medias and people such as almost all the films all over the world, advertisements, musicians, actors and actress. This kind of a reform will never be a one off activity, primarily majority or even minority of the community must acknowledge the issue, and then it must be planned strategically not on an ad hoc basis. Groups must be come together; religious groups can be well used in this; identify the interrelated parties who exploit the people and defeat them.

'Defeating them' doesn't mean calling for a military war, but the war should be a revolutionary war- a media to media war-. It's all about making people aware of this issue and Remove such Medias' power. For this purpose we can use all the technological improvements, channels (Internet, newspapers and social networks) to reach people. If Lebanese and Syrians can protest against their governments, why can't we defeat these Medias?!

அழகைப் பற்றி கனவு
காணாதீர்கள், அது உங்கள்
கடமையை பாழாக்கி விடும்.
கடமையை பற்றி கனவு
காணுங்கள் அது உங்கள்
வாழ்க்கையை அழகாக்கும்.
-அப்துல் கலாம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உலகப் பால்உற்பத்தி நடவடிக்கைகளும்
## தொழில்நுட்ப சாதனங்களின் தாக்கங்களும்

எம். ஜே. மொஹமட் ஜப்ரான்
விடுகை வருடம்,
மெய்யியல் மற்றும் உளவியல் துறை,
பேராதனைப் பல்கலைக்கழகம்.

இன்று மனிதனின் உணவுத் தேவையைப் பூர்த்தி செய்து கொள்ளும் ஒரு விவசாய நடவடிக்கைகளில் பாற்பண்ணையும் ஒன்றாகும். சுமார் 1960 களில் இருந்து இவ் நடவடிக்கை சிறப்பாக இடம் பெற்ற போதிலும் 18ம் நூற்றாண்டு காலப்பகுதியில் ஏற்பட்ட தொழில்நுட்ப வளர்ச்சி மற்றும் 19ம் நூற்றாண்டின் நகராக்க விருத்தி இந்நடவடிக்கையின் அபிவிருத்தியில் பாரிய பங்களிப்பை செய்துள்ளதை அவதானிக்க முடியும். பால் உற்பத்தி பொருட்கள் (Dairy Product) என்பது பாலூட்டிகளிலிருந்து பெறப்படும் உணவுப் பொருட்களாக வரையறுக்கப்படுகின்றது. இந்த பாற்பண்ணை நடடிக்கைகளுக்காக வேண்டி மாடுகள் மட்டுமன்றி ஆடுகள், செம்மறி ஆடுகள், ஒட்டகங்கள் மற்றும் 'Yak' எனப்படுகின்ற ஒருவகையான மாடுகளும் பயன்படுத்தப்படுகின்றன.

பாரியளவு தொடக்கம் நடுத்தர மற்றும் சிறியளவிலான பண்ணை நடவடிக்கை வரை சகல கட்டங்களிலும் தொழில்நுட்பத்தின் தாக்கம் இடம்பெறுவதோடு அதன் உற்பத்தியும் அதிகரித்துக் கொண்டே செல்வதையும் காணலாம். பொதுவாக உலகில் நகர சனத்தொகையில் இடம்பெறும் துரித அதிகரிப்பும், Cheese மற்றும் Butter போன்றவற்றிக்கு ஏற்பட்ட அதிகரித்த கேள்வியும் இந்நடவடிக்கையின் விருத்திக்கு முக்கிய காரணங்களாக இருக்கின்றன. பொதுவாக பால் உற்பத்தி பொருட்களை Whole Milk Product, Butter Milk Product, Skim Milk, Whey Product, High Milk Fat & Nutritional Product, Cultured & Confectionary Product. என்று பொதுவாக வகைப்படுத்த முடியும். அவற்றின் அடிப்படையில் உருவாகும்.

Instant Milk, Flavured Milk, Condensed milk, Yugurt, Frozen yogurt, Curts, Butter, Butter Oil, Butter milk, Ghee, Paneer, Cottage Cheese, Cream Cheese, Whey, உள்ளிட்ட பல வகையான பொருட்களுக்கும் இன்று சிறந்த சந்தையும் நிலவுகின்றது. அத்தோடு பாலானது மறைமுகமான சில உணவுப் பொருட்களுக்கும் துணை செய்கின்றன. உதாரணமான தேனீர், Ice Cream உள்ளிட்ட சில இனிப்புப் பண்டங்கள் செய்வதற்கும் சமையல் தேவைகளுக்கும் உதவுகின்றன.

பாற்பண்ணை உற்பத்தி பொருட்களில் 60%மானவை அபிவிருத்தியடைந்த நாடுகளால் கொள்வனவு செய்யப்படுகின்றன. உலகளாவிய ரீதியில் பாற்பண்ணை தொழிலானது 200ற்கும் மேற்பட்ட நாடுகளில் இடம் பெற்று 605,644,740 டொன்கள் உற்பத்தி செய்யப்படுகின்றன. ஐக்கிய அமேரிக்காவிலேயே அதிகமாக உற்பத்திகள் இடம்பெறுகின்றன. 2011ம் ஆண்டளவில் ஐக்கிய அமேரிக்கா 89,015,200 டொன்களை உற்பத்தி செய்து மொத்த பாற்பண்ணை உற்பத்தியில் 14.7% பங்களிப்பை வழங்கியுள்ளன. இரண்டவதாக அதிக உற்பத்தி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இடம்பெறும் நாடாக இந்தியாவைக்(8.7%) குறிப்பிட முடியும்.

இவ்வாறு பட்டியலில் முதல் 10 நாடுகளில் தொடர்ந்து..

3. சீனா
4. பிரேசில்
5. சோவியத் ரஷ்யா
6. ஜேர்மனி
7. பிரான்ஸ்
8. நியூசிலாந்து
9. ஐக்கிய இராச்சியம்
10. துருக்கி

03 APR 2014
LIBRARY

போன்ற நாடுகள் இடம்பெற்றுள்ளன. இலங்கை 171,832 டொன்களை உற்பத்தி செய்து உலக உற்பத்தி பட்டியலில் 120வது இடத்தில் காணப்படுவதோடு இலங்கையின் உற்பத்தி மொத்த நாடுகளின் உற்பத்திதொகையில் 0.028% பங்களிப்பு செய்கின்றது.

தரைத்தோற்றம், காலநிலை, சிறந்த உள்ளூர் மற்றும் வெளிநாட்டு சந்தை வசதிகள், போக்குவரத்து வசதிகள் மட்டுமன்றி தொழில்நுட்ப விருத்தியும் பால் உற்பத்தி நடவடிக்கையை மேற்கொள்வதற்கு அடிப்படைக் காரணங்களாக அமைவதைக் காணலாம். பொதுவாக பால் உற்பத்தித் தொழிலானது அயனப் பகுதிகளை விடவும் இடைவெப்ப வலயப் பகுதிகளிலேயே அதிகமாக இடம்பெறுகின்றது. தட்டையான தரைத்தோற்றமும் ஓரளவான குளிர் நிலவும் பிரதேசங்களில் இந்நடவடிக்கை அமையப்பெற்றுள்ளன. சந்தை வசதிகளைப் பொருத்தமட்டில் சந்தை வாய்ப்புக்களை விருத்தி செய்து கொள்வதற்கான போக்குவரத்து விருத்தி முக்கிய பங்களிப்பு செய்கின்றது. எடுத்துக்காட்டாக ஐக்கிய அமேரிக்காவின் பாற்பண்ணைகள் கைத்தொழில் மற்றும் சிறந்த போக்குவரத்து வலைப்பின்னல் கொண்ட பிரதேசங்களுக்கு அண்மித்த பிலடெல்பியா, பொஸ்டன் மற்றும் நியூயோர்க் ஆகிய இடங்களில் அமையப்பெற்றுள்ளது. அந்த வகையில் இந்தியாவைப் பொருத்தமட்டில் ஆசியா கண்டத்தில் மையமாக அமைந்திருப்பதும், போதிய உள்ளூர் சந்தை காணப்படுவதும் அங்கு சாதகமாக அமைந்துள்ளன.

நியூசிலாந்து, அவுஸ்திரேலியா, கனடா, டென்மார்க் உள்ளிட்ட ஐக்கிய அமேரிக்காவின் சில பகுதிகளிலும் இந்நடவடிக்கைக்கான சிறந்த காலநிலை நிலவுவதோடு விவசாயத்திற்கு பொருத்தமற்ற அதாவது உகப்பற்ற தரிசு நிலங்களான பாரியளவான மேய்ச்சல் நிலங்கள் காணப்படுகின்றது. ஆக இப் பிரதேசங்களில் பாற்பண்ணை நடவடிக்கையையே மேற்கொள்ள வேண்டிய நிர்ப்பந்தமே காணப்படுகின்றது. எடுத்துக்காட்டாக டென்மார்க்கில் இத்தகைய ஒரு சூழலே இடம்பெறுகின்றது. டென்மார்க் குறுகியளவான நிலப்பரப்பை கொண்டிருந்தாலும் இன்று சிறந்த உற்பத்திகளை வெளிப்படுத்தும் ஒரு நாடாக வளர்ச்சியடைந்துள்ளது. பால் உற்பத்தி பொருட்களான பாற்கட்டி, வெண்ணெய் போன்றவற்றிற்கு டென்மார்க் பிரசித்திபெற்ற நாடாகவுள்ளது. ஆசிய நாடுகளுக்கு நியூசிலாந்து மற்றும் அவுஸ்திரேலியா போன்ற நாடுகளில் இருந்து பெரும்பாலான பால் உற்பத்தி பொருட்கள் தருவிக்கப்படுகின்றன. இவற்றுள் முழு ஆடைப் பால்மா - Full Cream Milk Powder மற்றும் கட்டிப்பால் என்பன குறிப்பிடத்தக்கன.

பாற்பண்ணை உற்பத்தியில் தொழில்நுட்பத்தின் பங்களிப்பானது இன்றியமையாத ஒன்றாகும். இத்தொழிலில் சகல நடவடிக்கைகளிலும் தொழில்நுட்பம் உயர்ந்தளவில் பயன்படுத்தப்படுவதைக் காண முடியும். ஐக்கிய அமேரிக்கா, கனடா, ஐக்கிய இராச்சியம் உள்ளிட்ட அபிவிருத்தியடைந்த நாடுகளில் தொழில்நுட்பம் அதிகளவில் பயன்படுத்தப்படுகின்றது. மாடுகளுக்கு உணவளித்தல், பால் கறத்தல், பால் பதனிடுதல் உள்ளிட்ட சந்தைப்படுத்தல் வரை அனைத்து நடவடிக்கைகளிலும் பயன்படுத்தப்படுவதைக் காணலாம். பொதுவாக இவ்வகையான பாவனை மனித



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உழைப்பு தேவையின் அவசியத்தைக் குறைத்துள்ளது. குறிப்பாக உலகளாவிய ரீதியில் பாற்பண்ணை தொழிலில் அதிக உற்பத்தியை, அல்லது சிறந்த விளைச்சலைப் பெறும் நாடுகளாக வளர்ச்சியடைந்த நாடுகளே காணப்பட காரணம் அங்கு சிறந்த காலநிலை இடம் பெற்றாலும் முக்கியமாக தொழில்நுட்ப மற்றும் இயந்திரப் பாவனையினாலேயாகும்.

2010லும் பார்க்க 2011ல் ஐக்கிய அமேரிக்காவில் தனது உற்பத்தியில் 1.8% மும், நியூசிலாந்தில் 5.2% மும், அவுஸ்திரேலியாவில் 0.9%மும் உற்பத்தி பெருக்கம் ஏற்பட்டுள்ளது. மேலும் பாரியளவான தொழில்நுட்ப இயந்திரப் பாவனையை மேற்கொள்ள அதிகளவான மூலதனமும் தேவையானதாகும். அத்தகைய மூலதனத்தினை முதலீடு செய்யும் சக்தி வளர்முக நாடுகளை விட வளர்ந்த நாடுகளிடம் காணப்படுகின்றதோடு இத்தகைய அதிகமான மூலதனத்தின் மூலமே நல்ல இன மாடுகள் அதாவது அதிகம் விளைச்சலை அல்லது பலனை பெறக்கூடிய மாடுகளை கொள்வனவு செய்யவும் முடிகின்றது.

பொதுவாக வர்த்தக நோக்கம் கருதிய நடவடிக்கையே இத்தொழிலில் காணப்படுகின்றது. அதாவது நகர கைத்தொழில் பிரதேசங்களை அடிப்படையாகக் கொண்டு அங்கு வளர்ச்சியடையும் பாரிய சந்தைகளுக்கு பாலுணவுப் பொருட்களை வழங்குகினறன. இன்று உற்பத்தியில் பெரும்பாலான இன்று வெளிநாடுகளுக்கும் ஏற்றுமதி செய்யப்படுவதற்கு அடிப்படைக் காரணமாக இருப்பதும் நவீன தொழில்நுட்ப வளர்ச்சியின் தாக்கமேயாகும். ஏனெனில் இன்று ஏற்படுத்தப்பட்டுள்ள வசதி வாய்புக்களே நீண்ட தூரம் பிரயாணம் செய்தும் பொருட்களை வினியோகிக்கக் கூடிய தன்மை காணப்படுகின்றது. 1840களில் பாற்பண்ணை உற்பத்திப் பொருட்கள் 50km தூரத்துக்கு இடையில் பரிமாறப்பட்டது. எனினும் இன்று 50kmற்கும் அதிகமான தூரத்திற்கும் எடுத்துச் செல்லப்படுகின்றது. இன்று விமானங்கள் மூலமும் சந்தைப்படுத்தல் இடம்பெறுவதையும் காண முடியும். விமானங்கள், கப்பல்கள் மற்றும் சாதாரண கொள்கலன் கொண்ட வாகனங்களில் ஏற்படுத்தப்பட்டுள்ள குளிர்சாதன வசதி கொண்ட தொழில்நுட்பத்திறனாலும் இவை சாத்தியமாகின்றன.

lactic acid bacteria க்களான Lactobacillus, Lactococcus, மற்றும் Leuconostoc போன்ற நுண்ணங்கிகளின் தாக்கம் விரைவில் பாலை புளிக்கச் செய்யும் தன்மை கொண்டவையாகும். மேலும் பால் உற்பத்தி பொருட்கள் விரைவில் பழுதடையும் தன்மை கொண்டவையால் நீண்ட நேரம் வைத்துக் கொள்வது இன்றியமையாததாகும். நீண்ட நேரம் பழுதடையாமல் பாதுகாக்கும் இரசாயனங்களின் கண்டுபிடிப்புக்களினாலும் பால் உற்பத்தி பொருட்களை நீண்ட நேரம் வைத்துக் கொள்ளக் கூடிய காரணத்தினாலும் சர்வதேச ரீதியில் சந்தைப்படுத்தும் வசதியின் அதிகரிப்பு ஏற்படுத்தப்பட்டுள்ளதைக் காணலாம். அது மட்டுமன்றி உற்பத்தி செய்யப்பட்ட பொருட்களை வேறு பொருட்களாக மாற்றுவதற்கும் நவீன தொழில்நுட்பத்தின் தேவை காணப்படுகின்றது. உதாரணமாக பால் அதன் தன்மை பழுதடையும் நிலைக்கு வரும்போது Youcurtஆக மாற்றக்கூடிய தன்மை ஏற்படுத்தப்பட்டிருப்பது குறிப்பிடத்தக்கதாகும். மேலும் பாலின் மூலம் உற்பத்தி செய்யப்படுகின்ற பொருட்கள் நீண்ட காலம் பழு-டையாமல் பாதுகாப்பதற்கு உதவுவதையும் காணலாம். அதாவது கட்டிப்பால், வெண்ணெய், பாலாடை, போன்ற-வற்றை பொதியிடும் போது நுண்ணங்கிகளின் தொற்று ஏற்படாதவாறும், காற்று உட்புகாதவாறும், கசிவுகள் ஏற்படாதவாறும் சிறப்பாக பொதியிட வேண்டும். இத்தகைய நடவடிக்கையானது மனித சக்தியை விட இயந்திரத்தின் மூலம் மேற்கொள்வது இலகுவானதாகவுள்ளது. பொதுவாக இன்று பண்ணைகளில் கால்நடைகளை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பராமரிப்பதிலிருந்து அதிகமான வேலைகள் இயந்திரமயப்படுத்தப்பட்டுள்ளதைக் காண முடியும். இவற்றுள் எளிய உதாரணமாக பால் கறப்பதைக் கூறலாம். மாடுகள் மேடைக்கு கொண்டுவரப்பட்டதுடன் அவற்றின் மடிகளிலுள்ள முலைகளில் ஒருவகை உறுஞ்சும் தன்மை கொண்ட குழாய்கள் பொருத்தப்பட்டு பால் அவற்றிலிருந்து உறுஞ்சப்பட்டு நேரடியாக கொள்கலன்களுள்ளேயே சேமிக்கப்படுகின்றது. மாடு-களில் இருந்து இவ்வாறு பால் கறக்கப்படுவதால் நேரம் சேமிக்கப்பட்டு வேலை துரிதப்படுத்தப்படுவது மட்டுமன்றி நுண்ணங்கி தொற்றுகளில் இருந்தும் பாதுகாப்பு ஏற்படுகின்றது. இவ்வாறு பால் கறக்கப்பட்டதன் பின்பு பாலின் தரத்தை மதிப்பீடு செய்துகொள்ளவும் நவீன் தொழில்நுட்ப வசதிகள் உதவுகின்றன. எளிய உதாரணத்திற்காக பாலின் கொழுப்புத் தன்மையை அளப்பதைக் கூறலாம். பாலின் கொழுப்புத் தன்மையை அடிப்படையாக வைத்தே அதன் உற்பத்தி பொருட்கள் தீர்மானிக்கப்படுகின்றன.

உலகின் நவீன முன்னேற்றத்தின் விளைவே இன்று நல்ல இன கால்நடைகள் பல்படியாக்கம் செய்து அதாவது Cloning மூலம் உருவாக்கப்படுவதைக் கூறலாம். அதிக அறுவடை தரக்கூடிய நல்ல இன மாடுகள், மற்றும் அடுகள் போன்றன இன்று Cloning முறைகளில் மிகவும் நுணுக்கமாக உருவாக்கப்படுகின்றன. Cloning முறையில் விலங்குகளை உருவாக்குவதற்கு மரபனு எனும் DNA (Deoxyribo Nucleic Acid) யின் நுணுக்கமான தன்மை கையாளப்படுவதின் அவசியம் இன்றியமையாதாகும். ஒரு விலங்கின் உயிர்க்கலத்தை (Living Cell) எடுத்து பிரத்தியேகமான முறையில் அதனை பராமரித்து அதிலிருந்து அந்த விலங்கை ஒத்த அதே பண்புகளுடைய இன்னொரு விலங்கை உருவாக்குவதே Cloning இன் சிறப்பியல்பாகும்.

பொதுவாக விலங்குகளை இம்முறையில் உருவாக்குவதில் மட்டுப்படுத்தப்பட்ட தன்மையே காணப்படுகின்றது. ஏனெனில் விலங்குரிமை தொடர்பாக வாதிடுவோர் Cloning மூலம் விலங்குகளை உருவாக்குவதை எதிர்க்கின்றனர். இருந்தாலும் Cloning மூலமாக சிறந்த பலனை பெறக் கூடிய மாடுகள் உருவாக்கப்பட்டமைக்கான சான்றுகளும் உள்ளன. எனினும் விலங்குகளைத் தவிர்த்து விலங்குகள் உண்ணக்கூடிய பல்வேறுபட்ட தாவரங்கள் Cloning முறையில் உருவாக்கப்பட்டு கால்நடைகளுக்கு உணவளிக்கப்படுகின்றன.

பாற்பண்ணை உற்பத்தி தொடர்பில் அண்மைக்காலமாக பலவித மாற்றங்கள் இடம்பெற்று வருவதைக் காணமுடியும். பொதுவாக பாற்பண்ணை தொழிலில் முதலீடுகள் கூட்டுறவு அடிப்படையில் சில நாடுகளில் அமைந்துள்ளதைக் காணலாம். எனினும் இலங்கை போன்ற நாடுகளில் பெரும்பாலான பண்ணைகள் அரசமயப்படுத்தப்பட்டே காணப்படுகின்றது. NLDB – National Livestock Development Board மூலமாக இலங்கையில் பல இடங்களில் அமைந்துள்ள மாடு மற்றும் ஆட்டுப் பண்ணைகள் பராமரிக்கப்படுகின்றன. எனினும் சில தனியார் மற்றும் சிறியளவிலான நிறுவனங்களும் இத்தொழில் நடவடிக்கைகளில் ஈடுபட்ட போதும் அவர்களின் உற்பத்திகளுக்கு சிறந்த சந்தையை அரசு ஏற்படுத்தி கொடுப்-பதில்லை. எடுத்துக்காட்டாக அண்மை-யில் பாலின் விலை வீழ்ச்சியடைந்ததால் அதனை எதிர்ப்பதற்காக நுவரெலியா பகுதியில் வீதிகளில் பாலைக் கொட்டி பால் உற்பத்தியாளர்கள் ஆர்ப்பாட்-டத்தில் ஈடுபட்டதைக் காணலாம். இவ்வாறான சில பிரச்சினைகள் வளர்முக நாடுகளில் காணப்படுகிறது.

மனித சுகாதாரம் தொடர்பில் சில சிக்கல்களும் இன்று காணப்படுகின்றது. நாளடைவில் ஏற்பட்டுள்ள பல முன்னேற்றங்கள் காரணமாக பாலின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மூலம் பலவித உற்பத்தி பொருட்களும் உருவாக்கப்படுகின்றன. பொதுவாக பாலானது Lactose Intolerance மற்றும் பால் ஒவ்வாமை (Milk Allergy) உள்ளவர்களுக்கு பாதிப்பை ஏற்படுத்தக்கூடியதாகும். பால் பொருட்களான போன்றவை நீண்ட நாட்களாக வைத்துக்கொள்ளும் போது பூஞ்சனமாகி Aspergillus fumigatus என்ற பங்கசாகலாம். இதனால் ஆஸ்த்துமா போன்ற சுவாச நோய்கள் ஏற்படவும் வாய்ப்புள்ளது. மேலும் பால் உற்பத்தி பொருட்களின் காலாவதித் திகதி முடிவடைந்த பின்னர் அவற்றைப் பயன்படுத்துவோமாயின் தீராத இதய நோய்களை ஏற்படுத்தக் கூடியதாகவுள்ளது. எவ்வாறு இருப்பினும் பால் உற்பத்தி பொருட்களை வெறுக்கும் அல்லது அவற்றைப் புறக்கணிக்கும் போக்கும் சிலரிடம் காணப்படுகின்றது. குறிப்பாக சில சமயங்கள், மதங்கள் பால் பொருட்கள் நுகர்வை அனுமதிக்காமல் கட்டுப்படுத்துகின்றது.

உதாரணமாக சமணம் சமயம் இதனை மிகவும் வலியுறுத்துகின்றது. அதாவது சமண அறிஞர்கள் பால் பொருட்களின் நுகர்வுக்கு எதிர்ப்பு கூறுபவர்களாகவுள்ளனர். ஏனெனில் பாலானது எமது வன்முறையால் விலங்குகளிடமிருந்து பெறப்படுவதாக இவர்கள் கூறுகின்றனர். யூத சமயமும் இவற்றுள் ஒரே தன்மை கொண்ட எண்ணக்கருவையே கொண்டுள்ளனர். மேலும் இந்த நடவடிக்கைகளில் பல ஒழுக்கவியல்சார் பிரச்சினைகளும் காணப்படுகின்றது.

பால் என்பது இயற்கையிலேயே தன் குட்டிகளுக்கும், கன்றுகளுக்காக சுரக்கும் உணவாகும். அவற்றை மனிதன் தன் அதிகாரத்தைப் பயன்படுத்தி பெறுவது ஒழுக்கமீறல் கொண்ட நடவடிக்கையாகும். கால்நடைகள் தான் விரும்பி பால் தருகின்றனவா? என்ற கருத்திலும் சிக்கல் உள்ளது. அதாவது நாம் கால்நடைகளில் இருந்து பலவந்தமாகவே பாலைப் பெறுகின்றோம். ஆகவே இதுவும் கால்நடைகள் மீது மேற்கொள்ளும் ஒரு வகை 'Abuse-தவறான பிரயோகம்' என்பதாகவும் விலங்குரிமை தொடர்பாக பேசுவோர் குறிப்பிடுகின்றனர்.

## Reference


Clarence Fielden Jones. (1963), **Economic Geography**, The Macmillan Company, New York.

Balzak S.S, (1949), **Economic Geography Of U S S R**, The Macmillan Company, New York.

John McFarlan, (1933), **Economic Geography** (4th edition), Sir ISAAK Pitman, London.

http://en.wikipedia.org/wiki/Dairy_product

http://upload.wikimedia.org/wikipedia/commons/thumb/9/9d/Milkproducts



**Law Entrance**

**Guideline Lectures for Competitive Exammination for Admission of Students to Sri Lanka Law College 2014**

பல வருடங்களாக 100க்கும் மேற்பட்ட மாணவர்களை இலங்கை சட்டக் கல்லூரிக்கு அனுப்பிய

திறமையான விரிவுரையாளர்களைக் கொண்டு நடாத்தப்படும் வழிகாட்டல் வகுப்புக்கள்.

**S.Anver Sadhak**

(Attorney-at-law), BA(Econ)-Pera, CMA(SL), IBF(SL), HR(Pera)

**in Kandy...**

NCI, 127, Kotugodella Street, Kandy.

071 6037511, 077 9514930





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பணியகவமைப்பும் சிவில் சமூகமும்

**சுப்பிரமணியம் உமாமகேஸ்வரன்**
விடுகை வருடம், அரசறிவியல்துறை,
பேராதனைப் பல்கலைக்கழகம்.

**1-அறிமுகம்**

எவ்வகை ஆட்சி முறையாயினும் பணியகவர்க்கத்தினர் இன்றி நிர்வாக இயந்திரம் செயற்படாது. இதற்காக விதிமுறைகளையும், சட்டத்திட்டங்களையும், கட்டுப்பாடுகளையும் பிரயோகிக்கின்றனர். ஓர் அமைப்பில் பணியாற்றும் கட்டமைந்த பணியாளர் தொகுதியினை பணியகவமைப்பு எனலாம். இது மக்களின் கட்டுப்பாட்டுக்கு அப்பாற்பட்ட உயர்மட்ட நிர்வாகிகளைக் குறித்து நிற்கின்றது. அரச நிர்வாகத்தினை பணியகவமைப்பு என கூறும் வழக்கம் நீண்டகாலம் தொட்டே காணப்படுகின்றது. இது தனியார் துறையிலும் பார்க்க பொதுத் துறைக்கே உரிய ஒரு சொல்லாகும். நிர்வாகப்பணிகள் பெறுகியுள்ள தற்கால ஆட்சி முறையில் தொழில்நுட்பத்திறன், அறிவு, அனுபவம் உள்ள நிர்வாகிகளின்றி அரசாங்க கடைமைப் பொறுப்புகளை நிறைவேற்ற முடியாது. பணியகவமைப்பு தொடர்பான கோட்பாட்டு ரீதியிலான விளக்கங்களை முன்வைத்தவர்களில் மெக்ஸ் வெபர், சேர் சி, வெயர், எச் ஜே லஸ்கி, E.N.Gladden, எட்மன்ட் பேர்க் ஆகியோர் முக்கியமானவர்களாகும்.

சிவில் சமூகம் பற்றிய கருத்துப் பழைமை வாய்ந்த ஒன்றாயினும் இருபதாம் நூற்றாண்டின் இரண்டாம் அரைப்பகுதியிலேயே மூன்றாம் உலக நாடுகளில் ஜனநாயகம் மற்றும் நல்லாட்சி தொடர்பாகத் தோன்றிய பிரச்சினைகளோடு தற்காலத்தில் அதிகம் வலியுறுத்தப்படுகின்றது. அதன்படி இக்கட்டுரையின் மூலமாக பணியகவர்தினர் மற்றும் சிவில் சமூகம், இவ்விரு செயற்பாட்டாளர்களுக்கும் இடையிலான தொடர்பு மற்றும் பணியகவர்க்கத்தினர் சிவில் சமூகத்தினரை எவ்வாறு தன்பார்வையில் நோக்குகின்றனர் அதேபோல் சிவில் சமூகத்தினர் எவ்வாறு பணியகவர்க்கத்தினை நோக்குகின்றனர் என்பன தொடர்பாகவும் பணியகவர்க்கத்தினர் மீது சிவில் சமூக்கினர் கொண்டுள்ள நம்பிக்கையற்ற தன்மையை எவ்வாறு களைவது என்பது தொடர்பாகவும் விளக்கவுள்ளது.

**2-பணிக்குழுவாட்சி தொடர்பானதோர் அறிமுகம்**

தற்கால ஜனநாயக அரச முறைமையில் பணிக்குழுவாட்சி என்பது பெரிதும் முக்கியத்துவம் பெற்றுள்ளது. பணியகவமைப்பு நவீன தோற்றப்பாடாக குறிப்பிடப்பட்டுள்ளது. அதன் தோற்றம் மிகவும் பழைமையானதாகும். புராதன எகிப்து, உரோம், சீனா மற்றும் இந்தியா ஆகிய நாடுகளில் காணப்பட்டுள்ளது. எவ்வாறாயினும் 17ஆம், மற்றும் 18ஆம் நூற்றாண்டுகளில் நவீன தேசிய அரசுகளின் தோற்றமானது மேற்கு நாடுகளில் பணியகவமைப்பின் வளர்ச்சிக்கு பெரிதும் பங்களிப்பு செய்தது. அதேவேளை 19ஆம் நூற்றாண்டின் நடுப்பகுதிகளில் தோற்றம் பெற்ற பொதுநல அரசுகளானது பணியகவமைப்பின் தலையீட்டையும், அதன் பணியினையும் அதிகரிக்கச் செய்தது. 1939 இல் Mosca என்பார் எழுதிய "The Ruling Class" என்ற நூலில் நவீன அரசுகளை பணியக அரசு என குறிப்பிட்டார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பணியகவமைப்பு என்ற வார்த்தையானது "Burea" என்ற பிரான்சிய சொல்லிலிருந்து பெறப்பட்டதாகும். அதன் பொருள் மேசை என்பதாகும் எளிமையான வார்த்தையில் கூறுவதாயின் மேசை அரசாங்கம் அல்லது நிர்வாக உத்தியோகத்தர்களின் ஆட்சி என பொருள்படும். பணியகவமைப்பு குறித்த எண்ணக்கருவை தற்காலத்தில் விருத்தி செய்தவர் ஜேர்மன் நாட்டு சமூகவியலாளரான **மெக்ஸ் வெபர்** ஆகும். இவர் "பணியகவமைப்பை, நிர்வாகத்தில் வினைத்திறனை அதிகரிக்க செய்யும் சமூக பொறிமுறை" என்றார்.

**3-சிவில் சமூகம் ஓர் அறிமுகம்**

சிவில் சமூகம் பற்றிய கருத்துப் பழைமை வாய்ந்த ஒன்றாயினும் இருபதாம் நூற்றாண்டின் இரண்டாம் அரைப்பகுதியிலேயே மூன்றாம் உலக நாடுகளில் ஜனநாயகம் மற்றும் நல்லாட்சி தொடர்பாகத் தோன்றிய பிரச்சினைகளோடு தற்காலத்தில் அதிகம் வலியுறுத்தப்படுகின்றது. ஐக்கிய நாடுகள் அபிவிருத்தித் திட்டமானது (United Nations Development Programme – UND) சிவில் சமூகத்தை "சமூகத்தின் அரசியல் முகம்" என வர்ணித்துள்ளது. London school of Economics ஆனது சிவில் சமூகம் பற்றி முன்வைத்த பொருள் விளக்கத்தின் படி "பங்கீடு செய்து கொண்ட நலன்கள், நோக்கங்கள் மற்றும் விழுமியங்கள் என்பவற்றின் மீது அதிகாரத்தைப் பிரயோகிக்காது ஒத்துழைப்புடன் செயற்படும் சமூகத்தையே சிவில் சமூகம் என்கிறது". மேலும் இதனைப் பின்வரும் வரைவிலக்கணங்களில் இருந்து புரிந்து கொள்ள முடியும்.

கார்ள் மார்க்ஸ் (Karl Marx) "அரசியல், பொருளாதார ரீதியாகக் குரல் கொடுப்பது சிவில் சமூகம் என்றார். இது பங்குபற்றுதல் என்பவற்றைக் கொண்டதாகும். இது மதஸ்தாபனங்கள், கல்வி நிறுவனங்கள், வர்த்தகப் பேரவை என்பவற்றை உள்ளடக்கியது" என்றார்.

ஜனநாயகச் சிந்தனைக் கலைக் களஞ்சியமானது (Encyclopedia of Democratic Thoughts): "அரசிலிருந்தும் பொருளாதாரத்திலும் வேறுபட்டுச் சமூக இடைவினை புரிகின்ற ஒரு தனியான அமைப்பே சிவில் சமூகமாகும். இது பன்மைத்துவப் பண்புகளிலிருந்தும் தனிப்பட்ட ஒன்றிணைவிலிருந்தும் ஒழுங்கமைக்கப்பட்ட ஒன்றாகும்" எனக் கூறுகிறது.

சிவில் சமூகம் பற்றிய நவீன வரைவிலக்கணத்தில் அந்தோனியோ கிராம்சி (Antonio Gramsci 1891-1937) முக்கியமானவர் ஆவார். இவர் "சமூக உறவுகள் எனும் மேற்கட்டுமானத்தின் பகுதியே சிவில் சமூகம்" என்கிறார். இவர் சமூக உறவுகளை மூன்று வகையாக நோக்குகின்றார்.

**1-உற்பத்தியோடு இணைந்த உறவுகள் :** இவ்வுறவு முதலாளி, தொழிலாளி போன்ற உறவு நிலைகளைக் கொண்டிருக்கும்.

**2-ஒடுக்குமுறை உறவுகள் :** இவ்வுறவில் அரசும், அரச இயந்திரமும் அடங்கும்.

**3-தனியாள் வகை உறவுகள்:** மேற்கண்ட இரு உறவுகளும் தவிர்ந்த மதம், தொழிற்சங்கங்கள், அரசியல் கட்சிகள் கலாசார நிறுவனங்கள் போன்றவை அடங்கும்.

இவ்வாறான மூன்று வகையான உறவுகளின் தொகுப்பே சிவில் சமூகம் என்கிறார் கிராம்சி. சிவில் சமூகத்திற்குரியதான முறைமைகளைக் கோட்பாட்டு ரீதியாக நோக்கும் போது அரசு, குடும்பம், சந்தை நிறுவனங்கள் ஆகிய மூன்று வகையிலிருந்தும் வேறுபடுகின்றது. எனினும் நடைமுறையில் சிவில் சமூகம் மற்றும் அரசு, குடும்பம், சந்தை நிறுவனங்கள் என்பவற்றுக்கிடையிலான நிச்சயமான எல்லைகளை வரையறை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செய்ய முடியாதுள்ளது. சிவில் சமூக நிறுவனங்கள் பொதுவாக வர்த்தகம், தொழிற்துறை, தொழிலாளர் சங்கங்கள், வேலை கொள்வோர் பிரிவினர், கற்றறி-வாளர்கள், ஆராய்ச்சி நிறுவனங்கள், வெகுசன ஊடகங்கள், சமூகப் பிரிவினர் மற்றும் அரசியல் கட்சிகள் போன்ற-வற்றை உள்ளடக்குகின்றது.

### 03.1 சிவில் சமூகத்தின் பண்புகள்

அரசியல் ஆய்வுகளில் சிவில் சமூகம் என்ற சொற்றொடர் 1980கள் வரை பரவலாகப் பயன்படுத்தப்படவில்லை. சிவில் சமூகத்தின் பண்புகளாக பின்வருவனவற்றைக் குறிப்பிடலாம்.

**கூட்டுச் செயற்பாடுகள்** : சிவில் சமூகத்-தின் செயற்பாடுகள் கூட்டு நோக்கத்-திற்காகவன்றித் தனிப்பட்ட நோக்கங்களு-க்ககவோ, நலன்களுக்காகவோ இடம் பெற மாட்டாது.

**அதிகாரப் பிரயோகமின்மை** : சிவில் சமூகம் அதிகாரத்தின் அடிப்படையில் அன்றி தன்னார்வ விருப்பு மற்றும் தேவையின் அடிப்படையிலேயே செயற்ப-டுகின்றது. மனிதர்கள் தமது சுய-விருப்பின் அடிப்டையிலேயே சிவில் சமூகத்தோடு தொடர்பு படுகின்றனர். அதே போன்று தமது சுயவிருப்பின் பேரில் அதிலிருந்து விலகவும் முடியும்.

**அடையாளம்** : கோட்பாட்டு ரீதியாகச் சிவில் சமூகம் தனக்கே உரிய அடையாளத்தைக் கொண்டுள்ளது. இது அரசு, குடும்பம், சந்தை நிறுவனங்கள் என்பவற்றிலிருந்து வேறுபட்டதாகும்.

**ஆள்புலத்தை நிச்சயமாக அடையாளம் காண முடியாது** : அரசு, குடும்பம், சந்தை நிறுவனங்கள் போன்றவற்றி-லிருந்து சிவில் சமூகத்தை ஆள்புல அடிப்படையில் வேறுபடுத்துவது கடின-மாக விடயமாகும். இதன்படி நல்-லாட்சியைக் கட்டியெழுப்புவதில் சிவில் சமூகம் பல்வேறு நிலைகளில் பங்கா-ற்றுகின்றது. அவற்றைத் தொகுத்து நோக்கும் போது,

சிவில் சமூகம் ஒரு மாற்றுச் சக்தியாகச் செயற்படல், மற்றும் அரசாட்சியின் காவலனாகச் செயற்படல். போன்ற இரு வழிகள் மூலம் நல்லாட்சியை ஏற்படுத்த விழைகின்றது என அடையாளம் காணப்பட்டுள்ளது.

### 4-சிவில் சமூகத்தின் பார்வையில் பணியகவமைப்பு

பணியகவமைப்பின் இருப்பு தற்கால ஜனநாயக அரசுகளில் தவிர்க்க முடியாத ஒன்றாக காணப்படுகின்றது. அதன் சிறப்பு, சீர்கேடு எதுவாயினும் இன்றைய ஆட்சியியல் செயற்பாடுகளில் அதற்கென தனியான இடமுண்டு பணியகவமைப்பு இன்றி ஆட்சி இல்லை, அரசாங்கம் இல்லை என்பர். இன்று இது நிரந்தரமான அமைப்பாக காணப்படு-வதுடன், சமூகத்தில் உயர் அந்தஸ்த்தில் உள்ளவர்கள் இதில் ஆதிக்கம் செலுத்துகின்றனர். இவர்கள் தமது அதிகாரத்தைப் பயன்படுத்தி பொது மக்களின் தேவைகளையும், விருப்பங்களையும் அறியாது செயற்ப-டுகின்றனர் என விமர்சிக்கப்படுகின்றது. அத்துடன் சுயநலமிக்கவர்கள், அதிகாரப் பசி கொண்டவர்கள், சுய நலனுக்காக அதிகாரத்தை பிரயோகிப்பவர்கள், அதி-கார வர்க்கத்தினர் என்றும் சிவில் சமூகத்தினரால் விமர்சிக்கப்படுகின்றனர்.

குறிப்பாக மக்களாட்சி முறையில் நிர்வாகம் தெரியாதவர்களும் கல்வியறிவு இல்லாதவர்களும் அமைச்சர்களாய் பதவி ஏற்கின்ற பொழுது அவர்கள் தங்களின் பெரும்பான்மை அதிகாரத்தை பணியக வர்க்கத்தினரிடம் ஒப்படைத்து விடு-கின்றனர். இதனால் பணியகவர்க்கத்தினர் அதிகாரத்தை சுயநலனுக்காக பயன்-படுத்துகின்றனர். அரசாங்கத்தின் கொள்-கைகளையும், தீர்மானங்களையும் நடை-முறைப்படுத்தும் அதிகாரம் இவர்களிடம் காணப்படுவதால், அரச நிர்வாக கட்ட-மைப்பில் இவர்கள் உயர் இடத்தைப் பெறுகின்றனர் இச்சந்தர்ப்பத்தில் இவர்கள் தான்தோன்றித்தனமாக செயற்-பட எத்தனிக்கின்றனர். இவ்வகையில் அனைத்து பணியக-வர்க்கத்தினரும்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செயற்படுவார்கள் என கூற முடியாது. அத்தகைய தன்மையால் சிவில் சமூகத்தினர் பணியகவர்க்கத்தினர் மீது நம்பிக்கையற்ற தன்மையில் உள்ளனர்.

பணியகவர்க்கத்தினர் மனிதத்தன்மைக்கு அப்பால் நின்று ஈவிரக்கமின்றி விதிமுறைகளை பின்பற்றுவர். மற்றெல்லா தொழில்களையும் விட தமது தொழிலே உயர்ந்தது என்றெண்ணுவர், புதுமைகளை புகுத்த மறுப்பர், எளிதான கருமத்தையும் சிக்கலாக்குவர், தங்களைப்பற்றியே எப்போதும் எண்ணுவர், காலம் தாழ்த்துதல் ஆகிய காரணங்களால் சிவில் சமூகம் பணியகவமைப்பினை தூற்றும் நிலை அதிகரித்தள்ளது. இதன் காரணமாகவே 1990 களின் பின்னர் பணியகவமைப்பில் பல சீர்திருத்தங்கள் கொண்டுவரப்பட்டதுடன் புதிய முகாமைத்துவ நுட்ப முறைகளும் உள்வாங்கப்பட்டுள்ளன.

இன்று பணியகவமைப்பின் அதிகார மேலாண்மையை இல்லாது செய்யும் நோக்குடன் பல உபாயங்களை கையாண்டு வருகின்றனர். பணியகவமைப்பின் வினைத்திறனற்ற செயற்பாடே பொருளாதார குறைவிருத்தி, வறுமை, ஊழல், மோசடிகள் போன்ற பிரச்சனைகளுக்கு காரணம் என்பதனை உணர்ந்து பல நாடுகளில் இதில் சீர்திரத்தங்களை மேற்கொண்டு வருகின்றனர். பணியகவமைப்பின் செயற்பாட்டில் போட்டித்தன்மையினை அளித்தல், சாதனை அடிப்படையிலான பதவி உயர்வு, விஞ்ஞான தொழில்நுட்பத்தினை கையாளுதல், இலத்திரனியல் வாயிலான அரசாங்க சேவை, பிரஜைகள் பட்டயம், வெளிப்படைத்தன்மை, பொறுப்புக் கூறுதல் என்பவற்றை அறிமுகப்படுத்துகின்றனர். இத்தன்மைகளை அறிமுகப்படுத்துவதற்கு மிக முக்கிய காரணம் சிவில் சமூக்தினர் பணியகவமைப்பின் மீது கொண்டிருந்த நம்பிக்கையற்ற தன்மையே ஆகும்.

மக்களாட்சி செய்வதற்கு அதிகாரம் இன்றியமையாததாகும். இவ்வதிகாரத்தினை பிரயோகிக்கும் போது அதிகாரிகள் விதிமுறைகளை பின்பற்றுவது இயல்பானது மட்டுமன்றி முறையானதும் கூட சமுதாயத்தில் சட்டத்தையும் ஒழுங்கையும் பாதுகாத்து சீரான சமூக வாழ்க்கையை ஏற்படுத்த பணியக வர்க்கத்தினர் கையாளும் வழிமுறைகள், விதிமுறைகள் மக்களை புண்படுத்தி விடுகின்றது. இதனால் பொதுமக்கள் பணியகவர்கத்தினரை இகழ்ந்தும், தாழ்த்தியும் விமர்சிக்கி-ன்றார்கள்.

நிர்வாகத்தை சீராக்கவும், செம்மையாகவும் கொண்டு நடாத்தவதற்கு அதிகாரிகளிடம் அதிகாரம் மட்டும் இருந்தால் போதாது, அவர்களிடம் திறமையும், மதிநுட்பமும் இருக்கவேண்டுமென கூறப்படுகின்றது. அத்தகைய திறமையினை தொடர்ச்சியான பயிற்சி பணி, என்பவற்றின் மூலம் பெறுகிறார்கள். இது இவர்களுக்கே உரிய சொத்தாகும். உண்மையில் பணியக வர்க்கத்தினரை மற்றவர்களிடமிருந்து பெரிதும் வேறுபடுத்துவது அவர்களிடமுள்ள அறிவுக் கூர்மை, திறமை, துல்லியம், வேகம், தெளிவுடமை என்பனவாகும். இவற்றை அவர்கள் ஆற்றவரும் பணிகளின் மூலம் கண்டுகொள்ள முடியும். இவ்வாறான தன்மையை தற்காலத்தில் அரசியல் சகாய முறையின் காரணமாகக் காணமுடியாதுள்ளது. இதுவும் சிவில் சமூகத்தினர் பணியகவமைப்பினை தூற்றுவதற்கு காரணமாகின்றது எனலாம்.

கட்டுக் கோப்புடன் நன்கு வரையறுக்கப்பட்ட விதிமுறைகளின் படி அதிகார படிநிலை வழியாக அதிகார வர்க்கத்தினர் இயங்க வருவதால் அவர்களின் செயற்பாட்டினை முன்கூட்டியே அறிய முடியும். அத்துடன் உணர்ச்சிவயப்படுத்தல், தனி மனித ஆளுமை மற்றும் சார்புத் தன்மை என்பவற்றுக்கு இடமில்லாமல் செயற்படுவதால் பணியக வர்க்கம் ஏனைய அமைப்புக்களை விட உயர்ந்ததாக விளங்குகின்றது. அரசியல் கலவரத்தாலோ, எதிர்ப்பாலோ, ஆட்சி மாற்றத்தாலோ அழிக்கப்பட முடியாத நிரந்தர



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அமைப்பே பணியக அமைப்பாகும். இவ்வாறான தன்மையைக் கொண்டிருப்பதும் அவர்கள் மீது ஆரம்பத்தில் இருந்தே மக்கள் நம்பிக்கையற்ற தன்மையைக் கொண்டிருத்தலும் சிவில் சமூகத்தினர் பணியகவமைப்பினை விமர்சிப்பதற்கு காரணமாக உள்ளது. அதாவது அவர்கள் நிரந்தர தொழிற்தன்மை உடையவர்களாக இருப்பதன் காரணமாக மக்கள் நலனில் அக்கறையின்றி செயற்பட வருகின்றமையால் ஆகும்.

அண்மைக் காலங்களில் பணியகவர்க்கத்தினரின் தன்னலமிக்க, எதேட்சத்தனமான செயற்பாடுகளைக் கட்டுப்படுத்துவது குறித்து பேசப்பட்டு வருகின்றன. அதாவது ஜனநாயக வழிமுறைகளுக்கு உட்பட்டு செயற்படும் ஒரு அமைப்பாக இதனை மாற்ற வேண்டும் என பலர் வாதிட்டு வருகின்றனர். அவ்வாறான வாதங்களில் முக்கியமாக குறிப்பிடப்படுவது பணியகவமைப்பு மீதான பாராளுமன்ற கட்டுப்பாடாகும். மக்கள் இறைமையினைக் கொண்டுள்ள பாராளுமன்றம் பணியகவர்க்கத்தினரை கண்காணித்து கட்டுப்படுத்த வேண்டும் என்பதாகும்.

**5-பணியகவமைப்பின் பார்வையில் சிவில் சமூகம்**

இதுபற்றி மெக்ஸ் வெபர் கூறும் போது நவீன நிர்வாக அமைப்புகள் வெற்றிகரமாக செயற்படுவதற்கு காரணமே பணியகவமைப்பு என்றும் "எந்த ஒரு நாட்டின் ஆட்சி முறையிலும் பணியகவமைப்பு ஓர் இன்றியமையாத அம்சம் என்றும், பணியகவர்க்கத்தினர் அதிகாரத்தின் கருவியாய் விளங்குவதற்கு காரணமே அது தன் அதிகாரத்தின் மூலம் மக்கள் மீது கட்டுப்பாட்டு ஒழுங்கினைச் செயலாட்சி செய்து அவர்களைச் சிறப்பாக ஆட்சி செய்வதற்கேயாகும்." என்றும் பணியகவமைப்பாளர்களை நிர்வாகத்தில் முக்கியமானவர்களாக மெக்ஸ் வெபர் காட்ட வந்தார். அதன் அடிப்படையில் பணியகவமைப்பாளர்கள் இன்றி மக்கள் எந்தவொரு பயனையும் பெற முடியாது அவர்களே மக்களுக்கான அனைத்து சேவைகளையும் செய்கின்றனர். இதன்படி காலதாமதம் ஏற்படினும் ஏற்றத்தழ்வுகள் அற்ற வகையில் மக்களுக்கான பணிகள் சென்றடைகின்றன அதன்படி மக்களை ஒரு பொதுவான கண்ணோட்டத்திலேயே பணியகவமைப்பாளர்கள் நோக்குகின்றனர்.

மேலும் வெபர் அரசின் நடவடிக்கைகள் பல்வேறாகப் பெருகியுள்ள இக்காலகட்டத்தில் தொழிற்துறைகளிலும், வர்த்தக செயற்பாடுகளிலும் பணியகத்தின் வியாபகத்தினைக் காண முடிகின்றது என்றும் கூறுகின்றார். மேலும் வெபர் பணியகவமைப்பு என்பது மனிதனது ஆற்றல், அறிவு, வளர்ச்சி என்பவற்றின் வழியாக நிறைவேற்ற வந்த ஒரு ஒழுங்கு பணியகம் என்றும், மிகவும் பின் நிலையில் காணப்பட்ட மனிதன் படிப்படியாக இயற்கை நிலையை வெற்றி கொள்வதற்கு அதனைத் தன் தேவைகளுக்கு ஏற்ப மாற்றிக் கொள்வதற்கும் பகுத்தறிவை பயன்படுத்தினான். இந்த பகுத்தறிவின் விரிவாக்கமே பணியகவமைப்பு முறை என்கிறார். இந்த பணியகவமைப்பு முறை இல்லாமல் இன்றைய நாகரிகம் வளர்ந்திருக்க முடியாது எனவும் வெபர் கருதுகிறார். இதன்படி மக்களுக்கு அவர்கள் எவ்வகையிலான சேவையினை செய்ய வருகின்றனர் என்பதனை அறிய முடிகிறது. மேல் மட்டத்தில் இருந்து மக்களுக்கு அனைத்து சேவைகளையும் கொண்டு செல்பவர்கள் பணியகவர்க்கத்தினரே இதனை பெரும்பாலான மக்கள் அறியாது உள்ளனர் இருப்பினும் குறித்த பணிகள் மக்களைச் சென்றடைகின்றது. அத்துடன் சிவில் சமூகத்திற்கு வேறுபாடுகள் அற்ற வகையில் பணிகளை வழங்குகின்றது.

மக்களாட்சி தத்துவத்தின் படி மக்களைச் சீராகவும் செம்மையாகவும் நடாத்துவதற்கு நிர்வாகிகளிடம் அதிகாரம் மட்டுமிருந்தால் போதாது. அவர்களிடம் திறைமையும் வேண்டும். பயிற்சியினாலும், பணியோடு நிலையான



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொடர்பு கொள்வதனாலும் பணியக-வர்க்கத்தினர் நிர்வாகப் பணிக்குரிய திறைமையைப் பெறுகின்றனர். இந்தத் திறைமை இவர்களுக்கே உரிய சொத்தாகும். இவர்களுடைய இந்தத் திறமை-யானது பணி புரிகையில் துல்லியம், வேகம், தெளிவுடைமை, நிர்வாகக் கோவைகளின் அறிவுடைமை, தீர்ப்புரி-மை, ஒற்றுமை, கீழ்ப்படிதல் ஆகிய தன்மைகளின் மூலம் வெளிப்படுவதாக மெக்ஸ் வெபர் குறிப்பிடுகின்றார். இவ்-வாறான தன்மைகளின் அடிப்படையில் இவர்கள் தெரிவு செய்யப்படுவதன் காரணமாகவே மக்களுக்கான பணிகள் திறம்பட பணியகத்தால் கொண்டு சேர்க்-கப்படுகின்றது. மேலும் பிரான்ஸ் நிர்வாக அரசு என அழைக்கப்பட காரணமே பணியகவமைப்பாகும். குறிப்பாக பிரான்-ஸில் ஆட்சி நிலையற்ற தன்மை அதாவது அங்கு அரசியல் அமைப்புகள் அடிக்கடி மாற்றமடைந்த காலப்பகுதி-யில் நாட்டின் செயற்-பாடுகளை சிறப்பாக வழி நடத்தியதும் மக்களுக்கான சேவை-களை சிறப்பாக வழங்கியதும் இப்-பணியகவமைப்பே ஆகும்.

**6-பணியகவமைப்பு தொடர்பில் சிவில் சமூகத்தின் மத்தியில் நம்பிக்கையை ஏற்படுத்துவதற்கு மேற்கொள்ளப்பட வேண்டிய நடவடிக்கைகள்.**

பின்வரும் காரணிகளின் ஊடாக சிவில் சமூகத்தினர் பணியகவமைப்பினை தூற்-றுவதனை அல்லது விமர்சிப்பதனை அல்லது நம்பிக்கையற்ற தன்மைகளை கொண்டிருக்கின்றமையினை நீக்கலாம் அவைகளாவன :

**அதிகாரம் குவிந்து கிடத்தலை தவிர்த்தல்:-** அதிகார குவிப்பே உணர்ச்-சியற்றத் தன்மை, உள்ளூர் மக்களின் தேவைப்பற்றி அறியாமை, நெகிழ்ச்சி-யற்றத்தன்மை என்பவற்றுக்கு காரணம். ஆகவே அதிகாரத்தை பண்முகப்-படுத்துவதன் மூலம் அதிகாரக் குவிப்-பைக் கட்டுப்படுத்தலாம். அத்துடன் சிவில் சமூகம் பணியகவர்க்கத்தின் மீது கொண்டுள்ள விரக்தி நிலையினையும் இல்லாதொழிக்கலாம்.

**விசாரணை சபைகளை அமைத்தல்:-** நிர்வாகிகள் மக்களுக்கு இழைக்கும் தீங்குகளை, உரிமை மீறல்களை, பொது மக்களின் புகார்களை விசாரிப்பதற்கு விசாரணை சபைகளை அமைக்க வேண்டும். இதன் மூலம் பணியக-வர்க்கத்தினர் பொது மக்களுக்கு இழைக்கும் தீங்குகளுக்குப் பாரபட்சமற்ற முறையில் பரிகாரம் வழங்கப்பட வேண்டும்.

**பொது மக்களுக்கும் பணியக-வர்க்கத்தினருக்கும் இடையில் நெருக்-கமான உறவினை ஏற்படுத்தல் :-** பணியகவர்க்கத்தினர் சாதாரண மக்களி-ன் குரல்களுக்கு செவி சாய்ப்பவர்களாக இருக்க வேண்டும். பொதுமக்களை மதிக்காது தன்னை தனியொரு உறுப்-பினராக காட்ட முற்படும் போது அதிகார வர்க்கத்தினர் என பொது மக்கள் இவர்களை தூற்றுகின்றனர். பொது மக்களுக்கு நிர்வாகத்தில் பங்கேற்கும் வாய்ப்பு வழங்கப்பட வேண்டும். இவர்களுக்கு இடையில் சிறந்த இணை-ப்பை ஏற்படுத்த வேண்டும் அதன் மூலம் பணியகவர்க்கத்தினரிடம் காணப்படும் தன்னலம் கலைந்து பொதுமக்களின் ஊழியர்களாக மாறிவிடுவர்.

**நல்லாட்சி பண்புகளை உள்வாங்குதல் :-** வெளிப்படைத்தன்மை, பொறுப்புக் கூறுதல், பொறுப்பான்மை, உள்வாங்கு-தல், சமத்துவம், அதிகாரப் பொறுப்பு-களை பகிர்தல் ஆகிய நல்லாட்சி பண்புகளை பின்பற்றுவதன் மூலமும் பணியகவமைப்பில் காணப்படும் குறை-களைக் களையலாம். அதன் மூலம் சிவில் சமூகத்தின் மத்தியில் நம்பிக்கை-யை ஏற்படுத்தலாம்.

**சாதனை மதிப்பீடு செய்தல் :-** ஆண்டுக்கொருமுறை பணியகவர்க்க-த்தினரின் சாதனைகள், தேர்ச்சி, தகைமைகள், ஆர்வம் தொடர்பாக சாதனை மதிப்பீடு செய்து அதன்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அடிப்படையில் சம்பளம், பதவி உயர்வு வழங்குதல். இதன் மூலம் பணியக-வமைப்பில் உள்ள மக்களுக்கு சேவை-யாற்ற கூடியவர்களுக்கு முன்னுரிமை அளிக்கப்படும். public

**சிவப்பு நாடா முறையை அகற்றல் :-** பணியகவர்க்கத்தினர் மரபுகள், வழி-முறைகள், ஒழுங்குகள் என்பவற்றுக்கு கொடுக்கும் முக்கியத்துவமே சிவப்பு நாடாவாகும் நிர்வாக கருமங்கள் யாவும் இருக்கமான விதிமுறைகளுக்கு உட்பட்டு இடம் பெறுவதால் நீடித்த காலதாமதம் ஏற்படுகின்றது. மேலும் கோவை முறை-க்கு முன்னுரிமையளித்தல், நிர்வாக, நிதி ஒழுங்குகளை இருக்கமாக கடைப்-பிடித்தல், இதனால் பொது மக்கள் தமது அவசரத் தேவைகளை நிறைவேற்ற முடியாது குறுக்கு வழிகளை கையாண்டு தமது கருமங்களை நிறைவேற்று-கின்றனர்.

அரச பணிகளை எளிமையாக்குவதன் மூலம், இலகுபடுத்துவதன் மூலம், நவீன தொழிநுட்ப முறைகளை (E Governance) பின்பற்றுவதன் மூலம் இப்பிரச்சினை-யினைக் களையலாம். அத்தோடு நிர்வாக முறை அதன் குறைபாடுகள், மறுசீர-மைப்பின் அவசியம், புதிய நுட்ப முறை-களை உள்வாங்குதல் ஆகியன தொடர்-பாக ஆய்வுகளை மேற்கொண்டு புதிய அறிவினைப் பெறுவதன் மூலம் பணியக-வமைப்பில் காணப்படும் குறை-களைக் களையலாம். இத்தகைய உபாயங்களின் மூலம் பணியக-வமைப்பில் காணப்படும் குறைகளைக் களைந்து மக்கள் மைய அமைப்பாக அதனை மாற்றலாம். தற்-காலத்தில் பணியகவமைப்பின் செயற்-பாடு சிவில் சமுகத்திற்கு இன்றியமையாத ஒன்றாகும் அதன் மூல-மாகவே அரசின் செயற்பாடுகள் மக்க-ளைச் சென்றடைகின்றன. எனவே பணி-யகவமைப்பின் சிறப்பான செயற்பாட்டின் மூலமே ஒரு அரசின் வெற்றி தங்கியு-ள்ளது என்றால் அது மிகையாகாது.

**உசாத்துணைகள்**


Manojkumar, (2004)**"Comparative Politics And Political Analysis,"** New delhi, Anoma

Nichlasheng (2003 "**public administration and public affairs,** Prentice hall.

சண்முகலிங்கம். க,(2009) **" நவீன அரசியல் சிந்தனை,"** விழுது ஆற்றல் மேம்பாட்டு நிறுவனம்.

சர்ஜன்.ஏ, ரிபான்.ஏ.எம்.(2011) **"சமகால அரசியல் எண்ணக்கருக்கள்"** சாந்தி இல்ல வெளியீட்டகம்.

சோமசுந்தரம். ப,(1973) **"பணியாள் தொகுதி ஆட்சியியல்,"** தமிழ் நாட்டுப் பாடநூல் நிறுவனம்.










Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உண்மை உதயம் طلوع الحق

**இஸ்லாமிய மாத இதழ்**

அல் குர்ஆன், அல் ஹதீஸ் நிழலில்
இஸ்லாத்தை அதன் தூய வடிவில் விளங்கி செயற்படுவதற்காக
புதுப் பொலிவுடன் வெற்றிகரமாக 55 வருடங்களையும் தாண்டி

- அல் குர்ஆன், அல் ஹதீஸ் விளக்கங்கள்
- தேசிய மற்றும் சர்வதேச செய்திகள்
- G.C.E உயர்தரப் பகுதி
- பெண்கள் பகுதி
- கவிதைக் களம்
- சிறுவர் பகுதி



என மற்றும் பல அம்சங்களைத் தாங்கி
ஒவ்வொரு மாதமும் உதயமாகின்றது

**உண்மை உதயம் طلوع الحق**

| | | | |
|---|---|---|---|
| தனிப் பிரதி | - 40.00 | தபால் மூலம் | - 50.00 |
| ஆண்டுச் சந்தா | - 600.00 | தெற்காசிய நாடுகள் | -1100.00 |
| ஐரோப்பிய நாடுகள் | -1500.00 | மத்திய கிழக்கு நாடுகள் | -1400.00 |

தொடர்புகளுக்கு..

விற்பனை முகாமையாளர்
'உண்மை உதயம்'
ஜமாஅத் அன்சாரிஸ் சுன்னதில் முஹம்மதியா
கண்டி வீதி - பறகஹதெனிய.

Tel: 037 2299412
Fax: 037 2299244
Web: www.jasm.lk
E-mail: jasm@sltnet.lk
unmaiudayam@gmail.com


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Dowry and Muslim Community
## IN SRI LANKA

**Abdul Hameed Siyamila**
Final Year,
Department of Law,
University of Peradeniya.

Increasing dowry is a burning issue to entire Muslim community in Sri Lanka presently. As we all known, a heated debate is going on and there are people who advocating for dowry and there are many against too. Dowry is a certain amount of money or property that the bride or her family pays to the groom when a couple is married. It is true, number of female child are killed before they taste the smell of the world. And countless female fetuses are being destroyed every year. Apart from this, extra marital relationships, same sex marriages, abortion, prostitution, suicide, torture against women, late marriages and early marriages are increased. These are the results of dowry in our society.
However, dowry is accepted in some culture but Islam strictly prohibits dowry and it encourages the groom to provide 'Mahar' (Bridal-Gift) to bride as a token of love and assurance to his would be wife at the time of marriage. And payment of 'Mahar' is compulsory in Islam because the marriage cannot be solemnized without this payment. The Holy Qur'an instructs the believers as follows;

***"And give the women (whom you marry) their dower (obligatory bridal gift) happily" (AL-QURAN 4:4)***

It is clear that there is nothing call 'dowry' in Islam and a Muslim father does not have to bother for dowry. In these days when a female child is born, everyone in the family feels that they got something which is going to destroy their all of fortune, money, reputation, happiness and property. It is very shame that, even today the birth of a female child is recognized as a curse like jahiliyyah period. It is becoming a common practice in our Muslim community therefore most of the people wish to destroy their female fetuses. For an example a study has revealed that an estimated one million female fetuses are being destroyed every year in India alone.

Islam is a religion which protects the rights and dignities of women. This is the religion which speaks about liberty and teaches to respect women. But still our fathers and mothers are not happy with female birth. It is a need to know



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

the reasons for this attitude of our Muslim parents. The fact that, parents or guardians of young girls face so many challenges on finding a suitable life partners to their daughters. Even though, those girls are well educated, matured, beautiful and has good knowledge on Islam it is difficult to arrange marriage to them. Further, it seems impossible to find out educated grooms without dowry because, majority of our educated guys and their family members think that, their status or recognition of the society depends on the amount of dowry that they earn. When a young guy finished his studies he demands himself for millions. Sometimes without consent of groom his family decides the amount of dowry. Unfortunately, they just forget orders of almighty and guidance of our prophet Muhammad (peace upon him). Islam says that, a person completes half of the religion when he marries. It is painful; in our society thousands of young Muslim girls are not able to complete the religion because of dowry and marriages are being a day dream to them. Islam instructs believers to marry a woman for her deen not for dowry. Marriages are untouchable goal to many girls because without having thousands or millions even cannot think about marriage in these days.

It is true; marriages are becoming more expensive as a result prostitution and adultery are being cheaply available. The Prophet Muhammad (peace upon him) said:

***"The best of the marriages is one which is least burdensome in the financial sense to the families of the bride and the groom"***

One of the most unfortunate outcomes of the dowry is increasing illegal sexual relationships. There are fair enough examples to increasing extra marital relationships and same sex couples. Same time, violence against women, rate of abortion, poverty, and prostitution are also increasing day by day. Who is going to think about these issues? How many of us know that there are number of girls who are preferred illegal sexual relationships to fulfill their sexual needs? How many of us know every day several young girls end up their life with suicide?

***Definitely, we will be questioned by Allah on the Day of Judgment if we support to develop this situation further.***

There are some arguments that Anti-Dowry Law should be introduced in Sri Lanka to abolish dowry from our society. We must understand that, law only never can bring changes in the society until the people change their attitudes. For an example in India Anti-Dowry Law is implemented and there are several legal arrangements to reduce violations against women but still violations are in highest level and those legal arrangements are not sound.

Moreover, I pen these words with the sense of pain that, dowry/ kaikuli has recognized by Muslim personal law of Sri Lanka. The Muslim Marriage and Divorce Ordinance of 1929 legally recognized 'kaikuli' by including in the marriage register form, a column for the



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

amount of kaikuli to be entered. This legal arrangement deeply explained in the Act of 1951 by defining kaikuli and empowering the Quazi to adjudicate upon claims for kaikuli. However, everyone should understand that there is a need to amend these provisions in accordance with Islamic Sharia Law.

Finally, I would like to mention that, every one of us has a duty to do our best to abolish dowry from our society. It is my humble request, please do not wait until someone else come to change this situation, do your endeavor for better society. You should be the reason for the change that you are talking about. We are capable to give a happy future to our sisters and daughters if we step to abolish dowry. No use on blaming the society, culture and the people, first change your attitude. Every girl who read this article should avoid expensive marriage with dowry and every boy who read this article should avoid dowry for blessings of almighty. It is true, helping hands are better than praying lips.

*With Best Wishes From...*

BRIGHT



ONE OF THE OLDEST AND LEADING INTERNATIONAL SCHOOLS IN KANDY

**BRIGHT International School**

Tel:081-4945894
077-1296056

863/1,
Peradeniya road, kandy



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமூகத்தில் சட்டத்தின் வகிபங்கு
## மெய்யியல் நோக்கில் ஒரு அலசல்

**A.M.M Firnas**
**Assistant Lecturer**
**Department of Philosophy & Psychology**

### அறிமுகம்

மனிதர்கள் தமது காலச் சூழ்நிலைக்கும், வாழ்க்கை முறைகளுக்கும், தேவைகளை நிறைவேற்றிக் கொள்வதற்கும் ஏற்ப உருவாக்கிக் கொண்ட அமைப்பு சமுதாயம் எனப்படும். மனித இனம் நாகரிகத்தில் முதிர்ச்சி பெற்றதன் அடையாளமாகக் கூடி வாழும் சமூக அமைப்பு உருவாகியிருக்க வேண்டும். இவ்வாறு கூடி வாழ ஆரம்பித்த மக்கள் மத்தியில் எழுகின்ற உரிமை, பாதுகாப்பு, பொருளீட்டல், நில உடைமை, தடையற்ற வாழ்க்கை நுட்பம் மற்றும் உணர்வு சார்ந்த சிக்கல்கள் என்பவற்றுக்கு தீர்வு காணும் நோக்கில் அதிகாரமுடைய அரசமைப்பு பழங்காலத்திலிருந்தே தவிர்க்க முடியாத ஒரு அமைப்பாக காணப்படுகின்றது. அவ்வாறான அரசமைப்பு தோற்றம் பெற்ற போதே மக்களை ஒரு கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வருவதற்கான சட்ட விதிகளும் தோற்றம் பெற்று விட்டது. இங்கு அரசமைப்பு என்பது நவீன அரசாங்க முறைகளை மட்டுமின்றி அதிகாரமுடைய ஒரு குழுவைக் குறிக்கின்றது. முன்னர் வாழ்ந்த மக்கள் தமக்கிடையே ஒரு குழுவை அமைத்து அவர்களின் கீழ் விதிகளுக்கேற்ப கட்டுப்பட்டு வாழ்ந்த நிலமையை வரலாறு எமக்குச் சொல்கின்றது. எனவே ஒழுங்கு விதிகள், சட்டம் என்ற விடயம் மனித சமுதாயத்திற்கு இன்றியமையாத ஒன்றாக உள்ளது.

மெய்யியல் தலையிடாத துறைகள் உண்டா? என்று கேட்டால் இல்லை என்றே கூறலாம். உலக தோற்றம், முதல் உலக முடிவு மற்றும் உலகிற்கு அப்பாற்பட்ட விடயங்கள் போன்றவற்றில் மெய்யியல் தனது தலையீடுகளை மேற்கொண்டு வருகிறது. உண்மையை அறிந்து கொள்வதற்கான ஆர்வம், விசாரணை, மனப்பாங்கு என்பவை மெய்யியலுக்கு அடிப்படையாகும். அந்த வகையில் மெய்யியல் சமூகத்தின் கடிவாளமாகச் செயற்படும் சட்டம் தொடர்பாகவும் பல விசாரணைகளை மேற்கொள்கின்றது. அது மட்டுமல்லாமல், சட்டம் சமுதாயத்தில் எவ்வாறு செயற்பட வேண்டும், சமூகத்தின் சீரான ஓட்டத்திற்கு அது எவ்வாறு இயங்க வேண்டும் என்பன தொடர்பிலும் கவனம் செலுத்துகின்றது.

ஓர் ஒழுங்கு எம் மத்தியில் இருக்க வேண்டுமாயின் அங்கு ஒரு வகையான சட்டம் இருக்கின்றது என்பது பொருளாகும். சட்டத்தை வரைவிலக்கணப்படுத்துவோர் “மிக உயர்ந்த முறையில் அமைக்கப்பட்ட, சிறப்புத் தேர்ச்சிமிக்கதான, அரசியல் ரீதியில் முன்னேறியுள்ள, ஒழுங்கமைக்கப்பட்ட சமூகத்தில் காணப்படும் அரசியல் கட்டுப்பாடு” எனக் கூறுவர். சட்டம் அடிப்படையில் விருப்பு, வெறுப்பு, பிணக்கு, ஒழுக்கம், தண்டனை என்பவற்றைச் சார்ந்ததாக அமைந்திருக்கின்றது. இச்சட்ட ஒழுங்கு நீதிமன்றங்கள் மூலமும், நிர்வாகப் படிமுறைகள் மூலமும் செயற்படுவதை அவதானிக்கலாம். உண்மையில் சட்டம் என்றால் என்ன? அது எவ்வாறு உருவானது?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதனுடைய இலக்கு என்ன? அது எவ்வாறு சமூகத்தில் நடைமுறைப்படுத்தப்படுகின்றது? மனிதன் எவ்வாறு சட்டங்களுக்கு அடிமையாகின்றான்? போன்ற கேள்விகள் சட்ட மெய்யியலில் முக்கியம் பெறுகின்றன (ஜமாஹீர் பீ.எம் 2010).

மெய்யியலின் வரலாற்றுப் பரிணாமத்தை நான்கு காலகட்டங்களுக்கூடாக நோக்குவது வழக்கம். அவை கிரேக்க காலம், மத்திய காலம், நவீன காலம், தற்காலம் போன்றனவாகும். எந்த ஒரு விடயத்தையும் இக்கால கட்டங்களூடாக நோக்கும் போது அதன் தத்துவ மாற்றத்தை படிமுறை அடிப்படையில் அறிந்து கொள்ள முடியும். சட்ட மெய்யியலின் வளர்ச்சியையும் வரலாற்று காலகட்டங்களில் தத்துவ அறிஞர்களால் முன்வைக்கப்பட்ட வேறுபட்ட கோணத்திலான கருத்துக்களுக்கூடாக சுருக்கமாக நோக்கலாம்.

## கிரேக்க காலம்

இயற்கைச் சட்டம் பெருமளவில் கிரேக்கர்களின் தத்துவ வாதங்களின் அடிப்படையிலேயே உருவெடுத்துள்ளது. இயற்கை நீதிக் கோட்பாடு (Principle of Natural Justice) அரிஸ்டோட்டில் என்ற தத்துவ ஞானியால் வழங்கப்பட்டதொன்றாகும் (சிவபாதம். மா).

### *சோக்கிரட்டீஸ் (கி.மு 469 – 399):*

கிரேக்க காலத்தில் இடம்பெற்ற மனதை நெகிழ வைக்கும் ஒரு சம்பவத்தை இங்கு நினைவு கூறுவது பொருத்தம் என நினைக்கின்றேன். பிளேட்டோவின் crito என்ற உரையாடலில் பின்வருமாறு அது அமைகின்றது. சொக்கிரட்டீஸ் ஏதென்ஸில் உள்ள இளைஞர்களை கடவுள் தொடர்பான பிழையான கருத்துக்களைக் கூறி அவர்களை நாசம் செய்கிறார் என்று குற்றம் சாட்டப்படுகிறார். அதற்காக அவர் நஞ்சருந்தி மரணதண்டனைக்கு உள்ளாக்கப்பட வேண்டும் என்று தீர்ப்பு வழங்கப்பட்டது. சோக்கிரட்டீஸ் இப்போது நஞ்சுக் கோப்பையை அருந்துவதற்காக காத்துக் கொண்டிருக்கிறார். அவருடைய நண்பரும் மாணவருமான Crito அங்கு வந்து சிறையிலிருந்து தப்புவதற்கான எல்லா ஏற்பாடுகளும் தயாராக உள்ளது என்கிறார். சோக்கிரட்டீஸ் தப்பிக்க வேண்டும் என்பதற்கான பல்வேறு காரணங்களை முன்வைக்கிறார். அதற்கு சோக்கிரட்டீஸ் இச்செயல் நீதியானதா? யார் ஒருவர் குற்றம் சாட்டப்பட்டு தண்டனை அளிக்கப்பட்டரோ அக்குற்றச்சாட்டு தவறானது என்று அவர் நினைத்தாலும் தண்டனையை பெற மறுப்பது சரியானதா? எனக் கேட்கிறார். நான் சட்டத்திற்குக் கட்டுப்பட வேண்டும். நாட்டின் சட்டத்தை நானே மதிக்கவில்லையென்றால் எப்படி? என்று கூறி தனது உயிரை மாய்த்துக் கொள்கிறார் (Martin. P. Golding,1975).

இயற்கையில் கவனம் செலுத்திய மெய்யியலாளர்களை மனிதன் பற்றி சிந்திக்க வைத்தவர் சோக்கிரட்டீஸ். சட்டத்திற்குக் கட்டுப்பட வேண்டியதன் முக்கியத்துவத்தை அவர் தனது காலத்திலேயே உலகிற்கு உணர்த்தியுள்ளார். அது பிழையான சட்டமாக அமைந்தாலும் சரி. (இக்கருத்தே பின்னர் புலனெறிவாதம் உருவாகுவதற்கு வாய்ப்பாக அமைகின்றது). எனவே சமூக ஒழுங்கை நிலை நாட்டும் சட்டம் நமக்கு எதிராக இருந்தாலும் அதற்குக் கட்டுப்பட வேண்டும் என்பதை தத்துவ மேதையான சோக்கிரட்டீஸ் வலியுறுத்தியிருக்கிறார்.

### *பிளேட்டோ (கி.மு 428 - 347):*

பிளேட்டோ எழுதிய நூல்களில் அரசியல் தொடர்பாக மிக முக்கியம் வாய்ந்த நூல்களாக *'குடியரசு'*, *'சட்டங்கள்'* என்ற இரு நூல்களையும் குறிப்பிட முடியும். தனது சட்டங்கள் எனும் நூலில் அவர் கூறுவது சட்டத்திற்கு உட்பட்டு ஆளுகின்ற மனிதர்களும் குற்றம் புரியக்கூடும். விருப்பு, வெறுப்பு, ஆசைகள் இல்லாத மனிதர்கள் இல்லை. அதிகாரத்திலுள்ளவர்கள் தம் விருப்பு வெறுப்புகளிற்கேற்ப சட்டங்களை மாற்றி அடிமைப்படுத்தக் கூடும். எனவே மனிதர்களின் ஆட்சியைக் காட்டிலும்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சட்டங்களின் நேரடி ஆட்சி சிறப்பாக அமையும். மனிதர்களின் கையில் சட்டங்களைத் தருவதை விட சட்டங்களின் கையில் மனிதர்களைத் தருவது நலமுடையதாக அமையும் எனக் குறிப்பிட்ட பிளேட்டோ அரசின் உச்ச அதிகாரத்தை சட்டங்களுக்குத் தந்தார் (நாராயணன்.க. 2003).

பிளேட்டோ தனது இலட்சிய அரசில் சட்டம் எவ்வாறு அமைய வேண்டும் என்பதற்குக் ஆதாரமாக இக்கருத்தை முன்வைத்துள்ளார். எனவே சட்டவாட்சி தொடர்பாக கிரேக்க காலத்திலேயே பிளேட்டோ வலியுறுத்தியுள்ளார். சட்டம் என்பது உயர்வு தாழ்வு பாராது எல்லோரையும் கட்டுப்படுத்த வேண்டும். இது சமூக ஒழுங்கிற்கு வாய்ப்பானது என அவர் கருதினார்.

***அரிஸ்ரோட்டில் (கி.மு 384-322):***
பிளேட்டோவின் மாணவரான அரிஸ்டோட்டில் அவருடைய கல்விக் கழகத்தில் 23 ஆண்டுகள் கல்வி பயின்றுள்ளார். இவர் சட்டம் தொடர்பாக இயற்கை நியதிக் கோட்பாட்டை முன்வைக்கிறார். நீதி, நியாயம் போன்ற பண்புகள் தனிமனிதனுக்கு மட்டுமன்றி அரசுக்கும் உரியதாக அமைதல் வேண்டும். இவர் சட்டம் என்பதை தற்கால சட்டம் சார்பான பொருளில் கையாளவில்லை. மாறாக நியதி முறை என்ற பொருளில் கையாள்கிறார். நியதி என்பதை அரசின் அடிப்படைப் பண்பாகக் கருதுகிறார். சரியான நியதியின் அடிப்படையில் உருவாக்கப்படும் சட்ட திட்டங்களே நீண்ட காலத்திற்கு நின்று பயன்தரும். இயற்கை நியதிக்கு மாறான சட்டதிட்டங்கள் விரைவில் மக்களால் புறக்கணிக்கப்பட்டு மறைந்து போகும். நியதி என்பதை அரிஸ்ரோட்டில் அறிவு, அஞ்சாமை, சகிப்புத்தன்மை, சட்டத்திற்குப் பணிதல் போன்ற நற்-பண்புகளின் கூட்டு என்கிறார். மேலும், இவர் இறைமை அதிகாரமானது ஒருவரிடத்திலோ, சிலரிடத்திலோ, மக்கள் தொகுதியிலோ இருந்தாலும் அதற்கும் மேலாக சட்டத்தின் இறைமை அதிகாரம் இருத்தல் வேண்டும் என்கிறார்

***எப்பிகூரஸ் (கி.மு 341-270) :***
மக்களிடம் காணப்படும் இயல்பான பண்பு இன்பத்தை அடைதல் வேண்டும் என்ற விருப்பமாகும் என இவர் கருதுகிறார். எனவே, அவனது செயல்களைக் கட்டுப்படுத்தும் விதிகளும் வழக்காறுகளும் அவனுக்கு இன்பத்தை அளித்தால்தான் அவை பொருளுடையதாக மாறும். எனவே, சட்டமும் மனித செயற்பாடுகள், விருப்பம் என்பவற்றோடு ஒத்துப்போக வேண்டிய தேவையைக் கொண்டுள்ளது.

சட்டம் என்பது மக்களது வன்முறை, ஒழுக்கமற்ற செயல்கள் முதலியவற்றில் இருந்து தங்களைக் காத்துக் கொள்ளும் பொருட்டுத் தங்களுக்காக ஒரு பயன்கருதிச் செய்துகொண்டுள்ள ஒரு ஒப்பந்தம் அல்லது ஏற்பாடு என்கிறார் எப்பிகூரஸ். எந்த நாட்டிலும் எந்த காலத்திலும் துன்பத்தை ஏற்படுத்தும் விடயங்களைத் தவிர்த்துக் கொள்வதற்காக மக்கள் தங்களுக்கிடையே ஏற்படுத்திக் கொண்ட ஒரு வழக்கம் உண்டே தவிர முழுமையான நீதி அல்லது நெறிமுறை (Absolute justice) என்பதாக ஒன்றும் இல்லை (சூரியநாராயணன் பா. 1976).

***சீனோ (கி.மு 375-265) :***
இப்பிரபஞ்சத்தின் இயக்கத்தை இவர் பேரறிவின் இயக்கமாகக் கருதினார். ஒவ்வொரு பொருளும், உயிரும் பேரறிவால் விதிக்கப்பட்ட விதிகளின் படி இயங்குகின்றன. அந்தப் பேரறிவை அனுமானிக்க முடியுமே தவிர காட்சியளவில் காணமுடியாது. சட்டம், நீதி என்பன பிரபஞ்சத்தின் எல்லாக் கூறுகளிலும் உள்ளன. இது அறிவு சார்ந்த பொது விதி. இது நிலையானது. மாற்ற முடியாதது. மனிதனின் சிற்றறிவு இயற்கை விதிகளில் முரண்பாடுகளைக் காண்கிறது. இயற்கை ஒழுங்கு பற்றியே சிசரோவும் பேசுகிறார். இவர் சட்டத்தையும் அதன் சார்பாகவே நோக்குகிறார்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

***கிரிசிப்பஸ் :***
கிரிசிப்பஸ் சட்டம் என்றால் என்ன? எவ்வாறு அமைய வேண்டும்? என்ற கேள்விகளுக்கு இயற்கைச் சட்டம் (Natural Law) என்ற கோட்பாட்டின் அடிப்படையில் விடை காண்கின்றார். சரியான அறிவே இயற்கையின் சட்டமாகும். எந்த இடத்திலும் எதனையும் நியாயமானதா சரியானதா என்று அறிந்து கொள்வதற்கு ஓர் உரைகல்லாக அல்லது அளவுகோலாக இயற்கையின் சட்டம் அமைந்திருக்கின்றது. மனிதரில் இயற்கையாக அமைந்திருக்கின்ற 'நியாய உணர்வே' சரியான அறிவும் இயற்கையின் சட்டமுமாகும். இதனுடைய கொள்கைகளுள் எதுவும் மாற்றப்பட இயலாது நிலையாக அமைந்திருக்கின்றது. இது அதன் குடிமக்கள் அனைவரையும் கட்டுப்படுத்தவல்லது. இதுவே கடவுளின் சட்டமுமாகும்.

***சிசரோ (கி.மு.106-43) :***
சிசரோவின் சட்டம் தொடர்பான நோக்கும் கிரிசிப்பஸின் கோட்பாட்டை ஒத்ததாகவே அமைகின்றது. இயற்கையின் சட்டம் என்பது இவரது தத்துவமாக அமைகின்றது. உலகம் முழுவதற்கும் பொருந்தக் கூடிய இயற்கையின் சட்டம் ஒன்று இருக்கின்றது. உலகம் முழுவதையும் ஆழ்வதற்காக கடவுள் ஒரு அரசாங்கத்தை ஏற்படுத்தி இருக்கிறார். மனிதருடைய அறிவுடைமை, சமுதாய உணர்வு என்ற இரு பண்புகளும் அவனைக் கடவுளோடு ஒத்த நிலையுள்ளவராக ஆக்கக் கூடியவை.

இவ்விரு பண்புகளிலிருந்தும், கடவுளின் அரசாங்கத்திலிருந்தும் இயற்கையின் சட்டம் தோன்றுகிறது. இந்த இயற்கையின் சட்டமே உயர் அரசு என்ற அமைப்பிற்குரிய அரசியலமைப்புச் சட்டமாகும் (Law Of Nature Is The Constitution For The World State ). இது உலகம் முழுக்க ஒரே வகையாகவும் எல்லா நாடுகளையும், எல்லா மனிதர்களையும் மாற்றத்திற்கு இடமில்லாமல் கட்டுப்படுத்த வல்லதாகவும் இருக்கின்றது. இதற்கு மாறாக இருக்கும் சட்டங்கள் சரியானவை அல்ல; அவற்றைச் சட்டமாகக் கூறவோ செயற்படுத்தவோ இயலாது.

## மத்திய காலம் அல்லது இடைக்காலம்
மத்திய கால மெய்யியலில் பௌதீகவதீதச் சிந்தனைகள், சமய வாழ்க்கை பற்றிய கருத்தாக்கங்கள் முக்கியம் பெறுகின்றன. இக்காலத்தில் இறை இருப்புக்கு தர்க்க ரீதியான நிரூபனங்கள் முன்வைக்கப்பட்டன. குறிப்பாக கிறிஸ்தவத் திருச்சபையும், கிறிஸ்தவ மெய்யியலாளர்களின் சிந்தனைகளும் இக்காலத்தில் மிகுந்த செல்வாக்கு பெற்றுள்ளன. கிரேக்க கால சிந்தனை ஓட்டம் நின்றுவிடாது அதனைத் தொடர்ந்து வந்த மத்தியகாலத்தில் மெய்யியல் சிந்தனையை வளர்த்த முக்கிய அறிஞர்களாக அக்குவானாஸ், அன்ஸலம், அகஸ்தீன் போன்ற முக்கிய அறிஞர்களை குறிப்பிடலாம். இக்காலத்தில் சட்டம் என்பது இறையியலுடன் தொடர்பு படுத்தி விளக்கப்பட்டது.

***சென் அகஸ்டின் (354 – 430):***
சட்டம், அரசியல் மற்றும் மக்களுக்கும் அரசுக்கும் இடையே இவ்வுலகில் உள்ள தொடர்புகள் ஆகிய இவையெல்லாம் முக்கியமானவையாகமாட்டாது.

இறைவனுடைய அடியார்களுக்கு முக்தி அருளுதலும், அவர்களது இடைவிடாத நல்வாழ்த்துக்கள் உலகத்தாருக்குக் கிடைக்கவும் இறைவனால் வகுக்கப்பட்ட திட்டம் எதுவோ அதுவே முக்கியமாகும்.

***அக்குவனாஸ் (1227-1274) :***
சட்டம் என்பது சமுதாயத்தின் நலனைக் கருத்திற் கொண்டவர் எவரோ, அவரால் சமுதாய நலனுக்காக வெளிப்படுத்தப்பட்ட அறிவின் ஓர் ஆணையாகும். (Law Is An Ordinance Of Reason For The Common Good, Promulgated By Him Who Has The Care Of The Community) நான்கு வகையான


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சட்டங்களைப் பற்றி அக்குவனாஸ் பேசுகிறார்.

1.என்றுமுள்ள சட்டம் (External law):- சட்டங்களை எல்லாம் கட்டுப்படுத்துவதும், கடவுளினுடைய மனதில் இருப்பதுமாகிய ஒரு விதி அல்லது திட்டம் ஆகும்.

2.இயற்கையின் சட்டம் (Natural Law) :- பகுத்தறிவுள்ள உயிர் என்ற முறையில் மனிதர்கள் என்றுமுள்ள சட்டத்தின் உதவியைக் கொண்டு தீமைகளைப் பிரித்தறிந்து தமது உண்மையான குறிக்கோளை அடைவதற்கு எந்த விதிகளைக் கையாள்கிறார்களோ அந்த விதிகளே இயற்கையின் சட்டங்கள் ஆகும்.

3.மனிதர்களின் சட்டம் (Human Law) :- மனித அறிவின் உதவியைக் கொண்டு உலகின் சூழ்நிலைகளுக்கேற்ப இயற்கையின் சட்ட விதிகளை அவர்கள் கையாளும் போது அந்த விதிகளே மனிதச் சட்டங்கள் ஆகும்.

4.தெய்வீகச் சட்டம் (Divine Law) :- மனித அறிவின் வரம்புகளையும், குறைபாடுகளையும் நீக்கி மனிதர் தமக்குரிய மறுமை வாழ்வின் நோக்கமாகிய, நிலையான இன்பத்தை அடைவதற்கு வழிகாட்டுவது எதுவோ அதுவே தெய்வீகச் சட்டம் ஆகும். விவிலியத்தின் பழைய ஏற்பாட்டில் கூறப்பட்டுள்ள பத்துக் கட்டளைகள் இவ்வகைச் சட்டங்களில் அடங்கும்.

## மறுமலர்ச்சிக் காலம்

நவீன கால மெய்யியலானது இடைக்கால மெய்யியல் போக்கிலிருந்து விடுபட்டு பகுத்தறிவிற்கும் விஞ்ஞான ரீதியான அணுகுமுறைக்கும் முக்கியத்துவம் அளிக்கின்றது. மேலும் சமூகப் பொருளாதாரத்தில் ஏற்பட்ட புதிய மாற்றங்களுக்கு ஏற்ப அது தனது போக்கினை விரிவு படுத்திக் கொண்டது. இக்காலத்தில் பல முக்கிய தத்துவ மேதைகள் தமது சிந்தனைகளை முன்வைத்துள்ளனர். சுருக்கம் கருதி ஒரு சிலர் மட்டும் நோக்கப்பட்டுள்ளனர்.

***தோமஸ் ஹொப்ஸ் - (கி.பி 1588-1679) :***
16ம் 17ம் நூற்றாண்டுகளில் வாழ்ந்த மாபெரும் அரசியல் சிந்தனையாளர்களில் ஒருவர் தோமஸ் ஹொப்ஸ் ஆவார். சமூக ஒப்பந்தக் கோட்பாடு பற்றிப் பேசியவர்களில் இவர் முதன்மையானவர். இவர் சட்டம், அதன் நோக்கம், இயல்பு, மனிதன் ஏன் அதற்குக் கட்டுப்பட வேண்டும் என்பன பற்றி சட்டத்தை முதன்மைப் படுத்தி தனது கருத்தை முன்வைக்கிறார்.

குடும்பம் என்ற அமைப்பும் அரசு என்ற நிறுவனமும் தலைமை என்ற நிலையும் உருவாகும் முன்னரே இயற்கை நிலையில் மனிதன் அனுபவித்த உரிமையும் அவனைக் கட்டுப்படுத்திய சட்டமும் இயற்கை உரிமை, இயற்கைச் சட்டம் என அழைக்கப்பட்டன. இறை நம்பிக்கை உடையவர்கள் இயற்கைச் சட்டம் இறைவனால் உருவாக்கப்பட்டவை என்பர். மனிதன் தன் பிறப்புரிமைகளை அனுபவிக்க முற்படும் போது ஏற்படும் தடைகளை இயற்கைச் சட்டம் இல்லாமல் செய்கின்றது. மனிதனின் உயிர் வாழ்க்கைக்கும் இன்ப துன்பத்திற்கும் தடையாக அமையும் விடயங்களையும், சூழ்நிலைகளையும் செயல்களையும் தடுப்பது இயற்கைச் சட்டத்தின் முதன்மையான நோக்கம். மனிதனால் உருவாக்கப்படும் சட்டங்கள் இயற்கைச் சட்டத்திற்கு உட்பட்டதாக, மீறிச்செல்லாததாக அமைய வேண்டும் என்று ஹொப்ஸ் கூறுகிறார். இயற்கைச் சட்டமே சமாதானமான ஒரு வாழ்வுக்கு வழி வகுக்கும்.

'எதை பிறர் உனக்குச் செய்யக் கூடாதென்று எண்ணுகிறாயோ அதை நீ பிறருக்குச் செய்யாதே என்பதே இயற்கைச் சட்டத்தின் சுருக்கம்'. எனவே, இயற்கைச் சட்டத்தை ஒருவர் மட்டும் பின்பற்றினால் போதாது. சுயநலப் போக்குடைய மனிதன் தானாக முன்வந்து இயற்கைச் சட்டத்தைப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பின்பற்ற மாட்டான். எனவே எல்லோரும் இயற்கைச் சட்டத்தை பின்பற்றும்படி கொண்டிருந்த சமூக அமைப்பும், அரசியல் நிலையும் முக்கியமாகின்றன. இவ்வாறு பேசிய ஹொப்ஸ் பின்னர் சமூக ஒப்பந்தத்தின் படி மக்கள் தமது உரிமைகளை அரசிடம் ஒப்பந்தம் செய்து கொண்டுள்ளதால் அரசின் சட்டத்திற்குக் கட்டுப்பட வேண்டும். அதுவே உயர்ந்தது என்றும் கூறினார்.

***ஜோன் லொக் (1632-1704) :***
மெய்யியல் வரலாற்றின் அறிவாராய்ச்சியியல் தொடர்பாக எழுந்த பிரச்சினைக்கு அனுபவ முதல் வாதத்தை முன்வைத்தவர் ஜோன் லொக் ஆவார். பிரித்தானியாவின் முக்கிய சிந்தனையாளர் வரிசையில் இவரும் ஒருவர்.

அடிப்படைச் சட்டங்களை நடைமுறைப்படுத்திக் கொண்டதனால்தான் மக்கள் இயற்கை நிலையிலும் சமூக வாழ்க்கை நடத்த முடிந்தது என உறுதியாகக் கூறுகின்றார். அந்த அடிப்படைச் சட்டங்களை இயற்கைச் சட்டங்கள் என்கிறார் லொக். இயற்கைச் சட்டங்கள் மனிதர்கள் அனைவருக்கும் பொதுவாக உள்ள அறிவின் வெளிப்பாடு. எங்கும், எப்பொழுதும் எவருக்கும் அது பொதுவானது, மாறாத இயல்புடையது இது மனிதனால் உருவாக்கப்பட்டதுமல்ல. இயற்கைச் சட்டங்களை மீறுவோரைத் தண்டிக்கும் உரிமை பாதிக்கப்பட்டவருக்குண்டு. ஆனால் அதை ஒரு ஒழுங்கு முறைக்குள் கொண்டு வந்து தண்டனைகளை வழங்க அரசு தேவைப்படுகின்றது.

**கார்ள் மார்க்ஸ் (1818 – 1883) :**
முதலாளித்துவத்திற்கு எதிராகக் குரல் கொடுத்து தொழிலாளி வர்க்கத்தினரின் உரிமைக்காக குரல் கொடுத்து புரட்சியை ஏற்படுத்தியவர் கார்ள் மார்க்ஸ். சமுதாயத்தின் பொருளாதார அமைப்பே பிற அமைப்புக்களின் செயற்பாடுகளுக்குக் காரணமாக அமைகிறது என்பது மார்க்ஸின் தீர்மானம். சட்டம் என்பது அரசு, அரசின் நிறுவனங்கள், பொருளாதார கட்டமைப்பு, சமுதாய அமைப்புக்கள் ஆகியவற்றை சமூகப் பொது நலனைக் கருத்திற் கொண்டு ஒருங்கிணைப்பதாக இருத்தல் வேண்டும். இதில் தனிமனித சட்டங்கள், அரசியல் சட்டங்கள், சமூக சட்டங்கள் என்ற வேறுபாடுகள் தேவையற்றவை.

ஆனால் வகுப்பு வேறுபாடுள்ள சமுதாயத்தில் மேல்தட்டு மக்களின் விருப்பங்களை நிறைவு செய்யும் கருவியாகச் சட்டம் செயற்படுகின்றது. பெரும்பான்மை மக்கள் சுரண்டப்படுவதை நியாயப்படுத்துகின்றது. இத்தகைய சட்டங்கள் மக்களின் சட்டங்கள் என்று கூற முடியாது. சமநிலைச் சமுதாயச் சட்டங்கள் வகுப்பு வேறுபாட்டு சமுதாயச் சட்டங்களிலிருந்து வேறுபட்டவை. அச்சட்டங்கள் அனைத்து மக்களின் தேவைகளையும் நிறைவுசெய்து பொதுவுடமைப் பொருளாதாரத்தின் மூலம் அவர்கள் நலனைக் காப்பதாக இருக்கும். அந்நிலையில் மக்கள் தாமாக முன்வந்து சட்டங்களை விரும்பிப் போற்றுவர் என்பது மார்க்ஸிய நோக்காகும். மார்க்ஸ் தனது காலத்தில் காணப்பட்ட அரசியல் சூழ்நிலைகளைக் கருத்திற் கொண்டு இக்கருத்தை முன்வைத்தார்.

**19ம் நூற்றாண்டு மெய்யியலாளர்கள் (இயற்கை)சட்டம் தொடர்பாக முன்வைத்த சில கோட்பாடுகள்**

***புலனறிவாதக் கோட்பாடு (Theory of Positivism)***

புலனறிவாதச் சிந்தனையானது பழைய புலனறிவாதம், நவீன புலனறிவாதம் என இரு விதமாக முன்வைக்கப்படுகிறது. பண்டைய புலனறிவாதத்தை Augustin, Bentham ஆகியோர் முன்வைத்தனர். இவர்கள் கூறுவது சட்டம் என்பது இறைமையுள்ள அதிகாரத்திடம் (Sovereign Authority) இருந்து வருவதால் கட்டாயம் அதற்குக் கீழ்ப்படிய வேண்டும். ஏன்? எதற்கு?


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போன்ற கேள்விகளைக் கேட்கக் கூடாது. நியாயமற்றதாக இருப்பினும் கட்டாயம் அதனைக் கடைப்பிடிக்க வேண்டும் என்கிறது பண்டைய புலனறிவாதம். விதிகளை இருக்கின்றபடி பின்பற்று-வதாகும். இதனை Rule is Rule என்பார்கள்.

Bentham இயற்கைச் சட்டத்திற்கு எதிரான கருத்துக்களை முன்வைக்கிறார். மனிதன் உரிமையோடு பிறக்கின்றான் என்பதெல்லாம் தவறு. அதிகமான மக்களின் மகிழ்ச்சியைக் கருத்திற் கொண்டு சட்டம் இயற்றப்படுகின்றது ஆகவே நீங்கள் சட்டத்திற்கு கட்டுப்பட வேண்டும் என்கிறார். ஒஸ்டினும் மக்கள் சட்டத்திற்கு கீழ்படிவதற்கு அவர்களது நியாயித்தல் அல்லது பகுத்தறிவு (Reason) மற்றும் கீழ்ப்படிய வேண்டும் என்ற தாண்டுதல் (Impulse) என்பன காரணமல்ல. மாறாக பயமே காரணம் என்றார். அரசின் நோக்கம் சட்ட ஒழுங்கை (Law & Order) பேசுவதும் மீறுபவர்களுக்கு தண்டனை வழங்கு-வதுமாகும்.

கைத்தொழில் புரட்சிக் காலத்தில் இங்கிலாந்தில் இக்கோட்பாடு முன்வை-க்கப்பட்டதால் அக்காலத்தில் ஏற்றுக் கொள்ளப்பட்டது. பின்னர் ஏற்பட்ட மனித உரிமைகள் தொடர்பான புரட்சிகள் மனிதனின் நியாயம் காணும் உணர்வு என்பன கவனத்தில் கொள்ளப்பட்டதால் நவீன புலனறிவாதம் தோற்றம் பெற்றது. Prof. Hart, Ronarld Dworkin ஆகிய இருவரும் புலனறிவாதத்தை புதிய முறையில் அணுகினர். பண்டைய புலனறிவாதம் கூறுவது போல பயம் தான் மனிதர்களைக் கீழ்படியச் செய்கின்றது எனும் கருத்தை ஏற்றுக் கொள்ளவில்லை. பொதுநலன் (General Morality), தம்மீதான கடப்பாடு (Under Obligation) என்பவற்றுக்குட்பட்டு மக்கள் சட்டத்தைப் பின்பற்றுகின்றனர். மக்களு-க்கு சிந்தித்துச் செயற்பட இடமுண்டு என்றும் கூறியுள்ளனர்.

Prof. Hart துப்பாக்கி மனிதன் கோட்பாட்டை (Gun Man Theory) உதாரணமாக எடுத்துக் காட்டுகிறார். துப்பாக்கி மனிதன் வங்கிக் கணக்-காளரைப் பணத்தை தரும்படி துப்பாக்கி முனையில் மிரட்டிக் கேட்கிறான். இங்கு வங்கிக் கணக்காளர் சிந்திக்க இடமின்றிச் செயற்படுகின்றார். பண்டைய புலனறிவாதத்தின் படி பயத்தினாலேயே சட்டத்திற்குக் கீழ்படிகின்றோம் என்றால் இந்த வங்கிக் கணக்காளர் போலவா செயற்ப-டுகின்றனர்? என்று கேள்வி எழுப்பி புலனறிவாதத்தை மனித பண்ப-டிப்படையில் நெகிழ்வுக்குட்படுத்துகின்-றார். புலனறிவாதம் என்றால் எல்லாக் கட்டளைகளுக்கும் பணிய வேண்டும் என்றல்ல. கட்டளை எங்கிருந்து வருகி-ன்றது என்பதைப் பார்க்க வேண்டும். துப்பாக்கி மனதனுக்கு வங்கிக் கணக்காளர் பணிவதற்கும், சட்டத்திற்கு மக்கள் பணிவதற்கும் வித்தியாசம் உண்டு. கீழ்ப்படிவதற்கு முன்னர் சட்டம் என்பது முறையான அதிகாரத்திடமிருந்து வருகின்றதா? ஏன் பணிய வேண்டும்? என்று கேள்வி கேட்க முடியும்.

### *அமெரிக்க யதார்த்த வாதம் (The American Realism)*

அமெரிக்க யதார்த்த வாதத்தை முன்வைத்தவர் Justice Oliver Homes ஆவார். இவ்வாதம் கூறுவது நீதிபதி தாங்கள் சரியென்று கருதுகின்ற தீர்ப்பை வழங்க முடியும். நீதிபதி எதைச் சொல்கிறாரோ அதுதான் சரியான அரசியலமைப்பு அல்லது சட்டம். யதார்த்தவாதம் என்று சொல்லக் கார-ணம் இவர்கள் Black Letter Approachஐ நிராகரிக்கின்றனர். அதாவது ஏற்கனவே சட்டம் புத்தகங்களில் எழுதப்பட்டு அதையே தொடர்ச்சியாக பின்பற்றி வருவதை யதார்த்தவாதம் நிரா-கரிக்கின்றது. ஏனெனில் சமூகம் என்பது மாற்றத்திற்கு உள்ளாகிக் கொண்டி-ருப்பது. சமூகத்தோடு இணைந்துள்ள ஏனைய விடயங்களும் காலத்துக்குக் காலம் மாற்றத்திற்குள்ளாகின்றன. எனவே சட்டமும் இயங்கியல் தன்மையுடையதாக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருக்க வேண்டும். உதாரணமாக Right to Life இற்கு 1905ல் கொடுக்கப்பட்ட விளக்கமே இன்றும் கொடுக்கப்படுமாயின் அதனால் எவ்வித பயனுமில்லை. நீதிபதிகள் ஏற்கனவே தீர்க்கப்பட்ட வழக்குகளைக் கருத்திற் கொண்டு தீர்ப்புக்களை வழங்காமல் தமக்கு முன்னால் உள்ள வழக்கிற்கு பொருத்தமான தீர்ப்பை வழங்க வேண்டும். குறிப்பிட்ட சந்தர்ப்பத்தில் என்ன சட்டம் பொருத்தமோ அதனை வெளியிட வேண்டும் என்கிறது யதார்த்த வாதம்.

### *சமூகவியல் கோட்பாடு – (The Sociology Theory)*

இது 1950ல் இருந்து மிக பிரபலமானதோர் அணுகுமுறையாகும். சமூகவியல் கோட்பாடு தொடர்பாக பேசியவர்களில் Max Weber, Roscoe Pound, August Comte, Jhearing, Ehrlich போன்றோர் முக்கியம் பெறுகின்றனர். சட்டம் அரசினால் ஆக்கப்பட்டாலும் அது அமுல்படுத்தப்படுவது சமூகத்திலாகும். அதன் பிரதிவிளைவுகளை அனுபவிப்பவர்கள் மக்களாகும். எனவே அந்த மக்கள் நோக்கில் சட்டம் எவ்வாறு அமைய வேண்டும் என இக்கோட்பாடு கவனம் செலுத்துவதால் முக்கியம் பெறுகின்றது.

சட்டத்தை ஆக்குவதன் மூலம் அதன் விளைவாக அடைய நினைப்பதை எங்களால் அடைய முடியுமா? என்ற கேள்விக்கு விடை காண்பதற்கு இந்த சமூகவியல் அணுகுமுறை முக்கியமானதாகும். சட்டம் மனிதனோடு சம்பந்தப்படுகின்றது. மனிதன் சமூகத்தின் ஓர் உறுப்பினன். அவன் ஒரு சமூகப் பிராணி என்பதால் சட்டம் சமூகத்தோடு தொடர்பு படுகின்றது. ஒரு மனிதனின் நடத்தை, பழக்க வழக்கம் யாவும் சமூகத்தினால் ஒழுங்கு படுத்தப்படுகின்றன. ஒவ்வொருவரின் நடத்தைக்கும் சமூகத்திற்கும் நெருங்கிய தொடர்புண்டு. எனவே, சமூக பழக்க வழக்கங்கள், கலாசாரம் என்பன தான் சட்டத்தின் உருவாக்கத்திற்கு காரணமாக அமைகின்றன. எந்தளவிற்கு விதிகள் அல்லது நியாயங்கள் சமூக பழக்கங்களில் இருந்து அந்நியப்படுத்தப்படுகின்றதோ அந்தளவிற்கு அது செயற்கைத் தனமானதாக அமையும். எனவே, சட்டம் சமூக நடத்தைகளைக் கவனத்திற் கொண்டு உருவாக்கப்பட வேண்டும். இல்லாவிட்டால் அது மீறல்களுக்கு உள்ளாகும். எழுத்தில் உள்ள சட்டத்தை விட அது எவ்வாறு சமூகத்தில் தாக்கத்தை ஏற்படுத்துகின்றது என்பதையே சமூகவியல் அணுகுமுறையாளர்கள் கவனத்தில் கொள்கின்றனர். இன்று சட்டம் உருவாக்குபவர்கள் கடந்த காலத்தில் சட்டக் கோட்பாடுகள் சமூகத்தில் ஏற்படுத்திய தாக்கங்கள் என்ன என்பதை அவதானித்து சட்டங்களை உருவாக்க வேண்டும். ஒரு சட்டம் உருவாக்கப்-படும் போது இன்று இருக்கின்ற பிரச்சினை என்ன? அதற்கு எவ்வாறு தீர்வு காணலாம்? ஆகிய இரு விடயங்களையும் கருத்திற் கொண்டு உருவாக்கப்பட வேண்டும். இதற்கு சமூகவியல் நோக்கிலான அவதானிப்பே வழிவகுக்கும்.

சமூகவியல் அணுகுமுறையின் படி சமூக நலத்தின் பின்னணியில் தான் தனிநபர் நலம் பார்க்கப்படும். தனிநபர் நலன் என்பது இல்லாமல் சமூக நலன் அடையப்பட முடியாது. சட்டத்தின் நோக்கம் சமூகத்தின் நலனைப் பாதுகாப்பது. சமூகத்தின் நலனைப் பாதுகாக்க வேண்டுமாயின் தனிநபர் நலன் பாதுகாக்கப்பட வேண்டும்.

### முடிவுரை

சட்டமானது சமூக இயக்கத்திற்கு அத்தியவசியமான ஒன்று என்பது எல்லாக் காலத்திலும் வலியுறுத்தப்பட்ட ஒன்றாகும். ஆரம்ப காலத்தில் அறிஞர்கள் பலரும் இயற்கைச் சட்டத்தையே வலியுறுத்தி வந்துள்ளனர். இது இயற்கைச் சட்டக் கோட்பாடாக வளர்ச்சி பெற்றது. இக்கோட்பாடு காலவோட்டத்தில் வலுவிழந்து சென்றாலும் இன்றும் அதன் முக்கியத்துவம் காணப்படுகின்றது. மத்தியகால மெய்யிய-



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

லாளர்கள் இறைச் சட்டத்திற்கு முக்கியத்துவம் கொடுத்து இயற்கைச் சட்டத்தோடு இணங்கிச் செல்லக் கூடிய கருத்துக்களை முன் வைத்துள்ளனர். நவீன காலத்தில் சமயத்தில் இருந்து விலகி மனித சமூகத்திற்கு முக்கிய-த்துவம் கொடுக்கப்பட்டு சட்டம் தொடர்-பான கருத்துக்கள் முன்வைக்க-ப்பட்டுள்ளன. 19ம் நூற்றாண்டில் இருந்து சட்டத்தை வேறுபட்ட கோணத்தில் அணுகுவதற்கு பல கோட்பாடுகள் தோற்றம் பெற்று நவீன கருத்துக்களை பிரதி பலிக்கின்றன.

அவரவர் வாழ்ந்த கால சூழ்நிலைக் கேற்பவே அறிஞர்கள் கருத்துக்களை முன்வைத்துள்ளதால் இங்கு கூறப்-பட்டுள்ள அனைத்து கோட்பாடுகள், கருத்துக்கள் என்பவற்றிற்கு எதிராகப் பல விமர்சனங்களும் அறிஞர்களால் முன்வைக்கப்பட்டுள்ளன. அவை இங்கு நோக்கப்படவில்லை. மேலும் ஒவ்வொரு அறிஞர்களின் கருத்துக்களும் இங்கு மிகச் சுருக்கமாகவே நோக்கப்பட்டுள்ளன.

எது எப்படி இருப்பினும் சமூகத்தின் சீரான இயக்கத்திற்கு சட்டம் இன்றிய-மையாதது என்பதை உணர முடிகின்றது. எல்லா தத்துவ மேதைகளும் இயற்கைச் சட்டத்தை வலியுறுத்துவதனால் தற்கால சட்ட தத்துவ அறிஞர்கள் கூட இயற்கைச் சட்டங்களுக்கு மாறாக எந்தச் சட்டங்களையும் இயற்றுதல் கூடாதென வாதிடுகின்றனர்.

**துணை நின்றவை.**


Freeman. M.D.A, (2010), 'Lloyds Introduction to Jurisprudence – 8th edition, sweet & mexwell

Martin P. Golding, (1975), Philosophy of Law, Prentice Hall, USA

அனஸ் எம்.எஸ்.எம், (2006), 'மெய்யியல் - கிரேக்க காலம் முதல் தற்காலம் வரை', குமரன் பதிப்பகம், கொழும்பு.

ஜமாஹிர் பீ.எம், (2012), 'மெய்யியல் பிரச்சினைகளும் பிரயோகங்களும்' நதா வெளியீடு, கண்டி

லலிதாலட்சுமி. சி, (1976), 'தற்கால மேல்நாட்டு அரசியல் சிந்தனை', தமிழ் நாட்டுப் பாடநூல் நிறுவனம், சென்னை.

நடராசன். பெ, (1973), 'அரசியல் கோட்பாடுகள்', தமிழ் நாட்டுப் பாடநூல் நிறுவனம், சென்னை.

சூரிய நாராயணன். பா, (1976), 'மேல் நாட்டு அரசியல் கோட்பாடுகள்' தமிழ் நாட்டுப் பாடநூல் நிறுவனம், சென்னை.

நாராயணன். க, (2003), 'அரசியல் சிற்பிகள்', மாரி பதிப்பகம், புதுச்சேரி

செல்வகுணபாலன். செ, (2005), 'சட்டமும் அதன் பின்னணியும்', குமரன் பதிப்பகம், கொழும்பு

http://www.iep.utm.edu/law-phil/http://plato.stanford.edu/entries/lawphil-nature/











Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்வியல் நெருக்கடிகளும்
# உளவளத்துணையின் தேவையும்

**A.G Saifullah**
**Final Year,**
**Department of Philosophy & Psychology,**

பிரச்சினை இல்லாத மனிதர்களே உலகில் கிடையாது. பிரச்சினைகளும் சிக்கல்களும் அவரவர் நிலைகளுக்கு ஏற்ப வந்தடைந்து கொண்டே இருக்கின்றன. தற்கால மனிதன் நாகரீகத்தின் உச்சத்தை தொட்டுவிட்டான், வாழ்வின் பூரணத்துவத்தை வென்றுவிட்டான் என்றெல்லாம் பொதுப்படையாக பேசப்படினும் பிரச்சினைகள், இன்னல்கள் தொடாத மனிதனை நாம் எங்கும் காண முடியாது. விஞ்ஞானத்தின் அதீதமான வளர்ச்சி, நாகரீக முன்னேற்றம், இயந்திரமயப்படுத்தப்பட்ட மனித வாழ்வு, தொடர்பாடலில் ஏற்பட்டுள்ள வளர்ச்சி, அதிகாரத்தை கைப்பெற்றிக் கொள்வதில் தேசங்கள் தொடக்கம் தனி மனிதன் வரைக்குமான போட்டி நிலைமை, சமூகக் கட்டமைப்பில் அமைப்பில் ஏற்பட்டுள்ள மாற்றங்கள் என்பன மனித வாழ்வின் அனைத்து நிலைகளிலும் பிரச்சினைகளையும் உணர்ச்சிச் சிக்கல்களையும் தோற்றுவிக்கின்றன. மனிதன் அன்றாடம் பிரச்சினைகளுடனேயே வாழ்ந்து கொண்டிருக்கின்றான்.

சிக்கல் என்பதனை வரமாக பெற்ற மனிதர்களில் அவற்றுக்கு தைரியமாக முகம் கொடுத்து வாழ்வில் முன்நோக்கிச் செல்பவர்களும் உண்டு. பலர் அவற்றுக்கு முகம் கொடுக்க முடியாமல் மன உளைச்சலுக்கு ஆளாகி பிரச்சினைகளுக்குள் சிக்கித் தவிப்பதும் உண்டு. அவ்வாறானவர்கள் உள ரீதியாக பாதிக்கப்பட்டு தமக்குக் கிடைக்கும் சந்தர்பங்களை பயன்படுத்தி தீர்மானங்களை எடுப்பதில் சிரமப்படுவர். சிக்கல்களை எதிர்கொண்டு வாழ்க்கையை முன்னெடுத்துச் சென்று தமது இலக்கினை அடைய முடியாதவர்களாக காணப்படுவர். உளவளத்துணை (Counselling) வழிகாட்டல் என்பது மனித வாழ்வில் இயல்பாக உருவெடுக்கும் பிரச்சினைகளுக்கு முகம்கொடுக்க முடியாமல், உளவியல் ரீதியாக தளர்வடைந்து தவிப்பவர்களுக்கு வழிகாட்டும் ஓர் செயன்முறையாகும். வழிகாட்டல் என்றால் அது ஆலோசனை கூறுவது போன்று குறுகிய நோக்கம் கொண்ட செயற்பாடு அல்ல மாறாக அது பிரச்சினையுடன் வருபவரின் உள்ளார்ந்த திறன்களை சுட்டிக்காட்டி அவற்றை வெளிக்கொண்டு வந்து அந்த நெருக்கடிக்கான தீர்வை அவரே கண்டு முன்கொண்டு செல்வதற்கு உதவும் செயற்பாடாகும்.

*"பிரச்சினையுடன் வரும் சேவை நாடியை வரவேற்று அவருடன் உரையாடி அவரது நம்பிக்கையை பெற்று பின்னர் அவருடைய பிரச்சினைகளை பற்றிக் கூற சந்தர்ப்பத்தினை வழங்கி அதனூடாக அவரது பிரச்சினையின் ஆழத்தினை அறிந்து அதன் உண்மை நிலையை அவருக்குப் புரியவைத்து அவருக்குள் மறைந்திருக்கும் உள்ளார்ந்த திறன்களையும், ஆற்றல்களையும் எடுத்துக்காட்டி நம்பிக்கையீனத்தை இல்லாமல் செய்து பிரச்சினைக்கான தீர்வினை அவரே கண்டறிய உதவி, அதனை சரியான முறையில் செயற்படுத்துவதற்கு வழிகாட்டும் அறிவியல் ரீதியான செயற்பாடு உளவளத்துணை எனப்படும்"*

உளவள ஆலோசனைச் செயன்முறையானது இன்று நேற்று தோற்றுவிக்கப்பட்ட விடயமன்று. மாறாக தற்-



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கால குடும்பக் கட்டமைப்புக்களும், இயந்திரத்தை அடிப்படையாகக் கொண்ட ஆன்மீக நிலையில் பின்னடைவான சமூக நிலைகளும் உளவளத்துணை வழிகாட்டல் செயன்முறையின் முறையான தேவையை தோற்றுவித்துள்ளது. நாம் சிறிது முன்னோக்கிப் பார்த்தால் குடும்பத்தில் மூத்த உறுப்பினர், வயதில் முதிர்ந்தவர்கள், மதப்போதகர்கள் இத்தகைய நடவடிக்கையை மேற்கொண்டு வந்துள்ளதை அவதானிக்க முடியும். தற்கால சமூகக் கட்டமைப்பிலும் குடும்ப அமைப்பிலும் அதற்கான வாய்ப்புக்கள் மிகவும் குறைவாகும். இதன் காரணமாக உளவியலின் ஒரு பகுதியாக தோற்றம் பெற்ற ***உளவியல் சார் உளவளத்துணை*** (Psychological Counselling) என்ற அறிவியல் துறையானது இன்று தனித் துறையாக மாற்றமடைந்து நிற்கின்து.

இதன்படி உளவள ஆரோக்கியத்தை மேம்படுத்தக்கூடிய உதவியாளர்கள் தற்போது ***"தொழில்வாண்மையான உளவளத்துணையாளர்"*** (Professional Counsellor) என்று அழைக்கப்படுகின்றனர். அவர்கள் பல்வேறு துறைசார்ந்த தெளிவையும் உளவியல் அறிவையும் பெற்றிருப்பர். மேலும் உளவளத்துணைக்கான சிறப்பான திறன்களையும் அச்செயற்பாட்டுக்கு தேவையான கொள்கைகள், அணுகுமுறைகள், நுட்பங்கள், சிகிச்சை திட்டமிடல் முறைகள் பற்றிய ஆழ்ந்த அறிவையுடையவர்களாய் காணப்படுவர். அதேபோல் சிறந்த நற்பண்பு, ஆரோக்கியம், சமூக உணர்வு, அறிவாற்றல், ஆன்மீக ஈடுபாடு, மற்றவர்களின் உணர்வுகளை புரிந்து நடக்கும் ஆற்றல் போன்ற பண்புகளையும் கொண்டிருப்பர்.

தற்கால சூழ்நிலையில் உளவளத்துணையின் அவசியப்பாட்டினை விளங்கிக் கொள்வதன் மூலமாக அது தொடர்பான சிறந்த விழிப்புணர்வை பெற்றுக் கொள்ள முடியும் என்பது உண்மையாகும். இன்று நாளுக்கு நாள் சமூகக் கலாசாரக் கட்டமைப்புக்களும் நாகரீகங்களும் மாற்றமடைந்து கொண்டிருக்கின்றன. இதனால் மனிதர்கள் தமது பாரம்பரிய, கலாசார, பண்பாடுகளில் இருந்து தூரமாகின்றனர். இளையோர்களுக்கும், முதியோர்களுக்குமிடையே முரன்பாடுகள் தோன்றுகின்றன. எனவே அதிவேகமாக மாற்றமடைந்து கொண்டு வரும் சமூக, கலாசார, நவீன மாற்றங்களுக்கு ஏற்ப தம்மை தயார் செய்ய முடியாதவர்களுக்கு வழிகாட்டவும், நவீனம் என்று நாகரீக மோகம் கொண்டு யதார்த்தத்தை விட்டு விலகி வாழ்வோரை செம்மைப்படுத்தவும் உளவளத்துணை அவசியமாகும்.

மேலும் தற்காலத்தில் காணப்படும் குடும்பக் கட்டமைப்புக்கள் ஆரம்ப காலங்களில் காணப்பட்டது போன்று உடல், உள, சமூக மற்றும் ஆன்மீக ஆரோக்கியம் கொண்ட கூட்டுக் குடும்ப அமைப்பைப் போன்று அல்ல, அத்தோடு அந்தக் குடும்ப அமைப்புக்கான சந்தர்பங்களும் தற்காலத்தில் இல்லை. தவிர்க்க முடியாத இக்குடும்ப அமைப்பினால் குடும்ப உறவுகளுக்கிடையே விரிசல் நிலை, முதியோர் ஓரங்கட்டப்படல், பிள்ளைகள்-பெற்றோர், கணவன்-மனைவி ஆகியோருக்கிடையில் உடன்பாடின்மை என்பன குடும்ப வாழ்வில், உறவுகளில் பலவீனத்தை ஏற்படுத்துகின்றது எனவே இவ்வாறான சிக்கல்களை தீர்த்து சிறந்த ஆரோக்கியமான குடும்பங்களைக் கட்டியெழுப்ப உளவளத்துணை மிகவும் அவசியமாகும்.

நவீன தொழிநுட்பமும், தொடர்பாடலில் ஏற்பட்ட முன்னேற்றமும் மனிதர்களை உணர்வற்ற நிலையில் ஆக்கியுள்ளது. அதிகமான நேரத்தை இயந்திரங்களுடனும், கருவிகளுடனும் செலவிடும் மனிதன், மனிதர்களுடன் கொள்ளும் உணர்வுரீதியான உறவில் தோல்வியடைகின்றான். அவனால் சிறந்த முறையில் உறவுகளையும், தொடர்புகளையும் பேண முடியாத நிலைக்குத் தள்ளப்படுகின்றான், ஆன்மீகத்திலும் தளர்வடைந்து மன அழுத்தத்துக்கும், விரக்தியான வாழ்வுக்கும் ஆளாகின்றான்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனவே இவ்வாறான மனிதனை மனிதனாக்குவதற்கு உளவளத்துணை வழிகாட்டல் அவசியமாக உள்ளது. அதே போன்று இயற்கை அழிவுகள், மனிதர்களால் விளைவிக்கப்படும் அழிவுகள், போராட்டங்கள், இன மோதல்கள் என்பனவும் தற்காலத்தில் மனிதனுடைய உள ஆரோக்கியத்துக்கு சவாலாக அமைகின்றது இவற்றின் பாதிப்புக்களில் இருந்து மனிதர்களை மீட்டு சிறந்த வாழ்வுக்கு வழிகாட்ட உளவளத்துணை அவசியமாகும்.

தற்காலத்தில் பிள்ளைகள் பெற்றோரை விட்டு தூரமாக்கப்படல், துஷ்பிரயோகத்துக்கு உள்ளாக்கப்படல் என்பன அவர்களின் உள ஆரோக்கியத்தில் பாதிப்பை ஏற்படுத்துகின்றது. கல்வி கற்றலிலும் தாக்கத்தைச் செலுத்துகின்றது. அதே போல் இளைஞர்கள் காதல் வயப்படல், பாலியல் தூண்டல்களுக்கு உள்ளாகுதல், போதை பாவனைக்கு அடிமையாதல், நவீன தொடர்பாடல் சாதனங்களின் பாவனைக்கு அடிமையாதல், சமவயது நண்பர்களால் தீய செயல்களின்பால் அழுத்தப்படல், யதார்த்தம் மறந்து கற்பனையில் வாழ்தல் என்பன அவர்களது கல்வியிலும், உறவுகளிலும், உளவியல் ஆரோக்கியத்திலும் பாதிப்புச் செலுத்துகின்றது. எனவே சிறுவர்களையும், இளைஞர்களையும் வழிப்படுத்தி வளமான சமூகத்தை உருவாக்க உளவளத்துணை மிகவும் அவசியமாகும். அதன் நோக்கமாகவே இன்று பாடசாலைகளில் உளவள ஆலோசகர்கள் காணப்படுகின்றனர்.

தற்காலத்தில் மனிதர்களை ஆட்கொள்ளும் நோய்கள் மனிதர்களை உடல் ரீதியாகவும் உளவியல் ரீதியாகவும் தளர்வடையச் செய்கின்றது. மன அமைதியின்மைக்கும், கவலை, தூக்கம் இன்மை, மன அழுத்தம் என்பனவற்றுக்கும் ஆளாக்குகின்றது. ஆதரவற்றவர்கள் அதில் மிகவும் பாதிக்கப்படுகின்றனர். அவ்வாறே மனிதன் அன்றாட வாழ்வில் எழும் பிரச்சினைகளின் வீரியத்தினால் *உளநெருக்கீடு, பயம், பதகளிப்பு, உளச்சோர்வு, மனவெழுச்சிசார் சிக்கல்கள், ஆளுமைச் சிக்கல்கள், பிறழ்வான உளநடத்தைகள், தற்கொலை உணர்வு* என்பவற்றுக்கு ஆளாகின்றான். எனவே இவ்வாறான உளவியல் பிரச்சினைகளில் இருந்து தனி மனிதர்களைக் காப்பாற்றி ஆரோக்கியமான வாழ்வுக்கு வழிகாட்ட உளவளத்துணை அவசியமாகும்.

தொழில் இன்மை, வறுமை, தொழிலில் திருப்தியின்மை என்பன போன்ற காரணங்களினால் எழும் உளவியல் நெருக்கீடுகளுக்கும், அதீதமான பாலியல் எதிர்பார்க்கை மற்றும் அதில் திருப்தி இன்மை போன்றவற்றால் தோன்றும் குடும்ப மற்றும் உளவியல் சிக்கல்களுக்கும் வழிகாட்டுவதோடு, சமூகத்தில் குற்றச் செயல்களில் ஈடுபடுபவர்களையும், சமூக விரோதமான செயல்களில் பங்கு கொள்பவர்களையும் அவர்களது பிரச்சி-னைகளை கேட்டறிந்து அவர்களுக்கு சீர்திருத்தத்தை காட்டுவதும் உளவளத்துணையின் தேவையாகவே நோக்கப்படுகின்றது.

இவ்வாறாக உளவளத்துணை தற்காலத்தில் மிகவும் அவசியமான, மனிதனின் வளமான வாழ்வுக்குத் தேவையான ஓர் துறையாக மாறியிருப்பதைக் காண முடியும். எனினும் உளவளத்துணை தொடர்பாகவும் ஒரு பிரச்சினை ஏற்பட்டு உளவளத்துணையாளரின் உதவியினை நாடிச் செல்பவர்கள் தொடர்பாகவும் சமூகத்தாரில் பிழையான மதிப்பீடுகள் காணப்படுகின்றன. படித்தவர்கள் கூட இது தொடர்பாக சிறந்த தெளிவற்றுக் காணப்படுகின்றனர். அவ்வாறான கருத்துக்கள் கட்டாயமாக நீக்கப்பட வேண்டும்.

உளவளத்துணையானது பிரச்சினைக்குரியவரை வாழ்வின் வெற்றியின் பால் ஆற்றுப்படுத்தும். மாறாக அது அவர்களை பிழையான வழியில் இட்டுச் செல்லும் செயற்பாடோ, உளவளத்துணையாளரின் விருப்பத்தின் படி


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சேவை நாடியை வழிப்படுத்தும் முறை-யோ அல்ல. உளவளத்துணை-யாளர்களுக்கு என்று தொழில் தர்மம் (Professional Ethics) இருக்கின்றது அவற்றை அவர்கள் சரியான முறையில் கடைப்பிடிக்கக் கடமைப்பட்டுள்ளனர்.

உளவளத்துணை சேவையை நாடிச் செல்பவர்களை மனநிலை பாதிக்கப்பட்டவர்கள், பைத்தியக்காரர்கள் என்று கூறும் வழக்கமும், அவர்களை இழிவாகப் மதித்து ஓரங்கட்டும் நிலைகளும் சமூகத்தில் காணப்-படுகின்றது. இதன் காரணமாக தம்மால் தீர்க்க முடியாத பிரச்சினைகள் இருந்தும் உளவளத்துணை சேவையை நாடிச் செல்வதற்கு அச்சம் கொண்டு தமக்-குள்ளே பிரச்சினைகளை அடக்கி வைத்து பின்னர் அது பாரிய உளப்-பிரச்சினையாக உருவெடுத்து பாதிக்கப்-படுபவர்களும் உண்டு. எனவே உளவளத்துணை தொடர்பாக சிறந்த விளக்கத்தைப் பெற்று அது தொடர்பான தப்பான மனப்பாங்குகளை சமூகத்தில் இருந்து களைவது நமது கடமையாகும்.

இன்று நமது நாட்டின் அரசினை நோக்கும் போது உளவளத்துணைக்கு மிகவும் முக்கியத்துவம் கொடுக்கின்ற-மையை காண முடியும். அதற்கான சிறப்பு அமைப்புக்கள் அரசினால் உருவாக்கப்பட்டு உளவளத்துணை சேவையினையும் அதற்கான இணைப்புச் செயற்பாடுகளையும் மேற்கொண்டு வருவதனைக் காணமுடியும்.

அந்த அமைப்புக்களின் நோக்-கமாக "*சமமான ஆளுமையுடன் கூடிய ஆரோக்கியமான சமூகத்தைக் கட்டி-யெயழுப்புதல்*" என்பதாகும். அதாவது உளவியல் முறைகளினூடாக நபர்களின் ஆளுமை விருத்தி, சமநிலையற்ற உள-நிலைமைகளைத் தவிர்த்தல், தலைமை-த்துவம் வழங்கல், அறிவூட்டல், உள ஆரோக்கியத்தை மேம்படுத்தல் என்பன-வற்றின் ஊடாக ஆரோக்கியமான பிரஜைகளை உருவாக்கி தேசிய அபிவிருத்தியில் இணைப்பதே இதன் நோக்கமாகும்.

இவ்வாறாக நோக்குகின்ற போது பிரச்சினைகளினதும், சிக்கல்களினதும் வீரியமிக்க தற்கால உலகத்தில் மனிதர்-கள் ஆளுமைகளை விருத்தி செய்து ஆரோக்கியமான உள நலத்தைப் பெற்று, நம்பிக்கையுடன் சவால்களுக்கு முகங்கொடுத்துச் சென்று வாழ்வின் இலக்குகளை அடைவதற்கு உளவளத்-துணை உதவுகின்றது. அத்தோடு இளம் சமூகத்தினர் உளவளத்துணையை கற்-றுக் கொள்வதும் நிகழ்காலத்தின் தேவையாக கருத வேண்டியிருக்கிறது. தொழில் நோக்கம் தவிர தன்னைத் தான் வளப்படுத்திக் கொள்ள வேண்டும், தமது குடும்பத்தினரை, நண்பர்களை, தன்னைச் சூழவுள்ள சமூக உறுப்பினர்களை வாழ்வியல் பிரச்சினைகள் தொடர்பாக விழிப்புணர்வுடன் இருக்க வழிப்படுத்த வேண்டும் என்ற என்ற நோக்கங்கள் கருதியும் உளவளத்துணையை கற்றுக் கொள்வதும் அவை தொடர்பான அறிவைப் பெற்றிருப்பதும் மிகவும் அவசியமாகும்.






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அடிப்படை உரிமைகள்

**தாஹீர் வஸீம் அக்ரம்**
இரண்டாம் வருடம்,
கலைப்பீடம்,
பேராதனைப் பல்கலைக்கழகம்.

ஒரு நாட்டினுடைய அடிப்படை உரிமைகள் என்பது அந்நாட்டின் சமூக மற்றும் பொருளாதார விடயங்களுக்கு ஏற்ப வேறுபடுகின்றன. சுதந்திரத்திற்கு முற்பட்ட இலங்கையில் அரசியல் அமைப்பானது அடிப்படை உரிமைகள் தொடர்பான எந்தவொரு ஏற்பாட்டினையும் உள்ளடக்கியிருக்கவில்லை. என்றாலும் 1947 ஆம் ஆண்டின் சோல்பரி யாப்பானது அடிப்படை உரிமைகளை அண்மிக்கின்ற சில ஏற்பாடுகளை கொண்டிருந்தது என்பதனை 29(2) உறுப்புரையானது தெளிவுபடுத்துகின்றது. அவ்வுறுப்புரையானது பாராளுமன்றத்தில் உருவாக்கப்படுகின்ற சட்டங்களானது சமய சுதந்திரத்தினை மட்டுப்படுத்துவதற்காகவோ, குறிப்பிட்டவொரு இனத்திற்கோ அல்லது மதத்திற்கு விஷேட முன்னுரிமைகளை வழங்குவதற்காகவோ இருக்கக் கூடாது என்பதனை எடுத்துரைத்தது. எனினும் Madanayaka Vs Sivanana Sundaram 1951(53 NLR 25) என்ற வழக்கில் சிறுபாண்மை இனத்தவர்களின் உரிமைகளை பாதுகாக்கும் நோக்கில் உருவாக்கப்பட்ட இந்த ஏற்பாடானது போதுமானதாக இல்லை என குறிப்பிட்டது.

முதன் முதலாக சுதந்திர இலங்கையின் 1972 அம் ஆண்டின் முதலாவது குடியரசு அரசியல் அமைப்பில் அடிப்படை உரிமைகள் வெளிப்படையாக உள்ளடக்கப்பட்டன. அரசியல் அமைப்பின் 6வது அத்தியாயமானது அடிப்படை உரிமைகளையும், சுதந்திரத்தினையும் தெளிவாக குறிப்பிட்டிருந்தது. அவையாவன-

18(1) உறுப்புரையானது அடிப்படை உரிமைகளையும் 18(2) ஆனது அதற்கான மட்டுப்பாடுகளையும் குறித்துரைக்கின்றது. 1978ஆம் ஆண்-டின் அரசியல் அமைப்பானது 1972ம் ஆண்டு அரசியல் அமைப்பிலும் பார்க்க முன்னேற்றகரமானதாக இருப்பதற்கான பிரதான காரணம் யாதெனில் 1978ஆம் ஆண்டு அரசியல் அமைப்பானது அடிப்படை உரிமைகளை குறிப்பிட்டு அது மீறப்படுகின்ற போது அதற்கான நிவாரணங்களையும் பெறுவதற்கான வழிமுறைகளையும் குறிப்பிடுகின்றது. அத்துடன் அரசியல் அமைப்பின் 3வது அத்தியாயத்துடன் 8 உறுப்புரைகளும் அடிப்படை உரிமைகள் சம்பந்தமானவையாகவே காணப்படுகின்றன. எனினும் உயிர் வாழ்வவதற்கான உரிமையினை 1978ஆம் ஆண்டு யாப்பு குறிப்பிடத்தவறிய போதிலும் 1972ஆம் ஆண்டு யாப்பின் 18(1) (ஆ) பிரிவினது சட்டமுறைக்கிணங்கவன்றி எந்தவொரு நபரும் உயிரிழப்பதற்கு ஆளாக முடியாது (No person shall deprived of life) என குறிப்பிட்டிருந்தமையானது சுட்டிக்காட்டப்பட வேண்டியதொரு விடயமாகும். 1978ஆம் ஆண்டு இலங்கை ஜனநாயக சோசலிச குடியரசு யாப்பிற்கு இனங்க அடிப்படை உரிமைகளானது விரிவாக எடுத்துரைக்கப்பட்டுள்ளன.

யாப்பின் 10வது உறுப்புரையானது "ஆள் ஒவ்வொருவரும் தான் விரும்பும் மதத்தினை அல்லது நம்பிக்கையினை உடையவராவதற்கான அல்லது மேற்கொள்வதற்கான சுதந்திரமுற்பட சிந்தனை செய்யும் சுதந்திரம், மனசாட்சியைப் பின்பற்றும் சுதந்திரம், மதச்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுதந்திரம் என்பவற்றிற்கு உரித்துடையவராகுதல் வேண்டும்" எனக் குறிப்பிடுகின்றது. மதச்சுதந்திரம் தொடர்பாக 14(1) (உ) உறுப்புரையானது குறிப்பிடுகின்ற போதிலும் 10வது உறுப்புரையில் மதச்சுதந்திரம் என்பது உளரீதியான எண்ணக்கருவினையே குறிப்பிடுகின்றது. எனவே 14(1) (உ) ஆனது அரசியல் ரீதியான மதச் சுதந்திரத்தினை எமக்கு வழங்குகின்றது. அந்த வகையில் உளரீதியான விடயங்களை மட்டுப்படுத்த முடியாமையினால் 10வது உறுப்புரையானது 14(1) (உ) உறுப்புரையானது மட்டுப்பாடுகளுக்கு உட்படக் கூடியதாக இருக்கின்றது.

மூன்று பேர் கொண்ட தவிசினால் விளங்கப்பட்டவொரு வழக்கினை மீண்டும் அவ்வாறானதொரு தவிசினால் விசாரிப்பது பொறுத்தமற்றதாக இருக்கலாம். ஏன்பதேயாகும். அத்துடன் High court of the provinces (special provinces) act no 10of 1996 இன் படி வர்த்தக கொடுக்கல் வாங்கல்கள் தொடர்பான பிணக்குகளினாலான வழக்குகளில் வர்த்தக மேல் நீதிமன்றத்தினால் வழங்கப்படுகின்ற தீர்ப்புக்கு எதிரானதாக நேரடியாக உயர் நீதிமன்றத்தில் மேன்முறையீடு செய்யலாம்-Sect 05(1).

சமூகத்தில் மக்கள் அடிக்கடி எதிர்நோக்குகின்ற வீட்டு வாடகை பரிமாற்றங்கள், வாடகை குடியிருப்பாளரை வெளியேற்றுதல் போன்ற பிணக்குகளானது வாடகை சபைக்கு விண்ணப்பம் செய்யப்படுதல் வேண்டும். வாடகை சபையின் தீர்ப்புக்களில் அதிருப்தி அடைகின்ற மக்கள் வாடகை மீளாய்வு சபைக்கு விண்ணப்பிக்கலாம். எனவே வாடகை சபையின் மேன் முறையீடுகளானது வாடகை மீளாய்வு சபைக்கு ஆற்றுப்படுத்தப்படுகின்றன. இலங்கை வாழ் முஸ்லிம்களின் திருமணம், மனநீக்கம் பேன்ற விடயங்களில் முரண்பாடுகள் மற்றும் பிணக்குகள் ஏற்படுகின்றவிடத்து அது தொடர்பாக விண்ணப்பங்களானது காதி நீதிமன்றத்திற்கு முன்வைக்கப்படுதல் வேண்டும். அது மனைவி குழந்தைகளுக்கான பராமரிப்பு போன்ற விடயங்களிலும் நியாயாதிக்கத்தினை கொண்டிருக்கும் (Section 47 of the Muslim marriage and divorce act no 22of 1951). எனினும் காதி நீதிமன்றத்தின் முடிவுகளில் திருப்தி அடையாத முஸ்லிம்கள் காதிச் சபைக்கு (Board of Quazi) மேன்முறையீடு அல்லது மீளாய்வு செய்யலாம். என Sec 47 of the Muslim marriage and divorce act ல் கூறப்படுகின்றது. குழந்தைகள் மற்றும் மனைவி தொடர்பான கட்டளைகளில் திருப்தியடையாத தரப்பினர் அது தொடர்பாக 30 நாட்களுக்குள் காதிகள் மேன்முறையீடு செய்தல் வேண்டும். என section 43 of the Muslim marriage and divorce act கூறுவதுடன் மீளாய்வு விண்ணப்பமானது நியாயமான காலப்பகுதிக்குள் முன்வைக்கப்படுதல் வேண்டும். என section 43 of the Muslim marriage and divorce act கூறுகின்றது. அத்துடன் நியாயமான காரணங்களின்றி தனது விருப்பத்தை (வலி) தெரிவிக்காத நிலைமை மற்றும் வலியின் தேவைப்பாடு தொடர்பான விடயங்களில் மேன்முறையீடானது 10 நாட்களுக்குள் முன்வைக்கப்படுதல் வேண்டும். காதிகள் சபையின் தீர்மானத்தில் திருப்தியடையாத தரப்பினர் 30 நாட்களுக்குள் உயர் நீதிமன்றத்திற்கு மேன்முறையீடு செய்யலாம். அவ்வாறே வக்பு சபையினுடைய (Wakfs) மேன்முறையீடுகளானது வக்பு நியாய சபைக்கு ஆற்றுப்படுத்தல் வேண்டும் என Muslim charitable trust or wakfs act குறிப்பிடுகின்றது.

முடிவில் மக்கள் நீதியினை அடைவதற்காக நீதிமன்றங்களுக்குச் செல்கின்றனர் எனினும் மக்கள் எதிர்பார்க்கும் நியாயத்துவமான முடிவுகள் சில சந்தர்ப்பங்களில் கிடைப்பதில்லை. நீதியியல் துறையில் அக்கறைப்பாட்டினை நிவ-ர்த்தி செய்யும் பொருட்டு பல்வேறு மேன்முறையீட்டு சந்தர்ப்பங்கள் வழங்கப்பட்டுள்ளன என்பது சிறப்பானதொரு அம்சமாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# AUTO CAD 2014

Draftsman
ஆக விரும்புகிறீர்களா?

**Diploma in Auto CAD 2014**

**Advance Diploma in Auto CAD 2014**

**Auto CAD - MEP**
- Mechanical
- Electrical
- Plumbing

**Auto CAD 2014 3D Special**

**Full Time / Part Time**

# Teacher Training

நீங்களும் சர்வதேச தரம் வாய்ந்த ஆசிரியர் ஆக விரும்புகிறீர்களா

- DIPLOMA IN TEACHER TRAINING **(AMI Method)**
- DIPLOMA IN CHILD PSYCHOLOGY
- ENGLISH

**Why Teacher Training @ GC Campus**

- தகைமையும் அனுபவமும் வாய்ந்த பயிற்றுவிப்பாளர்கள்
- AMI கருவிகள் மூலமான பயிற்சி
- சர்வதேசரீதியாக ஏற்றுக்கொள்ளப்பட்ட தகைமைகள்
- இலவச ஆங்கில பாடநெறி

சர்வதேசரீதியில் ஏற்றுக்கொள்ளப்பட்ட **03** தகைமைகளை பெற்றுக்கொள்ள முடியும்

**Target Group**

- மாணவர்கள் O/L & A/L
- தொழில் தேடுனர்கள்
- International School Teachers
- வெளிநாடு செல்ல எதிர்பார்த்திருப்போர்
- சொந்தமாக Montessori ஒன்றை ஆரம்பிக்க எதிர்பார்த்திருப்போர்

**HOTLINE: 0777 222 529**

# DIPLOMA IN AIRLINE

**SPECIAL IN AIR TICKETING**

**IATA/UFTA தகைமையுடன்**

பல வருடகால உள்நாட்டு, வெளிநாட்டு
நிறுவனங்களில் அனுபவம் வாய்ந்த
விரிவுரையாளரிடம் பாடநெறியை
தொடர்வதற்கான சந்தர்ப்பம்



**Duration: 01 - 02 Months**

**Full Time/Part Time**

**(Weekdays/Weekends)**

**Individual classes also available**

# Diploma in Spoken English

ஆரம்பத்திலிருந்து கற்பதற்கு
ஏற்றவிதத்தில்
வடிவமைக்கப்பட்ட பாடநெறி

Duration:
03 Months
Monday - Thursday
8:30am - 12:30pm
1:00pm - 5:00pm

**Weekend Batches: 04 Months**

Saturdays or Sundays
-9:00am - 2:00pm

University of Peradeniya
03 APR 2014
LIBRARY

# GOLDEN COLLEGE

**CITY CAMPUS**

**0812 20 55 44**

548, Peradeniya Road, Kandy.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எரிக்கும் வார்த்தைகள்...

**A.G Ubhaithullah**
4th Year,
Department of Management Studies.
University of Peradeniya.

பனித்துளிகள் விழும் காலை வேலை, குருவிகளின் கீச்கீச் சத்தத்துடன், உலகை ஒளிமயமாக்கும் சூரியனின் உதயமும், இயற்கையின் அழகை வழமைப் போல் மெருகூட்டிக் கொண்டு-தான் இருந்தது. இயற்கையின் நியதி, உலகில் எது நடந்தாலும் உதிக்கும் சூரியன் உதிக்கத்தான் செய்யும். ஆனால் மனித உள்ளம் அவ்வாறல்லவே, ஒருவரின் ஒரு வார்த்தை கூட அவனது வழமையை மாற்றும் வல்லமையுடையது தான். ஆம், ஆஸிமின் உள்ளம் இன்றைய விடியலில் வழமையைப் போல் இல்லை. இன்னும் அவர் கட்டிலில் தான் படுத்துக் கொண்டிருக்கிறார். இரண்டாம் தரத்தில் கற்றுக் கொண்டிருக்கும் அவரது மகனும் கூட பாடசாலை சென்று விட்டான். அவரது மனைவி ரிப்கா அவரிடம் வந்து "இங்கே, இன்னமும் அதப்பத்தியே யோசிச்சுக் கொண்டிருக்க வேணாம். எழும்பி ரெடியாகி கடைக்கிப் போங்க, அப்ப எல்லாம் சரியாகிடும். என்று கூறிக் கொண்டு வந்து தேநீரை அருகில் வைத்துச் சென்றாள்.

ஆஸிமிற்கு கடைக்குச் செல்-வதை விட்டு, அந்த தேநீரை பருகக் கூட கஷ்டமாகத்தான் இருந்தது. ஆனாலும் மெதுவாக எழுந்து சென்று ஆயத்தமாகிறார்.

***

சில வருடங்களுக்கு முன் ஆஸிம் வெளிநாட்டில் ஒரு சிறந்த கம்பனியில் பணிபுரிந்து கொண்டிருந்தார். சிறந்த சம்பளம், முக்கியமான பொறுப்புக்கள் எல்லாம் அவர் தான் ஏற்றிருந்தார். அப்போது அவர் குடும்பம் மிகச் சிறியது. தாயும், தங்கை ஸாஹிராவும் தான். தாயை ஹஜ்ஜுக்-கனுப்ப வேண்டும், தங்கையை ஒரு நல்ல இடத்தில் கட்டிக் கொடுக்க வேண்டும் என்கிற நோக்கத்தையே அடிப்படையாகக் கொண்டு தன் தந்தை இறந்த காலத்திலிருந்து வேலை செய்கிறார் ஆஸிம்.

ஆஸிம் தான் சாதாரண தரத்தை கற்கும் போதே தந்தையை இழந்து விட்டார். அப்போது ஸாஹிரா ஒரு சிறுமி, ஏழாம் தரத்தில் தான் கற்றுக் கொண்டி-ருந்தாள். அவர்கள் ஒரு நடுத்தர குடும்பத்தினர் தான். எனவே ஆஸிமால் தொடர்ந்து கற்க முடியாமற் போய் விட்டது. எனவே அப்போதிலிருந்தே ஒரு நகைக்கடையில் வேலை செய்யப் போய் விட்டார். கடை உரிமையாளர் அஹ்மட் ஹாஜி, ஆஸிமின் ஊரைச் சேர்ந்தவர் தான். ஒரு சிறந்த மனிதர். நகை பற்றி அனைத்து விடயங்களையும் ஆஸிமிற்கு கற்றுக் கொடுத்தார். சில நாட்-களுக்குள்ளாகவே தொழிலைக் கற்றுக் கொண்டார் ஆஸிம். நான்கு வருடம் அங்கேயே வேலைப்பார்த்து விட்டு, அஹ்மட் ஹாஜியாரின் அனுசரனையுடன் வெளிநாட்டு நகை வியாபார நிறு-வனமொன்றில் நல்ல சம்பளத்துக்காக சென்றார். அங்கு சென்று சில நாட்களில் நகை சம்பந்தமான கற்கை நெறிகள் பலவற்றை கற்று ஒரு சாதாரண விற்ப-னைதாரராக சென்ற ஆஸிம் தற்போது வளர்ந்து முகாமை மட்டத்தில் வேலை செய்பவராக மாறினார். சம்பளமும் உயர்ந்தது. தன் சொந்த ஊரில் இருந்த வீட்டை விற்று ஒரு நல்ல வீட்டையும் கட்டினார். ஓரிரு வருடங்களிலேயே தாயை ஹஜ்ஜுக்கும் அனுப்பினார். இனி செய்ய வேண்டியது ஸஹிராவை அவர் எதிர்பார்த்தவாறு ஒரு இடத்தில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருமணம் செய்து வைப்பது தான். இதையும் சில நாட்களுக்கு-ள்ளாகவே செய்து முடித்தார். மாப்பிள்ளை வீட்டாரோ ஓரளவு வசதி படைத்தவர்கள். ஸஹிராவின் அழகு-க்காகவே அவளை திருமணம் முடித்தான் முஸ்தாக். ஆனா-லும் முஸ்தாக்கின் குடும்பத்தினர் ஸாஹிராவை தங்கள் வீட்டில் தான் வைக்க வேண்டும் என உத்தரவிட்டனர். ஒரு நல்ல வரம், ஸஹிராவுக்கு ஒரு நல்ல வாழ்க்கை கிடைக்கும் என நம்பி ஆஸிமும், தாயும் திருமணத்திற்கு சம்மதித்தனர்.

ஸாஹிராவின் திருமணத்திற்குப் பிறகு, அவள் அங்கேயே இருந்துவிடு-வாள், தாய் தனியாகத்தான் இருக்க வேண்டியேற்படும் என்பதை எண்ணி திருமணத்துக்கு வந்த ஆஸிம் திரும்பி வேலைக்குச் செல்லவில்லை. அங்கேயே ஒரு வியாபாரத்தை ஆரம்பித்து சில நாட்களில் ரிப்காவை திருமணம் முடித்தார்.

நாட்கள் வேகமாய் ஓடின. ஆஸிம்மிற்கு ஒரு குழந்தையும், ஸாஹி-ரா-விற்கு ஒரு குழந்தையும் உண்டு. இந்த நேரத்தில் தான் ஆஸிம் எதிர்பார்த்திராத பிரச்சினை உருவானது. “இதுக்குப் பிறகும் என்னால அந்த வீட்டுல இருக்க முடியாது, அவர் அவருட உம்மாட பேச்ச கேட்டுட்டு எல்லா வேலையையும் எனக்குத் தான் தாராரு. நான் அப்ப கூட சொல்லல்ல, ஆனா நான் குழந்த கிடைக்க ஈக்குற நேரம் கூட எல்லா வேலையையும் நான் தான் செஞ்சேன். மாமி சும்மா சரி ஒரு உதவிக் கூட பண்ணல்ல. உம்மா இங்க பாருங்க, ஆஸிம் நானா கிட்ட நீங்க தான் எப்படியாவது இத சொல்லனும். நான் இனி மேல் அவர் கூட வாழமாட்டன்.” என விரக்தியுடன் தன் கவலையை வெளிக்காட்டிக் கொண்டி-ருக்கும் ஸாஹிராவின் குரல் ஆஸிமின் காதில் விழுகிறது. அப்படியே அதிர்ந்து போனார் ஆஸிம். ஸாஹிரா சொல்வதை மட்டும் வைத்து எந்த முடிவையும் எடுக்கக் கூடாது என்பதில் தீவிரமாக நின்றார் அவர். தாய் வந்து இந்த விடயத்தை ஆஸிடம் கூறுகையில் “உம்மா, இங்க பாருங்க, அவ சின்ன பிரச்சினய பெரிசாக்குறாவோ தெரியாது, எதுவாயிருந்தாலும் நான் மச்சான் கிட்ட பேசிக் கொள்றேன். அவள நீங்க வீட்டுக்குப் போக சொல்லுங்க” என ஆஸிம் தன் தாயிடம் கூறினார்.

தாய் மிகவும் வயதானவர். எதையும் சுயமாக சிந்திக்க முடியாத நிலையில் தற்போது உள்ளார். தன் மகள் அந்த வீட்டில் படும் கஷ்டங்களை எண்ணி, ஓரிரு நாள் ஸாஹிராவை வீட்டில் வைத்து விட்டு அதன் பின் அங்கு அனுப்பலாம் என யோசித்தாள். இரண்டு நாட்கள் ஸாஹிரா தாய் வீட்டிலேயே இருந்தாள். எனினும் அடுத்த நாள் முஸ்தாக் அங்கு வந்து ஸாஹிரா-வை நன்றாக ஏசி, அடித்து அவளையும், குழந்தையையும் இழுத்து சென்று விட்டான். இச்சம்பவம் நடக்கும் நேரம் ஆஸிம் அங்கு இருக்கவில்லை. ஆஸிம் வீடு திரும்பியதும் நடந்த விடயங்களை கேள்விப்படவே, தாயைக் கூட்டிக் கொண்டு முஸ்தாக்கின் வீட்டிற்கு கோப-மாகச் சென்றார் ஆஸிம்.

ஆஸிம் மிகக் கஷ்டமான சூழலில் வளர்ந்தவர் தான். ஆனாலும் ஸாஹிராவை அழகான முறையில் வளர்-த்தார். அவளை விளையாட்டுக்காகவும் அவர் அடித்ததில்லை. முஸ்தாக் வந்து ஸாஹிராவை அடித்து இழுத்துச் சென்றதை கேள்விப்பட்டதும், ஆஸிமிற்கு கோபம் பொறுக்கவில்லை. முஸ்தாக்கின் வீட்டிற்கு சென்று பெரும் குழப்பத்தையே உண்டு பண்ணிவிட்டார். அந்தக் குழப்ப-த்தின் பின்னனி தான் ஸாஹிரா நிரந்தரமாக அந்த வீட்டை விட்டு வெளியேற வேண்டிய நிலை ஏற்பட்டது. ஆம், இந்தப்பிரச்சினையின் பின்னர் முஸ்தாக்கும், ஸாஹிராவும் விவாகரத்துப் பெற்று விட்டனர். அவர்களுடைய குழந்தை ஸாஹிராவுடன் வளர்வதாக தீர்மானிக்கப்பட்டது. ஸாஹிராவுக்கு ஒரு சிறையிலிருந்து விடுபட்ட நிம்மதி இருந்-தாலும், தன் எதிர்காலத்தைப் பற்றிய பயம் வேர் விடத் தொடங்கியது. சிறு குழந்தை, தன் வயது கூட சிறியது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தான். மீண்டும் தன் சகோதரனுக்கு பாரமாகியதை எண்ணி அவள் உள்ளம் விரக்தியடைகிறது. இந்தப் பயமும், விரக்தியும் தான் அவள் வாழ்வில் பிடிப்பற்ற நிலையை உருவாக்கியது.

ஸாஹிராவின் நிலை இவ்வாறிருக்க, ஆஸிமிற்கோ தங்கையின் கஷ்டம் ஒரு புறம் அவருடைய வருமானம் பற்றிய கவலை மறுபுறம். தற்போதுள்ள வருமானத்தில் தான் தங்கைக்கும் செலவழிக்க வேண்டியுள்ளது. நிச்சயமாக அது போதாது, எனவே ஆஸிம் மீண்டும் வெளிநாடு செல்ல தீர்மானித்தார். முன்பு இருந்த நிறுவன முகாமையாளர் ஆஸிமிடம் மிகவும் நெருக்கமானவர் என்பதால், ஆஸிமிற்கு அதே நிறுவனத்திற்கு செல்ல வாய்ப்பு கிட்டியது. ஒரு மாதத்திற்குள்ளாகவே அங்கு போய் சேர்ந்துவிட்டார் ஆஸிம்.

நாட்கள் சில கழிந்தன. வருமானத்தில் தற்போது எந்த குறையும் இல்லை. ஆனாலும் ஆஸிமிற்கோ ஸாஹிரா பற்றிய நினைவுகள் அவரை வாட்டிக் கொண்டிருந்தன. எப்படியாவது அவளுக்கு இன்னொரு திருமணத்தை முடித்து வைக்க வேண்டும் என எண்ணி ஊரில் அஹ்மட் ஹாஜியாரை தொடர்பு கொண்டு விடயத்தை கூறினார். அஹ்மட் ஹாஜியார் சில நாட்களுக்குள்ளாகவே, ஹகீம் பற்றிய விபரத்தை கூறினார்.

ஹகீம், ஒரு முறை திருமணம் முடித்து விவாகரத்து பெற்றவர். ஆனாலும் ஊரில் அவரைப் பற்றி நல்ல கருத்துக்கள் தான் பரவியிருந்தன. அவர் மார்க்க விடயங்களில் ஈடுபாடுள்ளவர். ஆனாலும் அவருக்கென்று பெரிதாக சொத்தெதுவும் இல்லை. தொழில் கூட அவ்வளவு நிரந்தரமில்லை. ஆனாலும் விரக்தியடைந்திருக்கும் ஸாஹிராவின் வாழ்க்கைக்கு ஹகீம் ஒரு நல்ல துணையாக அமைவார் என எண்ணி, திருமணத்திற்கான ஏற்பாடுகளை செய்தார் ஆஸிம்.

ஆனாலும் திருமணத்திற்கு அவரால் வரமுடியவில்லை. சிறிய செலவில் செவ்வனே நிறைவேறியது அந்த திருமணம். சில நாட்களின் பின்னர் ஆஸிம், ஸாஹிராவுடன் கதைக்கும் போது, அவள் சந்தோஷமாக இருக்கிறாள் என்பதை உணர்ந்த ஆஸிம்மிற்கு தற்போது அளவில்லா சந்தோஷம்.

மேலும் ஒரு வருடம் கழிகிறது. ஸாஹிராவிற்கு இரண்டாம் குழந்தையும் பிறந்து விட்டது. இந்நிலையில் தற்போதிருக்கும் வீட்டை ஸாஹிராவிற்கு கொடுத்து விட்டு தனக்கும் மனைவிக்கும் என்று ஒரு வாடகை வீட்டை பெறவும், ஊரில் செய்து கொண்டிருந்த வியாபாரத்திற்கு சற்று அதிக முதலீட்டை இட்டு அதை ஓரளவு பெரிய வியாபாரமாக செய்யவும் முடிவு செய்து நாட்டுக்குத் திரும்புகிறார் ஆஸிம்.

வாடகை வீடொன்றைப் பெறும் வரையில் ஆஸிமும், ரிப்காவும் பழைய வீட்டிலேயே இருந்து வந்தனர். நீண்ட நாட்களின் பின்னர் மொத்தக் குடும்பமும் ஒரே வீட்டில் சந்தோஷமாக இருப்பதையெண்ணி ஆஸிமின் மனம் சந்தோசத்தால் நிரம்பி வழிகிறது. ஆனாலும் ஒரு சில நாட்களிலேயே ஆஸிம் புதிய வீடொன்றை வாடகைக்குப் பெற்று தன் மனைவி குழந்தையுடன் இடம் மாறினார்.

நாட்கள் அழகாக கடந்தோடுகின்றன. ஆஸிமின் புதிய வியாபாரம் நல்ல வருமானத்தையும் பெற்றுக் கொடுத்தது. ஆனாலும் ஸாஹிராவின் குடும்ப நிலை அவ்வளவாக சிறப்பாக இல்லை. ஹகீமின் தொழில் தான் இதற்கு காரணம். அவருக்கு நிலையான தொழில் ஒன்றும் இல்லை. பல நாட்கள் அவர் வேலை செய்யாமல் வீட்டில் தான் இருப்பார். இந்த நாட்களில் செலவுக்காக ஆஸிமைத்தான் நாடுவாள் ஸாஹிரா.

எத்தனையோ முறை தன்னுடன் வந்து வேலை செய்யுமாறு ஆஸிம் கூறியும் ஹகீம் செல்லவில்லை. ஆனாலும் இவற்றைப் பெருட்படுத்தாது ஸாஹிராவின் குடும்பச் செலவுக்குத் தேவையான பணத்தை ஆஸிம் கொடுத்து வந்தார். இந்நிலை ஹகீம் சொந்தமாக ஒரு சிறிய கடையொன்றை ஆரம்பிக்கும் வரை தொடர்ந்தது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவருடைய புதிய கடை நல்ல முறையில் அமைந்தது. நல்ல வருமானம். இனி ஆஸிமிடம் தங்கியிருக்க தேவையில்லை அவர்களுக்கு.

***

அது ஒரு விடுமுறை தினம். ஆஸிம் தன் மனைவி, குழந்தைகளுடன் ஸாஹிராவின் வீட்டிற்குச் சென்றார். அங்கு சென்ற போது தன் தாய் ஒரு மூலையில் அமர்ந்து அழுது கொண்டிருப்பதை கண்டார் ஆஸிம். வேகமாக சென்று "என்ன உம்மா, ஏன் இங்க உட்காந்து அழுறீங்க? எங்க ஸாஹிரா?" என கேட்ட போது, தாய் தொடர்ந்து அழுது கொண்டேதான் இருந்தாள். "என்னம்மா? எதா இருந்தாலும் சொல்லுங்களே, அப்ப தானே என்னானு தெரியும்" என சற்று அதட்டலாக கேட்டார் ஆஸிம். "என்னப்பா சொல்லுறது. ஒரே நடக்குற கூத்து தான் இது. இவ எப்ப முஸ்தாக் வீட்டிலிருந்து தலாக் சொல்லி இங்க வந்தாளோ, அன்னைக்கி இருந்து இது நடந்து கொண்டு தான் இருக்கு. எனக்கும் வயசாயிடுச்சி, நானும் எவ்வளவு தான் பொறுத்துட்டுப் போறது." எனக் கூறி மீண்டும் அழ ஆரம்பித்த தாயின் பேச்சுக்கள் ஆஸிமின் உள்ளத்தில் கேள்விக் கொத்துக்களை எறிந்தன. "என்னம்மா நடந்திச்சி, கொஞ்சம் விளாவரியா சொல்லுங்களேன்." என கேட்ட ஆஸிமிடம் விளக்கமாக சொல்ல ஆரம்பித்தார் அவர். "இவ எப்ப அங்கிருந்து வந்தாளோ, அன்னைக்கி இருந்து அவ புள்ளய நான் தான் பார்த்துக்குறேன். ஆனா அவ என்னய ஒரு தாய் மாதிரி மதிக்கிறதே இல்ல. எப்பவும் என்னய திட்டுறது தான் இவ வேல. இன்னைக்கி கூட பாரு, மருமகன்ட மச்சான்ட மையத்துக்கு என்னால போக முடியாது, எனக்கு மேல் வருத்தமாயிருக்குதுன்னு சொன்னதுக்கு, ஏசுஏசுன்னு ஏசிட்டு போயிட்டா, இன்னும் கால சாப்பாடு சாப்பிட்டு இன்சுலின் கூட அடிக்காம போய்ட்டா" என்று தாய் கூறியதைக் கேட்ட ஆஸிம்மிற்கு கோபம் தலை-யையும் தாண்டி வெடித்தது.

ஸாஹிராவும், ஹகீமும் வரும் வரை கோபமாக அங்கு காத்-துக்கொண்டிருந்தார் ஆஸிம். தாயும், மனைவியும், ஸாஹிராவுக்கு எதுவும் சொல்லி விட வேண்டாம் எனக் கூறி ஆஸிமை ஆறுதல்படுத்திக் கொண்டி-ருந்தனர். ஆனால் அவற்றையெல்லாம் கேட்கும் மனநிலையில் ஆஸிம் இருக்க-வில்லை. தாயின் அழுகுரல் மட்டும் தான் அவனுள் எதிரொலித்துக் கொண்டி-ருந்தது.

சற்று நேரத்தில் அவர்கள் இருவரும் வீட்டை அடைந்தனர். "நானா எப்ப வந்தீங்க? ஏதாச்சும் சாப்பி-ட்டீங்களா?" என ஸாஹிரா ஆஸிம்மை பார்த்து கேட்டு முடிக்கும் முன்னர் "இதப்பாரு ஸாஹிரா உனக்கு மையத்து வீட்டுக்கு போகனும்னா நீ போய்ட்டு வா, தேவையில்லாம உம்மாவ ஏசுற வேல வச்சிக்கொள்ளாத, உன்னய நம்பித்தான உம்மாவ இங்க விட்டுட்டு போனன். நீ இப்படி உம்மாவ நடத்தினா, அவவ யாரு பாத்துக்குறது." என உரத்த குரலில் உறுமினார் ஆஸிம். "என்ன, ஏதாச்சும் அவ உங்க கிட்ட பத்த வச்சாவா, அப்படியே அவ என்ன சொன்னாலும் நீங்க எப்படி எனக்கு ஏச முடியும். எனக்கு புள்ளகள் இருக்கு, என்ட கணவன் பக்கத்துல இருக்காரு. இவங்களுக்கு முன்னுக்கு எனக்கு ஏசுற நேரம், நானும் சும்மா இருக்க மாட்-டேன்." என ஸாஹிராவும் கோபமாக பாய்ந்தாள்.

இருவருக்குமிடையிலான வாக்கு வாதம் தீவிரமாக போய்க்கொண்டிருந்தது. கோபத்தில் ஆஸிம் ஸாஹிராவின் கன்னத்தில் ஒரு அறையும் அறைந்து விட்டார். இதைக் கண்ட ஹகீம் கோபமாக ஆஸிம்மை தள்ளிவிட்டார். அடி வாங்கிய கோபத்தில் ஸாஹிரா கூறிய அந்த வார்த்தைகள் தான் ஆஸிமை அடக்கியது. "நீ வெளி-நாட்டுக்குப் போய் களவெடுத்து தானே எங்களுக்கு காசு அனுப்பினாய் கள்ளன், உனக்கெதுக்கு மரியாதை, இங்கிருந்து இப்பவே வெளிய போ" என அவள்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கூறியது ஆஸிமின் உள்ளத்தை பறித்து எடுத்தது போன்றிருந்தது. இதற்கு மேல் அவரால் எதுவும் பேச முடியவில்லை. அவர் காதுகளை அவரால் நம்பவே முடியவில்லை. எத்தனை கஷ்டப்பட்டாலும் தன் தங்கையை கரைசேர்க்க வேண்டும் என போராடியதெல்லாம், இப்படியொரு பேச்சைக் கேட்க தானோ, என எண்ணி அதற்க்கு மேலும் அவ்விடத்தில் இருக்க விரும்பாத ஆஸிம் அங்கிருந்து வெளியேறினார்.

இன்றைய நாள் நிச்சயமாக ஆஸிம்மால் மறக்க முடியாத ஒரு நாள் தான். இத்தனை வருடமும் தன் வாழ்க்கையை விட யாருடைய வாழ்க்கை முக்கியமானதென்று எண்ணி வந்தாரோ அந்த ஸாஹிராவே இப்படி பேசியது அவரால் கட்டாயமாக மறக்க முடியாது. இரவு முழுவதும் இதனையே தான் நினைத்துக்கொண்டிருந்தார் ஆஸிம். ஸாஹிரா கூறிய அந்த வார்த்தைகள் ஆஸிம் போன்ற குடும்பத்திற்காக தன் வாழ் நாளை அர்ப்பணித்த எந்த ஒருத்தரும் கேட்கக்கூடாது தான்.

மறு நாள் காலை ஆஸிம் ஆயுத்தமாகிக்கொண்டிருக்கிறார் கடைக்கிப்போக அல்ல, ஸாஹிராவின் வீட்டிற்கு சென்று தன் தாயை அழைத்து வருவதற்கு...

***




"The Quran has actually been silent on the issue of the Islamic state. The Quran asks us to create a just society, in which the principles of Islam are upheld – to promote justice and ihsan (benevolence), and to oppose zulum (injustice)."



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Personal law in Sri lanka

## & Inability Of Laws To Reduce Gender Inequality

**Abdul Majeed Najeema**
**Final year,**
**Department of Law,**
**University of Peradeniya.**

In actuality, the judicial system is depicted as fixed and discriminatory of migrant workers. Many migrant worker executions do not receive the same intensity of coverage or condemnation. In a circumstance of her trial, Nafeek's case was due primarily to the unjust rather than to Saudi's regular use of the death penalty. Particularly Saudi's legal system is hostile for migrant workers. As a result, the judicial system is rightly criticized and portrays coverage of Nafeek's case as unfair, when in reality such misjudgment regularly befalls migrant workers under Saudi's legal system. It clearly demonstrates the dangers faced by women domestic workers who are almost completely


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

unprotected by host country laws. Law is a candle which must be handled in proper and justifiable manner to enter in to all dark sides of violence. So, the legal system should not be much cruel and it should be accepted by the society under the concept of law. Here, **if the sentence –death penalty is relevant to Rizana, why this issue wanted to face these kinds of criticisms?** These criticisms which erupted because of Saudi's dismal record of migrant abuse, including the absence of any meaningful protection for domestic workers not only show the rigidity of that sentence but, some of the hidden challenges of migrant workers also. The international media and human rights organizations also attacked us following the beheading of the Sri Lankan maid who was convicted of killing her employer's child. Numerous Saudi judicial bodies refuted the claims of the international media and went on the defensive by trying to convince everyone of the transparency of our legal system.

The recent rules and regulations gove-rning foreign employment are not much effective and Sri Lanka continues to send domestic workers without any strengthen protection mechanism. Age limit and medical certificates will not be a water tight solution for preventing above violence which is still continuing unabated. Society exactly doesn't expect compensation from any form of the law. There is always shouting from the migrants where all sufferings at the core, need not compensation but guarantee for not violated by others. Sri Lanka Bureau of Foreign Employment and foreign ministry affairs still collecting the pending files regarding the Rizana's dead. But, absolutely it is useless.

To conclude this, what perfectly needed that, not only laws but society also should have to realize the dark side of this issue. As such, laws which are relating to migrant workers should be effective to reduce this violence. For example, Indonesia has provided free lawyers for the workers who work in Malaysia. This has become one of the precaution ways to protect their migrant workers. Like that, Sri Lanka also can make this kind of arrangement for migrant workers to ameliorate judicial functions and to prevent these types of tragedies to face critical conditions. Same time, there should be a uniform law for migrant workers. That is to say, in Rizana Nafeek's case one of the criticism appeared that ***"Under in which law she wants to be punish?"*** because sentence for her fault differs country to country because of different laws. This criticism guided this issue to reach United Nation also. So, there should be a uniform law for migrant workers when they face violence. On the other hand, laws relating to migrant workers are less than other laws in Sri Lanka. So, to get an effective output, enough laws should be needed to enact. Likewise, mutual and transparent agreements should be assigned between each country. So, if the law do its role effectively, the challenges will disappear itself.

Further, migrant women workers should know about their job profile because lack of understanding their job profile. This is also becomes one of the reasons



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

for their violations and challenges. So, to protect our migrant women, there must be an easiest way to link their complaints at free cost. Apart from these solutions, government has an important role to establish enough facilities for self employment for women. These following steps can be taken by law and government to reduce violence of migrant women workers. But, not only the law but society also has to take part in that process to protect women from not to send abroad because even if Sri Lanka is male oriented country, unfortunately male expects earnings from their women through send them to abroad specially in rural areas. So, this attitude and behaviors should to be changed. Here, we must ask ourselves that why Rizana went to abroad? The answer should come from the society. But, unfortunately, the society also become as a questionable one here. **'Prevention is better than cure'**. So, at the very first instance society should realize the value and need the protection of women before enter in to law to gain their rights and protection from violations.

*Never reply when you are angry.*
*Never make a promise when you are happy.*
*Never make a decision when you are sad.*

What Is The Secret Of Success..?
"Right DecisiOns"
HOw DO YOu Make Right DecisiOns..?
"Experience"
HOw DO YOu Get Experience..?
"WrOng DecisiOns"









Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உயிர்த்துடிப்புள்ள இஸ்லாமியத் தாய்.

**J.K நூருல் லிகா**
முதலாம் வருடம்,
கலைப்பிரிவு.

தாய்ப் பாத்திரத்தை தன்னுள் ஏற்றுக் கொள்வதென்பது மிக இலகுவான காரியம் எனப் பலரும் சிந்திக்கலாம். ஆனால் எதிர்கால சந்ததியின் சிறப்பான உருவாக்கத்தை தன்னில் சுமந்திருக்கும் தாயின் வகிபாகம் பல்வேறு கோணங்களிலும் அலசி ஆராயப்பட வேண்டியது அவசியமாகும். மேற்கத்தேய சிந்தனைகளால் கவரப்பட்டு அடாவடித்தனங்களையும், அட்டூழியங்களையும், சமூக சீரழிவுகளையும் சுமுகமாக உலகில் பரப்பி வரும் தீமைகளின் அடிநாதங்களினதும் பயங்கரவாதம், களவு, கொலை, கொள்ளை என அத்தனை நாசகாரச் செயல்களின் அடிவருடிகளினதும் பிறப்பிலும் வளர்ப்பிலும் அவர்களைப் பிரசவித்த தாய்க்கு ஒரு பெரும் பங்குண்டு.

அதே போன்று தான் உலக வாழ்வின் நோக்கை சரியாகப் புரிந்து தன்னால் நிறைவேற்றப்பட வேண்டிய அத்தனை பொறுப்புக்களையும் சரியாக நிறைவேற்றி தாமும் ஒழுங்காக வாழ்ந்து பிறருக்கும் வாழ வழிகாட்டிச் சென்ற முன்மாதிரி மிக்க இமாம்கள், அறிஞர் பெருமக்களின் வளர்ப்பிலும் வாழ்விலும் அவர்களின் தாய்மார்களுக்கு ஓர் அளப்பரிய பங்குண்டு. எப்போதும் தொழில், வேலை என அதிவேக விசிறியாய் சுழன்று கொண்ருக்கும் தந்தைக்கு மிகக் குறைவான நேரமே பிள்ளைகளுடன் கழிக்கும் நிலை ஏற்படுகின்றது. இந்த நிலையானது எதிர்காலத் தலைவர்களின் உருவாக்கம் தாயின் வளர்ப்பிலேயே அதிகம் தங்கியுள்ளது என்பதையே உணர்த்துகின்றது.

''*ஒரு பெண் திருந்துவதாக வாக்களித்தால் ஒரு சமூகமே திருந்துவதாக வாக்களிக்கிறேன்*'' இது நவீன இஸ்லாமிய எழுச்சிக்கு வித்திட்ட மாபெரும் இமாம்களில் ஒருவரின் கூற்றாகும். பல மனிதர்களின் கூட்டு தான் சமூகம். அங்கு ஓரிருவர் மட்டும் இருக்க மாட்டார்கள். அப்படிப்பட்ட பெருந்திரளான மக்கள் கூட்டம் வாழும் சமூகத்தின் மாற்றம் ஒரேயொரு பெண்ணின் மாற்றத்தால் நிகழும் என்ற வாக்கு எத்துணை உண்மையானது. இதே கருத்துப்பட *கவிஞர் இப்றாஹீம்* அவர்கள் தனது கவிதை அடி ஒன்றில் இவ்வாறு குறிப்பிடுகின்றார். '*தாய் ஒரு பாசறை: சிறந்ததொரு தாய் உருவானால் சீறிய சமூகம் உருவாகும்.*'

ஒரு மனிதனுக்கு பிரயோசனமளிக்கக்கூடிய, வழிகாட்டக் கூடிய ஏராளமான வளங்களையும், வழிகாட்டுதல்களையும் உள்ளடக்கியது தான் ஒரு பாசறை. அப்படியாயின் ஏன் *தாய் ஒரு பாசறை* என்று சொல்லப்பட்டுள்ளது என்பது ஆராய்ச்சிக்குரியது.

பல்வேறுபட்ட தொழில் வல்லுனர்களை உருவாக்கும் ஏகப்பட்ட கலைகள் ஒரே பாசறையிலே கற்பிக்கப்படுகின்றன. அதே பாசறையில் தான் வைத்தியர்கள், பொறியியலாளர்கள், ஆசிரியர்கள், அறிவு மேதைகள், சமூக மாற்றத்தின் சிற்பிகள் எனப் பல தரப்பினரும் உருவாகின்றனர். அப்படியாயின் தாய் ஒரு பாசறை என்பதன் மூலம் என்ன புலப்படுகின்றது? தாய் என்ற வகிபாகம் பல்வேறுபட்ட



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திறன்களையும், வளங்களையும் ஒரே நேரத்தில் உள்ளடக்கியதாக இருக்க வேண்டும். அப்போது தான் சிறந்த தாய் என்ற சொல்லுக்கு சரியான அர்த்தம் கற்பிக்கப்படும்.

ஒரு சிறந்த தாய் தாயாக இருக்கும் அதே நேரத்தில் மார்க்கப்பற்றுள்ளவளாக, இஸ்லாமிய தூதுத்துவத்தை எத்தி வைக்கும் ஒரு தாஇயாக, முன்பள்ளி மற்றும் பல கலைகளையும் கற்பிக்கும் ஆசிரியையாக, தையற்கலைகளை கற்றறிந்தவளாக, அரபு ஆங்கிலம் மற்றும் பல மொழிகளிலும் தேர்ச்சி பெற்றவளாக, நவீன தொழில்-நுட்ப சாதனங்களைக் கையாளும் திறன் படைத்தவளாக, நவீன ஊடகத்துறை பற்றிய போதிய அறிவுள்ளவளாக, தமது வீட்டுக்குத் தேவையான ஒரு சில-வற்றையேனும் உற்பத்தி செய்து-கொள்ளக் கூடிய அளவுக்கு விவசாயம் மற்றும் பயிர்செய்கைத் துறையில் ஓரளவு பயிற்சியும் அனுபவமும் கொண்டவளாக, மின்னியல் உபகரணங்கள் மற்றும் அது சார்பான அறிமுகம் கொண்டவளாக, முதலுதவி மற்றும் நோய்கள் போன்ற வைத்தியத் துறை சார்பான அறிவு கொண்டவளாக, சமையல், யோகா, உடற்பயிற்சி, உளவியல் துறைகளில் ஆர்வமும் அறிவும் கொண்டவளாக மொத்தத்தில் அத்தனை துறைகளையும் ஓரவேனும் அறிந்தவளாக இருந்தால் தான் நவீன கால சவால்களுக்கு முகம் கொடுத்து இறை தீனான இஸ்லாத்தை இப்பூவுலகில் நிலைநாட்டும் முன்மாதிரிமிக்க தாயாக மிளிரலாம்.

இன்று நாம் உலகில் பல்வேறு துறைகளிலும் சாதனைகளையும் திறமைகளையும் வெளிப்படுத்திய பலரைப் பற்றி பேசுகின்றோம். அவர்கள் அனைவரினதும் பின்னாலும் ஒரு தாயின் பங்கு மகத்தானதாக இருந்து வந்துள்ளது.

உண்மையில் எந்தக் குழந்தையும் பிறக்கும் போது அறிஞராகவோ, தலைவராகவோ, வைத்தியராகவோ, கலாநிதியாகவோ பிறப்பதில்லை. உதாரணத்திற்கு தனது அறிவினாலும் ஆற்றலினாலும் பல மாற்றங்களை ஏற்படுத்தி வரும் டாக்டர் ஸாகிர் நாயக் அவர்கள் பிறக்கும் போதே ஒரு டாக்டராகவும், இஸ்லாமிய தாஇயாகவும் பிறக்கவில்லை. மாறாக அவர் குழந்தை ஸாகிராகத் தான் பிறந்தார். ஆனால் அவரது பாரிய முன்னேற்றத்தின் பின்னால் இருந்த உந்து சக்தி அவரது தாய் தான். அவர் சிறிய வயதில் இருக்கும் போது தனக்கென இரு முன்மாதிரிகளை (மிக உயர் பதவியிலிருந்த வைத்தியர், இமாம் இப்னு பாஸ் ஆகியோரை) தேர்ந்தெடுத்து இவ்விருவரில் நான் எவரைப் போன்று வர வேண்டும் என்று கேட்டார். அதற்கு அவரது தாய் 'இரண்டும்' என்று கூறினார். அத்துடன் அதை அடிக்கடி ஞாபகப்படுத்தியும் வந்தார். அது தான் அவரது அபார வெற்றிக்கு காரணமே.

எமது வரலாற்றுப் பக்கங்களில் இடம் பிடித்த வீரத்தியாகிகளான ஹன்ஸா (ரழி), உம்முல் பழ்ல் போன்றோரின் வாழ்க்கை சிறந்த தாய்மார்களுக்கான முன்னுதாரணமாகத் திகழ்கின்றது.

ஒவ்வொரு தியாகத் திரு நாளிலும் நாம் நினைவு கூறும் தியாகச் செம்மல் இஸ்மாஈல் (அலை) அவர்களின் வாழ்க்கையில் ஒரு பெரும் படிப்பினை மறைந்துள்ளது. அன்னை ஹாஜரையும் இஸ்மாஈல் (அலை) அவர்களையும் தன்னந்தனியே விட்டுச் சென்ற போது அந்தக் குழந்தை இஸ்மாஈலை பராமரித்தவர் யார்? இன்று வரை பொன்னெழுத்தால் பொறிக்கப்பட்ட தியாக வரலாற்றின் முக்கிய கர்த்தாவாக அவரது தாய் திகழ்கின்றார். அந்தப் பாலைவன மண்ணில் எவ்விதத் துணையுமின்றித் தன்னந்தனியே அந்த வெற்றுத் தாளில் எவ்வளவு அழகான சித்திரத்தை வரைந்துள்ளார்.

'தெய்வீக நியதியைத் தன்னகத்தே கொண்டவளே.. உன் பராமரிப்பு எங்கள் செயல்களை செதுக்குகின்றது. எங்கள் சிந்தனையை.. சொற்களைத் தூண்டு-

University of Peradeniya
03 APR 2014



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கின்றது.. உன் உயிர்ப்பிலேயே உலகம் உயிர்க்கின்றது.. நீ சமுதாயத்தைச் சுமக்கும் சக்கரம் உன்னிடம் உயர்ந்த உள்ளமும் உன்னத சிந்தனையும் உள்ளது.. பாத்திமா ஸஹ்ரா இலட்சிய மங்கையை நீ மறந்து விடாதே! உன் கிளைகளிலிருந்தும் ஒரு ஹுஸைன் குதித்தெழட்டும். அவன் இஸ்லாமியப் பூங்காவனத்தின் வசந்தத்தை மீட்டி வரட்டும்..' இது ஒரு சிறந்த தாயைப் பற்றி கவிஞர் அல்லாமா இக்பால் கூறிய ஒரு கவிதை. இங்கு ஒரு சிறந்த தாயின் வகிபாகம் அழகாக எடுத்துக்காட்டப்பட்டுள்ளது. அத்தோடு எதிர் காலத்தைப் பற்றிய சிந்தனையை சிறப்பாக செதுக்கவும் வழிகாட்டப்பட்டுள்ளது. இஸ்லாமிய உலகின் முலை முடுக்கெங்கும் பிரகாசிக்கும் புரட்சிகரமான எதிர்கால மாற்றம் உயிர்த்துடிப்புள்ள இலட்சியத் தாய்மார்களின் கையில் தான் இருக்கின்றது என்பது தெளிவு. இதனால் பொதுக் கல்வியும் மார்க்கக் கல்வி மற்றும் திறன்கள் விருத்தியடைய தங்களுக்கும் குடும்பத்திற்கும் சமூகம், நாடு என்பவற்றிற்கும் நலன்புரியும் முன்மாதிரியான இஸ்லாமிய இலட்சியப் பெண்களாக வாழ இன்றைய யுவதிகளைப் பயிற்றுவிப்பது அவசியமாகும். அப்போது தான் எல்லா வகையிலும் தன்னிறைவான சமூகமொன்று உருவாகும்.

ஒரு பெண் தனது குழந்தையைப் பூரண இஸ்லாமிய அறிவுடன் வளர்க்கும் போது அக்குழந்தை தனது எதிர் காலத்தில் இஸ்லாத்தை அடிப்படையாகக் கற்க இஸ்லாமியக் கல்லூரிகளுக்கு மட்டும் செல்லத் தேவையில்லை. சமூகம் அங்கீகரிக்கும் பெரிய பதவிகளில் தன்னை ஈடுபடுத்திக் கொண்டே இஸ்லாத்தை வாழ வைக்கலாம். ஏனெனில் அடிப்படையிலேயே அக்குழந்தை இஸ்லாமியப் பாசறையில் வளர்கிறது. இக்கருத்துக்களுக்கு ஆதரவாகும் விதத்தில் முஸ்லிம் விவகாரங்களுக்கான வெள்ளை மாளிகை ஆலோசகர் தாலியா முஜாஹித் அவர்கள் கூறியிருக்கும் கருத்து குறிப்பிடத்தக்கதாகும்.

*'முஸ்லிம் பெண்மணிகள் கண்டுபிடிப்பாளர்களாக, எழுத்தாளர்களாக, சமாதானத் தூதுவர்களாக, நல்ல தாய்மார்களாக உருவாகி அமைதியான உலகை அடுத்த சந்ததியினருக்கு கையளிப்பதே அவர்களது தலையாய கடமை. முஸ்லிம் பெண்களின் சக்தி மிக்க காத்திரமான பங்களிப்பை உலகம் வேண்டி நிற்கின்றது. எனவே உங்களது மகத்தான பங்களிப்பை செய்யத் தயாராகுங்கள்...'*









Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அல்குர்ஆனின் அற்புதத் தன்மையும், அறிவியலும்

**Zafna M.B.F**
**Final Year,**
**SEUSL**

அல்-குர்ஆன் ஓர் அற்புத நூல். அதாவது முஹம்மது (ஸல்) அவர்கள் இறைத்தூதர் என நிறுவும் அற்புதம் அது. அல்லாஹ் நபிமார்களை அனுப்பும் போது அவர்கள் நபிமார்களே என நிறுவத்தக்க அற்புதங்களை கொடுத்து அனுப்பினான். *இ.்ஜாஸுல் குர்ஆன்* என்பது அல்-குர்ஆனின் அற்புதத்தைக் குறிப்பதாகும். பொதுவாக நபிமார்கள், ரஸூல்மார்கள் 'தஃவா' (இஸ்லாமிய அழைப்பு) பணியில் ஈடுபட்ட போது அவர்களது தூதுத்துவத்திற்குச் சான்றாக மு.்ஜிஸாக்கள் வழங்கப்பட்டுள்ளன.

மூஸா (அலை) அவர்களுடைய காலத்தில் வாழ்ந்த மக்கள் மாய, மந்திரக்கலைகளில் பிரசித்தி பெற்றிருந்தனர். இதனால் மூஸா நபிக்கு தௌராத் வேதத்தினையும் '*அசா*' என்னும் அற்புதக் கோலையும் அல்லாஹ் வழங்கியிருந்தான். அதே போன்று நபி தாவூத் (அலை) அவர்கள் தூதராக அனுப்பப்பட்ட போது அக்கால மக்கள் இசைத் துறையில் பிரபல்யம் அடைந்திருந்தனர். இதனால் தாவூத் (அலை) அவர்களுக்கு ஸபூர் என்ற வேதத்தை வழங்கிய அல்லாஹ் அவருடைய குரலை இசைநயமிக்கதாகவும் வழங்கியிருந்தான்.

ஈஸா (அலை) அவர்கள் நபியாக அனுப்பப்பட்ட போது அக்கால மக்கள் நோய்களால் பீடிக்கப்பட்டிருந்தனர். அவர்களிடம் வைத்திய நிபுணர்கள் செல்வாக்குப் பெற்றிருந்தனர். இதனால் இன்ஜீல் வேதம் கொடுக்கப்பட்ட ஈஸா (அலை) அவர்கள் கைதேர்ந்த மருத்துவ நிபுணராக இருந்தார். நபி (ஸல்) அவர்களுடைய காலத்தில் வாழ்ந்த மக்கள் கவிதை, இலக்கியத் துறையில் பிரபல்யமடைந்திருந்தனர். இவற்றை மிகைக்கும் வகையில் அல்லாஹ் அல்குர்ஆனை மிகப்பெரும் அற்பதாமாக வழங்கியிருந்தான். இதனைப் பற்றி நபி(ஸல்) அவர்கள் பின்வருமாறு கூறினார்கள்.

"*அறிந்து கொள்ளுங்கள், எல்லா நபிமார்களுக்கும் மு.்ஜிஸாக்கள் கொடுக்கப்பட்டுள்ளன. எனக்கு கொடுக்கப்பட்ட மு.்ஜிஸா அல் குர்ஆனாகும்*" எனவே அல்குர்ஆன் ஓர் அற்புத வேதம் என்பதனை கீழ்வரும் கீழ்வரும் தலைப்புக்களில் இருந்து தெளிவாக விளங்கிக் கொள்ள முடியும்.

**1-இலக்கியம் அல்லது மொழிநடை**

அல் குர்ஆன் இலக்கியத் துறையில் அல்லது மொழிநடையில் ஓர் அற்புத நூலாகும். இதன் இலக்கிய நடையோ தனித்துவமானது. அதன் நடை உரைநடையோ கவிதையோ அல்லாமல் இரண்டிற்கும் இடைப்பட்ட மிகச் சிறப்பான நடையாக விளங்குகிறது. இதன் இலக்கியச் சுவையை அதன் எதிரிகள் கூட செவியேற்று சுவைத்து வந்தனர். அல் குர்ஆன் அந்தக் காலத்தில் வாழ்ந்த மிகப் பெரும் கவிஞர்களை நோக்கி பின்வரும் சவால்களை விடுத்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்த அல்குர்ஆனைப் போல் ஒரு வேதத்தைக் கொண்டுவாருங்கள் *"இந்தக் குர்ஆனைப்போன்று கொண்டு-வருவதற்கு மனிதர்களும் ஜின்களும் ஒன்றுசேர்ந்தாலும் இதனைப்போன்று அவர்கள் கொண்டுவரமாட்டார்கள்; அவர்களில் சிலர் சிலருக்கு உதவியாளராக அருந்தாலும் சரியே. என்று நபியே நீர் கூறுவீராக!"* (17:88)

அதிலுள்ள பத்து சூறாக்களைப்போல் கொண்டுவாருங்கள் *"எனவே நபியே! இவ்வாறு கூறுவதில் அவர்கள் உண்-மையாளர்களாக இருந்தால், இதைப் போன்ற செய்தியை அவர்கள் கொண்டுவரட்டும்"* (52:34)

இதிலுள்ள ஒரு சூறாவைக் கொண்டு-வாருங்கள் *"மேலும், நாம் நமது அடியார் மீது இறக்கிவைத்த இவ்-வேதத்தில் நீங்கள் சந்தேகப்பட்டால் இதுபோன்ற ஓர் அத்தியாயத்தை-யாவது நீங்கள் கொண்டுவாருங்கள். அல்லாஹ்வைத் தவிர உங்களுக்கு உதவி செய்பவர்களை எல்லாம் அழைத்துக் கொள்ளுங்கள். நீங்கள் உண்மையாளர்களாக இருப்பின்..."* (02:23)

இலக்கியத்தில் தம்மை விட சிறந்தவர்கள் யாருமில்லை எனக் கூறிக் கொண்டவர்களும் கூட அல்-குர்ஆனின் இந்தச் சவால்களை முறியடிக்க முடியவில்லை. அல் குர்ஆனின் சவால்களை முறிய-டிக்கவென போட்டி முறை கொண்டு வரப் புறப்பட்ட கவிஞர்கள் கூட புறமுதுகு காட்டிச் சென்றனர். இப்பணியில் ஈடுபட்ட பல கவிஞர்-களும் தமது இயலாமையை ஏற்றுக் கொண்டனர். மேலும் பல கவிஞர்கள் அல் குர்ஆனின் அற்புத இலக்கியச் சுவையால் ஈர்க்கப்பட்டு இஸ்லாத்தை ஏற்றனர்.

உதாரணமாக *ஹஸ்ஸான் இப்னு தாபித், கஃப் இப்னு சுஹைர், உத்பா இப்னு றபீயா, லபீத், துமாமா இப்னு உஸால்* போன்றோர்களைக் குறிப்பிடலாம். அல் குர்ஆனிற்கு இணையாக ஓர் இலக்கியத்தை எந்த சக்தியாவது உருவாக்க முடியுமா? என அல் குர்ஆன் விடுத்த சவாலை இன்று வரை எந்த சக்தியும் ஏற்றுக் கொள்ள முன்வரவில்லை.

**2-அறிவியல் விஞ்ஞானம்**

அல்குர்ஆன் அறிவியல் விஞ்ஞானத் துறையிலும் ஓர் அற்புத வேதமாக திகழ்கின்றது. பொதுவாக அல்குர்ஆன் மனித சிந்தனையை எல்லா அம்சங்களிலும் தூண்டிவிட விளைகின்றது. பிரபஞ்சத்தின் பல்வேறு படைப்பினங்களிலும் சிந்த-னையுடையவர்களுக்கு நிறைய அத்-தாட்சிகள் உள்ளன. அவர்கள் சிந்திக்க வேண்டாமா? அல்குர்ஆன் விஞ்ஞானத்தின் பல குழப்பங்களுக்-கும் விடை தருகின்றது. அதே போல் அல் குர்ஆனில் பல விஞ்ஞான உண்மைகளும் புதைந்து கிடக்-கின்றன. அவற்றை நோக்கினால்

மனிதன் இன்று புவியின் எல்லையை கடந்து சென்று சந்திரன், செவ்வாய் போன்ற கிரகங்களிலே காலடி வைத்துவிட்டான். 14 நூற்-றாண்டுகளுக்கு முன்னரே மனிதன் விண்வெளியைக் கடந்து சாதனைகள் படைக்க முடியும் என்ற விஞ்ஞான உண்மையை அல் குர்ஆன் விளக்கி இருப்பது அதனுடைய அற்புதமே-யாகும். *"மனு, ஜின் கூட்டங்களே வானங்களினதும் பூமியினதும் எல்லை-களைக் கடந்து செல்ல உங்களால் முடியுமாயின் செல்லுங்கள். பெரும் சக்தியின்றி அவைகளை உங்களால் கடந்து செல்ல முடியாது"*

ஒரு தாயின் கருவறையில் குழந்தையின் வளர்ச்சிக் கட்டங்களை இன்றய விஞ்ஞான உலகம் கண்டு-பிடித்துள்ளது. ஆனால் 1434 ஆண்டு-களுக்கு முன்னரே இவ்வுண்மையை அல்குர்ஆன் விளக்கியிருப்பது அதனு-டைய அற்புதமேயாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*“நிச்சயமாக நாம் உங்களை ஆரம்பத்தில் மண்ணில் இருந்தும், பின்னர் இந்திரியத்தி-லிருந்தும் பின்னர் ஒட்டிக் கொள்ளும் தன்மையுடைய பொருளில் இருந்தும் பின்னர் வடிவமைக்கப்பட்டதும், வடிவமைக்கப்-படாததுமான தசையிலிருந்தும் படைத்தோம் கர்ப்பப் பைகளில் நாம் விரும்பிய காலம் வரை அவற்றை வைத்தோம், பின்னர் நாம் உங்களை குழந்தையாக வெளியேற்றினோம்”*

நிலத்தின் கீழ் இருக்கும் நீர் பெய்யும் மழையால் பெறப்படுவதே என்ற விஞ்ஞான உண்மை கி.பி. 17ம் நூற்றாண்டிலேயே கண்டுபிடிக்கப்பட்-டுள்ளது. ஆனால் அல்குர்ஆன் கி.பி.7ம் நூற்றாண்டிலேயே இந்த உண்மையை விளக்கியிருப்பது அதன் அற்புதமே. *“வானிலிருந்து நாம் சரியாக கணக்கிட்டு குறிப்பிட்ட அளவு மழையை இறக்கினோம். பின்னர் அதனை பூமியில் தேக்கி வைத்தோம்”*

தாவர இனத்திலும் ஆண், பெண் என இரண்டு இனம் உண்டு என்பது அண்மைக்கால அறிவியல் கண்டுபிடிப்பாகும். ஆனால் அல் குர்ஆன் 1434 வருடங்களுக்கு முன்-னரே இந்த உண்மையை விளக்கி இருப்பது அதனுடைய அற்புதமாகும். “வானத்திலிருந்து மழையை பொழியச் செய்து அதன் மூலம் பல்வேறு வகையான தாவரங்களை ஜோடி ஜோடியாக நாமே வெளிப்-படுத்தினோம்.”

இவ்வாறு வானவியல், தாவர-வியல், விலங்கியல் என ஒவ்வொரு தலைப்புக்களிலும் தெளிவான விஞ்-ஞான உண்மைகளை அல் குர்ஆன் விளக்கியிருக்கின்றது. அவை ஒவ்-வொன்றின் மூலமும் அல் குர்ஆனின் அற்புதத் தன்மையை புரிந்து கொள்ள முடியும்.'

**3-வரலாறு**

அல்குர்ஆன் வரலாற்று ரீதி-யாகவும் ஒரு அற்புத நூலாக திகழ்கின்றது. முதலாவது மனிதன் படைக்கப்பட்ட வரலாறு, நூஹ் நபியினுடைய வரலாறு, ஆத்-ஸமூத் கூட்டங்களின் வரலாறு போன்ற ஏராளமான வரலாற்று உண்மைகள் அதிலே நிறைந்திருக்கின்றன. அல் குர்ஆன் கூறிய வரலாற்றுச் செய்திகள் கற்பனையானவையோ, பொய்யா-னவையோ அல்ல. அவை காலத்தால் நிரூபிக்கப்பட்டவை, மனித வரலாறு-கள் ஏற்றுக் கொண்டவை.

நூஹ் நபி அவர்கள் 950 வருடங்கள் இவ்வுலகில் தஃவாப் பணியில் ஈடுபட்ட வரலாற்றைக் குறிப்பிடலாம். இவருடைய வரலாற்றை குறிப்பிடும் அல் குர்ஆன் இறுதியாக இவ்வாறு கூறுகின்றது. “அவரையும் கப்பலில் உள்ளவர்களையும் நாம் காப்பாற்றினோம். அக்கப்பலை அகி-லத்தாருக்கு ஓர் அத்தாட்சியாவும் வைத்திருக்கின்றோம்.”

அல்குர்ஆன் கூறிய இவ்வுண்-மையை காலம் நிரூபித்துக்காட்டி-யிருக்கின்றது. நூஹ் நபியின் கப்பல் தரை தட்டியதாக குறிப்பிடப்படுகின்ற ஜூதி மலையை ஆய்வு செய்த அமெரிக்க மலை ஏறு குழுவினர் 1969ல் பனிப்பாறைகளுக்கு மத்தியில் கப்பலின் பாகங்களை கண்டுபிடித்துள்-ளதாக வரலாற்றுக் குறிப்பொன்று குறிப்பிடுகின்றது. மூஸா (அலை) அவர்களுடைய காலத்தில் கொடுமை-களைச் செய்த அரசனாகிய பிர்-அவ்னுடைய வரலாறு. இவன் இறுதியில் நீரிலே மூழ்கடிக்கப்பட்டான். இது பற்றி அல்குர்ஆன் பின்வருமாறு குறிப்பிடு-கின்றது. *“இன்றைய தினம் நாம் உமது உடலை பாதுகாப்போம், உமக்கு பின்னால் வருவோருக்கு ஓர் அத்தாட்சியாக இருக்க வேண்டும் என்பதற்காக...”*


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்வுண்மையை காலம் நிரூபித்திருக்கின்றது. 1898 இல் எகிப்தில் உள்ள பாபுல் முல்க் என்னும் பள்ளத்தாக்கில் தொல்பொருள் ஆய்வாளர்களால் பல மம்மிக்கள் கண்டெடுக்கப்பட்டன. அவற்றில் 'லோரட்' என்பவரால் கண்டெடுக்கப்பட்ட மம்மி பிர்அவ்னுடையது என பல ஆராய்ச்சியாளர்கள் மூலம் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. 3000 ஆண்டுகள் பழமை வாய்ந்த பிர்அவ்னுடைய மம்மி இன்று வரை எகிப்தின் தொல்பொருள் காட்சிச்சாலையில் மக்களின் பார்வைக்காக வைக்கப்பட்டுள்ளது.

இவைகள் தவிர குகைவாசிகளின் வரலாறு, ஆத் - ஸமூத் கூட்டங்களின் வரலாறு, லூத் நபி அவர்களது சமூகத்தின் வரலாறு என்பன போன்ற காலத்தால் நிரூபிக்கப்பட்ட வரலாறுகள் அல்குர்ஆனிலே காணப்படுகின்றது.

அல் குர்ஆன் மூல மொழியில் அருளப்பட்ட, பாதுகாக்கப்பட்ட ஒரு வேதமாக கொணப்படுகின்றது. மேலும், இன்று வரைக்கும் அல் குர்ஆன் பாதுகாக்கப்பட்டு வருகின்றது இது அதனுடைய மிக பெரிய அற்புதமாகும். இதனாலேயே அல்குர்ஆன் சகல துறைகளுக்கும் வழிகாட்டியாக திகழ்கின்றது. அல்குர்ஆன் காலத்தால் அழியாத ஓர் அருட்கொடையாகும். *"நிச்சயமாக நாங்கள் அல் குர்ஆனை அருளியிருக்கின்றோம். நாங்களே அதனைப் பாதுகாப்போம்..."*








Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பேராதனைப் பல்கலைத் தாயே..

எம். ஐ. எம். நஸ்ரீன்
மருத்துவ ஆய்வுகூட முகாமையாளர்,
இணைந்த சுகாதார பீடம் (2006/07)

பூவெனப் பார்த்த உனை
சருகென எண்ணவே முடியவில்லையடி..
மழை மேகமென வார்த்த உனை
வெறும் கானலென கலைக்க
முடியவில்லையடி..
வசந்தமென வரவேற்ற உனை
கடும் கோடையென விரட்ட முடியவில்லையடி..
வாழ்விற்கு மணம் சேர்த்து அலங்கரித்த
உனை .. கடந்த மேகங்கள் என மறக்க
முடியவில்லையடி...

பல தடைகள் தாண்டி
தடம்புறண்டு வந்த எமக்கு..
பின்னின்று நீ வீசிய
ஒளியில் பயணிக்கிறோம்
இன்று வரை...

உன் கைகோர்த்து
கடந்த நாளிகை
எட்டிப் பார்த்த நொடியில்...

ஆங்காங்கே கிடந்த ஆகாய முகில்கள்
எதிர்கால இலட்சியங்களுடன் ஒன்று கூடி
இன்று வரை பழகிய நினைவுகளுடன்..
என்றும் மறவாத உறவுகளுடன்..
வேரூன்றிய நட்போடு..
'நான்' எனும் சொல் மறந்து
'நாம்' என்று மொழி பெயர்க்க
'நான்' எனும் போது அகராதி
புரட்டிய பொற்காலம் அது...

மழலைகளாய் காற்பதித்தவர்களும்..
வாழ்வின் யதார்த்தம் அறிந்து
காலக் கட்டாயத்தினால்
நீராவியாய் பிரிந்து..
ஏதோ ஒரு தருணத்தில்
மழைத்துளிகளாய் சமூகத்தை
வளப்படுத்தும் உன்னத சொட்டுக்களாய்..
மண்ணைத் தொடுவோமென
சபதத்துடன் பிரிந்த தருணம் அது...

உன் விழியோரப் பார்வை
என் வார்த்தைகளை எரிக்க..
எழவில்லை என் நாவு
என் ஏக்கங்களைச் சொறிய...

நான் எனும் வெள்ளைத் தாள்களில்
கவிகளை வார்த்ததும்..
பறந்து திரிந்தேன் பூலோகமெங்கும்
தரையில் இருந்த வண்ணமே... ஆனால்

உன் கவி வரிகள் இடையில்
ஆவியாகி மறையும் மைகளென
உணருகையில் கடந்து விட்டது
நாலாண்டு...

வெண்மை இழந்த காகிதங்கள்
வாடுகின்றன வடுக்களுடன்..
கடந்த கால பொன்னான
தருணங்களுக்காய்....


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இதுவரை பேசப்படாத பணியகவர்க்கத்தினர்

**M.A.Fathima Anwara**
Final Year,
Department of Political Science,
University of Peradeniya.

பொதுத்துறை நிர்வாகம் ஒரு நாட்டின் நிரந்தர நிர்வாகமாக விளங்கும் அதேவேளை பொதுக் கொள்கை உருவாக்கத்திலும் அவற்றை அமுல்படுத்துவதிலும் பிரதானமான வகிபாகத்தையும் கொண்டுள்ளது. குறிப்பாக கொள்கை அமுலாக்கத்தில் வீதிமட்டப் பணியகவமைப்பினரின் பங்கும் முக்கியமானதாகும். பொதுவாக பொதுத்துறைப் பணியகத்தினரால் கொள்கையானது பல முறைகளில் அமுல்படுத்தப்படுகின்றன. அவற்றில் மேலிருந்து கீழ் நோக்கிய முறை (Top Down Model), கீழிருந்து மேல் நோக்கிய முறை (Bottom Up Model), முகாமைத்துவப்படுத்தப்பட்ட அமைப்பினுள் நின்று அமுல்படுத்தல் என்பன முக்கியமானவையாகும்.

பணியகத்தினைப் பற்றிய ஆய்வில் வீதிமட்ட பணியகம் என்போர் யார்?, அவர்களின் முக்கியத்துவம் என்ன?, பணியகச் செயற்பாடுகளின் இடை நடுவே இவர்களது பாத்திரம் எத்தகைய இடத்தை பிடித்துள்ளன? போன்ற பல வினாக்கள் தோன்றலாம். வீதிமட்ட பணியகம் என்பது பணியகத்தினுள் பிரதானமானதும் பேசப்படக் கூடியதும் முக்கியமானதுமான ஓர் இடத்தைப் பிடித்துள்ள தரப்பினர் எனச் சுருக்கமாக குறிப்பிடலாம். மேலும் இன்று நிர்வாகத்தினை அடிப்படையாகக் கொண்டு அனைத்துக் கருமங்களும் இடம் பெறும் போக்கு காணப்படுவதனால் இவர்களின் பணியின் அவசியம் கூடிக் கொண்டே செல்கின்றது.

ஆனால் இப்பணியகத்தினர் தொடர்பான போதிய விளக்கமின்மையும், அவர்களின் பணி தொடர்பான முக்கியத்துவம் தொடர்பில் தெளிவின்மையும் பெரும்பாலான மக்கள் மத்தியில் காணப்படுகின்றது. இந்நிலைப்பாட்டினை கூடுதலாக தெற்காசிய நாடுகளிலும் அபிவிருத்தியடைந்து வரும் நாடுகளிலும் காணக் கூடியதாக உள்ளது. குறிப்பாக இலங்கையினை நோக்குகின்றபோது: பொது நலன் பேண் கொள்கையினைப் பின்பற்றும் நாடாகும். நிர்வாகத் துறையின் உதவி பொதுநல விடயங்களை முன்னெடுத்துச் செல்வதில் பாரிய பங்களிப்பை வழங்கி வருகின்றது. இருப்பினும் இதுவரை குறிப்பாக வீதிமட்ட பணியகம் தொடர்பாக குறிப்பிடத்தக்க ஆய்வுகள் மேற்கொள்ளப்படாமையானது, வீதிமட்ட பணியகம் தொடர்பான ஆர்வம் குறைவாக காணப்படுகின்ற தன்மைமையை வெளியிடுகின்றது. இந்நிலைப்பாடுகள் அபிவித்தியடைந்த நாடுகளில் காணப்படுவதில்லை. அவர்கள் பொதுவாகவே தமது நிர்வாக விடயங்களில் கூடுதலாக அக்கறை செலுத்துவதோடு விஷேடமாக வீதிமட்ட பணியகவமைப்பு தொடர்பாகவும் அவர்கள் எதிர்கொள்கின்ற சவால்கள் தொடர்பாகவும் ஆய்வுகளை மேற்கொண்டு வருகின்றமையை அவர்களுடைய எழுத்துக்கள் தெளிவுபடுத்துகின்றன.

மூன்றாம் உலக நாடுகளில் வீதிமட்ட பணியகம் தொடர்பான போதிய ஆய்வுகள் இடம் பெறாமைக்குரிய பிரதான காரணம் மக்கள் வீதிமட்ட பணியகம் தொடர்பாக தெளிவில்லாமல் இருப்பதும், வீதிமட்ட பணியகத்தின் முக்கியத்துவத்தை உணராமையும் ஆகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதாவது வீதிமட்ட பணியத்தினர் என்போர் ஒவ்வொரு நிர்வாகத்திலும் கீழ் மட்டங்களில் காணக்கூடிய மக்களுக்கு பொதுச் சேவைகள் வழங்குகின்ற பணியகவமைப்பாளர்கள் ஆவர். அந்த வகையில் ஆசிரியர்கள், பொலிஸ் அதிகாரிகள், அரசாங்க சட்டத்தரணிகள், வைத்தியர்கள், சுகாதார அதிகாரிகள் மற்றும் மக்களோடு நேரடியாகத் தொடர்புறுகின்ற அனைத்து சேவையாளர்களைக் கொண்ட பரந்த ஒரு கூட்டாக வீதிமட்டப் பணியவகவமைப்பு காணப்படுகின்றது எனலாம்.

இவர்கள் தமது தொழில் தொடர்பாக குறிப்பிட்ட இடத்தினில் தனிப்பட்ட ரீதியில் முடிவெடுக்கும் அதிகாரத்தினைக் கொண்டுள்ளவர்கள், மக்களோடு மக்களாக நின்று மக்களுக்கான சேவைகளை வழங்குபவர்கள், மக்களுடன் நெருக்கமானவர்கள். பொதுக் கொள்கை உருவாக்கம் மற்றும் அமுலாக்கத்தில் பங்கேற்பவர்கள் என பணியகத்தின் செயற்பாடுகளை வினைத்திறனாக முன்னெடுப்பவர்களாகவும் காணப்படுகின்-றனர். இது தொடர்பாக ஒரு கோட்பாட்டை 1980 களில் Micheal Lipsky உருவாக்கினார். இதில் இவர் வீதிமட்ட கோட்பாடு தொடர்பாக தெளிவாக பேசியுள்ளார்.

இவ்வீதிமட்ட பணியகத்தின் செயற்பாடுகளை நோக்கும் போது இதனிடையே ஜனநாயகப் பண்புகளும் வெளிப்படுகின்றன எனலாம். அதாவது மக்களுக்காக மக்களுடைய சேவகனாக நின்று, எத்தகைய சுய இலாப நோக்கமும் இன்றி, மக்களிடம் இருந்து சுதந்திரமாக தரவுகளையும் தகவல்களையும் பெற்று வெளிப்படையாக நாட்டின் முன்னேற்றத்திற்காக பாடுபடுவதோடு, மக்களின் தேவையறிந்து அதனை நிறைவேற்றுவதோடு, உரிமைகளை அனுபவிப்பதற்கான உயரிய பங்களிப்பினையும் இவ்வீதிமட்ட பணியகவமைப்பு ஏற்றுக் கொண்டுள்ளது.

இத்தகைய பணியக வர்க்கத்தினர் தமது சேவைகளை தொடர்ந்து வழங்கும் போது தான் நாடு அபிவிருத்தியை நோக்கி பயணிக்கும். ஆனால் இவர்கள் தமது சேவை வழங்களின் போது வளங்களின் பற்றாக்குறை மற்றும் தொடர்பாடல், போக்குவரத்து போன்ற இன்னும் பல விதமான சவால்களையும் பிரச்சினைகளையும் எதிர்கொள்ள வேண்டி ஏற்பட்டுள்ளது. இதனால் சேவை வழங்களின் வினைத்திறன் குறைதல், அபிவிருத்தி நிர்வாகத்தை ஏற்க மறுத்தல் மற்றும் தொடர்ந்தும் அபிவிருத்திற்கான போராட்டத்தில் ஈடுபட வேண்டியிருக்கும். இந்நிலையினை இலங்கையின் நிர்வாகத்தில் காணக் கிடைக்கின்றது எனலாம். இவ்வாறாக பணியகத்தினை அடிப்படையாகக் கொண்ட நிர்வாகத்தில் பிரதான கதாபாத்திரங்களான பேசப்பட வேண்டிய ஆனால் இதுவரை இலங்கையில் பேசப்படாத ஒரு தலைப்பாக இவ்வீதிமட்ட பணியகவமைப்பு காணப்படுகின்றது.








Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உணர்திறனுடைய 'இதயம்'

**M.N Aalif Ali (Islahi)**
SriLanka Jamathe Islami,
Western Region's Secretary

சுவாசப் பையிலிருந்து ஒட்சிசன் வாயுவைச் சுமந்து வரும் குருதியை உடலின் நாலா புறத்திற்கும் சென்றடையச் செய்யும் ஒரு பம்பியாகவே நாம் இதயத்தை இதுவரை அறிந்திருந்தோம். விஞ்ஞானமும் கூட இது போன்றதொரு விளக்கத்தையே இது காலவரை கூறிக்கொண்டிருந்தது. ஆனால் அல்குர்ஆனும் நபியவர்கள் மொழிந்து விட்டுச் சென்ற பொன்மொழியும் இவற்றுக்கு மாற்றமானதொரு விளக்கத்தை 1400 வருடங்களாக இவ்வுலகிற்குப் பறைசாற்றிக் கொண்டிருக்கின்றன. அல்குர்ஆனை மீண்டும் மீண்டும் ஓதியும் ஹதீஸ்களை அடிக்கடி கேட்டும் கூட இவ்விடயம் எமது உள்ளத்தில் பளிச்சிடாமல் இருந்ததுதான் கவலைக்கிடமான விடயம்.

அல்குர்ஆன் கூறுகின்றது:

*“அவர்கள் பூமியில் சுற்றித்திரிந்து (இவைகளைப்) பார்க்கவில்லையா? (அவ்வாறு பார்ப்பார்களாயின்) உணர்ந்து கொள்ளக் கூடிய இருதயங்கள் அவர்களுக்கு ஏற்பட்டிருக்கும்; அல்லது (நல்லுபதேசத்தைக்)கேட்கக் கூடிய செவி அவர்களுக்கு உண்டாகியிருக்கும். நிச்சயமாக அவர்களுடைய (வெளிக்)கண்கள் குருடாகவில்லை, நெஞ்சங்களில் இருக்கும் (அவர்களுடைய அகக்) கண்கள் தான் குருடாகிவிட்டன.”* (அல் ஹஜ்ஜு- 22:46)

இவ்வசனத்தில் அல்லாஹ் இதயம் உணர்திறனுடையதென்றும் விளங்கும் திறனுடையதென்றும் கூறுகின்றான். எமது அறிவின் படி உணர்தல், விளங்குதல், சிந்தித்தல், கிரகித்தல் என்பன மூளையின் செயற்பாடுகள் மாத்திரமே என்று விளங்கி வைத்திருக்கின்றோம். ஆனால் உண்மையில் இதயமும் விளங்கவும் உணரவும் செய்கின்றது என்பதனை அல்குர்ஆன் என்றோ கூறிவிட்டது. இதனை இங்கு விஞ்ஞானத்தின் உதவியுடன் இக்கட்டுரை அலச விளைகின்றது.

**இதயத்துக்கும் மூளைக்கும் இடையிலான தொடர்பு:**

சில வருடங்களுக்கு முன்பு மருத்துவ விஞ்ஞானம் மனிதனது விளங்குதல் உணர்தல் என்பவற்றுக்கு இடையேயும் அவனது இதயத் துடிப்பு வீதம், இரத்த அழுத்தம், சுவாசம் என்பவற்றுக்கு இடையேயும் பலமானதொரு தொடர்பு இருப்பதனைக் கண்டறிந்துள்ளது. இதன் மூலம் இதயத்திற்கும் மூளைக்கும் நெருக்கமானதொரு உறவு உள்ளது என்பதனை மருத்துவர்கள் உறுதி செய்கின்றனர்.

இதயமும் உணர்கின்றது என்பது குறித்து கலிபோனியாவைச் சேர்ந்த இதயம் தொடர்பான துறைசார் பேராசிரியர் “ரோவ்லின் மெகார்த்தி” பின்வருமாறு குறிப்பிடுகின்றார். “இதயத்திற்கு மூளையையும் ஏனைய உடல் அவயங்களையும் ஹோர்மோன்களையும் கட்டுப்படுத்தக் கூடிய அபரிமிதமானதும் தனித்துவமானதுமான ஒரு ஆற்றல் காணப்படுகின்றது. அதே போன்று உடலின் பல்வேறு பகுதிகளில் இருந்தும் வருகின்ற தகவல்களை அதே வடிவில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தன்னுள் சேமித்து வைக்கும் தொழிலையும் இதயம் செய்கின்றது. உண்மையில் இதயம் அதனுள் ஒரு மூளையைக் கொண்டு செயற்படுகின்றது" என்று அவர் கூறுகின்றார்.

இதயத்தில் ஆயிரக்கணக்கான மரபணுக்கள் காணப்படுகின்றன. இவை இதயத்துடிப்பு வீதத்தை சமநிலைப்படுத்துவதோடு ஹோர்மோன்களைத் தூண்டவும் செய்கின்றன. மேலும் இம்மரபணுக்கள் இதயத்திற்கு வந்துசேரும் தகவல்களைச் சேமித்து வைத்து பின்னர் அவற்றை மூளைக்கு அனுப்புகின்றன. இவ்வாறு சேமித்து வைக்கப்படும் தகவல்கள் அழிவதில்லை. அல்லாஹ் அவற்றை மறுமை நாளில் வெளிப்படுத்திவிடுகின்றான். அல்லாஹ் கூறுகின்றான். *"அவன் அறிந்து கொள்ள மாட்டானா? மண்ணறைகளிலுள்ளவை (எழுப்பப்பட்டு) வெளியேற்றப்படும் போது, இதயங்களிலுள்ளவையும் வெளியாக்கப்பட்டுவிடும்."* (100:9,10)

இவ்வாறு இதயத்திலிருந்து மூளையை வந்தடையும் தகவல்கள் மனிதனின் கிரகிக்கும் திறனிலும் அறிவிலும் பாரிய பங்காற்றுகின்றன. இதனை இதயம் தொடர்பான ஆய்வு நிறுவனத்தின் வைத்தியர் டாக்டர் அண்ட்ரூ ஆர்மூர் விளக்கியுள்ளார்.

**இதயம் உணர்வதனை விளங்க ஒரு நடைமுறைப் பரிசோதனை:**

இதயத்தையும் உணர்திறனையும் ஒப்பிட்டு சிறியதொரு பரிசோதனையை இங்கு நாம் செய்து பார்ப்போம். உங்களது கண்களை இறுக மூடிக் கொள்ளுங்கள். பின்பு உங்களுக்கு மிகவும் விருப்பமான, வாழ்வில் மறக்க முடியாத ஒரு நபரையோ அல்லது ஒரு நிகழ்வையோ ஞாபகித்துப் பாருங்கள். இதன்போது உங்களது உள்ளம் பூரிப்படைவதை உணர்வர்கள். அத்தோடு உடல் புல்லரித்து மயிர்களெல்லாம் எழுந்து நின்று சிலிர்த்துக் கொள்வதை நீங்கள் உணர்வீர்கள்.

உண்மையில் இங்கு உங்களது உள்ளம் தான் உணர்ந்ததே தவிர மூளையிலோ அல்லது தலைப் பகுதியிலோ எந்த உணர்வையும் நீங்கள் பெற்றிருக்க மாட்டீர்கள்.

அதே போன்று தான் ஒரு இன்பமான, சந்தோசமான நிகழ்வின் போதோ அல்லது கவலையான சந்தர்ப்பங்களிலோ உள்ளம் கனப்பதை நீங்கள் உணர்ந்திருப்பீர்கள். இதயம் சூடேறுவதை உணர்ந்திருப்பர்கள். அல்லது உள்ளம் விரக்தியடைவதை உணர்ந்திருப்பீர்கள். உள்ளம் சோர்வடைவதை உணர்ந்திருப்பீர்கள். இதயம் 'லப் டப்' என்று வேகமாக அடிப்பதை உணர்ந்திருப்பீர்கள். இவையாவும் இதயத்தினால் மேற்கொள்ளப்படும் உணர்வுகளேயன்றி மூளையின் உணர்வுகளல்ல.

ஏதோ ஒரு காரணத்தினால் கவலை மேலிட்டு அதனைப் பற்றியோ அதிகம் அதிகம் யோசித்து யோசித்து இதயம் பலவீனப்பட்டு இறுதியில் மனநோயாளியாவதோ அல்லது மாரடைப்பு ஏற்படுவதோ உள்ளத்தின் உணர்ச்சிகளாலேயே அல்லாமல் மூளையின் உணர்வுகளால் அல்ல.

சீரணிக்கக் கடினமான அல்லது தாங்க இயலாத கவலைக்கிடமானதொரு செய்தியை நீங்கள் செவியுறும் பொழுதோ அல்லது நம்ப முடியாத சந்தோசமானதொரு விடயம் நிகழும் பொழுதோ உடனே நீங்கள் உங்களையே அறியாமல் உங்களது கைகளை நெஞ்சில்தான் வைப்பீர்கள். தலையிலல்ல. ஆண்களைவிடவும் பெண்கள் இவ்விடயத்தில் அதிகம்.

இவ்வாறு மனித உணர்வுகளையும், உணர்ச்சிகளையும் இதயமும் உள்வாங்கிக் கொள்கின்றது என்பதனை பின்வரும் அல்குர்ஆனிய வசனங்களிலிருந்து அறிய முடியும். அல்லாஹ் கூறுகின்றான் *"(உண்மையான) முஃமின்கள் யாரென்றால் அல்லாஹ் (என்று அவனது பெயர் அவர்கள் முன்)*


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*கூறப்பட்டால் அவர்களுடைய இதயங்கள் அச்சத்தால் நடுங்கிவிடும். மேலும் அவனுடைய வசனங்கள் அவர்களிடம் ஓதிக்காண்பிக்கப்பட்டால் அவை அவர்களது ஈமானை அதிகரிக்கச் செய்துவிடும்"* (8:2)

மற்றுமொரு வசனத்தில் : *"யாரெல்லாம் தங்கள் இரட்சகனை அஞ்சுகிறார்களோ அவ்களின் தோல்(களின் உரோமங்)கள் (அவனது வேத வசனங்களைக் கேட்ட மாத்திரத்தில்) சிலிர்த்து விடுகின்றன. பின்னர் அவர்களுடைய தோல்களும் இதயங்களும் அல்லாஹ்வை நினைவு கூர்வதின்பால் இளகுகின்றன. அதுவே அல்லாஹ்வுடைய நேர் வழியாகும்."* (39:23)

**இதயம் மனித நடத்தைகளைத் தீர்மானிக்கிறது :**

மனிதனது நடத்தைக் கோலங்களிலும் பண்பாட்டு விழுமியங்களிலும் இதயம் பாரிய தாக்கம் செலுத்துகின்றது. உங்களது இதயத்தை சத்திர சிகிச்சை மூலம் அகற்றிவிட்டு இவ்விடத்திற்கு வேறு ஒருவரது இதயத்தைப் பொருத்தினால் நிச்சயமாக உங்களது நடத்தையிலும் பண்பாட்டிலும் கண்ணோட்டங்களிலும் மாற்றங்கள் ஏற்படுகின்றன என்பதனை மருத்துவர்கள் கண்டறிந்துள்ளனர். பொருத்தப்பட்ட இதயம் யாருடையதாக இந்ததுவோ அவரது பண்புகள் காலப்போக்கில் உங்களிலும் பிரதிபளிப்பதை வெளிப்படையாகவே அவதானிக்க முடியும்.

இதயமாற்று சத்திர சிகிச்சைக்கு உள்ளாக்கப்பட்ட அதிகமானவர்களிடத்தில் அவதானிக்கத்தக்க பல்வேறு மாற்றங்கள் நிகழ்ந்துள்ளன. அவர்களது உணர்வுகளிலும் விருப்பு, வெறுப்புகளிலும், அன்றாடப் பழக்கவழக்கங்களிலும், நம்பிக்கைகளிலும் முன்பிருந்ததைவிட இதய மாற்று சத்திர சிகிச்சை மேற்கொண்டதன் பின்னால் பல மாற்றங்கள் ஏற்பட்டதனை மருத்துவர்களால் அவதானிக்க முடிந்துள்ளது. இது தொடர்பானதொரு சம்பவத்தை இங்கு குறிப்பிட முடியும்.

அமெரிக்காவைச் சேர்ந்த தொழிலதிபர் ஒருவர் இதய நோய்க்குள்ளான போது அதே சமயத்தில் தூக்குத் தண்டனை நிறைவேற்றப்பட்டு மரணித்த ஒரு குற்றவாளியினது இதயம் குறித்த தொழிலதிபருக்குப் பொருத்தப்பட்டது. சத்திர சிகிச்சை செய்யப்பட்டு சில வருடங்களிலேயே இத்தொழிலதிபரில் முன்பை விட பல வித்தியசாமான நடத்தைகள் வெளிப்பட ஆரம்பித்துள்ளன. சிந்தனா ரீதியாகவும் நடத்தை ரீதியாகவும் பல மோசமான, கடுமையான குணாதிசயங்கள் அவரிடத்தில் காணக்கிடைத்தன. இறுதியில் அவர் ஒரு குற்றவாளியாகவே மாறியமை பலரையும் ஆச்சரியப்படவும் கவலைகொள்ளவும் செய்தது.

மனிதனது இதயம் அவனது முழு உடலிலும் செல்வாக்குச் செலுத்துகின்றது. இதயம் சீர்கெட்டுவிடும் சந்தர்ப்பத்தில் அவனது நடத்தையிலும் பழக்கவழக்கங்களிலும் நம்பிக்கைகளிலும் மாற்றங்கள் தோன்றுகின்றன என்பதற்கு மேற்கூறிய சம்பவம் ஒன்றே போதிய சான்றாகும். இவ்வுண்மையை நபி (ஸல்) அவர்களது பின்வரும் பொன்மொழி மிகத் தெளிவாக எடுத்துக் காட்டுவதனை அவதானிக்கலாம்.

நபியவர்கள் கூறினார்கள் *"அறிந்து கொள்ளுங்கள் மனிதனது உடலிலே ஒரு சதைக் கட்டி இருக்கின்றது. அது சீரடைந்தால் முழு உடலும் சீர் பெற்றுவிடும். அது சீர் கெட்டுவிட்டால் முழு உடலும் சீர் கெட்டுவிடும். அறிந்து கொள்ளுங்கள் அதுதான் இதயம்"* என்றார்கள். (புகாரி,முஸ்லிம்)

**இதயம் நினைவாற்றல் மிக்கது.**

இதயத்தில் உள்ள மரபணுக்களுக்கு பல்வேறு தகவல்களையும் சேமித்துவைக்கும் ஆற்றல் இருப்பதாக மருத்துவ விஞ்ஞானம் விளக்குகின்றது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இது தொடர்பாக அரிஸோனா பல்கலைக்கழகத்தின் உளவியல் துறைப் பேராசிரியர் வாத்ஸ் பின்வருமாறு விளக்குகின்றார். "ஞாபகிப்பதும் விடயங்களைச் சேமித்துவைப்பதும் மூளைக்கு மாத்திரம் உரித்தானதொரு விடயமல்ல. மாறாக இதயமும் இப்பணியைக் கட்சிதமாகச் செய்கின்றது."

இதயத்தில் சேமிக்கப்பட்ட தகவல்கள் யாவும் பல்வேறு நரம்பு மண்டலங்களினூடாக மூளையை நோக்கிக் கடத்தப்படுகின்றன. எனவே விடயங்களை மூளையால் இலகுவாகப் புரிந்துகொள்ள முடிகிறது. டாக்டர் ரோலின் மெகார்த்தி கூறுகின்றார். "இதயத்தின் செயற்பாடுகள் சீராக இருந்தால் ஒரு விடயத்தை விளங்கிக் கொள்வது இலகுவாக இருக்கும். இதயத்தின் செயற்பாடுகள் இதற்கு மாற்றமாக இருந்தால் விடயங்களை அறிந்து விளங்கிக் கொள்வதில் முரண்பாடுகளும் கடினத் தன்மையும் காணப்படும்."

இம் முடிவை அவர் ஒரு பாடசாலையின் மாணவர்களிடையே மேற்கொண்ட ஆய்வின் பின்னர் எடுத்துக் கூறினார். இதனால் தான் சீரான இதயம் ஒரு மனிதனைச் சீராகவும் நேர்த்தியாகவும் விளங்கிக் கொள்ளவும் செயலாற்றவும் தூண்டுகின்றது. மனக் குழப்பத்திற்கோ, மன அழுத்தத்திற்கோ உள்ளான ஒருவரது செயற்பாடுகள் விபரீதமானவையாக இருப்பதை நாம் அவதானித்திருக்கின்றோம்.

**இதயம் மற்றுமொரு இதயத்துடன் உறவாடுகின்றது.**

டாக்டர் பியஸால் என்பவர் 'Heart Math' என்ற தனது நூலில் இதயங்களுக்கிடையிலான உறவாடலைப் பின்வருமாறு கூறுகின்றார்.

"இதயம் உணர்கின்றது. ஞாபகிக்கின்றது. அத்தோடு வேறு ஒரு இதயத்தால் விளங்க முடியுமான எண்ண அலைகளையும் வெளியிடுகின்றது. இது எது போன்றதென்றால், இதயம் எவ்வாறு ஒவ்வொரு கணப்பொழுதும் உடலின் பல பாகங்களில் இருந்தும் வருகின்ற தகவல்களைப் பெற்று அவற்றை மூளைக்கும் உடலின் இதர பகுதிகளுக்கும் மின் அலை வடிவில் கடத்துகின்றதோ அது போன்றதாகும்." இதனை விஞ்ஞானம் Telepathy என்கின்றது.

சில போது நீங்கள் மனதுக்குள் நினைத்த ஒரு பாடலை இன்னுமொருவர் சப்தமிட்டுப் பாடிக் கொண்டுவருவார். நீங்கள் சொல்ல நினைத்த விடயத்தை உங்களது நண்பர் அப்படியே சொல்லி முடிப்பார். நீங்கள் ஒருவரைப் பார்த்து அவர் உங்களைப் பார்க்கவேண்டுமென நீங்கள் எண்ணினால், அவ்வெண்ண அலைகள் அவரைச் சென்றடைந்தால், அவரும் உங்களைத் திரும்பிப் பார்ப்பார். இவை யாவும் உள்ளத்தின் எண்ண அலை வடிவிலான உரையாடல்களின் ஒரு வகையாகும்.

ஆய்வாளர்கள் கூற்றுப்படி இதயத்திற்குப் பலமானதொரு மின்காந்த சக்தி காணப்படுகின்றது. இதன் மூலம் இதயம் சூழவுள்ளவர்களைக் கவர்ந்து ஈர்த்து விடுகின்றது. அல்லது எண்ண அலைகளை அனுப்புகின்றது. ஒரு மனிதர் மற்றுமொருவருடன் வாய் மூலம் போசாது இதயத்தினூடாகவும் உறவாட முடியும் என விஞ்ஞானிகள் குறிப்பிடுகின்றனர். தூய எண்ணத்துடன் நீங்கள் ஒருவருக்கு நல்லதொரு உபதேசம் கூறினால் அவ்வார்த்தை அவரைச் சென்றடையும் அதேசமயம் உங்களது இதயமும் அவரின் உள்ளத்திற்கும் மூளைக்கும் அலை வடிவில் காந்த அலைகளை அனுப்புகின்றது. எனவே அவர் உமது வார்த்தைகளில் உள ஆறுதலடைகின்றார். ஆய்வாளர்களது கண்டுபிடிப்பின் படி மூளையை விடவும் இதயத்தின் மின் அலைகள் நூறு மடங்கு பலமிக்கவை. அதே போன்று இதயத்தின் மின் காந்த சக்தி மூளையை விடவும் 5000 மடங்கு பலமானதாகும் என்கின்றனர்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆக அல்குர்ஆன், ஹதீஸ் ஆதாரங்களோடு விஞ்ஞானத்தின் துணை கொண்டு இதயமும் ஒரு மூளையாகத் தொழிற்படுகின்றது. அது உணரவும், ஞாபகிக்கவும், கிரகிக்கவும், இன்னொன்றுடன் உறவாடவும் செய்கின்றது என்பதனை விளங்கினோம். உள்ளம் சீர்பெற்றால் தான் முழு உடலும் சீர்பெறுகின்றது. எனவே உடலுக்கு உடற் பயிற்சிகளை வழங்கும் அதே நேரம் முஹாஸபா, தஸ்கியா, திக்ர் என்பன மூலம் உள்ளத்திற்கும் ஆன்மிகப் பயிற்சிகளை வழங்க வேண்டும். உள நோய்களான பொறாமை, வஞ்சகம், பொய் போன்றவற்றிலிருந்து உள்ளத்தைப் பாதுகாக்கவேண்டும். உள்ளத்தை அல்குர்ஆனைக் கொண்டு நிரப்ப வேண்டும். அப்போது தான் அது ஒளிபெறும். நபியவர்கள் கூறினார்கள் "யாருடைய உள்ளத்தில் அல்குர்ஆனில் சிறிதும் இல்லையோ அது பாழடைந்த வீட்டைப் போன்றதாகும்" என்றார்கள். எனவே எமது உள்ளம் பாலடைந்த நிலையில் விட்டுவைக்கக் கூடாது.

உள்ளத்தினால் மேற்கொள்ளப்பட வேண்டிய மற்றுமொரு வேலையும் இருக்கின்றது. அதுதான் இறை அத்தாட்சிகளைப் பற்றி சிந்தித்தல். அவற்றைப் பார்த்து ஆய்வு செய்தல். உண்மையில் இவை பற்றி சிந்திக்காமலும், பார்க்காமலும், கேட்காமலும் இருப்பது மிகவும் மோசமான பண்பாகும். இவ்வாறு நிறைய மனிதர்கள் வாழ்கின்றார்கள். அவர்களை அல்லாஹ் பின்வருமாறு விழித்துக் கடுமையாகக் கூறுகின்றான். "ஜின்களிலும் மனிதர்களிலும் அதிகமானவர்களை நரகத்திற்காகவே நாம் படைத்திருக்கின்றோம். அவர்களுக்கு இதயங்கள் இருக்கின்றன அதன் மூலம் எதனையும் விளங்கிக் கொள்ள மாட்டார்கள்.

*'அவர்களுக்குக் கண்கள் இருக்கின்றன அவற்றைக் கொண்டு (இறை அத்தாட்சிகளைப் பார்க்கவும் மாட்டார்கள். அவர்களுக்கு காதுகளும் உண்டு அவற்றின் மூலம் (நல்லவற்றைச்) செயவியுறவும் மாட்டார்கள். அவர்கள் கால் நடைகளைப் போன்றவர்கள். இல்லை (இல்லை) அதனைவிடவும் கேடுகெட்டவர்கள்."* (7:179)

இக்கூட்டத்தாரை விட்டும் அல்லாஹ் எம்மைப் பாதுகாக்கட்டும்.

**References**

Influence of cardiac afferent input on heart – Brain synchronization and cognitive performance . R. Mc. Craty. International journal of psychophysiology 2002. 45 (173 – 72)

The Thinking heart an interview with paul pearsall. By hal Bennett and susan sparrow.

www.Heartmath.org

Changes in heart transplant recipients that parallel the personalities of their donors. Pearsall Gray E. schwartz. Linda G. Russek. School of Nursing. University of Hawaii.

Organ Transplants and Cellular memories. Paul Pearsall, PhD, Gray E. Schwartz, PhD. Linda G. Russek, PhD : nexus Magazine, volume 12, Number 3.

Al – Mujthama Mag. 2010 – Jun – 5 / Issue No : 1905. By Dr. Abdullah Ameen. Heart Specialist in USA.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# செய்னம்பு நாச்சியார் மான்மியம்

# காட்டும் திருமணச் சம்பிரதாயங்கள்

அ. அஸ்கா
உதவி விரிவுரையாளர்,
தமிழ்த் துறை,
பேராதனைப் பல்கலைக்கழகம்.

தமிழ் இலக்கிய வரலாற்றிலே தமிழ் இலக்கியங்களோடு இஸ்லாமியத் தமிழ் இலக்கியங்களும் கைகோர்த்து அவற்றை வளப்படுத்துவனவாக அமைந்தன. அதில் இஸ்லாமியத் தமிழ் இலக்கியங்கள் தனித்துவமான பல சிறப்பம்சங்களைக் கொண்டு விளங்குகின்றன. அந்தவகையில், தனிப்பாடல்களும் சிற்றிலக்கியங்களும் குறிப்பிட்டு கூறக் கூடியனவைகளாகும். இச்சிற்றிலக்கியங்களைப் படைப்போர் தாம் வாழும் பகுதிகளில் காணப்படும் குறைபாடுகளையும் சீர்கேடுகளையும் சமூகத்தில் இருந்து இல்லாதொழிக்கும் பொருட்டு அங்கதப் பாடல்களாக அவற்றைப் பாடுவர்.

அந்தவகையில், இஸ்லாமியத் தமிழ் இலக்கியங்களுள்ளே ஈழத்தில் எழுந்த செய்னம்பு நாச்சியார் மான்மியம் குறிப்பிடத்தக்கதாக அமைந்துள்ளது. இது அப்துல் காதிறு லெப்பையினால் இயற்றப்பெற்றதாகும். இது கிழக்கிலங்கை முஸ்லிம் மக்களின் திருமணச் சம்பிரதாயங்களை அங்கதச் சுவையோடு கூறுவதோடு, நவ நாகரிகத்தில் அருகி வரும் சம்பிரதாயங்களை தொகுத்து தரும் தகவல் பெட்டகமாக விளங்குகின்றது.

அதாவது, சிந்தனையை சிரிப்பும் கலந்ததாக கொடுப்பது என்பது எல்லோராலும் முடியாத காரியமாகும். இவற்றைப் படைக்க கனிந்த உளப்பாங்கு அவசியமானதாகும். வாழ்வில் பக்குவம் ஏற்பட்டால் தான் அவ்விலக்கியத்தில் மென்னையான நகைச்சுவை கலந்து உண்மைகள் சொல்லுருவாக்கம் பெறும். அந்த வகையில், செய்னம்பு நாச்சியார் மான்மியம் சிறப்புப் பெறுகின்றது. இக்கட்டுரையானது, செய்னம்பு நாச்சியார் மான்மியம் கூறும் திருமணச் சம்பிரதாயங்கள் இஸ்லாமிய சமயத்துக்கு ஏற்புடையதா அல்லது இல்லையா என்பதனை விடுத்து, ஒரு சமூகத்தின் அல்லது இனத்தின் சம்பிரதாய பழக்க வழக்கங்கள் நிலை பெற்றிருந்த விதத்தை செய்னம்பு நாச்சியார் மான்மியம் எவ்வகையில் படம்பிடித்து காட்டுகின்றது என்பதனை விளக்கிக் காட்டுவதாகவே இது அமைந்துள்ளது.

சம்பிரதாயங்களைப் பேணுவதில் வயது முதிர்ந்த பெண்களே அக்கறை காட்டுபவர்களாக விளங்குகின்றனர். அதன் நன்மை, தீமைகளைப் பற்றி அவர்கள் அறிந்திருப்பதில்லை. அதனால் ஏற்படும் வீண்செலவு சிரமம் போன்றவற்றையும் அவர்கள் கவனத்தில் கொள்வதில்லை. திருமணத்தில் பெற்றோர்களுக்கிடையில் கொடுக்கல் வாங்கல் சம்பிரதாயம் பேணல், சீர் சிறப்பு செய்தல் காரணமாக அடிக்கடி தகராறு ஏற்பட்டு குடும்பங்கள் பிரிய வேண்டிய நிலை ஏற்படுகின்றது. திருமணத்தில் சம்பிரதாயங்கள் கூடும் போது பிரச்சினைகள் அதிகரிக்கின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அந்தவகையில், கிழக்கிலங்கை முஸ்லிம்களிடத்தில் வழங்கும் சடங்குகள், சம்பிரதாயங்கள் போன்றவற்றின் பொருந்தாமையைச் சுட்டிக்காட்டுவதாக செய்னம்பு நாச்சியார் மான்மியம் அமைந்துள்ளது. செய்னம்பு நாச்சியார் மான்மியம், மணம் சரிகாண் படலம் தொடங்கி நாச்சி அறிவு பெற்ற வரையிலான பதினேழு படலங்களைக் கொண்டு விளங்குகின்றது. திருமணப் பேச்சுவார்த்தை தொடங்கியதிலிருந்து திருமணம் முடிந்த பிறகும் தொடரும் திருமணச் சம்பிரதாயங்களை நகைச்சுவை கலந்ததாக கூறுவதனைக் காணலாம். பல்வேறுபட்ட திருமணச் சம்பிரதாயங்களுடன் நடந்தேறிய திருமணம், பெற்றோரின் மனஸ்தாபங்களால் முறிவடைந்து போகின்றது. கணவனும் மனைவியும் செய்வதறியாது தனிமையில் இருக்க வேண்டிய நிலை ஏற்படுகின்றது.

அந்தவகையில், இம்மக்களின் திருமணச் சம்பிரதாயங்களை நோக்குவோமாயின், கிழக்கிலங்கை முஸ்லிம்களிடத்தில் திருமணப் பேச்சுவார்த்தை முடிந்ததும் பெண் வீட்டார் மாப்பிள்ளை வீட்டாருக்கு சீர் அனுப்பும் வழக்கம் காணப்பட்டிருக்கின்றது. இதனை அப்துல் காதிறுப் புலவர் செப்பு அனுப்பும் படலத்தில் பின்வருமாறு பதிவு செய்கிறார்.

*'நல்லது கூறினால் நாமேன் மறுப்பான் ஆதலால் சீரு சிறப்பு செய்வதற்காகப் பெரிய செப்பொன்று பேச்சுக்கு முன்னே சம்பந்தி வீட்டுக்கு சாயந்தரமே. அனுப்ப வேண்டும் ஆதலினாலே அரிசி மரக்கால் அளந்தெடுத்துக் குற்றிப் புடைத்து குறுணல் நீக்கி ஊறப் போட்ட பின் உரலிலிடித்து மாப்பலகாரம் மாலைக்கு முந்தியே சேர்த்திட வேண்டும் சிவத்த மாமி யாவரும் வருவீர் என்றனள் மரியமம்'*

மேலும், சீர் அனுப்ப தேவையான பொருட்களை செய்வதற்கு சொந்த பந்தங்களையும் பக்கத்து வீட்டாரையும் அழைக்கும் வழக்கமும் காணப்பட்டிருப்பதனை அறிய முடிகின்றது.

பெண் வீட்டார் எவ்வளவுதான் கவனமாக செய்தாலும் மாப்பிள்ளை வீட்டார் குறை கூறும் வழக்கம் காணப்படும். அந்த வகையில், மாப்பிள்ளையின் தாய் (நாச்சியார்) குறை காணுவதை பின்வருமாறு நகைச்சுவை ததும்ப குறிப்பிடுகின்றார்.

*'செப்பைத் திறந்து சீராய்ப் பார்த்தாள்பலகாரங்கள் பல பல இருந்தன*
*...பாருங்கள் இந்தப் பலகாரங்களை நம்ம குடும்பம் நாடே யறியும் கிள்ளிக் கொடுத்தாலும் கிடாரம் வேண்டும் பேச்சுச் செப்பா? பிச்சைச் செப்பா?'*

அடுத்து, திருமணம் மற்றும் சீதனம் பற்றிய பேச்சுவார்த்தைகள் நடந்து முடிந்த பின்பு, பெண் வீட்டார் மாப்பிள்ளை வீட்டுக்கு சாப்பாடு கொண்டு போகும் வழக்கம் இருந்தது. அதில் ரொட்டி, கோழிக்கறி, வாழைப்பழம் போன்றன இருக்கும். அதனை பின்வருமாறு குறித்துக் காட்டுகின்றார்.

*'முடிந்தது பாத்திஹா முடிந்தது பேச்சு வருகிற மாதம் வளர்பிறை பத்து கழித்து வரும் நாள் கணக்க வியாழன்.... என்றார் ஆலிமு ஏற்றார்–யாவரும் அரிசிமாரொட்டி அடுக்காய் வந்தது. கோழிக்கறியும் கூடவே வந்தது வளவில் பழுத்த வாழைப்பழமும் தயிரும் சீனியும் தாவி வந்தன'*

இதன் பின்னர், திருமண நாளைக்கு இரண்டு நாட்களுக்கு முன் மௌலூது ஓதும் வழக்கம் காணப்பட்டது. அதற்காக சொந்த பந்தங்களையும் பக்கத்து வீட்டாரையும் அழைப்பர். இதனை பின்வரும் பாடல் வரிகள் விளக்கி நிற்கின்றன.

*'கல்யாண நாளும் கடுகி வந்தது மாப்பிள்ளை வீட்டில் மௌலூது ஓதவேண்டிய ஒழுங்குகள் விரைவாய் நடந்தன வெற்றிலை பாக்கு வீடுதோறும் கொடுத்து மனிதரைக் கூப்பிட்–டழைத்தனர் ...கலியாணத்துக்கு கட்டாயமாக வரச் சொல்லுங்கோ வருகிற செவ்வாய் இரவு மௌலூது என்று சொல்லி*
*ஆள் அழைப்பு அழகாக நடந்தது'*


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேலும், திருமணத்திற்கு முன் பந்தல் போடுதல், குருத்தோலை, தாழங்குலை, வண்ணத்தாள் கொண்டு அலங்கரித்தல், பரசம் கொண்டு போதல் போன்ற வழக்கங்கள் காணப்பட்டன. பரசம் கொண்டு போதல் என்பது திருமணத்திற்கு முன்னர் புதுத் தம்பதியினருக்கு இடுவதற்காக மருதோண்டியுடன், மஞ்சள் துண்டு, காசு சேர்த்து கைப்பெட்டியில் வைத்து, குரவைக் கூத்தோடு குடையும் பிடித்து மேளதாளத்துடன் முன்னே பெண்களும் பின்னே ஆண்களும் செல்லுதலைக் குறிக்கும். இதன் போது பெண்கள் இடைஇடையிடையே குரவை பாடிக் கொண்டு செல்வர். இவ்வாறாக மாப்பிள்ளை வீட்டுக்குச் சென்று கொடுத்த பின்னர் மாப்பிள்ளை வீட்டார் தங்கள் பரசத்தைக் கொடுத்தனுப்புவர்.

மருதோண்டி இட்ட பின் பெண்ணை மங்கள நீராட்டி அலங்காரம் செய்து மணவறையில் உட்கார வைப்பர். மாப்பிள்ளை வீட்டில் திருமணப்பதிவு முடிந்த பின் மாப்பிள்ளையும் உறவினரும் பெண் வீட்டை நோக்கி புறப்படுவர். அவ்வாறு மாப்பிள்ளை வருகையின் போது வண்ணான் வெள்ளை விரிக்கும் வழக்கமும் காணப்பட்டிருக்கின்றது.

மாப்பிள்ளை மணமகள் வீட்டுக்கு வந்த பின்னர் மணமகனின் காலை மச்சான் கழுவும் சம்பிரதாயம் காணப்பட்டது. இதன் போது மாப்பிள்ளை மச்சானுக்கு மோதிரம் போடுவார்.

*'மணமகள் வீட்டை மாப்பிள்ளை அடைந்ததும் தண்ணீரும் பாலும் தனிச்செம்பும் கைக்கொண்டு மச்சினன் வந்து மச்சானின் கால் கழுவக் கணையாழி பரிசாய்க் கைவிரலில் போட....'*

தாலி கட்டும் வழக்கமும் காணப்பட்டது. கைபிடித்து கொடுத்த பின்பு, தாலியை மணமகளுக்கு மாப்பிள்ளையின் சகோதரியே அணிவித்து விடுவாள். இவ்வாறாக திருமணம் முடிந்த பின்பு மணமக்களுக்கு பாலும் பழமும் கொடுப்பர்.

அடுத்து, திருமணம் முடித்து ஏழு நாளைக்கு இருவரையும் வெளியே செல்ல விடமாட்டார்கள். வெளியே செல்வதாயின் மணமகளின் சகோதரனுடனே மாப்பிள்ளை போக வேண்டும் என்ற வழக்கம் இருந்தது. அவ்வாறு மாமியார் வீட்டில் இருக்கும் ஏழு நாளும் மாப்பிள்ளை சிறப்பாக கவனிக்கப்படுவார். இதனை புலவர் சிறிது அங்கதச்சுவை கலந்து,

*'முட்டைப் பொரியலும் முழுக் கோழிக்கறியும் பாலும் பழமும் பல்சுவைப் பண்டமும் ஏனோ! பேசுவான் ஏழுநாள் வரையும் மாமியார் வீடு மகா–சௌக்கியம் எனும் படி மாப்பிள்ளை இருப்பார்'*

எனக் கூறுகின்றார். ஏழு நாள் கழித்து இருவரையும் குரவை முழக்கி நீர் முழுகாட்டுவர். பின்னர் நேர்ச்சை வைத்து ஆராத்தி எடுத்து மணமக்களுக்கு கண்ணூறு கழிப்பர். பின்னர் இருவரையும் மாப்பிள்ளை வீட்டுக்கு கூட்டிச் செல்வர். மூன்று நாட்கள் மாப்பிள்ளை வீட்டில் இருவரும் தங்குவர். இதன்போது, மாப்பிள்ளை வீட்டாரின் உறவுக்காரர்கள் பார்க்க வரும் வழக்கம் காணப்பட்டது. அதன் போது மணப்பெண் அலங்காரம் செய்து நகைகள் எல்லாம் அணிந்து இருக்க வேண்டும். இதனை புலவர் நகைச்சுவை ததும்ப பின்வருமாறு குறித்துக் காட்டுகின்றார்.

